# காவியச் சலங்கைகள்



புலவர் சிவநாதன்

NOOLAHAM FOUNDATION
No - 07,57th Lane
Colombo - 06
Sri Lanka
Reg.No - GA2390
6/12/19

# காவியச் சலங்கைகள்

புலவர் சிவநாதன்

**இரத்தினம் பதிப்பகம்**
11-2, இராமசாமி தெரு,
தி.நகர், சென்னை - 600 017.
**தொலைபேசி : 9444419800**

முதல் பதிப்பு : 2012

விலை. ₹ 275.00

அச்சகம் : ஜெயபாலு பிரிண்டர்ஸ், சென்னை-33.
செல் : 9791093222, 044-43302096

செல்லரித்துக் கிடந்த
செந்தமிழின் ஏடுகளைக்
கல்லரித்துக் கழுவிக்
காலத்தாலழியாது
சொல்லொலித்துச் சிரிக்கும்
சுரங்கமென நூலாக்கிப்
புல்லரிக்கச் செய்யும்
புகழ்படைத்த பெருமக்கள்
எள்ளெரித்து வணங்கி
எமக்காகத் தவங்கிடந்து
உள்ளெரித்துப் போன
அறிவுத்தீ அன்புத்தீ
உள்ளிருந்து எங்கள்
உயிருக்கு ஒளியூட்ட
உலகமெலாம் பறந்தும்
உள்ளுணர்வால் ஒன்றானோம்

– புலவர் சிவநாதன்

('சத்தியம் சாகாது' என்ற நூலிலிருந்து)

NOOLAHAM FOUNDATION
No - 07.57th Lane
Colombo - 06
Sri Lanka
Reg.No - GA2390

# பதிப்புரை

தமிழ் அறிவாளர் புலவர் ந. சிவநாதனால் எழுதப்பட்ட நாட்டிய நாடகப் பிரதிகளை உள்ளடக்கியதாக 'காவியச் சலங்கைகள்' எனும் இந்நூற் தொகுதி 'இரத்தினம் அமைப்பகத்தினால் வெளியிடப்படுவதையிட்டு நான் பெருமிதம் கொள்கின்றேன்.

நுண்கலைகளைக் கற்பிப்போரும் கற்போரும் திறமையுடன் செயல்பட்டு வரும் பிரித்தானியாவில் அவை சம்பந்தமான பாடல்களோ, தகவல்களோ எழுத்துருவில் இல்லாமை பெரும் துரதிர்ஷ்டமேயாகும். அவற்றில் ஒரு சிறு பகுதியை நிவர்த்திக்கும் வகையில் இந்நாட்டிய நாடகப் பிரதிகள் நூலுருப் பெறுகின்றன. பாடசாலை நிர்வாகி, நுண்கலை அன்பன் என்ற வகையில் இவை சம்பந்தமான தேடலில் என்னை இணைத்துச் சிரமப்பட்டிருக்கின்றேன். அவற்றிற்கு ஆறுதலாக இந்நூல் அமையுமெனப் பெரிதும் நம்புகின்றேன்.

'காவியச் சலங்கைகள்' எனும் இப்படைப்பில், மகாபாரதத் திரௌபதையின் கதை பாஞ்சாலி சபதம் என்றும், பீஷ்மர் கதை நதிமகன் என்றும் புனையப்பட்டிருக்கின்றன. குசேலர் கிருஷ்ணர் நட்பைச் சொல்வதாக எங்கிருந்தோ வந்தான் நாடகம் அமைகின்றது. சாகுந்தல காவியத்தை மையப்படுத்தி குருமகளும் கோமகனும் பிரதி ஆக்கப்பட்டுள்ளது. அம்பிகாபதி அமராவதி காதலை எடுத்துரைப்பதாகக் கவிமகனும் கோமகளும் என்ற தலைப்பு இடம் பெற்றுள்ளது. கண்ணகியின் நீதி கேட்கும் திறனை மையப் படுத்தியதாக சிலம்புத்தீ உருவாக்கப்பட்டுள்ளது. சத்தியம் தவறாத அரிச்சந்திரன் கதை கூறுவதாக சத்தியாரம் எழுதப்பட்டுள்ளது. இந்த ஏழு நாட்டிய நாடகப் பிரதிகளும் ஏழு முத்துக்களாக இங்கு ஒளி வீசி இதிகாசம் புராணம், காவியம் என்பவற்றில் இடம்பெற்ற உணர்வுப்பூர்வமான சம்பவங்களை மனித வாழ்வை அசைக்க முனையும் நெருக்கடிகளில் அவற்றை வெற்றி கொண்ட மாந்தரின் நிலைப்பாடுகளை வீச்சுக் குறையாமல் தந்திருக்கின்றன.

புலவர் ந. சிவநாதன் பிரித்தானிய இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்டவர். இலங்கைத் தேசியகீதத்தை தமிழில் மொழிபெயர்த்துப் பாடிய முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி அவர்களின் இளையமகன் பொறியியல் பட்டதாரியான இவர் தமிழ் மீதும் தமிழர் மீதும் ஆழ்ந்த பற்றும் அறிவும் கொண்டவர். தமிழர் சொத்துக்களிலொன்றாகப் போற்றப்படக் கூடியவர். சத்தியம் சாகாது, ஆழ்கடலுக்குள் என் ஆருயிர் முன்னோர், எமது பயணம் குமுறல் முதலான நூல்களை எழுதியவர்.

குழந்தைதளுக்கான பாடல்களை, நாடகங்களை உருவாக்குவதிலும் ஆர்வமாகச் செயல்பட்டு வருபவர்.

வட்டுக்கோட்டை மண்ணோடு கலந்த வட்டக்களரியையும் கூத்தின் பன்முகங்களையும் கண்டு களித்ததும், தந்தையின் கவியாற்றல் இயல்பாகவே இரண்டறக் கலந்தமையும் இவரது கவியாற்றலை மேம்படுத்தியது எனலாம். அதனால்தான் கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் என்பதற்கமைய மரபு குன்றாக் கவிதைகளாக இவரது பாடல்கள் ஆக்கப்பட்டுள்ளன. தமிழவை எனும் பண்பாட்டு மையத்தை நிறுவித் தமிழர் பண்பாடு, கலை, கலாச்சாரம் வரலாறு என்பவற்றைப் பேணி வருகின்றார்.

இவரது நூலை எமது இரத்தினம் அமைப்பகத்தால் வெளியிடுவதற்கு உரிமை கிடைத்தமையையிட்டுப் பெருமை கொள்கின்றேன்.

இது போன்ற தரமானதும் காலத்திற்குத் தேவையானதுமான நூல்களைப் பதிப்பிப்பதில் எப்போதும் நாம் முன்னிற்போம் எனக் கூறி இந்நூல் வெற்றி பெற மனதார வாழ்த்தி நிற்கின்றேன்.

**கலாநிதி இ. நித்தியானந்தன்**
**இரத்தினம் அமைப்பகம்**



# அணிந்துரை

*சங்கீத வித்துவான் நர்த்தன வித்தகி*
*திருமதி* **பத்மினி குணசீலன்**

**தா**யகச் சூழலில் வேரூன்றி விருட்சமாகிக் கிளைபரப்பி நின்ற பரதநாட்டியக் கலை இன்று பாரெங்கும் பரவிநிற்கின்ற பெருமையானது அக்கலையோடு ஒன்றிணைந்து பின்னிப் பிணைந்து வாழ்கின்ற என்னைப் போன்றோருக்கு இன்பமும் இறுமாப்பும் அளிக்கின்ற ஒன்றாகும்! தாயகத்திலே வாழ்ந்த காலங்களிலே கலைப்பணியாற்றிய நாம் எமது புலம் பெயர்வாழ்விலும் அப்பணியைத் தொடரவும் அக்கலையின் வளர்ச்சிக்கான முன்னெடுப்புக்களை வரவேற்று வாழ்த்தவும் நமக்கு வாய்ப்பளித்த தெய்வத்திருவருளையும் அன்னை தமிழையும் வணங்குதல் எனது முதற் கடனாகிறது!

இவ்வகையில் எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய புலவர் சிவநாதன் அவர்களின் நாட்டிய நாடகப் படைப்புகளுள் ஏழு படைப்பாக்கங்களைத் தொகுத்துக் காவியச் சலங்கைகள் என்கின்ற தலைப்பில் நூலாக எமக்குத் தருகின்ற இரத்தினம் ஃபவுண்டேசன்ஸ்(Ratinam Foundation); தாபனத்தின் தாபகரும் தமிழ் மொழி; கல்வி கலை ஊடக பண்பாட்டுத் துறை இயக்குநரும் எனது கலைப்பணிகளுக்கும் முயற்சிகளுக்கும் ஊக்கமும் உற்சாகமும் ஊட்டுபவருமான கலாநிதி இ. நித்தியானந்தன் அவர்களை முதலில் வாழ்த்தி வரவேற்கிறேன்! இப்பணி காலத்தின் தேவையறிந்து செய்யப்படுகின்ற பணியெனின் அது மிகையாகாது!

இன்றெல்லாம் உலகக் கலையரங்குகளிற் பரத நாட்டிய நிகழ்வுகள் தொடர்ச்சியாக நடந்து வருவது கண்கூடு! அரங்கேற்றங்கள் தனி நாட்டியங்கள், குழு நாட்டியங்கள் நாட்டிய நாடகங்களெனப் பல நிலைகளில் எமது இளஞ் சந்ததியினரும் குறிப்பாக எமது குழந்தைப் பருவத்தினரும் தமது ஆற்றல்களையும் ஆளுமைகளையும் வெளிப்படுத்தி வருவதை

நாம் பல்வேறான ஊடகங்களினூடாகப் பார்த்தும் கேட்டும் வருகிறோம்! இன்றைய நவீன தொழில்நுட்பச் சூழலில் தொலைக்காட்சி, இணையத் தளம் ஆகியவற்றோடு இணைந்து வளர்கின்ற எங்கள் குழந்தைகளிடம் எங்கள் வரலாற்று விழுமியங்களைக் கையளிப்பதிலுள்ள சவால்களுக்கு நாம் முகங்கொடுக்கவேண்டிய கட்டாயத்திற்கும் உள்ளாக்கப் பட்டிருக்கிறோம்.

அத்தோடு இன்றைய உலக சமுதாய வரலாற்றின் முக்கிய அம்சமாக, ஒரு குறிப்பிட்ட மக்களின் அடையாளச் சின்னமாக அவர்தம் மரபு சார் மொழிகலை பண்பாட்டு விழுமியங்கள் நோக்கப்படுவதையும் நாம் அறிவோம்! எமது மரபுக்கலைகள் புலம்பெயர் நிலத்தில் எங்கள் இளைய சந்ததியினருக்கு எமது மரபு சார்ந்த விழுமியங்கள் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கு ஒரு முக்கிய ஊடகமாகத் திகழ்வதையும் எவராலும் மறுக்க முடியாது. எனவேதான் எமக்கான துறைகளில் இதற்கான முயற்சிகளில் நாம்அனைவரும் மும்முரமாக ஈடுபட வேண்டியதாயுள்ளது.

பரத நாட்டியக் கலையைப் பொறுத்தவரை இது மிகவும் பெரிய அளவில் தமிழ்ப் பெற்றோர்களாலும், நாட்டிய ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் பேணப்பட்டு வருவதோடு; இக் கலை வேற்று மொழி பேசும் இனத்தினராலும் பயிலப்பட்டு வருவதால் இதனது பரிமாணங்களை விசாலப்படுத்தி விரிவு படுத்த வேண்டிய தேவையும் நம்முன் விரிந்து கிடப்பதை நாம் புறக்கணிப்பதற்கில்லை!

இந்நிலையில் நாட்டியக் கலையை நாம் வாழ்கின்ற காலத்தைப் பிரதிபலிக்கும் ஒரு சமுதாயக் கலையாகவும், ஒரு மொழி கலை பண்பாட்டு மரபு சார் புராண இதிகாச இலக்கியக் கலையாகவும் படைத்தளிபபதற்குரிய படைப்பிலக்கிய வளம் நம்மிடம்;, ஒரு கிடைத்தற்கரிய பொருளாக மாறிக் கொண்டு வருவதையும் நாம் உணரவும் அனுபவிக்கவும் தொடங்கியுள்ளோம் என்றால் அது மிகையாகாது!

இப்பின்னணியில் நாட்டியத்துறைக்கான படைப்பிலக்கியக் கர்த்தாக்களை இனங்கண்டு அவர்தம் படைப்பாக்கங்களைக் கலையுலகிற்;குத் தருகின்ற பணியானது ஒரு காலத்தின் தேவையெனக் கருதுவதில் யாருக்கும் எதுவித தயக்கமும் இருக்கத்தேவையில்லை!



ஒரு குருவின் கீழ்ப் பயின்று அரங்கேற்றம் வரை ஒரு மார்க்கம் கற்ற மாணவர்களுக்கு மேலும் அவர்களின் கற்பனா சக்தியையும், புராண இதிகாச இலக்கிய ஈடுபாடுகளையும் விருத்தி செய்வதற்கான ஊடகமாக நாட்டிய நாடகங்கள் அமைகின்றன என நம்புபவள் நான். தொடர்ச்சியாக இலண்டனிலிருந்து சமகாலத்தினைப் பிரதிபலிக்கின்ற நாட்டிய நாடகங்கள் பலவற்றைப்படைத்தளித்த ஒரு படைப்பாளியை; உலகத் தமிழ்க்கலையுலகிற்குத் தருகின்ற பணியில் ஒன்றாகவே கலாநிதி நித்தியானந்தன் அவர்கள் புலவர் சிவநாதனின் இலக்கிய இதிகாசம் சார்ந்த நாட்டிய நாடக எழுத்து வடிவங்களை இன்று காவியச் சலங்கைகள்' என்ற ஓர் அழகிய தலைப்பில் எடுத்து வருவதை நான் கண்டு களிப்போடு வரவேற்கிறேன்!

நூலிற்குள் நுழையுமுன்னர் எமது இளைய நாட்டியக் கலைச் சந்ததியினரை நெஞ்சில் நிறுத்தி அவரது பார்வைக்காக பரத நாட்டிய சாஸ்திரம் பற்றிய ஒருசில முக்கியமான பின்னணிக்குறிப்புகளைக்கூறிப் பின்னர் புலவரின் படைப்புகள், படைப்பாற்றல் பற்றியும் இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ள நாட்டிய நாடகங்கள் பற்றியும் எனது கருதுக்களைக்கூற விரும்புகிறேன். தேர்ச்சியும் அனுபவமும் பெற்ற பரத நாட்டியக் கலைஞர்கள் இப்பகுதியை விலக்கி இந்நூல் குறித்த விடயங்களை எடுத்து நோக்கலாம்!

(தமிழ் நாட்டில் சமய புராண இதிகாச நாடகங்கள் , நாட்டிய நாடகங்கள் எழுதப்பட்டாலும் தற்கால யதார்த்தங்களை எடுத்துக் சொல்லும் நவீன நாட்டிய நாடகங்கள் மிகச் சிலவற்றையே நாம் காணக் கூடியதாக உள்ளது.

இலங்கையில்; ஆரம்பத்தில் புராண, இதிகாச, இலக்கிய நாட்டிய நாடகங்கள் குரு சிஷ்ய மரபுவழியில் அரங்கேறியிருந்தாலும் இலங்கையின் கல்விப் பாடத்திட்டத்தில் பாடசாலைகளில் நாட்டியம் ஒரு பாடமாக அறிமுகப் படுத்தப்பட்ட பின், நாட்டியத்தைப் படிப்பதும், நாட்டிய நாடகத்தை எழுதுவதும் ஒரு கலைத் தேவையாக மாறி வந்ததெனலாம்!. குறிப்பாக பாடசாலைகளுக்கிடையேயான நாட்டிய நாடகப் போட்டிகள் ஒழுங்கு படுத்தப்பட்ட பின் இதன் தேவை அதிகமாகியது. இதனால் நாட்டின் யதார்த்தங்களை வைத்தும் பல நாட்டிய நாடகங்கள் எழுதப்பட்டன.

மேலும் கடந்த சில ஆண்டுகளாக நாட்டிய நாடகங்கள் தெருக்கூத்துக்களென நாட்டியமும் கூத்தும் மக்கள் கலையாகப் பரிணமிக்கத் தொடங்கியமை ஈண்டு குறிப்பிடத்தக்கது!

இந்தியாவில் பல் வேறுபட்ட நடன வடிவங்களான கதக்களி, குச்சுப்புடி, கதக் மணிப்புரி, ஒடிசி போன்றவை இருந்த போதிலும் பரத நாட்டியத்திற்கு என்றுமே தனிப்பட்ட சிறப்பு உண்டு. தமிழ் நாட்டில் பரத நாட்டியம் தோன்றி கூத்து, சதிர், சின்ன மேளம் என்று பல பெயர்களால் முன்பு அழைக்கப்பட்டாலும் கடந்த எழுபத்தைந்து ஆண்டுகளாக பரத நாட்டியம் என்ற பெயராலேயே அழைக்கப் படுகிறது. இந் நடனம் பாரத நாட்டில் (தமிழ் நாட்டில்) தோன்றியதாலும், நாட்டிய சாஸ்திரத்தை இயற்றிய பரத முனிவர் இந் நடனத்திற்கு இலக்கணம் வகுத்ததாலும், ப ர த என்ற எழுத்துக்கள் முறையே பாவம், ராகம், தாளம் என்பவற்றை உள்ளடக்கியதாலும் பரதம் என்ற இந் நடனத்திற்கு பரத நாட்டியம் என்பது பொருத்தம் என்று கூறுவர்.

பரத நாட்டிய சாஸ்திரம் பல வகைகளிலும் முக்கியமானது. இதனுடைய முப்பத்தியாறு அத்தியாயங்களில் காணப்படும் விடயங்கள் பல. நாடகம் (Drama), ஆட்டம் (Dance);, இரண்டையும் முக்கிய விடயமாகக் கொண்டதாலும் இவ்விரண்டிற்கும் அங்கமாக இசை, இலக்கணம், ரஸங்கள், உடுப்பு, அணிகள், மொழி இப்படிக் கணக்கற்ற அம்சங்கள் உள்ளடக்கப்படுவதாலும பரதரின் நூல் நம் பண்பைப் பண்பாட்டை விளக்கும் பெரிய நூல்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

ஆட்டத்தை எடுத்துக் கொண்டோமேயானால், இதன் இரண்டு பிரிவுகளை நிருத்தியம்: அதாவது அபிநயத்தோடு கூடியது, நிருத்தம்: சுத்தமான ஆட்டம்: தாண்டவம், லாஸ்யம் என இரு வகைகளைக் கொண்டது.

தாளங்களின் விந்நியாசங்களை ஒட்டிய அங்க நிலைகளோடு கூடிய ஆட்டம் நிருத்தம் எனப்படும்.

ஒரு பொருளைக் கூறும் வசனமோ, பாட்டோ எப்படி இருந்தாலும் பொருள் கொண்ட ஒரு பகுதிக்கு அபிநயம் செய்து அப் பொருளை விளக்கிப் பார்ப்போர் சுவைக்கும்படி



செய்யும் இந்தத் துறைக்கு நிருத்தியம் என்றுபெயர். இந்த அபிநயத்தில் சொல் (வாசிகம்), ஆடையணி (ஆஹார்;யம்)

இவ்விரண்டையும் தவிர, ஸாத்விகம், ஆங்கிகம் என இரு பிரிவுகள் உண்டு. ஸாத்விகம் என்பது ஸத்வத்தில் இருந்து எழுவது. ஸத்துவம் என்றால் பிறருடைய மனோநிலையுடன் ஒன்றுபடுவது. உணர்ச்சியின் விளைவுகளான கண்ணீர், வியர்வை, மயிர் சிலிர்த்தல், குரல் தழுதழுத்தல் முதலிய மெய்ப்பாடுகளை அப்படியே செய்து காட்டுவது. இது நாடகத்தில் முக்கியமாய் வருவதாகும். ஆங்கிகம்' என்பது உடலின் அங்கங்களால் உணர்ச்சிகளையும், செயல்களையும் பொருட்களையும் காட்டுவது. முக்கியமாய் முகத்தின் உறுப்புக்களால், அவற்றினும் சிறப்பாய்க் கண்களால் உணர்ச்சிகளையும், கை, கால் முதலியவற்றால் செயல்களையும் கைகளால் பொருள்களையும் முக்கியமாகக் காட்ட முடியும். பிற நாட்டு ஆட்டக் கலைக்கும் பாரத நாட்டின் ஆட்டக் கலைக்கும் உள்ள வேறுபாடு இந்தக் கை முத்திரைகளின் அபிநயத்திலே தான் இருக்கிறது. கதை தழுவி வரும் நாடகத்தில் நான்கு வகை அபிநயமும் வரும். லாஸ்யம், கதக், பரதநாட்டியம் என்ற நடனங்களில் ஒற்றை நடிகரின் பன்முகப் பாத்திர வெளிப்பாடுகள் தனிச் சிறப்புடன் உணர்த்தப்படுகின்றன! இதில் பிற பாத்திரங்களையும் ஒருவரே அபிநயத்தின் மூலம் காண்பிக்க வேண்டும்.

பரத நாட்டியம் ஒரு தனி நடனம் மட்டுமல்ல. திருவிழாக் காலங்களில் குறவஞ்சி' என்ற நாட்டிய நாடகம் தேவதாசிகளால் ஆடப் பட்டதாகவும் சொல்லப்படுகிறது. ஒரு நாயகி ஒரு கடவுளை அல்லது ஒரு அரசனை நாயகனாக நினைத்து ஏங்கி அவரை அடைவதையே இது குறிக்கிறது.

அதாவது பரமாத்மாவாகிய இறைவனை ஜீவாத்மாவாகிய நாயகி அடைவதைக் காட்டுகிறது. தோழர்களிடம் நாயகி தனது காதலை வெளிப்படுத்துவதாகவும் குறத்தி' என்ற கதா பாத்திரம் கதா நாயகியின் கை பார்த்து குறி சொல்லி அவளது எதிர் காலத்தையும், அவளை மணக்க இருக்கும் கதாநாயகன் யார் என்று சொல்வதாகவும் நம்பப்படுகிறது.

குறத்தி' என்ற சொல்லிலிருந்து 'குறவஞ்சி' என்று வந்ததாகத் தெரிகிறது.

குறவஞ்சி என்ற நாட்டிய நாடகத்தில் கதையைக் கூறும் கட்டியக்காரன் என்ற பாத்திரமே ஆண் பாத்திரமாக உள்ளது. தஞ்சாவூர் பிருகதீஸ்வரர் கோவில் சித்திரைத் திருவிழாவில் ஆடப்படும் சரபோஜியால் இயற்றப்பட்ட சரபேந்திர பூபாலக் குறவஞ்சி' பிரபல்யம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. குற்றாலக் குறவஞ்சி, அழகர் குறவஞ்சி என்று வேறு பல நாட்டிய நாடகங்களும் உண்டு. தற்காலத்தில் இன்னும் பல குறவஞ்சி நாட்டிய நாடகங்கள் பல கடவுள்களின் பெயரால் இயற்றப் பட்டுள்ளன.

கதக்களி நடனம் கதைகளை அடிப்படையாகக் கொண்டே ஆடப்படுகிறது. பாகவத மேள நாடகம் என்ற ஆந்திரப் பிரதேசத்தில் பிரபல்யமாத இருக்கும் நாட்டிய நாடகமே இன்று குச்சுப்புடி' என்ற பெயரில் இருக்கும் நாட்டியமாகும். தாமே பாடி ஆடியும் நடிப்பதாக இந்த பாகவத மேள நாடகம் இருந்ததாகக் கூறப்படுகிறது. இதில் பாமா கலாபம்' என்ற சத்தியபாமா கிருஷ்ணன் கதை மிகவும் பிரபல்யம் வாய்ந்ததாக உள்ளது.

மெலட்டூர், சூலமங்கலம், சாலிய மங்கலம், ஊத்துக்காடு நல்லூர், தேப்பெரும் நல்லூர் ஆகிய இடங்களில் இந்த பாகவத மேள நாடகங்கள் நடத்தப்பட்டன. இதை விட கர்நாடகாவில் யஷகானம்' என்று சொல்லப்படும் நாட்டிய நாடகம் ஆடப்பட்டதாகச் சரித்திரம் கூறுகிறது. இதில் நடிகர்கள் பேசியும், பாடியும் ஆடுவதாக உள்ளது.

நான் தாயகத்தில் வாழ்ந்த காலங்களில் அங்கு வாழ்ந்த சிறந்த கவிஞர்களின் எழுத்தாக்கங்களுக்கு நாட்டியம் அமைத்து அரங்கேற்றிய அனுபவம் எனக்கு உண்டு. கவிஞர் சொக்கன், வித்துவான் குமாரசாமி, திரு சோமசுந்தரம், யாழ்ப்பாணம் வீரமணி ஐயா போன்றோரின் நாட்டிய நாடகங்களுக்கு நாட்டியம் அமைத்த அனுபவம் உண்டு. இதில் திரு.சோமசுந்தரம் அவர்களின் அல்லி அர்ஜுனன்' என்ற நாட்டிய நாடகம் அகில இலங்கைப் பாடசாலைகளுக் ;கிடையேயான போட்டியில் முதலிடம் பெற்றமை குறிப்பிடத் தக்கது.

இவர்களின்; காலத்திற்குப் பின்பு நாட்டிய நாடகங்களை எழுதும் படைப்பாளிகளுக்கு ஏற்பட்ட வரட்சி காரணமாக



என் போன்றோர்கள் படைப்பாளிகளைத் தேடுகின்ற ஒரு நிலை ஏற்பட்டது! அதுவும் புலம்பெயர் நாட்டுச்சூழலில் இந்தத் தட்டுப்பாடு மிகவும் பெரிய அளவில் உணரப்பட்டது! இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்திற்றான், புலவர் சிவநாதன் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. 1985 ஆம் ஆண்டில் முதன் முதலாகப் புலவரது நவீன தீர்ப்புக்கள்' என்ற எழுத்தாக்கத்துக்கு நாட்டியம் அமைக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. சிறு வயதுக் குழந்தையர் பலர் பங்கு பற்றிய இப்பாரிய படைப்பினைத் தொடர்ந்து மலையடிவாரத்துப் புயல், பூங்காற்றுப் புயலானது, களம் கண்ட காதலி, எங்கிருந்தோ வந்தாள், சிலம்புத் தீ, கொடியேற்றம், தர்ம கீதம், பிரபஞ்ச லீலை, எனப் பதினைந்துக்கும் மேற்பட்ட நாட்டிய நாடகப் படைப்புக்களை புலவருடன் இணைந்து படைத்தளிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இதை விட தொலைபேசியினூடாகவே பல படைப்புக்களை எனக்குத் தந்தவர் புலவர் அவர்கள். நான் மட்டுமன்றி சக ஆசிரியைகளான திருமதி ராகினி ராஜகோபால் 'குடிமறந்த குறள்' என்ற நாட்டிய நாடகத்தையும் திருமதி சுபத்திரா சிவதாசன் 'சாயிபாபா', குருமகனும் கோமகளும்' (துஷ்யந்தன் சகுந்தலை), 'கவிமகனும் கோமகளும்' (அம்பிகாபதி அமராபதி) என்ற நாட்டிய நாடகங்களையும் திருமதி கிரிஜா வரோதயசிங்கம் சத்திய ஆரம்' (அரிச்சந்திரன் கதை) என்ற நாட்டிய நாடகத்தையும், திருமதி ரஜனி சுரேஷ்குமார் 'சிலம்புத் தீ எங்கள் தமிழ்' என்ற நாட்டிய நாடகங்களையும் திருமதி உமா சந்திரதேவா 'பாஞ்சாலி சபதம்' என்ற நாட்டிய நாடகத்தையும் புலவருடன் இணைந்து தயாரித்தார்கள். ஜேர்மனியிலிருந்து திருமதி வானதி தேசிங்குராஜா அவர்களும் புலவரின் நாட்டிய நாடகங்களைப் படைத்தளித்து வருவதை நான் அறிவேன்!

புலவரின் கலைப்படைப்புக்களில் தாளநடைகள் கூத்து மெட்டுக்கள் பிணைந்து மெருகூட்டுவது இயல்பான ஒன்றாகக் காணப்படும்!பொதுவாக நாட்டியத்தில் இருக்கும் சில நடைகள், அசைவுகள் கிராமத்தில் ஆடப்படும் கூத்தில் இருப்பதைக் காணலாம். இலங்கையில் நாட்டுக் கூத்துக்குப் பேர் போன இடங்கள் என்று குறிப்பிடக் கூடிய இடங்களில் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை, பாஷையூர் என்ற கிராமங்களும் மற்றும் மன்னார்; மட்டக்களப்புப் பகுதிகளும் பிரபல்யம் வாய்ந்தவை.

இவற்றுள் ஒன்றான வட்டுக்கோட்டை என்ற ஊரிற்தான் புலவர் சிவநாதன் பிறந்தார்.

புலவர் சிறுவனாக இருந்த காலத்திலிருந்தே இவரது கிராமமாகிய வட்டுக்கோட்டையில் கூத்து நடைபெறும் பொழுது அதைப் பார்த்தும், கேட்டும் வளர்ந்த படியால் அதன் தாக்கத்தை இவரின் படைப்புக்களில் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது! குறிப்பாக தாளக்கட்டு சந்த நடைகள் இவரது கவிதைகள் பாடல்களில் அவற்றின் ஜனனத்திலேயே வந்து வீழ்ந்து ஒலிக்கின்றன! ; கூத்து மரபு சார்ந்த தன்மை, அதன் அடித்தளம், தமிழர் விழுமியங்கள் என்பன புலவர் அவர்கள் நாட்டிய நாடகங்களைஎழுதுவதற்கு உந்து கோலாகவும் ஊக்கிகளாகவும் இருந்திருக்கின்றன என நான் கருதுகிறேன்! இவரது பாடல்கள் பதங்களாகவும் கீர்த்தனங்களாகவும் கூடப் பொலிவுபெற்று நிற்பதை நான் பலதடவைகளில் உணர்ந்திருக்கிறேன்!

இதைவிடப் புலவரின் தனிப்பாடல்களும் நாட்டிய வடிவங்கள் பெற்றுவருகின்றன! பல ஒலிப்பேழைகளிற் புலவரின் பாடல்கள் ஒலித்துக் கொண்டிருக்கின்றன!

'பூமித்தாயின் குழந்தைகளே', 'தமிழே தமிழே தமிழே' 'போரிலா உலகம் வேண்டும்' 'என்தாயே தமிழ்த்தாயே' போன்ற புலவரின் பாடல்கள் தனிநாட்டிய வடிவங்களாகப் படைக்கப்பட்டுள்ளன.

நான் உருவாக்கி இயக்கி வருகின்ற நர்த்தன கலாலயா நாட்டியப்பள்ளியின் ஆரம்பகீதம் கூடப் புலவரால் இயற்றப்பெற்று எமது பள்ளி மாணவியரால் அவ்வப்போது நடனமாக அவைக்காற்றப்பட்டுவருகின்றது!

தாயக இசைக்கலைஞர்கள் மட்டுமன்றி தமிழக இசைக்கலைஞர்களும் புலவருடன் இணைந்து பணியாற்றியமை ஈண்டு குறிப்பிடத்தக்கது!

'தெய்வாஞ்சலி' என்ற இவரது ஒலிப்பேழையின் பாடல்கள் நாட்டிய உலகிற்குப் புலவர் அளித்த ஓர் அரிய பொக்கிஷமாகவே நான் கருதுகிறேன்! சப்தம் பதம் என நாட்டிய உருப்படிகள் இவ்வொலிப்பேழையை அலங்கரிக்கின்றன!



புலவரின் நாடகங்கள் மற்றும் கவிதைப் படைப்புகள் அரங்கில் மட்டுமன்றி வானலை ஒளிக்காட்சிகளிலும்; ஒலி ஒளிபரப்பப்பட்டு வருகின்றன!

புலவரின் படைப்பாற்றலும் அவரது தமிழ் அறிவும், எல்லோருடனும் எளிமையாகப் பழகும் பாங்கும், கலை இலக்கியம் , கவிதை பண்பாடு தாயகம் ஆன்மீகம் விஞ்ஞானம் தொழில் நிர்வாகம்தொழில் நுட்பம் குறித்த அவரதுஆழமான ஈடுபாடும் அவைசார்ந்த உணர்வுகளும், அவரை இலகுவாக அணுகி அவருடைய படைப்புக்களை அவருடன் இணைந்து படைத்தளிக்க நாட்டிய ஆசிரியர்களுக்கும் ஏனைய இசைக்கலைஞர்களுக்கும் உதவியது எனலாம்.

புலவர் சிவநாதனின் தந்தை முது தமிழ்ப்புலவர் நல்லதம்பி அவர்களாவார்! இலங்கையில் சுதந்திரத்தை ஒட்டி ஈழத்துப் புலவர்கள் பலர் பங்கு பற்றிய மணித்தாய் நாடும் மரதன் ஓட்டமும்' என்ற தலைப்பிலான போட்டியில்; முதல் பரிசினைப் பெற்றவர். தமிழகத்தில் திருநெல்வேலித் தமிழ்ச் சங்கத்தினரால் முதுதமிழ்ப் புலவர்' என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றவர். இலங்கையின் தேசிய கீதத்தைத் தமிழில் மொழி பெயர்த்தவர். நாடகத்துறையிலும் இவர் ஈடுபாடுகொண்டு ஈழத்தின் கலையரசு சொர்ணலிங்கம் போன்றோருடன் நட்புறவு கொண்டு நாடகங்களில் நகைச்சவைப் பாத்திரங்களேற்று நடித்தாரென அறியக்கிடக்கிறது! இவருக்கு மகனாகப் பிறந்தவர் தான் புலவர் சிவநாதன் அவர்கள்.

இவற்றோடு வரலாற்றுக் காலத்தின் தேவையும் தமிழ் இனத்தின் நிலைப்பாடும் புலவரின் படைப்புப் பண்புகளும் தனித்துவமான தகைமைகளும் இவரை ஒரு நாட்டிய நாடகப் படைப்பாளியாக இணைத்துக் கொண்டன எனலாம். இந்த நிலையில் தான் பல நாட்டிய நாடகங்களை இவருடன் இணைந்து படைக்கும் வாய்ப்பு எனது புலம் பெயர் வாழ்வில் எனக்குக் கிட்டியது. இயந்திரமான ஒரு வாழ்க்கைப்போராட்டச் சூழலில் காலத்தின் தேவைக்கேற்ப மிகக் குறுகிய காலத்தில் படைப்புக்களை எழுதி, நாட்டியம் அமைத்துப் பழக்கி அரங்கேற்றுகின்ற பணி எம்மை மேலும் மேலும் இணைத்துக் கொண்டது எனலாம்.

இனி, நான் நூலுக்கு வருகிறேன்.

இந்த நூல் 'காவியச் சலங்கைகள்' 'பாஞ்சாலி சபதம்', 'குருமகளும் கோமகனும்' (துஷ்யந்தன் சகுந்தலை), 'நதிமகன்' (பீஷ்மர் கதை), 'சத்திய ஆரம்' (அரிச்சந்திரன் கதை), 'சிலம்புத் தீ' (கண்ணகி கதை), 'எங்கிருந்தோ வந்தான்' (குசேலர் கதை), 'கவிமகனும் கோமகளும்' (அம்பிகாபதி அமராவதி), ஆகிய ஏழு நாட்டிய நாடகங்களை மட்டுமே தாங்கியவாறு வெளிவருகிறது.

புலவர் ஒரு கருவை எடுத்தாளும் விதம், இலக்கியக் கருவை எடுத்து அதற்கு நாடக வடிவம் கொடுத்துப் பின் காட்சி அமைப்புச் செய்திருக்கும் முறை, இவரது நாடகத் துறையின் ஆளுமையைக் காட்டுகிறது. படைப்பாக்கம் செய்யும் போது அவரை ஒரு இலக்கியப் படைப்பாளியாக நாம் பார்க்கிறோம். இந்நூல் ஏட்டிலக்கியமாக மட்டுமன்றி ஓர் அரங்கக் கலை இலக்கியமாகவும்; ஒரு பாட்டிலக்கியமாகவும் உருவெடுத் துள்ளது. நெறியாள்கைக்கான வழிகாட்டலை நாம் அவரது நாட்டிய நாடகப் படைப்புக்களிற் காண முடியும். இது என்னைப் போன்றவர்களுக்கு ஒரு உந்து சக்தியாகவும் உறுதுணையாகவும் உள்ளது.

இப்பேது பாஞ்சாலி சபதத்தை' எடுத்துக் கொண்டால், இதில் மரபுக் கவி நடையைக் காணலாம். எவ்வளவு எளிமையாக இருந்தாலும் இரண்டு விடயங்கள் புலவர் கவிதைகளில் அடங்கும். ஒன்று சந்தம் மற்றது அளபெடைக்கான சொல்வளம்!

இதில் காட்சி2இல் திருதராட்டிரன் துரியோதனர் உரையாடலில் திருதராட்டிரன் சொல்லும் போது வரும் கீழேயுள்ள பாடலில் சந்தம், எதுகை, மோனை என்பவற்றை அழகாக எடுத்தாண்டிருக்கிறார்.

பாடல் :

**தம்பி பாண்டுவின் தனயர் பாண்டவர்**
**தலைவன் தர்மனின் ஆட்சியில் . . .**
**இந்த ஞாலமே இனிது வாழ்ந்திடும்**
**என்ற உண்மையை அறிவன் யான்!**
**அன்பு பேரறம் அறிவு வீரமே**
**கொண்டதால் அவர் ஓங்குவர்!**



**உன்பலம் அவர் உறவு ஆகையால்**
**உடனிருந்து நீ ஓங்குவாய்!**

காட்சி பதின்மூன்றில் சகுனி துரியோதனனுடன் உரையாடும் போது பின்வரும் கவியையும் காணலாம்.

சகுனி (தொடர்கிறான்)

**கட்டுவம் மாளிகை யொன்று! அதிற்**
**கால் வைக்கும் விழாவிற்கு அனுப்புவோம் துண்டு!**
**கட்டளையிடட்டும் உன் தந்தை! அந்தப்**
**பாண்டவர் கட்டாயம் வருவார்கள் இங்கு!**

விதுரன் துரியோதனன் சம்பாஷணையின் போது கீழ்வரும் பாடலையும்,

**ஏது சொன்னாயடா மூடா உன்**
**ஏளனம் போதும் மதி கெட்ட மூடா!**
**காதுகள் கூசுது போடா! உன்**
**கர்ச்சனை போதும் கண்கெட்ட மூடா!**
**தெய்வத் திருமகள்தன்னை நீ**
**தீதுரைத்தல் தகுமோடா? வேடா!**
**உய்யவழி யுனக்கில்லை! நீ**
**உதிரம் பொழிய உயிர் விடல் பாராய்!**

திரௌபதை தேர்ப்பாகன் உரையாடலிற் கீழேயுள்ள பாடலையும் காணலாம்.

**ஐயகோ இதை வையம் தாங்குமோ?**
**அறமிகுந்தவர் நெஞ்சந் தாங்குமோ?**
**பொய்யர் சூதினைப் பொறையுடைத் தர்மன்**
**போற்றினான் என்ற பெரும்பழி போகுமோ?**
**தையல் தேவியை ஐவர் தோற்றதன்**
**தாழ்வு காலத்தில் என்று நீங்குமோ?**

தொடர்ந்து... திரௌபதை அவையில்... பாடுவதாகப் பின்வரும் வரிகள் அமைகின்றன.

**தூசென்று கிடக்கின்றீர்! தோள் நிமிர்த்த மாட்டீரோ!**
**பாகொண்ட புலவோரும் பாழ்பிணமாய்ப் போயினரோ!**

**பார் பொங்க ஒளி தந்த ஞானியரென்னாயினரோ!**

மேலும்...

**நிறுத்தடா என்னும் நீண்ட குரல் கேளேனோ!**
**பொறுத்தது போதுமெனும் பேரோசை கேளேனோ?**
**சிறுத்தைகளைச் சாகடிக்கும் செம்புலிகள் தோன்றாவோ?**
**நெருப்பினிலே துடிக்கின்றேன் நீசர்வதம் நடக்காதோ?**

*இனி... 'குருமகளும் கோமகனும்' என்ற நாட்டிய நாடகத்திலிருந்து இந்த நாட்டிய நாடகத்தில் கவிமொழியில் நாடக உரையாடலைக் காணலாம். எந்தச் சொல் எங்கே விழ வேண்டுமோ அந்த வகையில் கவி அமைந்துள்ளது.*

**சாந்தியொடு அமைதியிங்கே சஞ்சரிக்கும் என்றும்!**
**பூந்தளிரும் மயில் குயிலும் அஞ்சலிக்கும் நின்று!**
**மான்குலமும் மறுகுலமும் பட்சிகளும் உண்டு!**
**மாந்தரிடம் இல்லா நல்ல மாண்புகளும் உண்டு!**

*இதில் முனிவர் சிறுமி சகுந்தலையைப் பற்றிப் பாடும் போதும், பின்னணியில் வரும் பாடலின் போதும் அழகிய சந்தங்களுடன் அமைந்த கவியைக் காணலாம்.*

*பின்னணியிற்; பாடல் :*

**மக்களைக் காக்கும் மன்னர் மாக்களை வேட்டையாடித்**
**தக்க நல்லாட்சி செய்தல் தவமெனக் கொள்வரன்றோ!**
**இக்கலை சிரமேற் கொண்டு . . . இனியதன் தோழர் சூழப்**
**பக்கலில் உள்ள காட்டிற் பயங்கர மிருக வேட்டை**
**அற்புதமாக ஆடி அதன் பின்னே முனிவர் வாழும்**
**திக்கினை நோக்கி வந்தான் துஷ்யந்த மன்னன் தானே!**
**சக்கரம் ஓசை செய்ய சடுகதிப் புரவி பாய**
**புக்கினன் தபோவனத்தின் புனிதநற் புலத்தினுள்ளே!**

*முனிகுமாரன் மாடவ்யன் உரையாடலின் போது கவி மொழியில் நாடக உரையாடலைக் காணலாம்.*

*மாடவ்யன் பாடல் :*

**மன்னவன் ஈங்கு வந்து மாதங்கள் உருண்டு சென்றும்**
**இன்னமும் மீண்டானில்லை ஏதொன்றும் அறிந்தோமில்லை!**



**என்னண்ணா நடக்குதிங்கே? ஏதண்ணா இந்தக் கோலம்!**
**சொல்லண்ணா எனக்கும் கொஞ்சம்!**
**சுவைபடக் கேட்பேன் நானே!**
**அன்னையங்கவனுக்காக ஆவலாய்ப் பார்த்து நெஞ்சப்**
**புண்ணொடு நின்றாளையா பொறுமையாய் உதவுவீரே!**

*முனிகுமாரர் பாடல் :*

**எங்களுக்கும் சொல்லுங்கையா?**
**எட்டப்போக வேண்டாம்!**
**பெண்களுக்கும் சொல்ல வேண்டும்!**
**பெட்டைப் பயம் வேண்டாம்!**

*துஷ்யந்தன் சகுந்தலை நாடக உரையாடலில் :*

*சகுந்தலை :*

**கண்டவுடன் காதல் கொண்டு**
**களித்த பின்னர் ஓடுகின்ற**
**மந்தைகளின் வர்க்கமில்லை நான்!**
**கொண்டவனைக் கோயிலெனக்**
**கும்பிடுவோர் சொர்க்கமதில்**
**நின்ற எனை நீ ஏனோ தொட்டாய்!**

*பின்வரும் பின்னணிப் பாடலில், பின் நிகழப் போகும் ஒரு செய்தி யைக் கூறுவதாக அமைந்துள்ளதைக் காணலாம்.*

*பின்னணிப் பாடல் :*

**ஊழ்வினை வந்து ஊட்ட உயர்வு கொள் தபோவனத்தில்**
**வாழ்வினால் இணைந்தார் அம்மா! மன்னனும் முனிவன்சேயும்!**
**குருமகளும் கோமகனும் இதயங்கள் கலந்தார்!**
**வருதுயரம் தெரியாமல் பயணத்தில் நடந்தார்!**

*எதுகை மோனை உள்ள பாடலை இதிற் காணலாம் :*

*அசரீரி :*

**பெருந்தவ முனியே கேளாய்! பெண்ணவள் உனது செல்வி**
**பொருந்தினள் பூருவம்சப் புத்திரன் தனக்கு ஆளும்**
**அருந்திறன் கொண்ட நல்ல அரசரின் வம்சத்தார்க்குத்**
**தரும் கடன் கொண்டாள் தாங்கித் தரித்தனள் கருவொன்றாங்கே!**

*கண்வர் சற்றுக் கலக்கமடைகிறார்! அசரீரி தொடர்கிறது:*

**பெருவிதி யாத்த கோலம் புரிந்திடு கண்வா! உந்தன்**
**குருகுலம் தாழ்ந்த தென்று கொண்டிட வேண்டாம் ஐயா!**
**பருவமும் பாங்கும் காதற் பழமெனக் கனிந்த தாலே**
**வருடி நீ அவளை வாழ்த்தி வழியனுப்பிடுவாய் கண்வா!**

*மீனவர் சரளமாக உரையாடுவதை சாதாரண எளிய மொழி நடையிற் காணலாம்.*

*மீனவன் : (கணையாழியைக் கையிலெடுத்தவாறு)*

**என்னடி பொண்ணு!**
**மின்னுது ஒண்ணு!**
**கூசுதடி என் கண்ணு!**
**பென்னாம் பெரிய**
**மோதிர மொண்ணு**
**பேசுதடி இங்கு நிண்ணு!**

*மனைவி :*

**அடி ஆத்தா! என்**
**மூச்சு முட்டுதடி!**
**இதை வித்தா நமக்**
**கில்லைக் கஷ்டமடி!**

*இறுதிக் காட்சியில் ஆதிதேவி வாழ்த்தும் பாடலில் அழகிய சந்தநயங்களையும் காணலாம்.*

*பின்னணியில் :*

**பெருங்கவி காளிதாசன் படைத்தநற் காவியத்தைத்**
**தருந் தவங் கொண்டோம் நாங்கள் தமிழ் மகள் தயவால்இங்கே!**
**இருந்திதைக் கண்டோர்க் கெல்லாம் இனிய நல் வாழ்த்துக்கூறி**
**பொருந்திய காதல் வாழப் போற்றியே விடை பெற்றோமே!**

*நதிமகன் (பிஷ்மர் கதை) நாட்டிய நாடகத்திலிருந்து:*

*சந்தத்துடன் எளிய நடைமுறையில் இப்பாடலில் புலவரின் மொழிவளத்தைக் காணலாம்.*



*கங்கையின் பாடல் :*

**திங்கள் சூடிய, எங்கள் பெருமான்!**
**திருமுடியில் உதித்தேன்!**
**கங்கை என்பேர்!**
**காசினி தளைக்கப் . ..**
**பொங்கும் புனலானேன்! நான்**
**பூசைப் பொருளானேன்!**
**எங்கும் பசுமை . . .**
**எதிலும் புதுமை . .**
**தங்கிட நான் தரித்தேன்! இள**
**மங்கை . . . எனது**
**மாதவப் பயனால்**
**அழகுடன் அவதரித்தேன்!**

**அன்னம் இடுவோர்**
**கரங்களின் வழியே**
**அகிலத்தின் பசி தீர்ப்பேன்!**
**விண்ணின் வழியே**
**விருந்தென வீழ்ந்தே . . .**
**நன்மைகள் பல நயப்பேன்! நான்**
**நானிலம் உயர வைப்பேன்!**

*இப் பாடலில் சந்தனுவும் கங்கையும் தமது உணர்வுகளை வெளிப்படுத்துவதாக உள்ளது.*

*சந்தனு :*

**மணம் புரிவாயா என்னை!**
**மாதரசே! மலரே! அடி கண்ணே!**
**கணங் கணமாய் உன் காதலினாலே**
**கலங்குகிறேனடி பெண்ணே!**
**இனந் தெரியாத உணர்வுகளாலே**
**ஏங்குகிறேனடி கண்ணே!**

**உணவையும் உட்கொள்ள முடியவில்லை!**
**உறங்கவும் இமைகள் மூடவில்லை!**
**நினைவுகள் அனைத்திலும் நீதான்! என்**
**நெஞ்சிற்குள் நிற்பவள் நீதான்!**

*கங்கை :*

**சத்தியம் ஒன்று செய்வாயா? என்**
**செயல்கள் அனைத்துக்கும் உடன் படுவாயா?**
**சத்தியம் ஒன்று செய்வாயா?**
**எத்தனை துன்பம் உனக்கு வந்தாலும்**
**என்வழி குறுக்கிட மாட்டாய்! என்றே**
**சத்தியம் ஒன்று செய்வாயா?**
**நான் யாரெனக் கேட்டிடக் கூடாது! என்**
**வேர் வரலாறும் வினவிடக் கூடாது!**
**சத்தியம் ஒன்று செய்வாயா?**

*சந்தனு :*

*(காதல் மயக்கத்திற் கிறங்கியவனாக)*

**எத்தனை சத்தியம் செய்யச் சொன்னாலும் ....**
**அத்தனையும் செய்வேன் தேவி!**
**முத்தேயுன் முகத்தில் முத்தமிட்டாற் போதும் .... .**
**முழுமன தோடெனை**
**ஏற்றுக் கொண்டாற் போதும்!**
**அத்தனையும் செய்வேன் தேவி நான்**
**சத்தியமும் செய்வேன் தேவி!**

*கங்கை :*

*(சந்தனுவைத் தீர்க்கத்துடனும் தெளிவுடனும் பார்த்து விட்டுப் பாடுகிறாள்).*

**காலம் வந்தது உனைப் பிரியக் ....**
**கண்கள் கலங்காதே !**
**பாலனிவனோடு நான் செல்வேன்**
**நெஞ்சம் தளராதே !**
**ஞாலம் போற்றும் பல கலைகளும் வித்தையும்**



**சீலமும் கொண்டிவன் வளரும் வரை**
**நானே யிவனைக் காத்து வளர்ப்பேன்!**
**அதுவரை பொறுத்திடும் மன்னவனே !**

*சத்திய ஆரம்' என்ற அரிச்சந்திரன் சந்திரமதி கதையினை அழகான நாட்டிய நாடகமாக்கியுள்ளார் புலவர்.*

*இதில் காட்சி இரண்டில் வேடன் முனிவரிடம் பேசுவது எளிய நடையில் அமைந்த, எதுகை, மோனை கொண்ட பாடல்களாகும்.*

**காலையிலிருந்து பசியினால் அலைந்தேன்!**
**கண்கெட்ட முனிவனே கேளாய்!**
**தோளெல்லாம் எரியத் தீனியைத் தேடித் .....**
**தொடர்ந்திந்த வனத்திலே அலைந்தேன்!**

**கண்முன்னே வந்த கலைமானைக் கொன்று**
**கடும்பசி தீர்த்திடத் துடித்தேன்!**
**புண்ணியம் கிடைக்கும்!உண்மையைக் கூறும்!**
**புசித்து நான் மகிழுவேன் முனிவா !**

*முனிவர் : (சற்றுச் சினத்துடன்),*

**வம்புக்கு ஏனையா வாறீர் உம்**
**அம்புக்கு தப்பிய மானோ நான்பாரீர் !**
**நம்பிப் போய் அப்பக்கம் பாரீர் அந்த**
**நதியண்டை தேடினால் கிடைக்கலாம் பாரீர் !**

*வேடன் : (தனக்குள்),*

**எட்டி ரெண்டு குடுக்கவா ?**
**ஏறி நிண்டு உழக்கவா ?**
**கெட்ட வேலை செய்யும் இ;ந்த**
**முனிவனை நான் சபிக்கவா ?**

*விசுவாமித்திரர் : (கூற்றாக வருகின்ற பாடல்)*

**வாய்மையிற் தவறே னென்று**
**வாய்வித்தை காட்டும் அந்த**
**நோய் கொண்ட மன்னன் நாவால்**

**நுறு பொய் சொல்ல வைப்பேன்**
**போய் அந்த உலகில் நிற்பேன்**
**புகழொடு பொருளும் வாழ்வும்**
**தேய்கின்ற நிலை கொடுத்தே**
**தோற்றுச் சொல் மறுக்க வைப்பேன்.**

*அரிச்சந்திரன் முன்னே தேவகன்னிகையர்:*

**நல்ல நிலவெறிக்குது !**
**நட்சத்திரம் ஜொலிக்குது !**
**அள்ளித் தரலாமா கொஞ்சம் இன்பம்!**

*விசுவாமித்திரர் : (அரிச்சந்திரனிடம் கூறுவதாக)*

**வருந்திடும் பாவி நீ !**
**பாவத்தின் கையானாய்!**

*சந்திரமதியின் உள்ளக் கிடக்கைகளைக் கூறுவதாகப் பின்வரும் பாடல் அமைந்துள்ளது :*

*சந்திரமதி : (எழுந்தவளாக),*

**ஐயகோ என்பாலன் அரவந்தீண்டி**
**ஆருயிர் நீத்தானாம் தெற்பைக்காட்டில்**
**ஐயரே என் செய்வேன்? அவனின் தந்தை**
**எனைக் கேட்டால் என் சொல்வேன்? எங்கு செல்வேன்?**
**வையகமே, வான் காற்றே, தீயே, நீரே !**
**வெவ்விடம் முன் வாய்பொத்தி ஏன் தான் நின்றீர்?**
**மெய்யெல்லாம் எரிகிறதே மடி தான் நோக. ...**
**செய்வதறியாது நின்று துடிக்கின்றேனே!**

*பின்னணிப்பாடலில் மரபுக் கவிதையை நாட்டிய நாடகத்தில் பாவித்திருக்கின்றார்.*

*பின்னணியிற் பாடல் :*

**மக்களைக் காக்க அங்கே மாண்புறு செங்கோலேந்தித்**
**திக் கெலாம் புகழ் பரப்பித் திண்மையாய் நின்ற மன்னன்**
**சத்தியம் காக்கும் நோக்கிற் சுடலைதான் காத்தான் கையில்**
**அக்கினி தீண்டும் கோலோ டரைத் துணியோடு நின்றான்!**



*அரிச்சந்திரன் பாடலில், காட்சியை விபரிக்கும் தன்மையும், பாத்திரத்தின் மனோநிலையைக் காட்டும் விதமும் நன்கு புலப்படுகிறது.*

*அரிச்சந்திரன் :*

**வாய்மையே வழியாய்க் கொண்டால்**
**வருவது துயர்தான் நெஞ்சே!**
**தூய்மையே வாழ்வாய்க் கொண்டால்**
**சோதனைக் கடல் தான் நெஞ்சே!**

**ஆயினும் ஆத்மா பொங்கும்!**
**அகத்தினில்; இன்பம் தங்கும்!**
**ஆகையாற் துன்பங்கொண்டு**
**அழுதிடல் தவறென் நெஞ்சே!**

*(பிணத்தை எரிமுட்டி விட்டு அரிச்சந்திரன் பாடுவதாக)*

**சுடலையின் ஆண்டை ஈயும்**
**காப்பணம் முழத்துண்டோடு**
**பிடியன்னம் வயிற்றைக் காக்கும்**
**பிறிதொன்றும் எனக்கே வேண்டாம்**
**சுடலையில் ஆடும் தேவன்**
**சுந்தரி பாகன் ஈசன்**
**கழல் களென் மனைவி சேயைக்**
**காத்திட வேண்டுவேனே!**

*(எளிய தமிழில் அரிச்சந்திரன் கூறுவதாக)*

**கூலியைத் தந்தபின் கொள்ளிவை! அதைக்**
**கொடுத்திட மறுத்தாற் தள்ளிவை!**

*பாத்திரத்தின் உணர்வைக் காட்டும் விதமாகச் சந்திரமதி கூறுவதாக இப்பாடல் உள்ளது.*

*சந்திரமதி :*

**மணவாளன் கண்களன்றி**
**மாற்றார் கண் காணா மாலை**
**பிண மாளும் மனிதர் கண்டார்**

**பெரும் பாவம் ஏது செய்தேன்?**
**கணமேனும் வாழேன் இங்கு**
**கற்பென்ற பெரு வாழ்வின்றி**
**துணைவா நீ எங்கேயுள்ளாய்?**
**துடித்துன்னைத் துதிக்கின்றேனே!**

*விசுவாமித்திரர் : (அரிச்சந்திரனைப் பார்த்துக்கூறுவதாக)*

**இப்பொழுதாயினும்**
**இல்லையென்றோர் சொல்**
**செப்பிடு அரிச்சந்திரா?**
**இப்புவியாட்சியும்**
**எல்லாம் உனக்குத்**
**தந்திடுவேன் அறிவாய்!**

சிலம்புத் தீ நாட்டிய நாடகத்திலிருந்து:

இளங்கோவடிகள் வடித்த காவியத்தின் ஒரு பகுதியைப் புலவர் நாட்டிய நாடகக் கருப்பொருளாகப் பாத்திருக்கிறார். அதாவது அரசு அறம் பிழைத்தால் ஆட்சி அழிவினை அடையும் என்ற செய்தியையும் கூறியுள்ளார். இதில் காட்சி ஒன்றில் சாத்தன் கூற்றில் பாடல் வரிகளை அழகாகக் கையாண்டிருக்கிறார்.

*சாத்தன் கூற்று :*

**ஆரங்கண்ணிச் சோழன் மூதூர்ப்**
**பூம்புகார் நகரினிலே**
**ஆழ்கடல் வணிகன் கோவலன் என்பான்**
**குறையற வாழ்ந்திருந்தான்!**
**ஆர்த்தெழு அன்பின் கண்ணகி தன்னை**
**அருமனை விளக்கெனவே....**
**சேர்த்த நற் சிறப்பாற்களிப் பெனும் மழையிற்....**
**கோவலன் திளைத்திருந்தான்.**

காட்சி மூன்றில் பின்னணிப் பாடலில் எதுகை மோனையுடன் கவிதை நடையில் போகும் பாடல் இதுவாகும்.



*பின்னணியிற் பாடல் :*

**இன்னல் நீங்கிட இன்பம் ஓங்கிடத்**
**தன்னவள் சிலம்பில் ஒன்றினை விற்றிடக்**
**கன்னற் தமிழின் காற்றினிற் திளைக்கும்**
**மன்னர் மதுரையின் மாடத்து வீதியிற்**
**பொன்னின் விலை பேசிக் கோவலன் நின்றான்!**
**புதுமகனாய்மாட வீதியில் நின்றான்!**

காட்சி நான்கில் இசை, நாட்டிய விதிமுறைகளுக்கேற்ப பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற பிரிவுகளாகப் பாடக் கூடிய வகையில் அமைத்துள்ளார்.

**விதியிதுவோ... நீ சொல்லிறைவா?**
**விதியிதுவோ... நீ சொல்லிறைவா?**

**கதியென நம்பிக்**
**கரம் பிடித்தவளை**
**நடுவினில் நீங்கி....**
**நான் நிலை தாழ்ந்தது.....**

**விதியிதுவோ... நீ சொல்லிறைவா?**
**விதியிதுவோ... நீ சொல்லிறைவா?**

**சிலம்பினை விற்றிடும்**
**நிலையினை அடைந்தேன்!**
**சிறுமதியால் ... நல்...**
**லறத்தினை மறந்தேன்!**
**விலைமதிப்பில்லா...**
**வாழ்வினைத் துறந்தேன்**

**விதியிதுவோ... நீ சொல்லிறைவா?**
**விதியிதுவோ... நீ சொல்லிறைவா?**

காட்சி 6 இல் கோவலன் கற்பனையோடு பாடும் போது, பாடலை வர்ணனை மூலம் விளக்குகிறார்.

கோவலன் :

**இளைய தென்றலே வா! என்**
**இதய மேடையில் .... ஆடிப்பாடவா!**
**இளைய தென்றலே வா!**
**மலைய மாருதம் நீ! என்**
**மதியில் வாழும் செந்தீ**
**அலையின் தேகம் நீ!**
**கலையின் மேகம் நீ!**
**அன்புத் தெய்வமே வா!**

கண்ணகி :

**துயர வேளைகள் போயின! எம்**
**துன்ப நோய்களும் ஏகின!**
**உயரும் நாளிது உதயமாகுதே....**
**புதிய வாழ்வு இன்று!**

அதே காட்சியில் எதுகை மோனை விளங்கும் பாடலாகப் பொற்கொல்லன் கூறுவதும் அமைந்துள்ளது.

பொற்கொல்லன் :

**இவனே கள்வன்! இவனே கள்வன்!**
**கொற்றவன் மனையிற் திருடிய கள்வன்!**

**பாவியின் கையினிற் தேவியின் சிலம்பு!**
**சீவிவன் தலையை! சீக்கிரம் கிளம்பு!**

பொற்கொல்லன் : *(கோவலனைப் பார்த்து)*

**காவலை மீறி எம் மன்னனின் கோட்டையுட்**
**புகுந்தது குற்றமடா!**
**தேவியின் கோயிலைத் தீண்டி யெம் சிலம்பது**
**திருடினாய்! குற்றமடா! – அப்**
**பாவி போல் வீதியில் பாண்டியன் சிலம்புடன்**
**தோன்றினாய் குற்றமடா!**



**கேவலம் நீ இந்தக் கூடலாம் மதுரைக்கு**
**மீண்டதும் குற்றமடா1**

காட்சி 7 இல் மாதவி, கோவலனைப் பிரிந்திருக்கும் போது வரும் பாடலில் அபிநயத்திற்கான், எதுகை, மோனையுடன் வரும் பாடலைப் புலவர் தனது கவி வல்லமையோடு வழங்கியுள்ளார்.

மாதவி கோவலனது பிரிவுத் துயரில் மூழ்கியிருக்கிறாள். அவளது நெஞ்சத்திரையில் கோவலனுடன் தான் வாழ்ந்த இனிய நாட்கள் விரிகின்றன.

**பூவிழிக் கோதை .... மாதவி நல்லாள்....**
**பீறிய பிரிவினில் மூழ்கி.....**
**காவிரிப் புனலாய்க் கண்மழை பொழியக்.....**
**காதலின் தீயிடை நின்றாள்!**

**நோவினில் நிழலாய்..... நிகழ்ந்திடும் நினைவில்....**
**நேற்றைய வாழ்வினைக் கண்டே.....**
**சாவினை வென்றோர் சடமென நடந்தாள்....**
**சமனிலாக் கலை தெரி பாவை!**

மாதவியின் கனவிற் கோவலன் பாடுவதாக அமையும் பாடல் :

**நாட்டிய தேவதை ஆடுகிறாள்! தமிழ்ப்**
**பாட்டினில் வந்து ....கூடுகிறாள்!**
**நாட்டிய தேவதை ஆடுகிறாள்! என்**
**பாட்டினில் வந்திசை கூட்டுகிறாள்.**
**காட்டிளம் மயிலென .....**
**கீற்றிளம் வெயிலென......**
**தீட்டிய கலையென ஆடுகிறாள்! உயிர்**
**ஊட்டிய சிலையென ஆடுகிறாள்!**
**நாட்டிய தேவதை ஆடுகிறாள்**
**துள்ளிடும் மானென.....**
**தூங்கிடும் மதியென.....**
**கள்ளியோர் நாடகம் ஆடுகிறாள்!**

**பள்ளிகொள் மாலவன்**
**பக்கத்தில் வாழும்**
**பொன்மகள் புன்னகை காட்டுகிறாள்!**
**நாட்டிய தேவதை ஆடுகிறாள்**

*காட்சி 10 ல் கண்ணகி வாயிற் காவலனிடம் தனது கோலத்தைக் காட்டுவதும்,*

*கண்ணகி பாடுவதும் :*

**வாயிலோயே! வாயிலோயே!**
**இறைமுறை தவறியோன் வாயிலோயே!**
**அறமது நீங்கிய அருளிலா அரசனின்**
**அரண்மனை காக்கும் வாயிலோயே!**
**இணையரிச் சிலம்பினை....ஏந்திய கையினாள் ....**
**கணவனை யிழந்தாள் கலங்கிய நெஞ்சினாள்**
**கடையகத் துள்ளாள் ... கடுஞ்சினச் சொல்லாள் ...**
**என உனதரசனின் செவிபடக் கூறுவீர்!**
**வாயிலோயே! வாயிலோயே!**
**இறைமுறை தவறியோன் வாயிலோயே!**

*மன்னன் கண்ணகியிடம் கூறல் :*

**நீர்வாரும் கண்ணோடு நிற்கின்ற பெண்ணே!**
**நீ யாரோ நீ யாரோ, நீ யாரோ கூறு!**
**தீராத துயர் கொண்டு துடிக்கின்ற தென்னே!**
**தயங்காது நீ கூறு! என் தீர்ப்பைப் பாரு!**

*நவரசத்தையும் காட்டும் விதமாக இந்த நாட்டிய நாடகத்தில் புலவர் பல பாடல்களை ஆக்கியுள்ளார்!*

*எங்கிருந்தோ வந்தான்' (குசேலர் கதை) நாட்டிய நாடகத்திலிருந்து:*

*இது ஒரு தெய்வ நெறிக்குரிய நாட்டிய நாடகமாக அமைந்துள்ளது. இதன் கரு பக்தி ரசத்தை வேறெரு விதமாக, அதாவது இறைவனைத் தோழனாகக் கண்டு, அந்தத் தூய நட்பின் மூலம் இறைவனை அடையும் வழியை அழகாகக் காட்டுகிறது.*



*காட்சி 1 இல் குசேலரின் பிள்ளைகள் வறுமையின் தாக்கத்தால் படும் வேதனைகளைக் காட்சி மூலம் அமைத்துப் பெண்களின் பிரச்சினைகளை இன்றைய யதார்த்த நிலையில் விளக்கியுள்ளார். அதாவது பழைய இலக்கியத்துள்ளும் இன்றைய சமுதாயத்தின் யதார்த்த நிலையை ஏழையின் குரலாக எடுத்துக் காட்டும் பாடல்கள் இதை அலங்கரிக்கின்றன :*

*குசேலரின் இரண்டாவது மகள் :*

**கூரையும் ஒழுகிடக்**
**குளிரது கொன்றிட**
**வாழுகிறோம் அம்மா!**
**தேரையும் தேளும்**
**ஊர்ந்திடும் தரையில்**
**உறங்குகிறோம் அம்மா!**

*குசேலரின் இரண்டாவது மகன் :*

**நீராகாரம் நித்தமும் உண்டு**
**நாவும் மரத்ததம்மா!**
**ஊரார் பழித்திட ஒன்றையே உடுத்தி**
**உடையே வெறுத்ததம்மா!**

*காட்சி 2 இல் குசெலரின் பெண்பிள்ளைகளின் மனக் காட்சியில் திருமணக் கோலம் பற்றி உரையாடுவதை எளிய நடையில் சாதாரண மொழி வழக்கில் வரும் பாடல்களாகக் காணலாம்.*

*மூத்த பெண் :*

**கனவொன்று கண்டேன் கண்ணீரில் நனைந்தேன்**
**கல்யாணத் திருநாளின் கோலம்!**
**மணவாளனோடு மலர் மாலை சூடிப்**
**பலர் வாழ்த்த ஊர் காணும் கோலம்!**

*இரண்டாமவள் :*

**இல்லாதோர் பெண் வாழ்விற் கல்யாணம் கனவோடு!**
**சொல்லாத எண்ணங்கள் கோடி!**

**பல்லாயிரம் தந்து பட்டாடை நகை சூடும்**
**நல்வாழ்வு நமக்கேது போடி!**

*மூன்றாமவள் :*

**குணம் பார்த்துக் குலம் பார்த்துக் கொள்வோர்கள், இங்கில்லை!**
**பணம் பார்த்து வருவோரே உண்டு**

**பலம் பார்த்து வளம் பார்த்து வருவோரே இங்குள்ளார்!**
**எமைப்பார்த்து வருவோர் யார் சொல்லு?**

**முகம் பார்த்து மனம் பார்த்து அகம் சேர்க்கும் மணவாளன்**
**சுகமாகக் கிடைப்பானோ? மண்டு!**

*காட்சி 5 இல் கிருஷ்ணனும் குசேலரும் சந்தித்து உரையாடும் போது அதில் கவி யழகைக் காணக் கூடியதாக உள்ளது.*

*கிருஷ்ணன் :*

**அன்று நாம் குருவின்**
**அரும் பெரும் நிழலில்**
**நின்றது ஞாபகம் உண்டோ?**
**தொண்டுகள் செய்ததும்**
**தோய்த்ததும் துவைத்ததும்**
**சிந்தையில் வருவதும் உண்டோ?**

*குசேலர் :*

**குருகுல வாழ்வினாற்**
**கூடிய ஞானம்**
**திருவருள் கூட்டியதன்றோ!**

**திருமகள் தலைவா**
**நின்னுடன் பழகிய**
**ஒருசில காலம்**
**என் தவமன்றோ!**

*அத்துடன் கிருஷ்ணனின் பாடலிற் கீதையின் தத்துவத்தை விளக்குவது போல் இப்பாடல் அமைந்துள்ளது.*



*கிருஷ்ணன் :*

**நான் எனும் ஆணவப் பேரிருள் அகல**
**வேதமாய் விளங்கி நிற்பேன்!**
**ஞானமும் கல்வியும் யோகமும் கொண்டோரின்**
**நாதமாய் ஒலித்திருப்பேன்!**
**தானமும் தவமும் ஓர் தர்மமும் இயற்றுவோர்**
**தந்தையாய்த் தாயு மாவேன்!**
**வானமும் வையமும் வாழ்வுற மீண்டும் நான்**
**மனிதனாய் அவதரிப்பேன்!**

**தனித்தவர் துணையெனத்**
**தாங்குவேன் அன்பர்க்கு**
**இனித்திடு நண்பனாவேன்!**
**பனிக்குளிர் மார்கழிப்**
**பாடலாய் உலகெலாம்**
**மனிதத்தை உயிர்க்க வைப்பேன்.**

*நாட்டிய வடிவங்களின் மூலம் .......*

*தசாவதாரத் தோற்றத்தினைக் காட்டும் அபிநயங்கள் இந்நாட்டிய நாடகத்தில் இடம்பெறுகின்றன!*

*குசேலர் நாராயணனின் தசாவதார தரிசனத்தினால் உணர்ச்சி வெள்ளத்தில் நீந்துகிறார்!*

*கிருஷ்ணன் குசேலரை அன்புடன் பார்த்து:*

**உள்ளே உள்ளவன் நான்! என்னை**
**ஊரெல்லாம் தேடுதல் ஏன்?**

**வெள்ளையுள்ளத்தில் வீற்றிருப்பேன் அன்பு**
**வெள்ளத்தில் நான் துயில்வேன்!**

*கவிமகனும் கோமகளும்' (அம்பிகாவதியும் அமராவதியும்) நாட்டிய நாடகத்திலிருந்து:*

*இது ஒரு உள்ளக் காதலை வெளிப்படுத்தும் நாட்டிய நாடகம்.*

*காட்சி 3இல்:*

*ஒட்டக் கூத்தருக்கும் சடையப்பருக்குமுள்ள உரையாடலில், சடையப்பர் கம்பனைப் பார்த்துக் கூறும் பாடல்:*

*சடையப்பர் : (கம்பனைப் பார்த்து)*

**அகமும் புறமும் கலித்தொகையும் பரிபாடல்**
**சிலம்பும் மணிமே கலையதுவும் சிகரமென**
**விளங்கும் திருக்குறளும் விதம் விதமாய்ச் செப்பியதை**
**அளந்திங்கு காவியமாய்த் தா!**

*காட்சி 6இல்:*

*அம்பிகாபதி அமராவதியின் நினைவில் எழுதும் பாடலிலும் அழகிய இலக்கிய நயத்தைப் புலவர் வெளிப்படுத்தியுள்ளார்.*

*அம்பிகாபதி : (அமராபதியின் நினைவில் ..... ஓலையில் எழுதிக் கொண்டிருக்கிறான்).*

**முத்தொன்று முகந்தான் காட்டி மறைந்ததோ சிப்பிக்குள்ளே!**

**முழுமதி வதனங்காட்டி... மூழ்கிற்றோ முகிலுக்குள்ளே!**
**கற்பனைத் தேரில் அந்தக் காமனின் தேவி தோன்றிச்**
**சட்டெனச் சமுத்திரத்தை வெட்டியே உட்பூந்தாளோ?**

*காட்சி 6இன் இரண்டாம் பாகத்தில் :*

*அரசியும் அமராவதியும் உரையாடும் போது கூத்து நடையிற் பாடல் அமைவதைக் காணலாம்.*

*அரசி : (கூத்து நடையில்) :*

**மறந்திடு! உறங்கிடு! மயக்கத்தைத் துறந்திடு!**
**மற்றவை நாங்கள் பார்ப்போம்!**
**சுயம்வரம் நடந்திடும்! திருமண நாள் வரும்**
**சுற்றமாய் அரசர் நிற்பார்!**

**தரந் தரமாய்ப் பல வரிசைகள் திரவியம்**
**பரிசுகள் வந்து கொட்டும்!**
**நிரந்தரம் சோழனின் நீள்தலம் பொன்னியின்**
**நீரிலே கொழிக்கு மன்றோ?**



*காட்சி 9இல் :*

அம்பிகாபதியும் அமராபதியும் காதல் துன்பத்தில் துடிக்கும் காட்சியை விபரிக்கும் போது, அதிலும் அழகிய கவி நடையில் எதுகை மோனையுள்ள கவிதையால், உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் படியாக அழகாகச் சித்தரித்துள்ளார்.

*அம்பிகாபதி:*

**தந்தாய் அவளைத் தந்தாய் தேவி!**
**தந்து விட்டேன் தடுத்தாய்? என்**
**கண்களை ஏன் பறித்தாய்?**

**செந்தாமரையாள் செந்தேன் மொழியாள்**
**சிந்தைக்கு ஒளி கொடுத்தாள்**
**சிந்தாமணியாய்ச் சிலம்பாய் வந்தாள்**
**தந்துவிட்டேன் தடுத்தாய்?**

**குன்றாம் குறளாய் குண்டலப் பொருளாய்**
**நின்றாள் நில வொளியாய்!**
**அணியாமணிமே கலையாள் அவளைத்**
**தந்துவிட்டேன் தடுத்தாய்!**

*காட்சி 11இல் :*

*பின்னணியில் வரும் பாடல் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்று பிரிவுகளாக, ஒரு கீர்த்தனை பதம் வடிவில் அமைந்துள்ளது. முருகனை நினைந்துருகிப் பாடும் இப்பாடல் ஒரு தனிப் பதமாகக் கூட ஆடப்படும் பாடலாக அமைந்துள்ளது.*

பல்லவி

**வேலனை நினை மனமே சிவன்**
**விழிதனில் எழுந்தவன் துணை மனமே.**

அனுபல்லவி

**நீலமயில் என நெஞ்சினில் அமர்வான்**
**நித்திய கல்யாணனாய்ப் புன்னகை புரிவான்**

சரணம்

**கோலுடன் ஞான விளக்கென எரிவான்**
**குன்றினில் குருவாய் அன்பினைப் பொழிவான்**
**தேந்தமிழ்ப் பாடலிற் தோய்ந் துளங் குளிர்வான் உயர்**
**தெய்வமாய்த் தொண்டர் உளங்களில் மிளிர்வான்**

**வானவர் படைத் தலைமகனாய் அவனே பகைச்**
**சூரரைச் சாய்த்திட எழுவான் எறிவான்**

**(வேலனை**

புலவரின் நாட்டிய நாடகப் படைப்புக்களில், அவரது கவித்துவம், இலக்கிய அறிவு, காட்சி ஆக்கத் திறன்;, காட்சிகளைநெறிப்படுத்தும் விதம், பாத்திரத்தை வெளிப்படுத்துகின்ற பாங்கு, சந்த தாள நடைமாற்றும் விதம், பாக்களின் வேறுபாடு, இசை அமைப்புக்கான வாய்ப்பு, நவரச நாட்டியத்திற்கான சொற்களை ஆக்கும் விதம், மொழிவளத்தினைப் பயன்படுத்தும் விதம், அதை ஞனரஞ் சகப் படுத்திய விதம், இலகுவான கவி மொழி நடை எனப் பலவகைப்பட்ட நாட்டிய நாடக அங்கங்களை நாம் சுவைக்கக் கூடியதாக வுள்ளது!

பார்வையாளர்களைக் கருத்தூன்றிய நிலையில் ஈர்க்கக் கூடிய விதத்திற்; புலவரின் இந்த ஏழு நாட்டிய நாடகங்கள் மட்டுமன்றி ஏனைய படைப்புக்களும் மிளிர்கின்றன என்றால் அது மிகையாகாது!

மூன்றரை தசாப்தங்களுக்கு மேற் புலம்பெயர் மண்ணிற் புலவர் வாழ்ந்தாலும் தான் பிறந்த சொந்த மண்ணின் புழுதிசார்ந்த உள்ளுணர்வும் உய்த்துணர்வும் மாறாமல், தனது கவித்துவமும், மொழிவளமும், இலக்கிய அறிவும் ததும்பும் எழுத்துக்கள் மூலம் தமிழ்ப் படைப்புலகில் விளங்குவதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.



அவரது தொண்டு தொடரவும் 'காவியச் சலங்கைகள்', நாட்டிய உலகிற்குப் பெரிதும் பயன்படவும் நான் இறையருளை வேண்டி எனது இந்த அணிந்துரையை நிறைவு செய்கிறேன்.

அன்புடன்,

சங்கீத வித்துவான் நர்த்தன வித்தகி

திருமதி. பத்மினி குணசீலன்.

# நுழைவாயில்

நுகர்ந்திட... நுகர்ந்திட நுண்ணுணர்வனைத்திலும் நுழைந்தொளி பரப்பிடும் சொல்வளம் சொரியும் வல்லமை பெற்றவள், நம் தமிழ்த்தாய். கல்லையும் உருக்கும் காதலும் பக்தியும் வெள்ளமாய் விளைவிக்கும் நல்லரும் காவியச் செல்வப் பனுவல்களைப் பாருக்களித்த தொல்குடிச் செம்மொழியாம் தமிழ்மொழியை எமது தாய் மொழியாக்ககொண்டேமெனில் அது எம் தவப் பயனென்றே தாழ்மையுடன் கூறுவேன்! கடற்கோளும், காலமெனும் விடத் தேளும், கருணையற்றோர் கொடுமைகளும அடக்கி, அழித்து விட முடியாத இறைமையும் இளமையும் கொண்டவள், எம் தமிழ் என்றால் அது மிகையாகாது.

மெல்லத் தமிழினிச் சாகும் என்று சொல்லக் கூசுவான், கவிவல்லான் பாரதி, இன்றிருந்தால்.

'ஆதி பகவன் முதற்றே உலகு' என்ற வள்ளுவன் வாய்மொழிப்படியும், உயர்ந்தோர் மேற்றே உலக வழக்கு' என்ற தொல்காப்பியக் கூற்றின்படியும், 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றனனின் அன்பு நெறிப் படியும், 'எல்லோரும் வாழ்க, இன்பமே சூழ்க'வெனும் பக்திப் பண்மொழிப்படியும், உலகணைத்து, உயிரோம்பி வாழும் மொழி, கலை, பண்பாட்டு விழுமியங்களை உயிரிலும், உளத்திலும் ஏந்தி நமது நாளைய சந்ததியினர்க்கு நல்வழி காட்ட வேண்டிய ஒரு கால கட்டமிது. அன்பும், அறமும், அமைதியும், நீதியும், தர்மமும், தானமும் தழைத்தோங்கும் தரணியை உருவாக்கும் பணியில், நமது இளையவர்களை நடத்திச் செல்லும் பணியில், எழுத்தாணி பிடித்தோரின் பங்கு முக்கியமானதாகவுள்ளது.

அகவரியும், முகவரியும் இழந்துவிடாத ஒரு சமுதாயத்தைப் படைக்க வேண்டிய பணியில் படைப்புலகம் முன்னின்று உழைக்க வேண்டிய தேவை எம்முன் விசுவரூபமெடுத்து நிற்கின்றது.



'கடமை வழி கடவுள்' என்ற கீதையின் கோட்பாடுகளை நம்புபவன் யான். 'எழுதித் தொழுதல்' எனது கடமையென எண்ணி, எனது இளவயதிலிருந்தே, கலையையும் கவிதையையும் வளைய வருபவன் யான். மாறும் உலகின் மாறாத உண்மைகளே, நம் முன்னோர் வகுத்த வாழ்வு நெறிகள் என்றும், மரபு மாண்புகள் என்றும் நம்பும் அதேவேளையில், எம்முன் மலிந்து கிடக்கும் மனநோய்களை மயக்கங்களை விலக்கி, ஒரு பலங் கொண்ட பண்பாட்டினை கலை, இலக்கிய, இலட்சிய விளக்காக்கிட வேண்டுமென விரும்புகிறேன். சத்தியம் சாகாது எனும் நூலிற் கவியோசை எழுப்பியுள்ளேன். 'ஆழ்கடலுக்குள் என்னாருயிர் முன்னோர் என்னும் நூலில், கருத்தோசை எழுப்பியுள்ளேன். பூமித்தாயின் குழந்தைகளே, 'போரிலா உலகம் வேண்டும்' என்ற பாடல்களின் மூலம் பாட்டோசை எழுப்பியுள்ளேன். மற்றும் நாடகங்கள் மூலம் நாட்டோசை எழுப்பியுள்ளேன். இன்று, 'காவியச் சலங்கைகள்' எனும் இந்நூலின் வழி, இலக்கியச் சுவடிகளுக்குச் சலங்கைக் கட்டி ஆடவிட்டிருக்கிறேன்.

*1984–85* களிலிருந்து இன்றுவரை தொடர்ச்சியாகப் பல நாட்டிய நாடகங்களை எழுதிப் படைத்து வந்திருக்கிறேன். தேச, தேசிய, தெய்வ சம்பந்தமான படைப்புகளை, அவ்வப்போது எழுதிப் படைக்கின்ற வாய்ப்பினை, எனக்கு, நான் வணங்கும் அன்னை பராசக்தி அளித்து வருகிறாள். பிறந்த ஊரில், நாட்டுக் கூத்தின் ஆட்டச் சந்தங்களை அனுபவித்து வளர்ந்தவன் யான். கவிதை, வில்லுப்பாட்டு, பாடல்கள், நாடகம், இசை நாடகம், கவிதா நிகழ்வுகள், தாளலய நாடகங்கள் எனப் பல தளங்களில் எனது படைப்பாக்க அனுபவமும், கலானுபவமும் எனது சிறு வயதிலிருந்தே என்னோடு பின்னிப் பிணைந்து வந்திருந்த போதும், நாட்டிய நாடகம் என்பது எனக்கு ஒரு புதுத் துறையாகவும், பிடித்தமான துறையாகவும் *1985* இற்றான் என்னைப் பற்றிக் கொண்ட தென்பேன்.

பாவ, ராக, தாளங்களை உயிரில் நிகழ்த்திப் பார்க்கும் அனுபவம், ஒரு அதியற்புத சுகானுபவம் என்றே நான் கூறுவேன். நாட்டிய நாடகங்களுக்கான கருவாக்கத்திலிருந்து, உருவாக்கம் வரை, இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழின்

முகங்களையும் முத்தமிடும் அனுபவம், இத்துறையின் மூலம் தான் எனக்குக் கிட்டிற்று என்பேன்.

எமது தாயகம் பற்றியும், முத்தமிழ்ப் பற்றியும், இறையருள் பற்றியும் எனக்கிருந்த ஈடுபாடும், ஈர்ப்பும், நாட்டமும், நயப்பும் தான், எனது நாட்டிய நாடக எழுத்தாற்றலை ஊக்குவித்தன என்றால் அது மிகையாகாது.

எல்லாவற்றுக்கும் மேலாக மிகவும் ஆழமான ஆன்மீகத் தளத்திலேயே நான் இயங்கி வருகிறேன். பிற கலைஞர்களோடும், விற்பன்னர்களோடும், வித்தகர்களோடும், வித்துவான்களோடும், இணைந்தியங்கக் கூடிய உளப்பாங்கும், இங்கிதமும் தான்., எனக்கு அன்பையும், ஆதரவையும் பிறரின் ஒத்துழைப்பையும் ஈட்டித் தந்தன என்பது என்னைப் பற்றிய எனது மதிப்பீடாகும்.

'நவீன தீர்ப்புகள்' என்ற நாட்டிய நாடகமே நான் முதலில் எழுதிய நாட்டிய நாடகப் படைப்பாகும். லண்டன் நர்த்தன கலாலயாவின் பணிப்பாளர், சங்கீத பூஷணம், நாட்டிய ஆசிரியை திருமதி பத்மினி குணசீலன் அவர்களோடு தான், எனது நாட்டிய நாடக அனுபவம் ஆரம்பமாகி, வலுப்பெற்று வளர்ந்ததெனலாம். தொடர்ச்சியாகப் பல நாட்டிய நாடகங்களை நானும் பத்மினி குணசீலன் அவர்களும் இணைந்து படைத்தளித்துள்ளோம். நாட்டியக் கலைமணி திருமதி சுபத்திரா சிவதாசன் அவர்களுடன் பக்தி, இதிகாச, இலக்கிய நாட்டிய நாடகங்களைப் படைத்துள்ளேன்.

மதிப்பிற்குரிய நாட்டிய ஆசிரியைகள், நாட்டியக் கலாமணிகள் திருமதி ராகினி ராஜகோபால், திருமதி ரஜனி சுரேஷ்குமார், திருமதி கிரிஜா வரோதயசிங்கம், திருமதி. வானதி தேசிங்குராஜா ('ஜேர்மனி), திருமதி உமா சந்திரதேவா எனப் பல கலா வித்தகிகளின் நட்டுவாங்கம், நெறியாக்கத்திலும் எனது நாட்டிய நாடகங்கள் அரங்கேறியுள்ளன.

பிரபல இசை மாமணிகள், திருமதி சரஸ்வதி பாக்கியராஜா, திருமதி மாதினி சீறிக்கந்தராஜா, திருமதி அம்பிகா தாமோதரம், திருமதி நாகேஸ்வரி பிரமானந்தா, செல்வி யசோதா மித்திரதாஸ், திரு. பொன் சுந்தரலிங்கம், திரு. சுபாஸ் சந்திரன், திரு. குற்றாலம் நாகராஜன், திரு. மாணிக்கம் யோகேஸ்வரன், திரு. கண்ணன் (ஜேர்மனி) எனப் பலர் எனது நாட்டிய



நாடகங்களுக்கு இசையமைத்தும், பாடியும் உள்ளனர். அண்மையில், பிரபஞ்ச லீலை எனும் நாட்டிய நாடகத்திற்குத் தமிழகத்தின் கலைமணிகள் வீரராகவன், ராமகிருஷ்ணன் ஆகியோர் இசையமைத்துப் பாடியுள்ளனர்.

எனவே நாட்டிய நாடகத் துறையில், பல வித்தகர்களின் ஆற்றல்களையும், அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டு, அவர்களிடமிருந்து பல விடயங்களைக் கற்றுக் கொள்கின்ற பாக்கியம், அன்னை பராசக்தியருளால் எனக்குக் கிடைத்துள்ள தென்பேன். கற்றது கைம்மண்ணளவு என்ற தமிழ் மூதாட்டியின் தாரக மந்திரமே, என்னுள் என்றும் ஒலித்துக் கொண்டிருப்பதோடு, 'கற்றுக் கொள், கற்றுக் கொள்' என்று என்னைக் கல்விப் பட்டறைக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறது.

முத்தமிழையும் சங்கமிக்க வைக்கக்கூடிய ஒரு கலைப்பெருவெளியாகவே, நான் நாட்டிய நாடகத் துறையை மதிக்கிறேன். மரபுக் கவிதைக்கும், இலக்கியத்திற்கும், இதிகாசத்திற்கும், பக்திக்கும், காதலுக்கும், பண்பாட்டிற்கும், பாரம்பரியத்திற்கும் களமமைக்கும் கலைத்துறை மட்டுமின்றிப் புதுமைக்கும், பழமைக்கும் பாலமமைக்கும் ஒரு பெரிய சக்தி நிறைந்த ஊடகமாகவும் நாட்டிய நாடகத் துறை விளங்குவதை யாராலும் மறுக்க முடியாது.

"பழையன கழிதலும், புதியன புகுதலும், கால வழுவல" என்ற தொல்தமிழ்ச் சிந்தனைக்கு அரங்கமமைக்கும் ஆற்றலும், அமைப்பும், நாட்டிய நாடகங்கட்கு உண்டு.

நாட்டிய நாடகங்களை யெழுதுகின்ற பொழுதுதான், நான் மரபினுடைய மகத்துவத்தைப் பூரணமாக அனுபவித்து வருகிறேன். நாட்டிய நாடகப் படைப்பாக்கங்களில், நவீன தொழில் நுட்ப வாய்ப்புக்களைப் பயன்படுத்துவதன் மூலம், எமது குழந்தைகளை, எமது மொழி, கலை, பண்பாட்டு விழுமியங்களில், ஈடுபடுத்த முடியுமென நான் உறுதியாக நம்புகிறேன்.

இசையின் நாட்டியத்தின் பயிற்சி பெற்று அரங்கேற்றம் செய்கின்ற குழந்தைகள், புலம்பெயர் நிலங்களில் இன்று எண்ணிக்கையில் அதிகரித்து வருவதை நாம் எல்லோரும் அறிவோம்.

இவர்கள், அரங்கேற்றத்துடன் நிறைவடைந்துவிடாமல், எமது மொழி, கலை, பண்பாட்டு நிலைகளில் மேன்மேலும் ஈடுபட, நாட்டிய நாடகங்கள் பெரிய அளவிற் துணை செய்யும் என்பது எனது நம்பிக்கையாகும்.

எனது இப்பார்வையைப் பகிர்ந்து கொள்கின்ற காரணத்தாலும் நாட்டிய நாடங்களைத் தமது சமூகப் பணியினூடு தொடர்ச்சியாக ஆற்றி வருகின்ற காரணத்தாலும், நாட்டிய நாடகங்களுக்கான எழுத்து வடிவங்களின் அருமையும் பெருமையும் தெரிந்த காரணத்தாலும், எனது நாட்டிய நாடகப் படைப்புக்களில் ஒரு சிலவற்றை, நூலாக்கும் நோக்குடன் என்னை யன்போடு அணுகினார், தமிழார்வலர், தமிழ்க் கல்விப் பள்ளிக் கூடத் தாபகர், லண்டன் தமிழ் நிலையத்தின் பணிப்பாளர், சன்ரைஸ் (Sunrise) வானொலி தமிழ் ஒலிபரப்பின் முன்னாள் பணிப்பாளர், ரத்தினம் பவுண்டேசன் நிறுவனத்தின் தாபகர், என் மீது பேரன்பும், மதிப்பும் கொண்டு என்னை நேசிக்கும் நண்பர் கலாநிதி. ரத்தினம் நித்தியானந்தன் அவர்கள். ஏழு நாட்டிய நாடகங்களைத் தொகுத்து, 'காவியச் சலங்கைகள்' எனும் தலைப்பிற் தர முன்வந்துள்ளார், கலாநிதி நித்தியானந்தன் அவர்கள்.

உண்மையில் இவரது பணி, எனக்கு உற்சாகமும், உந்துதலும் தருகின்ற ஓர் ஆன்மிகப் பணியாகவே நான் கருதுகிறேன்.

படைப்பாளியே, வெளியீட்டினையும் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை என் போன்ற பலருக்கு உண்டு. இந்நிலையில், இப்பணிக்கு முன்வந்து தமிழ்த் தொண்டாற்றும் கலாநிதி அவர்கட்கு என் நெஞ்சங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அச்சேற்றி, அழகேற்றி வைக்கும் பதிப்பகத்தார்க்கும் எனது நன்றிகள் உரியதாகும்.

நாட்டிய நாடகக் காட்சி ஓவியங்களை வரைந்துள்ள தம்பி இளஞ்செழியன் அவர்கட்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக, பல பணிகளின் மத்தியிலும், இந்நூலிற்கு அணிந்துரை வழங்கியுள்ள திருமதி. பத்மினி குணசீலன் அவர்கட்கும் எனது இதயங்கனிந்த நன்றிகளைக் கூறி,



இந்நூலுக்கான முக்கிய பணிகளில் ஈடுபட்ட அனைத்து உள்ளங்களையும் அன்போடு அரவணைத்து விடைபெறுகிறேன்.

அன்புடன் புலவர் சிவநாதன்



# நாட்டிய நாடகங்கள்

(உள்ளே...)


| | | | |
|---|---|---|---|
| 1. | கவிமகனும் கோமகளும் | ... | 47 |
| 2. | சிலம்புத்தீ | ... | 93 |
| 3. | சத்திய ஆரம் | ... | 139 |
| 4. | குருமகளும் – கோமகனும் | ... | 196 |
| 5. | எங்கிருந்தோ வந்தான் | ... | 249 |
| 6. | நதிமகன் | ... | 280 |
| 7. | மகாபாரதம் – பாஞ்சாலி சபதம் | ... | 313 |




# 1. கவிமகனும் கோமகளும்

அமுதொத்த தமிழ்க்கவிதை
அணிகொஞ்ச எமக்களித்த
இமயத்துக் கம்பன்
ஈன்ற திருமகனின்
இதயத்திற் சோழன்
இனிய மகள் அமர்ந்த
அமரத்துவக் காதல்
ஓவியத்தை வரைகின்றேன்.

உள்ளத்தின் உயருணர்வால்
ஒன்றுபட்ட ஈருயிர்கள்
கொல்லப்படும் கொடுமை
கொண்டதொரு வரலாறு
நல்ல தமிழ்க்குடியில்
நடந்ததா? எனநெஞ்சு
சொல்ல அமர்ந்திந்தக்
காவியத்தை வடிக்கின்றேன்.

நல்லவரே நீவிர்
நயந்திதனை ஏற்றிடுவீர்
வல்லதொரு காதல்
வாழட்டும்! வரவேற்போம்!

– அன்புடன் புலவர்



1. கவிமகனும் கோமகளும்

## காட்சி 1

அரங்கின் பின்னணியில் சக்தி வணக்கப் பாடல் இராக ஆலாபனையைத் தொடர்ந்து சுர, ஜதிகள்...

பாடல்

அண்டங்களியக்கிடும்
அன்னையெம் சக்தியை
வந்தனை செய்திடுவோம்! - அவள்
மண்டலம் கோள்களின்
மாவிசையாகியே
நின்றனள் தொழுதிடுவோம்!
விண்ணிலே பிறந்து பின்
மண்ணிலே குவிந்திடும்
பஞ்சபூ தங்கள் அவள்! - வாழ்
எண்ணிலா உயிர்களை
நுண்ணிய பொருள்களைத்
தன்மயமாக்குகிறாள்! - சா
வின் பயம் போக்குகிறாள்! - அண்டங்களியக்கிடும்
முத்தொழிலாற்றிடும்
மூவரின் சக்தியாய்
நிற்பவளாம் எங்கள்தாய்!
வித்தைகள் யாவிலும்
வித்தெனவே நின்று
அற்புத மாற்றுகின்றாள்! - உயர்
மெய்ப்பொருள் காட்டிடும்
உட்பெருஞானமாய்...
உள்ளொளி ஏற்றுகின்றாள்!
முத்தமிழாய்ப் பெருஞ்
சித்தர் சொல்லாய் அவள்
நல்வழி காட்டுகின்றாள்!
- அண்டங்களியாக்கிடும்

ஜதிகள்... இடையிடையே பின்னப்படு இப்பாடல் இசையமைக்கப்படுதல் வேண்டும்.

இக்காட்சியைத் தொடர்ந்து

அவையில் நாட்டிய தாரகைகள் எண்மர் அவைக் கூற்றர்களாக வருகிறார்கள். அவைக்கு அஞ்சலி செய்து நாட்டிய நாடகத்திற்கான கட்டியங் கூறுகின்றனர், இந்த எண்மரும் :

பாடல்

**தமிழ்க்கலை போற்றிடும்**
**தகைமை கொண்டோரே**
**தங்களை வணங்குகிறோம்!**
**இனித்திடும் மொழியினைப்**
**போற்றிடும் உமையெலாம்**
**இதயத்தில் ஏற்றுகின்றோம்!**

**'கவிமகனும் கோமகளும்' என்றெதாரு தலைப்பில்**
**கற்பனைகள் கலந்ததொரு கலைப்படைப்பைத் தருவோம்!**
**கவிஞர் தொழும் கம்பன் மகன்**
**கவிமகனாய் எழுவான்!**
**புவியரசன் சோழன் மகள்**
**கோமகளாய் வருவாள்!**

நாட்டுச் சிறப்பு

**ஆறுகள் வயல்கள் ஆரமாயணிந்த**
**சோறுடைச்சோழப் பெருநாடு**
**ஏறுடைத் தாகிப் பொலிந்தது தமிழர்**
**புகழுடன் வாழ்ந்தனர் அந்நாளில்**

கம்பன் சிறப்பு

**கரும்பெனத் தமிழைக்**
**கவிதைகளாக்கி...**
**விருந்திடப் பிறந்த**
**பெரும் புலவன்**
**திருவழுந்தூரிற்**
**தமிழ் மகள் தவத்தால்**
**அவதரித்தானே**
**என் தோழி!**



**ஆதித்தன் என்பார்**
**எந்தை யென்றறிந்தார்**
**ஈன்றவள் அறியாராய்த்**
**தாய்சக்தியவளைத்**
**தன்னுளே கண்டார்**
**தாள் பற்றும் ஒளியானார்**

**கையினிலே எழுத்தாணி! – அவன்**
**கருத்தினிலே கலைவாணி**
**வையத்தின் பண்பினைப் பேணி கவி**
**வரைந்தனன் அவை தனிப்பாணி**

**ஞானத்தையறியா அஞ்ஞான இருள்கொள்**
**ஞாலத்திற் கம்பன் தனியானான்**
**சோதித்த வறுமைக் கடலினில் நீந்திச்**
**சுகங்குன்றி வனத்தின் வழிபோனான்!**

அவைக் கூற்றர்களாக வந்த எண்மரும் நாட்டிய நாடகத்தின் அரங்கக் கட்டியத்தைப் பாடல், ஜதி, சுர, ராகச் சிறப்புகளோடு வெளிப்படுத்திச் செல்கின்றனர்.

இந்த நாட்டியம் பார்வையாளர்களின் நுகர்வுக்கு விருந்தாகவும், நாட்டிய நாடகத்தின் கருத்தியல் நுழைவுப் பாதையாகவும் அமைதல் வேண்டும். நாட்டிய தாரகைகள் எண்மரும் மாறி மாறிக் கதை கூறுவதாக அமைக்கப்படுதல் அவசியமாகும்.

இதன் முடிவில் அரங்க விளக்கு அணைகிறது.

மீண்டும் அரங்க விளக்கு எரியும் போது ஒளிப்பொட்டில் கவியரசன் விருத்தப்பாவின் விளக்கு...

கவிச்சக்கரவர்த்தி... புலவர் பெருங்கோ, கம்பன் தோன்றுகிறான். கானகத்தின் வழியே கம்பன் கண்களிற் களைப்பும் உடலில் இளைப்பும் விஞ்சி நிற்க வருகிறான்.

பின்னணியில் விருத்தப்பா

**தாய் கலைவாணியைத் தாங்கிய நாவும்**
**தோய்தமிழ் நெஞ்சும்தூயநல்லறிவும்**
**ஆய்ந்துணர் ஞானம் அறம் நிறை பார்வையும**

**ஆன்றவர் சான்றோர் ஏற்றிடும் பண்பும்**
**காய்விலாக் கவித்துவம் கசிந்திடுமுயிரும்**
**காவியம் யாத்திடும் தொல்விதிப்பயனும்**
**ஒரெழுத்தாணியும் ஓலையும் ஏடும்**
**ஏந்திய கரங்களும் எம்முன்னே வந்தவே!**

கம்பன் கலைவாணியை வணங்குகின்றான்.

வறுமையின் வாட்டம் அவன் வணக்கத்தில் வெளிப்படுகிறது.

பாடல்(கம்பன் – அபிநயத்துடன்)

**கலையும் கல்வியும் கனித்தமிழும்**
**நிலையென்று காட்டியவள் நீயல்லவோ**
**அலையும் உன் பிள்ளைக்கு**
**ஆறுதல் தரவிங்கு**
**மனம் இன்னும் வரவில்லையோ?**
**நானுந்தன் மகனில்லையோ?**
**ஞானத்தின் உருவாகி**
**மௌனத்தின் கருவாகி**
**ஊனுக்குள் உயிராகி**
**இருக்கின்ற தேவி!**
**கானகத் தருவாகி**
**கவிதைகள் பொழிகின்றேன்**
**காவியப் பொருளாகிக்**
**கதியெனக் கருளாயோ? அம்மா**
**கதியெனக் கருளாயோ?**

வேதனை நெஞ்சை வருத்தக் கம்பன் அன்னை பராசக்தியை வேண்டி விழிநீர் பொழந்தவனாகத் தரையில் அமர்ந்து பிரார்த்திக்கிறான்.

இப்போது அரங்கில் ஒளிப்பொட்டில் அன்னை பராசக்தியின் தோற்றம்!

கம்பன் கண்களை மூடித் தியானத்தில் அரங்கின் முகப்பில் அமர்ந்திருக்க அன்னை பராசக்தி அரங்கின் பகுதியில் நடனமாடி வருகின்ற காட்சி.

பராசக்தி கலைவாணி வெண்டமாரைவாழ் பாரதி அவையிலே ஆடி வரும் காட்சிக்கான பின்னணிப் பாடல்



பாடல்

**அன்னை சரஸ்வதி...**
**அழகிய வெண்டா**
**மரையுறை நாயகியே!**
**பன்னுமருட் கவி**
**பாடலில் ஆடலில்**
**நடமிடு கலைமகளே!**
**மன்னுதமிழ்க் குரு**
**வாகி யெம்முயிரொளி**
**மின்னிட நிற்பவளே!**
**உன்னையல்லாதினி**
**உலகினில் யார் துணை**
**உன்னடி பணிவோமே!**

கலைவாணி தியானத்தில் அமர்ந்திருக்கும் தன்பிள்ளை கம்பனைப் பரிவோடு பார்க்கிறாள். அவனருகில் வருகிறாள்.

அவனைப் பார்த்து, அவனது பெருநிலையைத் தானே பாடி வியக்கிறாள்.

கலைவாணி பாடி நடமிடுகிறாள்

பாடல்

**கம்பன் பிறந்தது தமிழ் செய்ய! – அவன்**
**கல்வி பயின்றது கவி நெய்ய!**
**கண்கள் திறந்தது அணி கொய்ய! – அவன்**
**காவியம் செய்வான் உலகுய்ய!**
**துன்பத்தை வெல்வான் திடங் கொள்வான் ஒரு**
**சடையப்பன் இவன்பால் திறங்காண்பான்!**
**இன்பத் தமிழதன் மழை பெய்ய – அவன்**
**எழுவான் உயர்வான் பொய்யல்ல**

இவ்வாறு கம்பன் திறன்பாடிய கலைவாணி கம்பன் முன் வந்து காட்சி தருகிறாள்

கம்பன் இமைகளையுயர்த்தித் தன்முன்னே காட்சி தந்து நிற்கின்ற அன்னை கலைவாணியைக் கண்டதும் பக்திப் பரவசமடைந்து எழுகிறான். அவளைத் தொழுகிறான்.

கம்பனின் பாடல்

**ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்**
**ஏய உணர்விக்கும் என்னம்மை தூய**
**உருப்பளிங்குபோல் வாள் என்னுள்ளத்தினுள்ளே**
**இருப்பள் இங்கு வாராதிடர்**
**படிக நிறமும் பவளச் செவ்வாயும்**
**கடிகமழ் பூந்தாமரை போற்கையும் துடியிடையும்**
**அல்லும் பகலும் அனவரதமும் துதித்தாற்**
**கல்லும் சொல்லாதோ கவி**

அன்னை பராசக்தி கம்பனை ஆசிர்வதித்து மறைகிறாள்.

இப்போது பின்னணியில் குதிரை வண்டி வரும் சத்தம் கேட்கிறது.

அரங்கில் சடையப்ப வள்ளல் வருகிறார்.

கம்பனைக் கண்டு அவனை அணைக்கிறார்.

கம்பனையும் அழைத்துக்கொண்டு குதிரை வண்டியிற் தமது மாளிகை நோக்கி செல்கிறார்.

பின்னணியில் காட்சி விளக்கமாகப் பாடல் எழுகிறது.

பாடல்

**அன்னை பராசக்திஅருளாலே கம்பன்**
**முன்னே வந்தார் சடையப்பர்**
**பொன்னும் மணியும் நெல்வயலும் பெரும்**
**பொருளும் நிறைந்த தனவந்தர்**

**கம்பன் மீது பேரன்பு - அவர்**
**கொண்டே தம்மோடணைத் கிக்டடார்**
**இன்பத் தமிழை வடமொழியைக் கம்பன்**
**திறமைபெருகக் கற்றிட்டான்**

**சடையப்ப வள்ளலின் செந்தமிழ்ப் பற்றால்**
**மடையொப்ப நாவுடை மணித்தமிழ்ப் புலவன்**
**கொடை பெற்றுத் தவத்தின் குடையின் கீழிணைந்து**
**தடையற்றுத் தமிழின் ஒளிவீசி மகிழ்ந்தான்**

அரங்க விளக்கு அணைகிறது.



## காட்சி 2

அரங்கில் மாயத் திரையின் (ஒளிகசிதிரை) பின்னால்...

பாத்திரங்கள்

கம்பர் புகழேந்தி, அம்பிகாபதி (சிறுவன்), கண்ணம்மா (சிறுமி)

குறிப்பு

காட்சியின் இடையில் சடையப்பரும் மன்னனும் வந்து வந்து இணைகின்றனர்.

அரங்க விளக்கு ஒளிரும் போது...

அவைக் கூற்றர் வருகை

அ.கூ. 1

**கம்பர் திருவில்லம் - இங்கு**
**காணும் பொருளெல்லாம் தமிழ் சொல்லும்!**
**பொங்கும் கவியின்பம்! - அதிற்**
**புதுப்புது அனுபவம் நிலை கொள்ளும்!**

அ.கூ 2

**புகழேந்திப் புலவருடன் கம்பரின் நட்பு!**
**பேசுவதும் பாடுவதும் தமிழதன் பெட்பு!**
**பகலோடு இரவாகப் பைந்தமிழாய்ந்து - நறு**
**பாயிரங்கள் யாத்தனரே அன்புடன் வாழ்ந்து**

இப்போது கம்பரும் புகழேந்தியாரும் உறவாடி...
அன்பு காட்டுதலை நாட்டியத்தின் மூலம்
காட்டலாம்!

அ,கூ. 1

**கம்பர் கனியாக - அவர்**
**அன்பு வாழ் வொளியாக...**
**இன்பத் திருமகனாய் - சுடர்**
**அம்பிகாபதி வந்தான்!**

அ.கூ. 2

புகழேந்தி கவிப் பொருளாய் – அவர்
புகழேந்தும் தவத்திருவாய்...
மகளானாள் கண்ணம்மா! – தமிழ்
மாண்புக்கோர் பெண்ணம்மா!

இப்போது, மாயத்திரைவிலக, அவைக்கூற்றர் அரங்கினை விட்டு அகலுகின்றனர்.

கம்பரும் புகழேந்தியும், தமது குழந்தைகளுடன் தமிழத்தாயைப் போற்றிப் பாடி மகிழ்கிறார்கள்.

(கம்பரும், புகழேந்தியும் கண்ணம்மாவும் அம்பிகாபதியும் அரங்கின் முன்புலத்திற்கு வந்து ஆடிப் பாடுகிறார்கள்)

புகழேந்தி (பாடல்)

செந்தமிழ்ப் பூங்கொடியே! – எங்கள்
சிந்தனைக் காவினில் வெண்மதியே!
சொந்தமென்றே யெமக்கு – இறை
தந்த பெரும் பொருள் உன்மடியே!

கம்பன்

முக்கண் தலைவன்
பொதிகை மலையின்
பக்கம் உனை ஈந்தான்!

தக்கும் மொழியாய்த்
தரணிக் கொளியாய்க்
கற்க உனைத் தந்தான்!

புகழேந்தி

அங்கொரு குறுமுனிவன் – ஞான
அகத்தியன் உன்னெழில் கண்டு வந்தான்!
தன்திரு நெஞ்சினிலே – நீ
தவழ்ந்திட அகத்தியம் செய்து தந்தான்



கம்பன்

உயிரும் மெய்யும்
உணர்வும் அறிவும்
உயிராய்க் கொண்டவளே!
வையம் உய்யும்
வழியே கருவாய்
உரியாய் நின்றவளே!

புகழேந்தி

தொல்காப்பியம் துணையாய்ப் பலநூல்
பல்லோர் படைத்திட்டார்!

அம்பிகாபதி

நல்காவியங்கள் நவின்கொள் கவிதை
வல்லோர் தொடுத்திட்டார்!

ஒளிப்பொட்டில், சிறுவன் அம்பிகாபதியும், சிறுமி கண்ணம்மாவும் கரம்பிடித்தாடுதல். ஜதி, சுர நடைகளினிடையே கண்ணம்மாவும் அம்பிகாபதியும் இளமைப் பருவம் அடைகிறார்கள். ஒளிப்பொட்டு அணைந்து எரியும் போது அவர்களின் வளர்ச்சியைக் காட்டலாம்!

கண்ணம்மா பாடல்

வள்ளுவம் கொண்டவளே! உயர்
வேதப் பிழம்பென நின்றவளே!

அம்பிகாபதி பாடல்

கள்ளினை வென்றவளே! – வளர்
காதலை வீரத்தைக் கண்டவளே!

கண்ணம்மா பாடல்

முத்தமிழனாவளே! – இந்த
மூத்த மொழிகளில் வாழ்பவளே!
செம்மொழியே! எம்விழியே!

இப்போது சடையப்பர் அரங்கிற்கு வருகிறார்.

சடையப்பர்

**வெள்ளையுளத் தவரின் – அன்பை**
**வேள்வியாய் ஏற்றிடும் வித்தகியே!**

கம்பர் (சடையப்பரை வரவேற்றபடியே)

**வள்ளல் வடிவினிலே – இந்த**
**இல்லத்தைக் காத்திடும் இனியவனே!**

எல்லோருமாக...

**அன்னை சரஸ்வதியாள் – இந்த**
**அவனியில் ஏற்றிய ஒளிக்கதிரே!**
**உன்னை நாம் போற்றிடுவோம் – எம்**
**உயிரென உன்புகழ் காத்திடுவோம்!**

இப்போது மன்னன் அவையில் வருகிறான்!

மன்னன்

**சொல்லவோ வேண்டுமினி! – கவிச்**
**சுவையுடன் அன்பினைப் பகிர்ந்திடலாம்!**
**கல்லையும் உருக்கிடலாம்! – சோழக்**
**காற்றிலே தமிழ் மணம் பரப்பிடலாம்!**

அரங்க விளக்கு அணைந்து மீண்டும் எரிகிறது!

அரங்கில் கம்பர் புகழேந்தியர், சடையப்பர்காட்சி தருகின்றனர்!

புகழேந்தியர் மரணப் படுக்கையில் இருக்கிறார்!

கம்பரும், சடையப்பரும் அவருடன் கவலை தோய்ந்த முகத்துடன் இருக்கின்றனர்!

சோக இசை, பின்னணியில் இசைக்கின்றது!

அம்பிகாபதியும், கண்ணம்மாவும், ஒருவரையொருவர் அணைத்தபடி நிற்கின்றனர்!

பின்னணியில் விருத்தம்

(இப்பாடலுக்குரிய பதம் அவையில் இடம்பெறும்)



**புகழேந்திப் புலவர் ஆவி**
**பூவுடல் விட்டு நீங்கிப்**
**புகழ் ஏந்திச் செல்லும் காலம்**
**பூத்திட... அவர் தம்பக்கம்**
**அகலாமல் அன்பு காட்டி**
**அத்தனை பணியும் அட்டி... (செய்து)**
**மகளாம் ஓர் கண்ணம்மாவின்**
**மாதுயர் துடைத்தான் கம்பன்!**
**மாதுயர் துடைத்தான் கம்பன்!**

**அம்பிகா பதிக்கு மங்கை**
**அழகிய கண்ணம்மாவை**
**இன்பமா மனைவிளக்காய்**
**இணைத்திடும் படியாய்க் கேட்டுக்**
**கம்பன் தன் விழிகள் தம்மைக்**
**கனிவுடன் நம்பிப் பார்த்த**
**நண்பனை நேயத்தோடு**
**நெருங்கியே அணைத்தான் கம்பன்!**
**மங்கையாம் கண்ணம்மாவை மருமகளாக ஏற்றுத்**
**தன் கையைத் தந்து வாக்கும்**
**தந்தனன் கம்பன் அம்மா**

(சோக இசையில் புகழேந்தியார் உயிர் பிரிகிறது)

**தங்கையாய் நெஞ்சில் ஏற்றுத்**
**தமையனாய்த் தன்னைப் பார்த்து**
**அன்பிலே திளைத்தான் நம்பி**
**அம்பிகா பதியான்... ஆனால்**
**மங்கையாம் கண்ணம்மாவோ**
**மயங்கினாள் அத்தான் என்றே**
**இங்குதன் திறனைக் காட்டி**
**இருந்ததே விதியாம் அந்தோ**

(இப்பாடலுக்கு அம்பிகாபதிக்கும், கண்ணம்மாவுக்கும் இடையில் உள்ள மாறுபட்ட அன்பினை வெளிக்கொணர்தல் வேண்டும்)

## காட்சி 3

குலோத்துங்கன் அரசவை

குலோத்துங்கன், ஒட்டக்கூத்தன், கம்பன் ஆகியோருடன் அம்பிகாபதியும் சடையப்பரும் அவையில் இருக்கின்றனர்.

இப்போது சடையப்பர், இராமாயணத்தினைத் தமிழாக்கஞ் செய்வது பற்றி, (அரசன் முன்) கருத்தை முன் வைக்கிறார்.

*சடையப்பர்*

**வடமொழி வல்லார்**
**வான்மீகி செய்த**
**கவின் மிகு காவியம் ராமாயணத்தை**
**வடமலை தொடங்கித்**
**தென்கரை வரையும்**
**அனைவரும் கேட்டு இன்புறல் கண்டோம்!**
**பிறமொழி தன்னிற்**
**புரிந்திடா நிலையிற்**
**பித்தராய்த் தமிழர் போற்றிடல் கண்டோம்**
**திறனொடு தமிழிற்**
**தீட்டியெம் மக்கள்**
**தெளிந்திடச் செய்தல் அரச உன்கடனாம்**

*ஒட்டக்கூத்தன் (ஆத்திரத்துடன் எழுகிறார்)*

**அந்நிய மொழயின் இலக்கியந்தானா...**
**அவைக்கின்று பொருளாச்சு!**
**கன்னியெம் தமிழைக் குறைத்திடலானால்**
**நமக்கென்ன வீண் பேச்சு!**
**மன்ன நம்மொழிக்கு மாசு செய் கருத்தை**
**மறுத்திடுவேன் முழுதாய்!**
**கன்னலாம் கவிதைக் காவியம் புதிதாய்க்**
**கொடுத்திடுவாள் தமிழ்த்தாய்!**

*சடையப்பர் (ஒட்டக்கூத்தரைப் பார்த்து)*

**மொழி எதுவானால் என்ன? - அதன்**
**பொருள் அருளானாற்**



**போற்றிடல் கடனே!**
**இது தமிழ் மரபதன் பெருமை! - யான்**
**உயர் கவி கூத்தர் குரைத்திடல் மடமை!**
**கருவினை வடமொழி தரட்டும்! - தமிழ்**
**கவிதையில் அது மலர்ந்**
**தேயொளி பெறட்டும்!**

*ஒ.கூத்தர்*

**நானிதைப் போற்றிட மாட்டேன்! - பிறர்**
**நாவிலே பிறந்ததை நான் தொடமாட்டேன்!**
**தேனிலே பிறந்த நம் மொழியால் அது**
**தேய்ந்திடும் காரியம் தீர்க்கிலாப் பழியாம்!**

*கம்பர் (அமைதியாக)*

**கூத்தரே! கோபத்தில் நாத்தடுமாறியே**
**வார்த்தைகள் வடிக்கின்றீர்!**
**மூத்தவள் எம்தமிழ் முழுமையாய் நிற்பவள்**
**சேர்த்திடுவாள் வளத்தை!**

*இப்போது அம்பிகாபதி எழுகிறான்!*

*அம்பிகாபதி*
*பாடல்*

**எப்பொருள் யார்தந்த போதும் - அதில்**
**மெய்ப் பொருள் காண்கின்ற**
**மேன்மை தான் வேண்டும்**
**அற்புதமானதோர் கருவை - நாம்**
**அழியாத காவியம் ஆக்குதல் கடமை!**
**கற்பது கண்களைத் திறக்க! - வழி**
**காட்டுவோம் பற்பல காவியம் பிறக்க!**
**கூத்தரே குறை கொள வேண்டா! - தமிழ்க்**
**கூடலில் இராமனைக் கூறிய சான்று**
**சாற்றிட வேண்டு வதாமோ? - பழம்**
**பாடலிற், குறளிலே பகர்ந்திடல் காண்போம்!**
**கலித்தொகை பேசியதுண்டு!**
**பரிபாடலும் கூறியதுண்டு!**

சிலம்பதும் பேசியதுண்டு!
செங்குருதி கொள் புறமது செப்பியதுண்டு!
அரும்பெரும் புலவர்கள் எல்லாம் – இதை
ஆங்காங்கு தொட்டதும் தொடர்ந்ததும் உண்டு!
கரும்பெனும் தமிழிலே தோய்த்த ஒரு
காவியம் செய்வதில் என் தவறுண்டு?

*கூத்தர் (ஆவேசத்துடன் எழுகிறார்)*

வயதிலே சின்னவன் அம்பி! – தன்
வாய்க்கு வந்ததையெலாம்
வடிக்கின்றான் எம்பி
வண்டுகளாகுமோ தும்பி உன்
வார்த்தையை நெஞ்சுளே
அடக்குவாய் தம்பி!
கடவுளே ராமனென் றோம்பி – ஒரு
காவியம் தீட்டினான் வடக்கிலே நம்பி
மூவருள் ஒருவனாம் திருமால் அவன்
முழுமுதற் கடவுளோ முதல்வனாய் வரவோ?

*அம்பிகாபதி*

அறம் தர்மம் நீதியே வெல்லும்! – உளம்
பிறன் மனை விரும்புதல் பேராண்மை கொல்லும்
பரம்பொருள் ஒன்றுண்டு என்போம்! – இப்
பாதையிற் காவியம் படைத்திடில் வெல்வோம்!
தமிழரின் தர்மத்தைப் போற்றி – அவர்
தாங்கிய சால்புகள் யாவையும் ஏற்றி
அமிழ்தான காவியம் செய்வோம் ஒரு
அழகான கருவினை அறிவினால் நெய்வோம்.

இப்போது அமராவதி, அவையின் உயர் மண்டபத்தின் திரை விலக்கி, அம்பிகாபதியின் அழகிய திருவுருவையும், அவையாற்றலையும், ஆளுமையையும் கண்டு வியப்பும், விருப்பும் ஒருங்கே எய்துகிறாள்!

ஒளிப்பொட்டில் அமராபதியின் அழகுத் தோற்றமும் அவளது, விடுதலறியா விருப்பும் காட்டப்படுகிறது.



*குலோத்துங்கன்*

வான்மீகி படைத்த வளமிகு காவியம்
ஈங்கு நம் தமிழில்இயற்றிடுவோம்!
ஆன்றவர்புகழ் அகிலமுமும் போற்ற
அழகுறச் செய்யும் கவி உளனோ?

*இப்போது சடையப்பர்*

திருவளர் செல்வ! வளவரின் தலைவ!
அறிவை நீ உண்மை! ஆயினும் சொல்வேன்!
குருவெனப் பொலியும் கம்பனை விடவோர்
அருளுடைக் கவிஞன் தமிழரில் உளனோ?

*ஒட்டக்கூத்தன் ஆத்திரத்தாலும் பொறாமையாலும், உக்கிர தாண்டவம் ஆடுகிறான்! ஆட்டத்தின் முடிவில்*

*ஒட்டக்கூத்தன் (எள்ளி நகையாடும் நோக்குடன்)*

எழுத்தாணி கொண்டிங்கு ஈவது ஏற்றிடப்
பொருத்தமாய்ப் பிறந்த கம்பா!
கழுத்தே தான் போனாலும்கவித்துவம் விற்றிடும்
காரியம் நமக்கு வேண்டாம்!
*(கம்பர் திடுக்குற்று... வேதனையுடன் எழுகிறார்)*

*சடையப்பர் (கம்பனைப் பார்த்து)*

அகமும் புறமும் ஆன்றோர் இலக்கணமும்
திகழ் சிலம்பும் மேகலையும் சேர்த்து – சிகரமெனத்
தோன்றும் திருக்குறளும் செப்பியதை யெல்லாம்நீ
ஆன்றதொரு காவியமாய் ஆக்கு

அரங்க விளக்கு அணைகிறது

*இப்போது கம்பன்,*
*தனியான ஒளிப்பொட்டில் வருகிறான்!*
*கம்பன், இராமாயணத்தை எழுதத் தொடங்குகிறான்!*

*(கம்பராமாயணத்தின் தற்சிறப்புப் பாயிரத்திலிருந்து!)*

*பின்னணியிற் பாடல்*

**தேவபாடையில் இக்கதை செய்தவர்**
**மூவரானவர் தம்முளும் முந்திய**
**நாவினார் உரையின் படி நான்தமிழ்ப்**
**பாவினால் இது உணர்த்திய பண்பு அரோ!**

**வையம் என்னை இகழவும், மாசு எனக்கு**
**எய்தவும் இது இயம்புவது யாது? எனில்**
**பொய்யில் கேள்விப் புலமையினோர் புகல்**
**தெய்வமாய்க் கவி மாட்சி தெரிவிக்கவே!**

*(இராமாவதாரத்தின் கடவுள் வாழ்த்துப் பாடல்)*

**உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்**
**நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா**
**அலகு இலா விளையாட்டு உடையார் அவர்**
**தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே!**

அரங்க விளக்கு அணைகிறது!

## *காட்சி 4*

காட்சி 3இல் அரங்க விளக்கு அணைந்து...

மீண்டும் எரிகிறது!

*அமராவதியும், கண்ணம்மாவும் தனித்தனியான ஒளிப்பொட்டில் தோன்றுகிறார்கள்!*

*அமராவதி*

**அவையினில் மதிமுகம் காட்டியெழுந்தான்!**
**அம்பிகாபதி யெனும் ஆதவன் ஒருவன்!**
**சுவைபடப் பேசிச் சபைதனை ஈர்த்தான்**
**சுந்தரத் தமிழின் அழகினிற் தோய்த்தான்**

*கண்ணம்மா*

**அழகர் அறிஞர்... அவரோர் கலைஞர்!**
**ஆனந்தமாய்ப் பேசிக் குலவிடும் மனிதர்!**



**வளவன் மகளே! வார்த்தைகளறியேன்!**
**அவனறி வாற்றலை இயம்பிட அறியேன்**

*அமராவதி*

**உள்ளத்தை அள்ளும் தமிழ்க்கவிதை – வாழும்**
**இல்லத்தில் வாழும் என் தோழி – கண்ணம்மா**
**வள்ளல்களாம் கம்பர் அவர் மைந்தர் வாய்ச்**
**சொல்லிலே நீந்துகிறாய் என் தோழி – கண்ணம்மா**

*கண்ணம்மா*

**கள்ளமில்லா உள்ளம்...**
**கவிதையின் ஊற்று!**
**கலைவாணி மூச்சே...**
**அதில் வரும் காற்று!**

**என்ன தவம் செய்தே**
**நான் பிறந் தேனோ**
**அந்தத் திருவீட்டை**
**நான் பிரிவேனோ?**

*அமராவதி*

**கண்ணம்மா உன்னிடம் ஒன்று நான் கேட்பேன்**
**கனிவுடன் எனக்கொரு உதவி நீ செய்வாய்?**

*கண்ணம்மா*

**என்னம்மா? சொல்லுங்கள்!**
**ஏனிந்தத் தயக்கம்?**
**இன்னும் நம் உறவினில்**
**தேவையோ கலக்கம்?**

*அமராவதி*

**அம்பிகாபதியவர்**
**அழகு சொற் கவிதை...**
**அறிந்திடத் துடிக்கிறாள்...**

இங்கொரு பேதை!
கொண்டு நீ வருவையோ?
குடித்திடத் தருவையோ?
அன்புடன் உன்னிடம் வேண்டுகின்றேனே!

*(அமராவதியின் உள்நோக்கினை அறியாதவளாக)*

*கண்ணம்மா*

இது என்ன பெரிய வேலை அம்மா! – நான்
இருப்பதில் வேறென்ன தேவையம்மா!
வனிதையின் தாகம் நான் உணர்வேன் தமிழ்ப்
புதுக்கவிதைப் பூக்கொணர்வேன்!

*(என்றபடி அரங்கினை விட்டுச் செல்கிறாள்!)*

*அமராவதியின் காதல் உணர்வலைகள் ஆர்ப்பரிக்கின்றன!*

*அம்பிகாபதியின் நினைவில் மயங்குகிறாள்!*

அரங்க விளக்கு அணைந்து மீண்டும் எரிகிறது!

*அமராவதியும் கண்ணம்மாவும் மாறி மாறித் தோன்றி அம்பிகாபதி மீதுள்ள தமது காதலை வெளிப்படுத்தி ஆடுகிறார்கள்!*

*அமராவதி*

நெஞ்சே... எனைவிட்டு ஓடாதே! – இது
நேற்று வந்த உறவு!
தஞ்சம் அவரென்று ஓடுகிறாய்! – அவர்
தலைவரென்றே நின்று ஆடுகிறாய்!

*கண்ணம்மா*

அன்று தொட்டே உனக்கு வாழிடம் தந்தேன்.
ஆறுதல் தந்திடும் ஊரென நின்றேன்!
உன்துயர் வேளையில் தோழமை செய்தேன்!
இன்றெனைத் தூசென எறிந்து நீ செல்கிறாய்!

*அமராவதி*

பார்ப்பவர் என்னைப் பரிகாசம் பண்ண
பகலிலே கனவினில் வீழ்த்தினாய் என்னை!



நோய்பட்ட பெண் போல் பசிதூக்கம் இழந்தேன்!
நீமட்டும் நெஞ்சே... காதலில் மலர்ந்தாய்!

## *காட்சி 5*

*ஒளிப்பொட்டில், கம்பன் ராமாயணத்தை எழுதிக் கொண்டிருக்கிறான்!*

*இன்னோர் ஒளிப்பொட்டில்...*

*(மன்னன் குலோத்துங்கன், ஒட்டக்கூத்தருடனும் அமராவதியுடனும் கம்பர் இல்லத்திற்கு வருகிறான்)*

*மன்னன் வருகை கண்டு, கம்பர் எழுந்து வரவேற்றல்*

*கம்பர்*

பொன்னியவள் செல்வனே!
போர்க்களத்தின் வீரனே!
உன்னிழலைத் தாங்க இந்த
இல்லம் என்ன செய்ததோ?

*மன்னன்*

புலவரெல்லாம் போற்றுகின்ற
பெருமகனே! கம்பரே!
நலமறிந்து செல்லவந்தேனே!
நல்ல தமிழ் உண்ண வந்தேனே!

*ஒட்டக்கூத்தர்*

ராமன் பாணம் பாடுகின்ற
வாணர் உங்கள் கவித்திறன்
காண என்று ஓடி வந்தோமே!
கவிதை சில கூறுவீர்நீரே!

*மன்னன்*

ஞான ஒளி வீசுகின்ற காவியத்தை யாத்திடும்
பான்மை தனைப் பார்த்திட என்னன்புமகள் வேண்டினாள்
ஆனதினால் உங்கள் இல்லம் நாடிவந்தோம் கம்பரே
ஆசையுடன் நாம் சுவைக்கச் சில கவிதை சொல்லுவீர்

*கம்பன், தனது ஓலையை எடுத்துப் படிக்கிறான்!*

*மிதிலைக் காண்டத்திலிருந்து, சீதை ராமனின்*

*பார்வைச் சந்திப்பினை வடிக்கும் கவிதை அது!*

*இப்பாடலைக் கம்பன் பாடத் தொடங்கும் பொழுது,*

*அம்பிகாபதி, அரங்கினுள் நுழைகிறான்!*

*அமராவதி நிற்பதைக் கண்டு... அவளது அழகினையும்*

*தமிழார்வததையும் உற்று நோக்கியவாறு அடியெடுத்து வைக்கிறான்!*

*அம்பிகாபதியின் வரவைக் கண்ட அமராவதி*

*அவனது கண்கள் மீது பதிந்த தனது பார்வையை*

*விலக்க முடியாதவர்களாகச் சிலை போல் நிற்கிறாள்!*

*இவர்கள், இருவரும் ஒருவர்மீது ஒருவர்,*

*(பார்வை நிலைத்து) நிற்பதை ஒட்டக்கூத்தர்*

*அவதானிக்கிறார்! அவரது சூழ்ச்சி நிறைந்த*

*சிரிப்பும், பார்வையும் வெளிப்படுகிறது!*

*கம்பன் (பாடுகிறான்) (கம்பராமாயணத்திலிருந்து)*

**எண்ணரு நலத்தினால்...**
**இளையள் நின்றொளி**
**கண்ணொடு கண்ணினைக் கௌவி ஒன்றையொன்று**
**உண்ணவும் நிலைபெறாது**
**உணர்வும் ஒன்றிட**
**அண்ணலும் நோக்கினான்!**
**அவளும் நோக்கினாள்!**

*இப்பாடலின் முடிவில்*

*ஒளிப்பொட்டில் அம்பிகாபதியின் காதல் ஏக்கம் வெளிப்படுகிறது!*

*அம்பிகாபதி (அமராவதியின் நினைவில்)*

*ஓலையில் எழுதிக் கொண்டிருக்கிறான்*



பாடல்

*(தொகையறா வடிவினில் இராப ஆலாபனையுடன்)*

**முத்தென்று முகந்தான் காட்டி**
**மறைந்ததோ சிப்பிக்குள்ளே!**
**முழுமதி வதனங்காட்டி...**
**மூழ்கிற்றோ முகிலுக்குள்ளே!**

**கற்பனைத் தேரில் அந்தக்**
**காமனின் தேவி தோன்றிச்**
**சட்டெனச் சமுத்திரத்தை**
**வெட்டியே உட்பூந்தாளோ?**

வேறு பாடல்

*(ஜதிகளைத் தொடர்ந்து)*

**அந்த...**
**அதிசயம் எனக்கெனப் பிறந்தது**
**அதன்**
**விழிகளில் என்னுயிர் கலந்தது!**
**புதியதோர் உறவிது! – என்**
**பிறவியின் வரவிது!**
**தலைவன் நானென்றும்**
**தலைவி யவளென்றும்**
**தமிழின் நூல் சொல்லுது!**

**வளவன் மாளிகைப் பூ அது! – என்**
**உளத்தில் மணந்தரப் போவது!**
**இளைய மலையின் பா அது! – இனி**
**எனக்கு வாழ்வென ஆவது!**

*அம்பிகாபதியின் கற்பனையில்*

அமராபதி கலந்து இணைந்து இருவரும் ஆடுகின்றனர்!

ஜதி சுரங்களாலும், வாத்திய இசையினாலும் இந்தக் காட்சி நிறைவுபடுத்தப் படுதல் வேண்டும்.

*அமராவதி மறைய...*

அம்பிகாபதி ஏட்டினைப் பூட்டி வைக்கிறான்!

இதனை, எட்ட நின்று பார்க்கிறாள் கண்ணம்மா

ஏட்டினைத் திருடிக் கொண்டு ஓடிச் சென்று, அமராபதியிடம் கொடுக்கிறாள்!

அமராவதி ஏட்டினைப் படித்து இன்புறுகிறாள்

அமராவதி கண்ணம்மாவிடம் அம்பிகாபதியின் பாடல் பற்றிப் பிரமிப்புடன் எடுத்துரைத்தல்.

**வந்து விழுகுது சந்தம்! – அதில்**
**வார்த்தை பொழியுது முத்தம்**
**முந்தி எழுகுது எதுகை! – அதை**
**மேவி வளருது மோனை!**

**இந்தக் கவிதையில் மட்டும் – அவர்**
**ஏக்கம் தெரியுது பாராய்!**
**எந்தக் கவலை யென்றாலும் – அதை**
**எனக்குத் தெரிந்திடத் தாராய்!**

கண்ணம்மா

**அத்தான் கவிதை ஆனந்தம் – அதை**
**அள்ளிக் குடித்தல் பேரின்பம்**
**கொத்தாகக் கட்டி வைப்பார் ஏடு அதை**
**கொணர்ந்து தருகில் பெரும்பாடு**

கண்ணம்மா தன்னைப் பார்க்காத போது ஏடொன்றைத் திருடி, மறைத்து வைத்துவிட்டு மிகுதி ஏட்டைத் திருப்பித் தருகிறாள் அமராவதி!

காட்சி 5 நிறைவு பெறுகிறது.

**அரங்க விளக்கு அணைகிறது.**

## காட்சி 6 பாகம் – 1

ஓர் ஒளிப்பொட்டில் அமராவதி, மஞ்சத்திற் படுத்திருக்க மற்றதொரு ஒளிப்பொட்டில் அம்பிகாபதி காளிகோவிலில் அமராவதிக்காக் காத்திருத்தல்.



பின்னணியிற் பாடல்

**நாடாளும் கோமகனின்**
**நற்ற வத்து மங்கையவள்**
**நாணாமற் தன்னிதயம்**
**நழுவ விட்டு மயங்கி நின்றாள்**
**பாட்டாளன் கவிஞன் மகன்**
**பைந்தமிழின் ஏட்டாளன்**
**கூற்றான காதலெனும்**
**காட்டாற்றில் வீழ்ந்து விட்டான்!**

(பாடலின் முடிவில்)

அமராவதி மெதுவாக மஞ்சத்திலிருந்து எழுந்து, அரண்மனையை விட்டுக் களவாக வெளிப்பட்டுக் காளிகோயிலை நோக்கிச் செல்லுதல்.

அம்பிகாபதி அமராவதியின் வரவை நோக்கி எதிர்பார்த்து வாடியிருத்தல்.

அமராவதி வருதலைக் கண்டதும், அம்பிகாபதி, உணர்ச்சி மேலிட

ஓடிச் சென்று அமராவதியை அணைத்தல்!

இருவரும் ஆடிப்பாடிக் குலவுதல்!

இதனைக் கண்ணம்மா காணுதல்

துயரத் துடிப்பினைக் காட்டும் பாடல் வரிகள்

**பிஞ்சு வயது முதல் பிரிவறியா தெழுந்த நட்பு**
**பேசிச் சிரித்தழுது புரண்டதிலே வளர்த்த நட்பு**
**அன்பு எனும் மழையினிலே ஆயிரமாய்ச் செழித்த நட்பு**
**செந்தழலில் வீழ்ந்துருக சிறகொடிந்த கிளியானாள்**

கண்ணம்மா துன்பத் தீயில் வீழ்ந்து துடிக்கிறாள்

கண்ணம்மாவின் காதற் தோல்வியைப் பாடலும் அதன் இறுதியும் காட்டுதல்

காதலின் இன்பமும், காதலின் துன்பமும், மாறி மாறி அன்பு காணுதல்

*அமராவதியும், அம்பிகாபதியும் இன்ப உலகத்தில் இருக்க...*

*கண்ணம்மாவின் துயரம் உச்சத்தினை எட்டுதல்*

*கண்ணம்மா வேதனையுடன் மீள்கிறாள்!*

அரங்க விளக்கு அணைகிறது

## *காட்சி 6 – பாகம் 2*

*அரங்கில் இருள் கவ்விய மெல்லிய ஒளி அமராவதி, கள்ளமாக அரண்மனை மாடத்தினுள் நுழைந்து*

*தன் மஞ்சத்தை நோக்கி, அடிமேலடி வைத்து நடக்கிறாள்!*

*இப்போது, திடீரென*

*விளக்குகளெல்லாம்... முழுப்பிரகாசத்துடன்*

*எரிய...*

*பல்லிசை வாத்தியங்களும் அதிர்ச்சியையும்,*

*ஏக்கத்தையும், பீதியையும் எழுப்ப...*

*அரசி, அரங்கினுள் நுழைகிறாள்!*

*அமராவதிக்கும், அம்பிகாபதிக்கும் உள்ள உறவு பற்றிக் கூறி,*

*அமராவதியை ஆத்திரத்துடன் பார்த்து*

*அம்பிகாபதியை மறந்துவிடும்படி ஆணையிடுகிறாள்!*

*இல்லையேல், அம்பிகாபதியின் உயிருக்கு ஆபத்து*

*என்றும் எச்சரிக்கிறாள்!*

*அரசி பாடி ஆடுகிறாள்*

*பாடல்*

**ஓலையில் உயிர் வாழும் ஏழைக் கவிஞனை**
**உளத்திலே ஏற்றினாயோ?**
**மாலையின் மயக்கமோ மதிகெட்டுப் போனதோ?**
**மாளிகை கசந்து போச்சோ?**



*அமராவதி (துயரத்துடன்)*

*பாடல்*

**நினைத்ததும் நூறு கவிதை யெழும் – அவன்**
**நெஞ்சினிற் தூய்மை தஞ்சம் கொள்ளும்!**
**அனைத்திலும் மேலாம் தமிழமுதை – அள்ளித்**
**தந்திடும் கவிஞன் ஏழையில்லை!**

*அரசி (அட்டகாசச் சிரிப்புடன்)*

*பாடல்*

**கோலேந்தும் மன்னனின் கொற்றத்தைக் கெடுத்திடும்**
**கெடுபுத்தி யார் கொடுத்தார்?**
**வாளேந்தப் பிறந்தவள் வாழ்வுக்குப் பிறரிடம்**
**கூழேந்த யார் பொறுப்பார்?**

*அமராவதி*

*பாடல்*

**கோமகன் எனக்குத் தந்தை யென்றால்**
**பாமகன் அவர்க்குத் தந்தை யன்றோ?**
**திருமகள் நமக்குத் தெய்வ மென்றால்**
**கலைமகள் அவர்க்குத் தெய்வ மென்றோ?**
**திருவும் கலையும் இணைந்துவிட்டால்**
**தரணியில் இதற்கோர் இணையுமுண்டோ**
**கருவினில் என்னைப் பெற்றவளே! என்**
**காதலை இன்றே ஏற்றுவிடு!**

*அரசி (கூத்து நடையில்)*

*பாடல்*

**மறந்திடு! உறங்கிடு! மயக்கத்தைத் துறந்திடு!**
**மற்றவை நாங்கள் பார்ப்போம்!**
**சுயம்வரம் நடந்திடும்! திருமண நாள்வரும்**
**சுற்றமாய் அரசர்நிற்பார்!**
**தரந்தரமாய்ப் பல வரிசைகள் திரவியம்**
**பரிசுகள் வந்து கொட்டும்!**

**நிரந்தரம் சோழனின் நீள்தலம் பொன்னியின்**
**நீரிலே கொழிக்கு மன்றோ**

*அமராவதி*

*பாடல்*

**மறந்திட இது என்ன மனப்பொருளோ?**
**மாதவத்தால் வந்த தவப்பயன் அல்லவோ?**
**பிறந்ததிப் புவியினில் அவனுக்காய் அல்லவோ?**
**பிரிந்திடச் சொல்வது அவச் செயல் அல்லவோ?**

*அரசி ஆத்திரம் தாளாதவளாக...*
*அரங்கினை விட்டு விலகுகிறாள்!*
*அமராவதி... அம்பிகாபதியின் நினைவுடன்*
*மஞ்சத்தில் அமர்கிறாள்!*

**அரங்க விளக்கு அணைகிறது!**

## காட்சி 7

*மன்னன், ஒட்டக்கூத்தனுடன் அவையில் நிற்கின்றான்!*

*மன்னன் முகத்தில் ஆத்திரமும் ஆவேசமும் துள்ளித் தண்டாவமாடுகின்றன!*

*கோபத்தில் அவன் உதடுகள் துடிக்கின்றன!*

*உடல் நடுங்குகின்றது! கேட்ட செய்தியை நம்ப முடியாதவனாக மலைத்தும் திகைத்தும் நிற்கிறான்!*

*இக்காட்சியிற் கதகளி வடிவங்கள் ஓரிரு நிமிடங்களிற்குக் கொண்டு வரப்படலாம்!*

*ஒட்டக்கூத்தன்*

*(அம்பிகாபதியின் மீதும் கம்பர் மீதும் தனக்குள்ள பொறாமையையும், எரிச்சலையும் உள்ளே அடக்கியவனாக)*



*பாடல்*

**எத்தனை அழுத்தம் அவனுக்கு, எமைப்**
**பித்தரென்றோ நினைத்தான்?**
**கொற்றத்தின் நிழலைக் கொச்சைப்படுத்திடத்**
**திட்டமிட்டோ துணிந்தான்?**

*மன்னன்*

*பாடல்*

**நம்பிடத் தயங்குகின்றேன்! ஓர்**
**நற்றமிழ்ப் புவனின் புத்திரன் அன்றோ**
**நம்பிடத் தயங்குகின்றேன்!**
**பண்பிலே தோய்ந்தவர் பெற்ற பிள்ளையிவன்**
**பாதையிற் தவறுவானோ**
**என் புகழ் தெரிந்தவன் எனது நெஞ்சறிந்தவன்**
**புண்படச் செய்கு வானோ?**

*ஒட்டக்கூத்தன்*

*(மன்னனை நஞ்சூட்டும் நோக்குடன்)*

*பாடல்*

**கும்பிட வந்த கோவிலிலே... அவன்**
**கூத்தனாய் மாறிவிட்டான்!**
**அம்பிடப் போவனோ எனும் துணிவில் - எங்கள்**
**அரசின் மேல் ஏறிவிட்டான்!**
**கம்பரின் காதற் காவியத்தில் - இவன்**
**கடுமையாய் ஊறிவிட்டான்!**
**பொன்பொருள் போதையில் உன் மகள் மேலிவன்**
**போலியாய்த் தாவி விட்டான்!**

*மன்னன்*

*பாடல்*

**நினைக்கவே நெஞ்சம் நடுங்குதையா - இதை**
**நிறுத்திட வழிதான் கூறுமையா!**
**நினைப்பளோ என் மகள் எனக்கு மாறா இது**
**நீதியோ? அடுக்குமோ? நீரே சொல்வீர்**

கூத்தர்

பாடல்

**அறிந்திடு உண்மையை மன்னா உனக்**
**கையமே வேண்டாம்... அது பிழை மன்னா**
**விருந்துக்கு அழைத்திடு மன்னா! அவரை**
**விருந்துக்கு அழைத்திடு மன்னா!**
**கரும்புக்குட் சீனி இருப்பதை அறிய**
**விருந்துக்கு அழைத்திடு மன்னா!**

மன்னன் (திடுக்குற்றவனாக சினத்துடன்)

பாடல்

**கேலியோ செய்கின்றீர் கூத்தரே இந்தக்**
**கேவலத்தால் உள்ளம் குறுகி நிற்கும் என்னைக்**
**கேலியோ செய்கின்றீர்... கூத்தரே**

கூத்தர்

பாடல்

**மருந்துக்கும் அப்படி நினைக்காமல் அவரை**
**விருந்துக்கு அழைத்திடு மன்னா!**
**கம்பரையும் அவர் அரிய புத்திரனையும்**
**விருந்துக்கு அழைத்திடு மன்னா!**
**விருந்திடட்டும் எங்கள் இளவரசி – அப்போது**
**புரிந்திடும் உமக்குக் காதலின் போதை**
**விருந்துக்கு அழைத்திடு மன்னா!**

அரங்க விளக்கு அணைகிறது!

## காட்சி 8

அரங்கில்...

விருந்து மண்டபம்

மன்னன், கூத்தர், கம்பர், அம்பிகாபதி... சடையப்பர் ஆகியோர் விருந்துண்ண அமர்கின்றனர்

விருந்து பரிமாற, (அம்பிகாபதி சற்றும் எதிர்பாராத விதமாக) அமராவதி, அமுதுப் பாத்திரத்துடன், அழகு சிலையாக வருகிறாள்.



நெஞ்சில் எழுதிய ஓவியம் நேரில் வருவது கண்டதும்

அம்பிகாபதி, விழிகள் விரிய முகம் மலர,

அகம் ஆனந்தக் கூத்தாட

அமராவதியின் நடையழகினை தன் நாவழகாக்குகின்றான்!

அம்பிகாபதி

பாடல்

**இட்ட அடி நோக...**
**எடுத்த அடி கொப்பளிக்க...**
**வட்டில் சுமந்து மருங்கசைய...**

என்று தன்னை மறந்து பாடி,

அமராவதியின் அழகிற் சொக்கி நிற்க

அமராவதி அன்பின் விழியில் மூழ்கி நிற்க

மன்னனை, ஒட்டக்கூத்தர் பார்க்க, மன்னன், கம்பரைப் பார்க்க, சடையப்பர் எலலோரையும் மாறி மாறிப் பார்க்க, கம்பர், நெஞ்சு நடுக்கத்துடன் அம்பிகாபதியைப் பார்த்துவிட்டு

அன்னை கலைவாணியைத் தியானித்தபடி மகன் அம்பிகாபதியின் பாடலை நிறைவு செய்கிறார்.

பாடல்

**கொட்டிக்**
**கிழங்கோ கிழங்கென்று கூவுவாள் நாவில்**
**வழங்கோசை வையம் பெறும்!**

இப்போது மன்னன் எதுவும் அறியாதான் போல் நடித்து

பாடல்

**ஏதொரு பொருத்தமில்லாப் பாடலை ஏன் தொடுத்தீர்!**
**காதலின் ஏக்கமிந்தக் கவதையிற் தொனித்தல் கண்டேன்!**
**பாதியை மைந்தன்பாட மீதியை முடித்தார் கம்பர்**
**ஓதிய காரணத்தை ஒருமுறை கேட்டல் நன்றே!**

ஒட்டக்கூத்தர் தனது நயவஞ்சக ஆலோசனை வெற்றியடையப் போவதை எதிர் பார்த்து நிற்கிறார்

*கம்பர் (மிகவும் அமைதியாக)*

*பாடல்*

**வீதியிற் கிழங்கு கூவி**
**விற்றிடும் முதியாள் கூவக்**
**காதினில் வீழக் கேட்டுக்**
**கவிதையால் அவளைப் பாடிச்**
**சோதியாய் நிற்கும் அந்தத்**
**தேவியைத் துதித்தோம் நாங்கள்**
**ஈதுதான் எமது பாட்டின்**
**உட்பொருள் அறிவை மன்னா**

*ஒ.கூத்தன் (பொறுமையிழந்தவனாக)*

*பாடல்*

**நாமென்ன செவிடா... பொன்னி**
**நாடனும் செவிடன் தானா?**
**ஆங்குற்ற அந்தக் கூச்சல்**
**நாம் மட்டும் கேட்டோமில்லை!**

**தேள் கொட்ட விழிக்கும் பொல்லாத்**
**திருடராய் நிற்பதேனோ?**
**ஆள் விட்டு அழைப்பாய் மன்னா**
**அவளைத்தான் பார்ப்போம் நாமும்!**

*அரங்க விளக்கு அணைந்து மீண்டும் எரிகிறது!*
*இப்போது அரங்கிலே தலையிலே..*
*கூடையிற் கொட்டிக் கிழங்குடன்*
*வயது முதிர்ந்த மூதாட்டி.,..*
*கிழங்கு விற்று வருகிறாள்*

*கிழவி*

**கிழங்கு கிழங்கு கிழங்கு! கொட்டிக்**
**கிழங்கு கிழங்கு கிழங்கு!**



**தொட்டுப் பாருங்க!**
**தட்டிப் பாருங்க!**
**தூக்கிப் பாருங்க... நன்னா**
**அளந்து பாருங்க!**
**பிளந்து பாருங்க!**
**நிலத்தை நினைப்பீங்க தின்னா!**

*கம்பன், பராசக்தியை எண்ணித் துதிக்கிறான்!*
*மன்னன், ஆச்சரியத்தில் மூழ்கி நிற்கிறான்*
*அம்பிகாபதி, தந்தையரைப் பார்த்து, பக்திப் பவரசமாகிறான்!*
*கூத்தர் கூசி, நெளிந்து*
*தலைகுனிகிறார்!*

அரங்க விளக்கு அணைகிறது!

## *காட்சி 9*

அரங்க விளக்கு ஒளிர்வதற்கு முன்னர்,

*பின்னணியிற் கவிதை*

**இளையவர் நெஞ்சில் நேர்ந்த**
**இனியதோர் உறவு காலக்**
**கிளையிலே மெள்ள மெள்ளக்**
**காதலாய்த் தளிர்த்து ஓங்கித்**
**தளைகளைத் தடையை யெல்லாம்**
**தகர்த்திடும் விருட்சமாகி**
**வளவனின் கொடுஞ்சினத்தை**
**வாங்கியே நின்ற தாமே!**

**உள்ளத்தால் உட் கலந்து**
**உயிரினால் ஒன்றாய் அன்பு**
**வெள்ளத்திற் தோய்ந்தார் தம்மை**
**வெட்டியே பிரிக்கும் நோக்கிற்**
**தள்ளியே வைத்தார் கண்கள்**
**சந்திக்கா வழிகள் செய்தார்**

**முள்ளிலே வீழ்ந்த பூவாய்**
**முனகிற்றே காதலம்மா!**

**பிரிவெனும் பாழும் நோயிற்**
**பிதற்றினார் தனிமைக் காட்டில்!**

**அரியதோர் கவிஞன் அம்பி**
**காபதி அரற்றி நொந்தான்**
**அரியணைக் குரியாள் கண்கள்**
**ஆறெனக் கொட்டத் தூக்கம்**
**பசியொடு தாகம் யாவும்**
**பலிதந்து சிறைக் கிடந்தாள்!**

அரங்க விளக்கு ஒளிர்கிறது

*காதலர் பிரிவுத் துயரைக் காட்டும் காட்சி!*

*ஓர் ஒளிப்பொட்டில் அம்பிகாபதியும மற்றோர் ஒளிப்பொட்டில் அமராவதியும் துன்பத் தீயில் துடிக்கின்றனர்!*

*அம்பிகாபதி*

**தந்தாய் அவளைத் தந்தாய் தேவி!**
**தந்து விட்டேன் தடுத்தாய்? என்**
**கண்களை ஏன் பறித்தாய்?**

**செந்தாமரையாள் செந்தேன் மொழியாள்**
**சிந்தைக்கு ஒளி கொடுத்தாள்**
**சிந்தாமணியாய் சிலம்பாய் வந்தாள்**
**தந்துவிட்டேன் தடுத்தாய்?**

**குன்றாம் குறளாய்க் குண்டலப் பொருளாய்**
**நின்றாள் நில வொளியாய்!**

**அணியா மணிமே கலையாள் அவளைத்**
**தந்துவிடடேன் தடுத்தாய்!**

அரங்க விளக்கு அணைகிறது!



## *காட்சி 9 தொடர்கிறது!*

**அரங்க விளக்கு ஒளிர்கிறது!**

*நள்ளிரவில் தனது மஞ்சத்தில்*
*அமராவதி சோகப் பிடியிற் சிக்கித் துவள்கிறாள்*
*கண்ணம்மா... வருகிறாள்*
*கண்ணம்மாவைக் கண்டதும்...*
*அமராவதி ஓடி வந்து*
*கண்ணம்மாவின் கரங்களைப் பிடித்தழுகிறாள்.*

*கண்ணம்மா*

*பாடல்*

**துன்பம் விலகித் துயர் அகலப் போகுதம்மா**
**அன்பர் அம்பி காபதியார்வருகின்றார்**
**இந்த இரவே... இச்சிறையை விட்டும்மைச்**
**சொந்தமென ஏந்திச் செல்ல வருகின்றார்**
**அம்மா இளவரசி ஆயத்தமாய் இருங்கள்**
**இன்பவாழ்வுக்காய் இன்றே புறப்படுங்கள்**

*இவ்வாறு கூறவும்...*
*அமராவதியின் உள்ளம் இன்பத்திற் குதூகலிக்கிறது*
*தனது சோகத் தோற்றத்தைச் சரிசெய்து கொள்கிறாள்*
*காதற் சிறகுகளை விரித்து மகிழ்ச்சி வானிற் பறக்கிறாள்!*
*கண்ணம்மாவின் கரங்களைப் பிடித்தவாறு...*
*அவளுக்கு நன்றி கூறிக் கண்ணீர் வடிக்கிறாள்!*

*கண்ணம்மா*

(அம்பிகாபதி வரும் நேரத்தை உணர்ந்தவளாக)

*பாடல்*

**புறப்படு தாயே...**
**புறப்படம்மா...**

**இறப்பிலாக் காதற்...**
**கதவினைத் திறக்கப்**
**புறப்படு தாயே...**
**புறப்படம்மா!**

அரங்க விளக்கு அணைந்து மீண்டும் எரிகிறது.

*கண்ணம்மாவை நன்றிப் பெருக்கோடு அம்பிகாபதி பார்த்துவிடைபெறுகிறான்.*

*அம்பிகாபதி*

*பாடல்*

**உடன் பிறவாச்சோதரியாய்**
**உடனிருந்து வளர்ந்தவளே!**
**கடன் தீர்க்க வழியறியேன்!**
**கண்ணம்மா விடை கொடம்மா!**

*கண்ணம்மா (கண்களில் நீருடன்)*

**தாமதிக்காமற் புறப்படுங்கள்! இந்தத்**
**தருணத்தை யிழக்காதீர்!**
**தான் மதிக்காத உம் வாழ்வை மன்னன்**
**தறித்திட வைக்காதீர்!**

*அம்பிகாபதியின் தோற்றம் அரங்கிற் தெரிகிறது!*

*திகில் தரும் இசையையும் இப்போது யாரோ ஓடி வரும் ஓசை கேட்கிறது.*

*கண்ணம்மா அம்பிகாபதியையும், அமராவதியையும் அவசரப்படுத்தி அனுப்புகிறாள்!*

*மன்னனும், ஒட்டக்கூத்தனும்காவலர்களும் அரங்கிற்கு வரவும்*

*அம்பிகாபதியும் அமராவதியும் ஓடவும்*

*மன்னன் குறுவாளினை எடுத்து*

*ஓங்கி எறிகிறான்! கண்ணம்மா குறுக்கே ஓடிவந்து*

*குறுவாளைத் தன் மார்பிலேந்தி*

*வீழந்து துடித்து மடிகிறாள்*



*மன்னன் (ஆத்திரமும், ஆவேசமும் கொப்பளிக்க)*

*பாடல்*

**போய்ச் சிறைப் பிடித்திங்கு கொணர்ந்திடுங்கள்!**
**பிடித்தவர் கால்களில் விலங்கிடுங்கள்**
**வாய்க்கும் நீர் வழங்காது தடுத்திடுங்கள்!**
**விடிந்ததும் வளவனின் நீதி காண்பார்!**

அரங்க விளக்கு அணைகிறது

*அரங்கின் பின்னணியில் பாடல்*

**உயிரனைய உறவுக்காய்**
**உயிர் கொடுத்தாள் கண்ணம்மா!**
**பிரிவறியாக் காதலரைப்**
**பிணைக்கும் அன்புக் கொடியானாள்!**

## *காட்சி 10*

*மன்னன் அவையில்*

*குலோத்துங்கன், மகாராணியுடன் சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறான்! அமைச்சர்கள் சூழ இருக்க அம்பிகாபதி, குற்றவாளிக் கூண்டில் நிற்கிறான்!*

*இப்போது*

*கம்பர், சடையப்பருடன், அவைக்கு ஓடோடி வருகிறார். தனது அருமை மகனை அந்தக் கோலத்திற் கண்டு, தீயை உண்டாவராகத் துடிக்கிறார்.*

*கம்பரின் சோக அலறல்*

*விருத்தப் பாடல்*

**ஐயோ மகனே எந்தன்**
**ஆருயிர்ச் சொத்தே இந்த**
**வையகம் உய்ய வந்த**
**வானகச் சுடரே அன்னை**
**கையிலே தந்த பேறே**
**கவிதையே தமிழே இன்று**
**கையிலே விலங்கு கொண்டு**
**காட்சி ஏன் தந்தாய் கண்ணே**

*கம்பர் குலுங்கிக் குலுங்கி அழுகிறார்*

**மறந்திடு மகனே!**
**மறந்திடு மகனே!**
**மாளிகை உறவினை**
**மறந்திடு மகனே!**
**நடந்தது யாவும்**
**கனவென எண்ணி**
**நாடிதை விட்டு**
**நடந்திடுவோமே!**

*அம்பிகாபதி*

*பாடல்*

**காதலைப் பாடிய கவிஞர் கோவே!**
**கனித் தமிழின் ஞானக் கோவே!**
**மாதவள் அன்பினை மறந்திட அறியேன்**
**மாண்புறு துணையென மனத்தினில் வரித்தேன்**
**ஆதலால் எதனையும் ஏற்றிடத் துணிந்தேன்!**
**மாதவப் புலவ! மன்னித் தருள்வீர்**
**மாசபையோரே! தீர்ப்பினைத் தருவீர்!**

*மன்னன் (அவையினை நோக்கி)*

*பாடல்*

**தேசத் துரோகம் செய்தவர் உலகில்**
**தீயினும் கொடியவராவர்!**
**ஆசைப் பொருளாய் அரசினை நினைப்போர்**
**தீயவர் தலைவராவர்!**

**பாசமாய் வளர்த்த என்பெண்ணவளைப்**
**பேதமை கொள்ளவைத்து**
**மோசமாய் அரண்மனை வாழ்வினைக்குழப்பி**
**முழுக்குற்றம் அம்பி செய்தான்**
*இப்போது கூத்தன் எழுகிறான்*



*கூத்தன்*

*பாடல்*

**காதலென்றாலும் பொறுத்திடலாம் இது**
**காமத்தின் விளைவு அன்றோ!**
**போதையில் எழுதியே பொழுதினைப் போக்கவுன்**
**புதல்வியைத் தேர்ந் தெடுத்தான்**
**ஆதலால் இப்பிழை அனைத்திலும் கொடியது**
**ஆவது செய்தல் வேண்டும்**
**கோதலம் புகுந்தொரு கொடுமையை இழைத்தவர்**
**கொலைப்பழி கொள் வராமே!**

*அம்பிகாபதி*

*பாடல்*

**கூத்தரே நெஞ்சினிற்**
**கூரம்பு பாய்ச்சாதீர்!**
**கூறிய நாவடக்கும்!**
**மாற்றுக் குறையாத**
**காதலைக் காமமென்**
**றோதுதல் சாவை ஒக்கும்!**

**ஏற்றிட மறுக்கிறேன்**
**இக்குற்றச் சாட்டினை**
**என்சோழ நாட்டு மக்காள்!**

**பாட்டுடைத் தமிழரே!**
**பண்பட்ட காதலை**
**வாழ்த்தியே தீர்ப்புச் சொல்வீர்!**

*சடையப்பர் (எழுகிறார்)*

**மனுநீதி கண்டவன் மரபிலே – வந்த**
**மாசோழ மன்ன கேளாய்!**
**உனதாட்சி கொண்ட இம்மன்றிலே – பிழை**
**யாய் நீதி நின்றதில்லை!**
**சினம் தீது சீற்றத்தின் வழியிலே – இச்**

**சேய்களைக் கொல்லலாமோ?**
**மனஞ்சேர்ந்த காதலர் வாழ்வினைத் தீய**
**மதி கொண்டு சிதைக்கலாமோ?**
*இப்போது அமராவதி சபையினுள் நுழைகிறாள்!*

*அமராவதி*

*பாடல்*

**மன்னா! உனக்கிது அடுக்குமோ? – உன்**
**மகளையே தீய்த்து விட்டாய்!**
**உன்னாலே என் வாழ்வு அழிவதோ? – ஓர்**
**ஏழையாய் நினைத்துக் கேளாய்!**
**என்னாசைக் காதலின் உயிரிது – இதை**
**எனக்காக விட்டுத் தாராய்**
**மண்ணாசை எமக்கில்லை – எங்களை உன்னாட்சி**
**மக்களாய் ஏற்றுக் கொள்வாய்!**

*மன்னன் (ஆத்திரம் பொங்க)*

**அவையிலே உனக்கென்ன வேலை? – இது**
**அரசிற்கு ஏற்பட்ட அவமான வேளை!**
**தவறதைத் தண்டிக்கும் கோலை – நான்**
**தாங்கியே நிற்கிறேன், நீ செல்லோர் மூலை!**
**சிற்றின்ப மழையிலே தோய்ந்து – காமக்**
**கற்பனைச் சிறகினை யடிக்குமிப்பாவி**
**சொற் கொண்டு உனை ஏய்த்து விட்டான் – இச்**
**சோழ மண்டலத்திற்கே சுருக்கிட்டு விட்டான்!**
*(இதுகேட்டு அம்பிகாபதி தன் காதுகளைப் பொத்தியவாறு)*

*அம்பிகாபதி*

*பாடல்*

**ஒ! இது பெருங் கொடுமை! – என்னுயிர்**
**எழுத்தாணி மீதாணை மன்னா உன்னெதிரிலே**
**பேரின்பப் பாடல் செய்தே – என்**
**பெரும் தந்தை புகழ்தனைக் காத்திடுவேன்!**



*மன்னன்*

*பாடல்*

**சிற்றின்பம் கூடாமற் செவ்விய பேரின்பச்**
**செய்யுள்கள் நூறு செய்தால்**
**கற்றவர் சபையினிற் கன்னியென் மகள்தனைக்**
**கரங்களிற் தந்து நிற்பேன்**
**சற்றின்பம் மாறினும் சோழன் பொய் கூறிடான்**
**சிரத்தினைக் கொய்யும் தீர்ப்பை**
**வைத்துன்னைக் கொல்லுவேன்! வளையாது என்கோல்**
**வா வந்து கவிதை சொல்வாய்!**

அரங்க விளக்கு அணைகிறது.

## காட்சி 10

*அவையில்*
*எல்லோரும் அமர்ந்திருக்க...*
*அவையின் நடுவில்..*
*அம்பிகாபதி வீற்றிருந்து*
*கவிதை பாடத் தொடங்குகிறான்!*
*அமராவதி திரைமறைவிலிருந்து*
*மலர்களை இட்டுக் கவிதைகளை எண்ண ஆரம்பிக்கிறாள்!*

*ஒட்டக்கூத்தனும் எண்ண ஆரம்பிக்கிறான். அவன் பக்கத்தில் அவன் சீடன் மலர்களிட்டு ஆரம்பிக்கிறான்!*

*அம்பிகாபதி பாட ஆரம்பிக்கிறான்*
*தந்தையை வணங்கிவிட்டுக் கலைவாணியைத் துதிக்கிறான்*

*பாடல்*

**ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்**
**ஏய உணர்விக்கும் என்னம்மை தூய**
**உருப்பளிங்கு போல்வாள் என்னுள்ளத்தினுள்ளே**
**இருப்பள் இங்கு வாராதிடர்!**

இப்போது அமராவதி முதலாவது மலரைத் தட்டில் இடுகிறாள்!

ஒட்டக்கூத்தனின் சீடனும் இடப் போகிறான்

கூத்தன், தடுத்து இது காப்புப் பாடல் என கண்களால் அறிவுறுத்துகிறான்

*பாடல் தொடர்கிறது*

**படிக நிறமும் பவளச் செவ்வாயும்**
**கடிகமழ்பூந் தாமரைபோற் கையும் துடியிடையும்**
**அல்லும் பகலும் அனவரதமும் துதித்தாற்**
**கல்லும் சொல்லாதோ கவி!**

*அரங்க விளக்கு அணைகிறது*

*அரங்கம் மங்கிய இருளில் பின்னணியிற் பாடல்*

*பல்லவி*

**வேலனை நினை மனமே – சிவன்**
**விழிதனில் எழுந்தவன் துணை மனமே**

*அநுபல்லவி*

**நீலமயில் என் நெஞ்சனில் அமர்வான்**
**நித்திய கல்யாணனாய்ப் புன்னகை புரிவான்**

*சரணம்*

**கோலுடன் ஞான விளக்கென எரிவான்**
**குன்றினில் குருவாய் அன்பினைப் பொழிவான்**
**செந்தமிழ்ப் பாடலிற் குளிர்வான் – உயர்**
**தெய்வமாய் உளங்களில் மிளிர்வான்**
**வானவர் படைத் தலைமகனாய் – பகைச்**
**சூரரைச் சாய்த்திட எழுவான்! வேலனை நினைமனமே!**

*இறுதிப் பாடல் முடியவும் அரங்கில் விளக்கு மீண்டும் எரிகிறது.*



அமராவதி மகிழ்ச்சிக் குதூகலத்துடன் திரை மறைவிலிருந்து வருகிறாள்!

அவள் வருதல் கண்டவுடன்

அம்பிகாபதி அவளது தோற்றத்தைப் பார்தது

மகிழ்ச்சி வெள்ளத்தில் நீந்திப் பாடுகிறாள்

*அம்பிகாபதி பாடல்*

**அழகே திருவே அமராவதியே!**
**அமுதே அருகே வா!**
**நிலவின் உருவே நினைவின் கருவே!**
**நீயென் அருகே வா!**

ஒரு பெருந் தவறு நேர்ந்துவிட்ட துணர்ந்து அவையே அதிர்ந்து நிற்கிறது! கூத்தன் எழுகிறான்

**விதியே முடிவில் வென்றது பார்! – பெரும்**
**வினையாய்க் கழுத்தில் வீழ்ந்தது பார்**
**ஒருபா டலினாற் தோற்றுவிட்டாய்! உம்**
**பெருவாழ்வினை நீ முடித்துவிட்டாய்**

*மன்னன் (அவசரமாக எழுகிறான்)*

**தீர்ப்பு நான் தந்துவிட்டேன்! இவர்**
**சிரந்தனைச் சீவிடும் நாள்தனைக் குறிப்பீர்**
**தீர்ப்பு நான் தந்துவிட்டேன்!**

*கம்பர் (துன்பத்திற் துடித்தவராக)*

*எழுந்து ஓடிச் சென்று மன்னன் காலில் விழுகிறார்*

*கம்பன்*

*பாடல்*

**மன்னா! உன் காலில் வீழ்கின்றேன் – என்**
**மைந்தனின் உயிரைக் கொடு!**
**என்னாருயிரைப் பிரிக்காதே – என்**
**தமிழுக்கு வாழ்வு கொடு!**

அம்பிகாபதி

(தன் தந்தையார் தலை தாழ்வது கண்டு பொறுக்காதவனாக)

பாடல்

**அப்பா! இது என்ன பெருங்கொடுமை!**
**யார்க்கிங்கு நீ அடிமை!**
**இப்பார் தனிற் தமிழ் கற்றுணர்ந்தோர்**
**ஆண்டவர்க்கே உரிமை!**

**தப்பே யறியேன், தண்டனைக்காளாய்த்**
**தலையினைக் கொடுக்க நின்றேன்**
**எப்போதும் இப்பழியினுக்காளாய்**
**இச்சோழன் மிளிர்வான்!**

அரங்க விளக்கு அணைகிறது

## காட்சி 11

அரங்கில் கொலைக்களம்! திகில் பரப்பும் பின்னணி இசை!

மெள்ள மெள்ள
அரங்க விளக்கு எரியத் தொடங்குகிறது!
அரங்கில்
கொலைக்களக் காவலர்
கையில் அரிவாளுடன் கரிய உடையில் கொலையாளிகள்!
அம்பிகாபதி, கையில் விலங்குடன்
அழைத்து வரப்படுகிறான்!
கொலைக்களத்தின் முன்னே நிறுத்தப்படுகிறான்!
இப்போது
அமராவதி கத்திக் குளறியவளாக ஓடி வந்து
அம்பிகாபதியைக் கட்டித் தழுவிக் கொள்கிறாள்!
இருவரும் அணைத்தபடியே நிற்கின்றனர்!

அமராபதி (உயிர் தீயில் எரிய, ஆற்றாவொணாத் துயருடன்)



பாடல்

**நீதி தேவனே! இது**
**நீதியோ? - என்**
**நிழலினைப் பிரிவது**
**நீதியோ?**

**காதற் தீயில் நாம் கருகுதல் - எம்**
**தமிழர் வாழ்வதன் பாதையோ**
**வேதம் ஓதிடும் மக்களே - இந்த**
**ஏற்றத் தாழ்வினை ஓம்பவோ?**
**கோதில் உள்ளம் இரண்டினைக்**
**கொல்லும் கொற்றம் வாழ்வதோ?**

அமராபதி, கண்ணீர் சொரிய வீழ்கிறாள்
இப்பாடலின் முடிவில்
அம்பிகாபதியையும் அமராவதியையும் பிரிக்கிறார்கள் காவலர்கள்!
களபீடத்தல் அம்பிகாபதியின் தலை!
பீதியும், துயரமும் நிறைந்த இசை!
களக்கொலையாளியின் கரத்தில் கொலைவாள் உயர்கிறது!
பெரியதோர் ஓசையைத் தொடர்ந்து
அரங்கின் ஒளிக்கதிர்கள்
மின்னி மறைகின்றன
வாத்தியங்கள் வேதனையை உமிழ்கின்றன!
வாள் பட்டு அம்பிகாபதியின் தலையுருள்கிறது!

பின்னணியிற் பாடல்

(இரு ஒளிப் பொட்டுக்கள் - காதலின் விடிவெள்ளிகளாக அரங்கத் திரையில் எழுகின்றன!)

பாடல்

**அன்பினால் விளைந்த**
**இன்ப நலலுறவு**

**கண்களை மூடுதல் கொடுமை!**
**இந்த வோருலகில்**
**இணைந்திடா வுயிர்கள்**
**எழுந்தன விண்ணிலே காண்பீர்!**
**திங்களும் கதிரும் தென்றலும் நிலமும்**
**என்றுமே வாழ்தல் போலிவரும்**
**நின்றிடல் உண்மை நிலைபெறும் காதல்**
**நித்தியம் அன்பதே வெல்லும்!**

நாட்டிய நாடகம் நிறைவெய்துகிறது!

## 2. சிலம்புத்தீ
### நாட்டிய நாடகம்

சோழ நாட்டில் உதித்துப்
பாண்டிய நாட்டில் எறித்து
சேர நாட்டிற் குன்றக் குறவரின்முன்
வானிற் சங்கமித்த தமிழர் பெருஞ்சொத்தே
சிலப்பதிகாரமாகும்! கலைவாணிகன்
சாத்தன் சொல்ல; குணவாயிற் கோட்டத்தரசு
துறந்திருந்த குடக்கோச் சேர இளங்கோவடிகள்
யாத்த காவியத்தின் ஒருபகுதியே இந்நாட்டிய நாடகத்தின்
கருப்பொருளாகிறது!
அறம் பிழைக்கும் ஆட்சி
அழிவினை யெய்தும் என
உறுதியாக நம்பிய
எமது முன்னோர்க்கு
இந்நாட்டிய நாடகம்
சமர்ப்பணமாகிறது!

– அன்புடன், புலவர்



2. சிலம்புத்தி

## நூல் வாழ்த்தும்  காட்சிக் குறிப்பும்

நீதி பிழைக்கின் நெடுங்குற்றம் வீழுமெனும்
சேதி யுரைக்கும் செழுமை நிறை படிகத்தைத்...
தீது இழைக்கின் தேடியவை யழியுமெனும்
வேதம் உணர்த்தி விழிப்பூட்டும் காவியத்தைக்....
கோதில் ஒழுக்கம் குணமே சிறந்ததெனப்
போதித் திருக்கும் பொன்னான பெட்டகத்தைக்...
காதற் கிழத்தி கனிந்த உளம் நோகப்
போதல் தவறென்று போதிக்கும் பெருநூலை...
ஏழிசையும் கூத்தும் எழிலார் குரவையதும்
ஆடலொடு பாடல் அணிசேர் கலைவளமும்
ஆழநுண் ணுணர்வும் அழகியலின் நுணுக்கங்கள்
நாடகச் சால்புடன் நயம் நிறை பாட்டெனக்
கூறும் தமிழரின் கொள்கைசொல் பேரிகை...
ஆன சிறப்புகள் ஆர்ந்த நற்பனுவலை.....
ஏத்திப் புகழ்ந்ததன் ஏட்டிலோர் மலரெனத்
தோற்றிய கொலைக்களக் காட்சியைத் தொட்டு
நாட்டிய நாடகப் படையலாய்த் தந்தனம்!
பூம்புகார் நகரப் பெருநல் வணிகன்
கோவலன் என்பான் கூடிய கண்ணகி....
மாதவள் தன்னை மறந்தொரு சிலகால்
நாடக மடந்தையாம் நல்லெழிற்பாவை
மாதவி யென்பாள் பால் மயல் கொண்டு
கூடியும் ஆடியும் குலவியும் ஊடியும்
காதலின் கள்வெறிக் காமத்துறங்கிக்
கருத்திழந் தலைந்து அனைத்தையும் இழந்து....

பின்....

கானல் வரியிற் கலந்த வோர் யாழிசைத்

தேனில் விளைந்த தெளி விலா நிலையினால்

நாட்டிய நங்கையின் பாட்டினை இகழ்ந்து

மீட்டுமோர் புகாரை நோக்கி நடந்தனன்.

வீழ்ச்சியால் வெந்து விளைவினை நொந்து

காய்ச்சிய பாலாய்க் காதலைத் திரட்டிப்

போய்க் கலந்திருந்து.... பெண்ணவள் சிலம்பொடு

நோக்கி நடந்தனன் தென்னவன் மதுரையே!

பின்....

சூழ்ச்சியின் கரத்தினாற் சிரமது இழந்த

காட்சியே கொலைக்களக் காதையின் நிகழ்வாம்ட!

மெய்ப் பாட்டுணர்வின் முதன்மையை உணர்த்தும்

மாட்சிமை கொண்ட இக் காட்சியில் நுழைவாம்!

## காட்சி 1

முற்றாக வாத்திய இசை இராக ஆலாபனைகளினால் இக்காட்சி வழிநடத்தப் பெறுகிறது.

பின்னணியில் இசை வழி.... மலைக் காட்சி கொண்டு வரப்படுகிறது! அரங்கில்..... வஞ்சித்தலைமகன், சேரன் செங்குட்டுவன் ஆட்சிக்குட்பட்ட,

மலைநாட்டின். நெடுவேள் குன்றம்!

வேங்கை மர நிழல்! சற்றே மங்கிய இருளில்....

மலையின் தோற்றம்!

அரங்கத்திரை விலகுகிறது!

மெள்ள... மெள்ள.... அரங்கில்... வர்ண ஒளி விரிகிறது!

மதுரையை எரித்த கண்ணகி... மார்பில் இரத்தம்

வடிய.... விரித்த குழலுடன்... வேங்கை மர நிழலினை

நோக்கி வருகிறாள்! அரங்கின் ஒரு புறத்தில்....

குன்றக் குறவர்கள் குழுமி நிற்கின்றனர்!



ஆவேச நடனத்துடன் அரங்கில் நுழைகின்ற கண்ணகியின்

தோற்றத்தைக் கண்டு மலைத்து நிற்கின்றனர்....

குன்றக் குறவர்கள்! கண்ணகி... ஆடி ஓய்ந்து

சிலையாக நிற்கிறாள்!

இப்போது வானத்திலிருந்து... வானரதத்தில்...

வந்து இறங்குகின்றனர்... தேவர்கள்! இவர்கள்

மத்தியில் கோவலன்.

தேவகுமாரனாகக் காட்சியளிக்கிறான்!

தேவர்கள்... கோவலனுடன் வந்து இறங்கிக் கண்ணகியை

நோக்கி வருகின்றனர்!

கண்ணகி.... கோவலன் வருகையை உற்று நோக்குகிறாள்!

கோவலன், கண்ணகியை நோக்கிக் கரங்களை விரித்தபடி வருகிறான்!

இருவரும் சங்கமிக்கின்றனர்! தேவர்கள், அவர்களிருவரையும் அழைத்துச் சென்று, வானரதத்தில் ஏறிக் கொள்ள வானரதம் புறப்படுகிறது, குன்றக் குறவர்கள் வியப்பில் விறைத்து நிற்கின்றனர்.

குறிப்பு : இதனைத் தொடர்ந்து செங்குட்டுவனுக்கும் வேண்மாளுக்கும், சாத்தனுக்கும், குன்றக் குறவர் கூறியவை ஈண்டு நேரங்குறித்துத் தவிர்க்கப்பட்டுள்ளன!

**அரங்க விளக்கு அணைகிறது.**

## காட்சி 2

அரங்கில்.... இளங்கோவடிகளின் பர்ணசாலை.

மான்களும், மயில்களும், முயல்களும், அணில்களும், உலவியும், குலவியும் மகிழ்ச்சியோடு விளையாடிக் கொண்டிருக்கின்றன!

அமைதியும் சாந்தமும் தவழும் இனிய சூழலில்,

இளங்கோவடிகள்...

ஓர் அழகிய கல்லாசனத்தில் அமர்ந்திருக்கிறார்!

இப்போது.... அங்கே.... குன்றக் குறவர்கள் வருகை தந்து,

இளங்கோவடிகளை வணங்கிய பின்,

தாம்.... நெடுவேள் குன்றத்தில்....

வேங்கை மர நிழலிற் கண்ட காட்சிகளை வர்ணிக்கின்றனர்!

குன்றக் குறவரில் ஒருவன் :

பாடல் :

**அதிசயம் ஒன்று நாம் கண்டோம்!**
**ஐயனே! இளங்கோ அடிகளே கேளும்!**
**அதிசயம் ஒன்று நாம் கண்டோம்**
**விதிவயமோ இது அறியோம்!**
**விழியினில் வழியும் நதியுடன் ஒருத்தி**
**பதியிழந்தவளாய் நின்றாள்!**

குன்றக் குறவரில் ஒருத்தி :

**ஒரு தனமறுத்த....**
**திரு மகளொருத்தி**
**மர நிழல் மருவி வந்தாள்!**
**அருவியை நிகர்த்த**
**விழிகளில் நெருப்பின்**
**பொறிகளைச் சிந்தி நின்றாள்!**

குன்றக் குறவரில் அடுத்தவன் :

**அழகுறு ரதத்தில்**
**அமரர்கள் இறங்கி**
**அவள் திசை நோக்கி வந்தார்!**
**இளையவன் தோன்றி**
**அவளையும் ஏற்றி**
**அவர் ரதம் ஏறிச் சென்றான்.**

இளங்கோவடிகளுக்கு அவர்கள் அந்தச் செய்தியைக் கூறிவிட்டு.... அரங்கினை விட்டு விலகுகின்றனர்!

இளங்கோ, செய்திகேட்டுத் திகைப்புற்றவராக நிற்க.....

அங்கே.... சாத்தனார்... வருகிறார்!

சாத்தனைக் கண்ட இளங்கோ அடிகள்...

அவரை அன்புடன் வரவேற்றுத் தமது ஆசனத்தில்



இருத்துகிறார்!

இளங்கோவின் உள்ளத்தில் மறைந்திருந்த உணர்வுகளையுணர்ந்து கொண்ட சாத்தனார், அவரது உள்ளக்கிடக்கை யாது? என வினவுகிறார்!

இளங்கோ அடிகளார் : பாடல்

**அதிசயக் காட்சி யொன்றைக் கண்டார்!**
**அழகிய குன்றக் குரவர்கள் வந்தார்!**

தமது முத்திரை பாவங்கள் மூலம், குரவர்கள் கண்டு, தமக்குக் கூறிய காட்சியைச் சாத்தனார்க்கு விளக்குகிறார் இளங்கோ அடிகளார்!

இப்போது, சாத்தனார், பாண்டி நாட்டில் நடந்த கதையைக் கூறத் தொடங்குகிறார்!

சாத்தன் கூற்று :

**ஆரங்கண்ணிச் சோழன் மூதூர்ப்**
**பூம்புகார் நகரினிலே**
**ஆழ்கடல் வணிகன் கோவலன் என்பான்**
**குறையற வாழ்ந்திருந்தான்!**
**ஆர்த் தெழு அன்பின் கண்ணகி தன்னை**
**அருமனை விளக்கெனவே....**
**சேர்த்தநற் சிறப்பாற்களிப் பெனும் மழையிற்.....**
**கோவலன் திளைத்திருந்தான்.**

இவ்வாறு கதையைக் கூறத் தொடங்கிய சாத்தனார், இளங்கோ அடிகளை நோக்கிச் சென்று அவரிடம், இக்கதையைக் காவியமாக வடிக்கும்படி அன்புரிமையோடு கேட்கிறார்! இளங்கோவும் அதற்குச் சம்மதித்து, கையில் எழுத்தாணியுடனும் ஏட்டுடனும் அமர்ந்து, பயபக்தியோடு எழுதத் தொடங்குகிறார்!

இப்போது தமிழ்த்தாய்... அரங்கில் வந்து, அவர்கள் இருவரையும் பின் நின்று வாழ்த்தி ஆசிர்வதிக்கிறாள்!

அன்னை சரஸ்வதியும், விநாயகனும் அவர்களை வாழ்த்துகின்றனர்!

இப்போது சாத்தனின் பாடல் தொடர்கிறது!

இளங்கோ ஏட்டில், எழுத்தாணியால் எழுதுகிறார்!

**கூர்த்த நல் விழியாள் கொவ்வையின் இதழாள்**
**கூந்தலில் மதி மறைப்பாள்!**
**பார்த்தவர் நெஞ்சைப் பற்றிடும் அழகாள்**
**மாதவிப் பூங்கொடியாள்!**
**வார்த்த ஓர் சிலையென வழங்கிய நாட்டியப்**
**பூசையில் மதியிழிந்தே.....**
**ஈர்த்தவள் பாதையில் இதயத்தையெறிந்தே**
**கோவலன் பின் தொடர்ந்தான்!**

இளங்கோவடிகள் எழுதுகிறார்.

சாத்தன் :

(மாதவிக்கும் கோவலனுக்கும் இடையேயேற்பட்ட உறவு பற்றி)

(சாத்தன் பாடல் தொடர்கிறது!)

**தன்வசம் மறந்து அவள் வசமிருந்து**
**அருள் பொருள் அனைத்தையும் இழந்தான்!**
**கோவலன் ஆசையில் நனைந்தான்!**
**பின்பொரு ஊடலின் தீயினில் வீழ்ந்தே**
**தன் நிலை யுணர்ந்தவன் மீண்டான்!**
**கண்ணகி வாசலில் மீண்டான்!**
**புண்பட மாதவி புழுவெனத் துடிக்க**
**தன்மனை யாளிடம் மீண்டான்!**
**இன்புடன் மீண்டும் இல்லறம் யாத்திட**
**ஈட்டுவோம் பொருளென எண்ணி....**
**கவுந்தியாம் அம்மை. கருணைகொள் வழியிற்**
**சென்றடைந்தனர் சங்க மதுரை!**

சாத்தனும், இளங்கோ அடிகளும், மெள்ள அரங்கினைவிட்டு அகல்கின்றனர்!

(இப்போது.... அரங்கின் ஒரு மூலையிலிருந்து காட்சி விரிகிறது)

கண்ணகியுடனும், கவுந்தியடிகளுடனும்,
கோவலன் மதுரை நோக்கிச் செல்லும்
காட்சி மெள்ள அரங்கினை நிறைக்கிறது!



**அரங்க விளக்கு அணைகிறது!**

## காட்சி 3

இக்காட்சி இசைமூலம் வழிநடத்தப்படுகிறது!
கண்ணகியுடன் கோவலன் இணைந்திருக்கும் காட்சி!
துன்பத்திலும், வறுமையிலும் அவர்கள்
ஒருவருடன் ஒருவர் அன்போடும்
ஆதரவோடும் வாழும் காட்சி!
இப்போது கண்ணகி, தனது காற் சிலம் பொன்றினைக்
கழற்றிக் கோவலனிடம் கொடுத்து,
அதனை விற்று வரும்படி
அனுப்பி வைத்தல்!
கோவலன், நெஞ்சுருக, அவளை அணைத்து, அவளது
அன்பினை நெஞ்சிலேந்தியவாறு....
அவளைத் திரும்பித் திரும்பிப்
பார்த்தவாறே செல்லுதல்!
அவன் செல்லும் பாதையைப் பார்த்தவாறே....
கண்ணகி, கண்ணிற் பனிக்கும் நீருடன் நிற்றல்!

**அரங்க விளக்கு அணைகிறது!**

பின்னணியிற் பாடல்

**இன்னல் நீங்கிட**
**இன்பம் ஓங்கிடத்**
**தன்னவள் சிலம்பில்**
**ஒன்றினை விற்றிடக்**
**கன்னற் தமிழின்**
**காற்றினிற் திளைக்கும்**
**மன்னர் மதுரையின்**
**மாடத்து வீதியிற்**
**பொன்னின் விலை பேசிக்**
**கோவலன் நின்றான்!**

**புதுமகனாக**
**கோவலன் நின்றான்!**

## காட்சி 4

*இடம் : மதுரை மாடம்!*
*வணிகர் தெரு!*

*சந்தர்ப்பம் :*

*கோவலன் சிலம்பினை விலை கூறி நிற்கிறான்!*
*அவனது.... வேதனையும் விரக்தியும்....*
*குற்ற உணர்வும் வெளிப்படுகிறது!*

*பாடல் :*

**விதியிதுவோ.... நீ சொல்லிறைவா?**
**விதியிதுவோ.... நீ சொல்லிறைவா?**

**கதியென நம்பிக்**
**கரம் பிடிவுத்தவளை...**

**நடுவினில் நீங்கி....**
**நான் நிலை தாழ்ந்தது....**

**விதியிதுவோ.... நீ சொல்லிறைவா?**
**விதியிதுவோ.... நீ சொல்லிறைவா?**

**சிலம்பினை விற்றிடும்**
**நிலையினை யடைந்தேன்!**
**சிறுமதியால்.... நல்..**
**லறத்தினை மறந்தேன்!**

**விலைமதிப்பில்லா....**
**வாழ்வினைத் துறந்தேன்!**

**விதியிதுவோ... நீ... சொல்லிறைவா?**
**விதியிதுவோ... ... சொல்லிறைவா.**
*(கோவலன் கலங்கியழுகிறான்)*



**துணைவன் பதமே...**
**துணையெனக் கொண்ட....**
**மனைமகள் நெஞ்சினைக்**
**கருக்கிடத் துணிந்தேன்!**
**இணையிலா ஒளியை....**
**வீசிடும் நிலவை....**
**இழந்தொரு மின்மினிப்**
**பூச்சியைத் தொடர்ந்தேன்!**
**விதியிதுவோ .... நீ சொல்லிறைவா?**
**விதியிதுவோ.... நீ சொல்லிறைவா?**

*இப்போது வீதியில்... நடமாட்டம் ஏற்படுகிறது.*

*மன்னர் காலக் காட்சிகள்... தோன்றுகின்றன. (அன்றைய மதுரை வீதி)*

*கோவலன் சிலம்பை விலை கூறி விற்கிறான்!*

*பாடல் :*

**பொற் சிலம்பு!**
**பொற் சிலம்பு!**
**பொன் மகளின்**
**பொற் சிலம்பு!**
**கற்புடைய பெண்ணரசி**
**கால்படர்ந்த நற்சிலம்பு!**
**விற்க வந்தேன் இச்சிலம்பை!**
**விலைகொடுத்துப் பெற்றிடுங்கள்!**
**கற்கள்.... குலுங்கும் ஒலி....**
**காதல் நெஞ்சைப் பற்றும் ஒலி!**

*(இப்போது பொற்கொல்லன் தனது.... கூட்டாளிகளுடன் வருகிறான்!*

*கோவலன்... பொற்சிலம்புடன் தெருவில்*
*நின்று விலை கூறி.... விற்பதைக் கண்டதும்*
*...அவனருகே... பொற்கொல்லன் மெதுவாகச் செல்கிறான்!*

*(பொற்கொல்லன்... கோவலனருகே... சென்று.... அவனையணுகிப் பாடத் தொடங்குகிறான்!)*

பாடல் :

**தமிழ் மணக்கும் மதுரையிலே....**
**சிலம்பு தனை விற்க வந்த....**
**புதியவரே உமக்கு வந்தனம்!**
**நான்**
**பூசுகிறேன்... மணக்கும் சந்தனம்!**

**பொன்னுலையில்... வேலை செய்யும்**
**பொற் கொல்லன் நானே! இப்**
**பொற் சிலம்பை... விற்பதிலும்**
**விற்பன்னன் நானே!**
**அன்புடனே... உமக்குதவி....**
**ஆற்றிடுவேனே!**
**தந்திடுவீர்... என் கரத்திற்....**
**பார்த்திடத் தானே!**

(என்று கேட்க.... கோவலன்.. சிலம்பினைப் பொற் கொல்லனிடம் கொடுக்கிறான்!)

சிலம்பைக் கையில் வாங்கி....

அதனை உற்றுப் பார்த்த பொற்கொல்லன்... கண்களில்

ஒரு மின்னல் தெறிக்கிறது! உள்ளம் திகைப்பினாலும் வியப்பினாலும் தத்தளிக்கிறது.

கோவலன் தன்னை அவதானிக்காத படி.

மறுபுறம் திரும்பி...

தனது மகிழ்ச்சிக் குறிகளை வெளிப்படுத்துகிறான்.

எண்ணம் சிறகடித்துக் காலத்தை கிழித்துக் கொண்டு பின்னோக்கிப் பறக்கிறது!

இப்போது கோவலன்... அரங்க ஒளியிருந்து மறைகிறான்!

பொற்கொல்லன் தன் கூட்டாளிகளை யழைத்துத்....

தன் ஆரவாரத்தைப் பகிர்ந்து கொள்கிறான்

பொற்கொல்லன் மகிழ்ச்சிக் கூத்து :

**அற்புதத் திருநாள் இதுவன்றோ!**
**ஆண்டவன் செய்த... திருவருளன்றோ!**



**கோப்பெருந்தேவியின் ஒரு சிலம்பை....**
**நான்...**
**கொண்டது... இன்றுடன் மறைந்ததன்றோ!**
**அகப்பட்டான் கையிலே.... இங்கொருவன்**
**நான்**
**சுகப்பட்டேன், சூழ்ச்சியைத் தொடங்கிடுவேன்!**
**திகைப்புற்று மன்னனும் மகிழ்ச்சி கொள்வான்! நான்**
**சிறப்புற்று... வெகுமதி.... பெறுவனன்றோ!**

(இவ்வாறு பாடி ஆடித் தனக்குள்ளே மகிழ்கிறான்.)

பொற்கொல்லன்... கோவலனின் பக்த்தில் வந்து அவனை அணைத்து நயவஞ்சகமான எண்ணத்தோடு....

பொற்கொல்லன் :

பாடல்:

**என்...**
**அனுபவத்தில் எத்தனையோ....**
**பொற்சிலம்பைப் பார்த்திருப்பேன்!**
**இத்தகைய பொற்சிலம்பை**
**இதுவரை நான் பார்த்ததில்லை**

**எப்படியும் இச்சிலம்பை....**
**எளிதினிலே... விற்றிடலாம்!**
**ஒப்புதல் நீ சொல்லிவிட்டால்**
**உடனடியாய்... விற்றிடுவேன்!**

பொற்கொல்லன் மீது....

நம்பிக்கை கொண்டவனாக.....

கோவலன்.... தான் வாழ்ந்த வாழ்வினை...

நினைவு கூருகிறான்!

கோவலன் :

**அன்றொரு நாட்... கப்பலிலே....**
**அவனியெல்லாம் பவனி வந்து....**
**இன்புடனே வாழ்ந்து வந்த.....**
**சோழ நாட்டு வாணிகன் நான்!**

துன்ப வழி தான் நடந்து....
பொன் பொருளை நானிழந்தேன்!
பண்பதனைத் தொலைத்து விட்டுப்
பாழ் துயரக் கடல் மிதந்தேன்!
அன்புடையாள் என் மனைவி.....
கண்ணகியாள் காற்சிலம்பில்.....
ஒன்று இது.... எடுத்து வந்தேன்!
தந்துவிலை கொள்வதற்கே!
*(பொற்கொல்லன் இப்போது......*
*தன் சூழ்ச்சியின் வயப்பட்டவனாக.....)*

பொற்கொல்லன் :

சுத்தமான பொன்னிற் செய்த இச் சிலம்பு!
விற்றிட ஓர் நல்ல இடம் உண்டு நம்பு!

சத்தமாகச் சொல்லுவது... நல்லதன்று!
எட்டிரெண்டு அடியினில் என் இல்லமுண்டு!

பத்திரமாய்ச் சிலமணிகள் நீயிருந்தால்.....
பாண்டியர் தம் பதில் கேட்டு வந்திடுவேன்!

சத்தியமாய்ப் பொற்குவைகள் நிதி கிடைக்கும்!
சொர்க்கமதாய் உன்வாழ்வு பரிமளிக்கும்!
*இதைக் கேட்ட கோவலன் :*
*(நன்றிப் பெருக்குடன்*
*பொற்கொல்லனை வணங்கியவனாக*
*கண்ணீர் மல்கப் பாடுகிறான்!)*
என்ன தவம் செய்தேனோ? யான்
என்ன தவம் செய்தேனோ?

எந்தன் முன்னே.... ஒரு
தெய்வ மென்றே வந்தீர்
என்ன தவம் செய்தேனோ?



கண்ணின் மணியவள் சோகம்! நான்
தீர்த்திட வந்ததோர் காலம்!
எண்ணமெல்லாம் அவளாக இனி
வாழ்வது தான் எதிர்காலம்

பொற்கொல்லன் :

புலவரெல்லாம்.... போற்றி நிற்க....
நிலவு புகழாட்சி செய்யும்
அரசரெங்கள் பாண்டியனின் அருகே....
நிலவெனவே வீற்றிருக்கும்...
நீள்விழியாள் மலர்ப்பதத்தை
அலங்கரிக்கும் சிலம்பு இது அறிவாய்!
*(என்று பொற்கொல்லன். கோவலனைத் தன்னுடன் கூட்டிச் செல்கிறான்.)*

அரங்க விளக்கு அணைகிறது!

## காட்சி 5

இடம் : பாண்டியன் அரண்மனை

பாண்டியன்... ஊடலின் வயப்பட்ட மனைவியின் கோயில் நோக்கி... அவளைக் கூடும் நோக்குடன் செல்கிறான்!

திரைப்பின்னணியிற் பாடல்.
கூடல் நகரத்து.... நாடக மகளிர்
பாடலும் ஆடலும்.... தோற்றமும் பண்ணும்
காவலன் உள்ளம் கவர்ந்தன என்று.
ஊடல் உள்ளெழுந் துலைக்கத் தலைநோய்...
கூடிய தென்று.... குறித்துக் கோயிலைத்
தேடியடைந்த கோப்பெருந்தேவியை....
நாடி நடந்தான்.... நற்குடி நாயகன்!

மதுரை நாடான்... பாண்டியன் தேவியின்
மது கொள் இதழ்கள் நெஞ்சினில் நினைத்து....
மதியெலாம் அவளாய்..... மாளிகை நோக்கிப்

**புயலென விரையப்..... போகின்ற வழியில்**
**எதிரெனத் தோன்றித் தரையினில் வீழ்ந்து....**
**இருகரங் கூப்பினான்.....**
**சதி நிறை கொல்லனே!**

*பாண்டியன் முன்.... பொற்கொல்லன் எதிர்ப்பட்டு வந்து..... அவனை வீழ்ந்து வணங்கி யெழுகிறான்!*

*பொற்கொல்லன் :*

**பாண்டிய நாட்டின் பதியே வாழி!**
**ஆன்றவர் போற்றும் அரசே வாழி!**
**ஈண்டொரு சேதி ஏந்தி நான் வந்தேன்!**
**இது சொல எனக்கோர் அனுமதி தாராய்!**

**கன்னகம் எதுவுமின்றிக்**
**கவைக் கோலின் துணையுமின்றிக்**
**கண்ணயர் மந்திரத்தால்**
**காவலர் வாயிலாளர்....**

**தம்மையும் மயக்கி யெங்கள்**
**தலைவியின் கோயில் போந்து.....**
**தொன்மைகொள் சிலம்பு கொண்ட**
**தீயோனைக் கண்டேன் மன்னா!**

**காவலர் கண்படாது.....**
**கள்வனச் சிலம்பை விற்க....**
**ஆவலாய் நின்றான்! எந்தன்**
**அறிவினால் அவனைக் கூட்டி**
**நான் வதி குடிலில் வைத்து**
**நம்பிட நடந்து.... உந்தன்**
**கோயிலை நோக்கி வந்தேன்!**
**கொற்றவா... நீதி செய்வாய்!**

*மன்னன் :*

*(தேவியைக் கூடி..... அவனை மகிழ்ச்சிப்படுத்தித் தானும் மகிழத் தருணம் பார்த்திருந்தவனாக....*



*வழமைக்கு மாறாக.....*

*ஆராய்ந்தறியா மதியினனாகக்....*

*காவலனை அழைத்து.... ஆணையிடுகிறான்.)*

*பாடல் :*

**தேவியின் சிலம்பா? தேவியின் சிலம்பா,**
**தேடியும் கிடைக்காத் தேவியின் சிலம்பா?**
**யாரது அங்கே! யாரது அங்கே!**
**வாருங்கள் இங்கே! வாருங்கள் இங்கே!**

*(கைதட்டிச் சேவகனையழைக்க.... காவலர்கள் வருகின்றனர்!)*

**கள்வனைக் கொன்று சிலம்பது கொண்டு**
**இவ்விடம் வந்திடுக!**
**நல்லது செய்த கொல்லரின் கையில்**
**அள்ளியே தந்திடுக!**

**என்னருத் தேவியின் நன்மலர்ப்பாத**
**இன்னிசை கேட்டிடுவேன்!**
**கல்லெனும் ஓசையிற் காது குளிர்ந்திட**
**உள்ளம் மகிழ்ந்திடுவேன்!**

*சேவகர்கள்.... பொற்கொல்லனுடன் செல்ல....*

**அரங்க விளக்கு அணைகிறது!**

*திரைக்குப் பின்னால் :*

**தீரவிசாரித்துத் தீர்ப்பளிக்கும் மாமன்னன்.....**
**காலச் சிறையின் கைதியென.... நெறிதவறி.....**
**தேர்ந்து தெளியாது..... திடுமென்று ஆணையிட்டு**
**ஞாலப் பழிக்கு.... நேர்ந்த பலியானான்!**
**ஏது மறியாது... ஒரு பாவம் புரியாது....**
**வீதியிலே நின்றவனை வினைவந்து சூழ்ந்ததம்மா!**
**நீதி தவறாத நெடுமன்னன் நிலை தாழ்ந்த**
**சேதி வரலாற்றின் செழும்பாகி நின்றதம்மா!**

## காட்சி 6

மதுரை மாடம் :

பொற் கொல்லனின் கூடம் வாணிகர் தெரு :

கோவலன், கண்ணகியுடன், மீண்டும் தான் நல்வாழ்வு காணப் போவதை யெண்ணிக் கற்பனை வெள்ளத்தில் நீந்திக் கொண்டிருக்கிறான்!

(கற்பனையில் நடனம் :

கோவலனும்! கண்ணகியும்)

பாடல் :

ஜதி

கோவலன் :

**இளைய தென்றலே வா! என்**
**இதய மேடையில்.... ஆடிப் பாடவா**
**இளைய தென்றலே வா!**
**மலைய மாருதம் நீ! என்**
**மதியில் வாழும் செந்தீ!**
**அலையின் தேகம் நீ!**
**கலையின் மேகம் நீ!**
**அன்புத் தெய்வமே வா!**

ஜதி

கண்ணகி :

**துயர வேளைகள் போயின! எம்**
**துன்ப நோய்களும் ஏகின!**
**உயரும் நாளிது! உதயமாகுதே.....**
**புதிய வாழ்வு இன்று!**

ஆடலின் முடிவில், கோவலன், தன் கனவிலிருந்து மீள்கிறான்!

பொற்கொல்லனும்... அவனைத் தொடர்ந்து.....

காவலரும் தன்னை நோக்கி வருவதைக் கோவலன் தூரத்திற் காண்கிறான்!



ஆர்வ மேலீட்டினாலும்... சிலம்பினை விற்றுத் தன் மனைவியிடம் மீளப் போகிறேனென்ற அசைக்க முடியாத.... நம்பிக்கையினாலும்..... அவர்களை நோக்கிக் கோவலன் ஓடுகின்றான்!

பொற்கொல்லனை நெருங்கிய கோவலன்

பாடல் :

**வேப்பந்தாரான்.... பாண்டியன் துணைவி.**
**கோப் பெருந்தேவி... சிலம்பு கண்டாளோ?**
**காற்சிலம்பதனை.... ஏற்றிடுவாளோ?**
**காசும் பொன்னும் விலை தருவாளோ?**

ஆவலுடன் தன்னை நோக்கி ஓடி வந்த கோவலனைச் சுட்டிக் காட்டியவனாக.....

ஆவேசத்துடன்....

பொற் கொல்லன் :

**இவனே கள்வன்!**
**இவனே கள்வன்!**

**கொற்றவன் மனையிற்**
**திருடிய கள்வன்!**

**பாவியின் கையினிற்**
**தேவியின் சிலம்பு!**

**சீவியவன் தலையை!**
**சீக்கிரம் கிளம்பு!**

இவ்வாறு பொற்கொல்லன் கூறியதும்...

கோவலன் திடுக்கிட்டு...

எதையும் நம்பமுடியாதவனாகத் திகைத்து நின்கிறான்!

கோவலனை நன்கு உற்றுப் பார்த்து.....

அவனது குற்றமற்ற தோற்றத்தினைக் கண்டு...

அவன்மீது பரிதாபமும் இரக்கமும் ஏற்பட்டவனாகக்...

காவலர் தலைவன்....

*பொற்கொல்லன் பக்கம் திரும்பி :*

**இந்த முகம் பாவம் செய்யும் முகமோ?**
**ஈங்கிவனைக் குற்றஞ் சொலலல் தகுமோ,**
**எந்த விதக் கள்ளமின்றி... அன்பு நிறையுள்ளங் கொண்டு**
**நிற்பவனைக் கள்வனென்பதறமோ!**

*இதனைக் கேட்டதும்...*

*பொற்கொல்லன் ஆவேசமாக... நகைக்கிறான்!*

*காவலர் தலைவனைப் பார்த்து பொற்கொல்லன்....*

**மயங்காதீர்!....**
**மயங்காதீர்!....**
**மயங்காதீர்!....**
**காவலரே நீர் மயங்காதீர்!**
**கடமையைச் செய்திடத் தயங்காதீர்!**
**தேவியின் சிலம்பைத் திருடிய இவனது**
**தோற்றத்தைக் கண்டு குழம்பாதீர்!**
**மயங்காதீர்! மயங்காதீர்! மயங்காதீர்!**

*கோவலன்... மலைப்பும்... திகைப்பும் விலகாதவனாக ஏதுமறியாத அப்பாவியாக...*

**ஏது செய்தேன்? ஐயா.**
**ஏது செய்தேன்?**
**ஏழையைக் கள்வனென்**
**றேன்விளித்தீர்? ஐய....**
**ஏது செய்தேன்? ஐயா**
**ஏது செய்தேன்?**
**மாதவள் மனைவியின்**
**பாதநற் சிலம்பினை**
**வீதியில் விற்றது.... தான் தவறோ?**
**சூதறியா என்னைச் சோதனை செய்திடல்**
**நீதி கொள் கொற்றத்திற் சாதகமோ?**

*இப்போது பொற்கொல்லன்....*

*(அமைதியிழந்தவனாக...)*



*பாடல் :*

**காவலை மீறி எம்**
**மன்னனின் கோட்டையுட்**
**புகுந்தது குற்றமடா!**
**தேவியின் கோயிலைத்**
**தீண்டி யெம் சிலம்பது**
**திருடினாய்! குற்றமடா!**

**அப்...**
**பாவிபோல் வீதியில்**
**பாண்டியன் சிலம்புடன்**
**தோன்றினாய் குற்றமடா!**
**கேவலம் நீ இந்தக்**
**கூடலாம் மதுரைக்கு**
**மீண்டதும் குற்றமடா!**

*இவ்வாறு பொற்கொல்லன்... பழி சுமத்தி நிற்க...*

*கோவலன் தான் கள்வனிலலை என்று....*

*கூறிக் கத்துகிறான். கதறுகிறான்!*

**கள்வனல்ல! நான்**
**கள்வனல்ல!**
**கள்வனல்ல! நான்**
**கள்வனல்ல!**

**தொல்விதிப் பயனால்**
**துயர்க்கடல் மிதந்தேன்!**
**நல்வழி மறந்தே....**
**நிம்மதி யிழந்தேன்!**
**செல்வதி யெனது...**
**செந்திரு மனையாள்**
**சிலம்பிது! இதுவே.**
**சத்தியமையா!**

*இதுகேட்டுப் பொறாதவனாகப் பொற்கொல்லன் காவலரைப் பார்த்து...*

திருடிய குற்றம். தீர்ந்திடு முன்னே
பெரிய பொய் கூறுகிறான்!
உருகிடுவோம் நாம் என்று நினைத்தே
உத்திகள் போடுகிறான்!

*தலைமைக் காவலர் :*

பழியைச் சுமத்தி... அப்
பாவியைக் கொல்லுமுன்
பரிசீலித் திடவேண்டும் ஐயா!
ஒரு நீதி தவறினால்...
வரலாற்றின் கேள்விக்குப்
பதில் கூற வேண்டுமே ஐயா!

*பொற்கொல்லன் :*

மன்னனின் ஆணைக்கு
மதிப்பே கொடுக்காது
மயக்கத்தில் வீழ்ந்தீரோ ஐயா!
இன்னுமேன் வீணுக்கு...
இவனுக்குப் பரிகின்றீர்!
மயக்கத்திற் தளர்ந்தீரோ ஐயா!

*தலைமைக் காவலர், பொற்கொல்லனைச் சாந்தமாகப் பார்த்து....*

*பாடல் :*

சாந்தமும் பரிவும் சற்குணமும் இவன்
ஏந்திய கலன்களாய் ஒளிருதையா!
காந்தங் கொள் கண்களிற் கருணையொளி
தோன்றியே... நெஞ்சகம் காட்டுதையா!

இதுகேட்டு..... ஆவேசக் கூத்தாடித் தனது கோபத்தையும் அவசரத்தையும் ஒருவாறு அடக்கியவனாக.....

பொற்கொல்லன்

*பாடல் :*

பதவியிற் பலகாலம்
இருந்ததால் உம்பார்வை



பகலிலும் ஒளிகுன்றிப்
போனதோ ஐயா!

உதவிகள் செய்வதால்
முன் செய்த பாவங்கள்
குறையு மென்றெண்ணமோ?
கூறுவீர் ஐயா!

கள்வரின் திறத்தினைச்
சொல்வதும் சுலபமோ?
நள்ளிருள் நாயகர்
நாடகம் கொஞ்சமோ?

பல்வகைக் கலைகளிற்
பரிச்சயம் பெற்றவர்
வல்லவர் இவரது.....
வலையினில் வீழ்வதோ?

இப்போது.... இவற்றைக் கேட்டுக் கொண்டு.... இதுவரை... எதுவும் கூறாதிருந்த இளைய காவலனொருவன்... பொற்கொல்லனின் வாதத்தில் இணைந்தவனாக.....

*பாடல் :*

நானறிவேன் கள்வர் நாடகத் திறனை!
ஓர் பொழுதெனக்கு நேர்ந்தது சொல்வேன்!
மாரியின்.... மழையில் மண்டிய இரவில்
ஊர்மனை தன்னுள் உறுகுடி மக்கள்
சேர்பொருள் கவரும் சிறுமதி கொண்டு
போந்தனன் ஒருவன்.... புயலினை வென்று!
கார்முகில் வண்ணப் போர்வையும்... கையில்
கூருளி யென்னும் ஆயுதம் கொண்டும்
நேரெதிர் கொண்டான்! நிழலென நின்றான்!
நேர்ந்தவை நெஞ்சை நெருக்குவதாமே!
உருவினன் கைவாள்! உயர்ந்தன கரங்கள்!
உருவினேன் என்வாள்! உருவினை மறைத்தான்!
கருவியைக் காணேன்! கள்வனைக் காணேன்!
பரவிய பீதியிற்.... பதுங்கி மறைந்தேன்!

பொற்கொல்லன்... இளைய காவலனின் இந்தக் கூற்றினைக் கேட்டு, உவகை கொண்டவனாக.

பாடல் :

**நீயறிந்தாயிந்த..**
**நீசரின் தோற்றம்!**
**நின்தனைப் பெற்றதால்**
**உயர்ந்தது கொற்றம்!**
**நோயறிந்தாற்றும்**
**மருந்துவன் போல் நீ....**
**நீதியைக் காக்க....**
**நின்றனை வாழி!**

இப்போது கண்ணகியின் எண்ணம் எழ.....

(கோவலன், அவளை நினைந்து கண்ணீர் வடிக்கிறான்)

**பாவியை மணந்து...**
**வேதனைக் கடலில்**
**மூழ்கிய அன்புச் சுடரே!**
**பாவி யென்னாலே....**
**சோதனைத் துயர்கள்...**
**சூழ்ந்ததடி என்மலரே!**
**நான் வருந்திசையில்..**
**நோன்புகள் செய்தே....**
**நீ தவமிருப்பாய் நாயகியே!**
**ஆண்டவன் தலையில்....**
**எழுதிய வரிகள்**
**யாரழிப் பாரோ மாதரினரசியே!**

இப்போது மெய்ப் பாட்டறிவற்ற கல்லாதான் ஒருவன்....

காவலரிடையிருந்து...

சற்றும் எதிர்பாரா விதமாகப் பாய்ந்து...

தனது வாளையுருவி வீச....

கோவலனின் உடல் குறுக்கே யறுக்கப்பட்டு....

அவன் குருதி வெள்ளத்தில் வீழ்ந்து....

துடிதுடித்து உயிர் துறக்கிறான்.



தலைமைக் காவலனும், ஏனையோரும் விறைத்து நிற்க பொற்கொல்லன் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்க திரையின் பின்னணியில் சிலப்பதிகார அடிகள் :

**கல்லாக் களிமகன் ஒருவன். கையில்**
**வெள்வாள் எறிந்தனன்! விலங்கூடு அறுத்தது!**
**புண்ணுமிழ் குருதி பொழிந்துடன் பரப்ப**
**மண்ணக மடந்தை.... வான்துயர் கூரக்**
**காவலன் செங்கோல் வளைஇய.... வீழ்ந்தனன்.**
**கோவலன் பண்டை ஊழ்வினை உருத்து. என்!**
**நண்ணும் இருவினையும் நண்ணுமின்கள், நல் அறமே,**
**கண்ணகி தன் கேள்வன் காரணத்தால் மண்ணில்**
**வளையாத செங்கோல் வளைந்ததே, பண்டை**
**விளைவாகி வந்த வினை.**

குறிப்பு – களிமகன் :

எந்த அனுபவமுமில்லாதவன் மகிழ்ச்சி குறித்து எதையும் செய்பவன் விளையாட்டுக்காக! களிப்புக்காகச் சொல்லி இறங்குபவன்! நன்மை தீமைகளை எடைபோட்டுப் பார்க்க இயலாதவன்!

## காட்சி 7

இக்காட்சி : மாதவியின் கதையைக் கூறுவதற்காக அமைக்கப்படுகிறது! நேரங்குறித்து இக்காட்சி நீக்கபடலாம்.

அரங்கில் மாதவியின் தோற்றம் :

யாழின் மீது தன் தலை சாய்த்து, வேதனையின் விளிம்பிற் காட்சி தருகிறாள்!

மாதவி.... கோவலனது பிரிவுத் துயரில் மூழ்கியிருக்கிறாள்! அவளது நெஞ்சத்திரையில்....

கோவலனுடன் தான் வாழ்ந்த இனிய நாட்கள் விரிகின்றன!

பாடல் :

**பூவிழிக் கோதை ..... மாதவி நல்லாள்.....**
**பீறிய பிரிவினில் மூழ்கி....**
**காவிரிப் புனலாய்க் கண்மழை பொழியக்...**
**காதலின் தீயிடை நின்றாள்!**

**நோவினில் நிழலாய்.... நிகழ்ந்திடும் நினைவில்...**
**நேற்றைய வாழ்வினைக் கண்டே....**
**சாவினை வென்றோர் சடமென நடந்தாள்....**
**சமனிலாக் கலை தெரி பாவை!**

*மாதவியின் நினைவில் : (நினைவுக் காட்சி)*
*கோவலனும் மாதவியும் களித்தாடிய காட்சி!*

கோவலன் :

*பாடல் :*

**நாட்டிய தேவதை ஆடுகிறாள்!**
**தமிழ்ப்**
**பாட்டினில் வந்து... கூடுகிறாள்!**
**நாட்டிய தேவதை ஆடுகிறாள்! – என்**

**பாட்டினில் வந்திசை கூட்டுகிறாள்.**
**காட்டிளம் மயிலென.....**
**கீற்றிள வெயிலென.....**
**தீட்டிய கலையென ஆடுகிறாள்! – உயிர்**

**ஊட்டிய சிலையென ஆடுகிறாள்!**
**நாட்டிய தேவதை ஆடுகிறாள்.**
**துள்ளிடும் மானென....**

**தூங்கிடும் மதியென.....**
**கள்ளியோர் நாடகம் ஆடுகிறாள்!**

**பள்ளி கொள் மாலவன்**
**பக்கத்தில் வாழும்....**
**பொன்மகள்.... புன்னகை காட்டுகிறாள்!**

**இந்திரன் மாளிகை...**
**மந்திரம் போலே....**
**சிந்தையில் ஏதோ பண்ணுகிறாள்!**

**சந்திர லோகத்துப்**
**பந்தினைப் போலே....**
**விண்ணில் எழுந்தே ஆடுகிறாள்!**



*பின்னணியிற் பாடல் :*
*நினைவுக் காட்சி தொடர்கிறது!*

கோவலன் மாதவியின் அபிநய நடனம் :

**களித்தனள் காதற்....**
**கடலிலே நின்று....**
**குளித்தனள், குளிர்ந்தனள், அன்பிற்...**
**துளிர்த்த நல்லின்பத்**
**தூளியில் ஆடித்...**
**துணையவன் அணைப்பிற் கண்ணயர்ந்தாள்!**

**வந்ததோர் இந்திர....**
**விழாவது விரைந்து!....**
**வானவர் பதியெனப்**
**பூம்புகார் திகழ்ந்து....**
**நின்றது; கலைபொலி.**
**நிகழ்வுகள் கண்டு.....**
**தேவரா மெனத்.....**
**திரிந்தனராமே...!**

**பாடினார்.... ஆடினார்!**
**பாய்ந்து நீராடினார்!**
**ஓடினார்.... உறங்கினார்!**
**உவகையிற் கூடினார்!**

**யாழிசை மீட்டிப் பாடிய வரிகள்**
**ஊழதன் வாய் வரியாகி**
**வீழ்ந்தொரு வாளாய்.... வெட்டிய துறவை....**
**விலகினான் கோவலன்... மாதை!**

*(இப்போது, கோவலன் மாதவியைப் பிரிகிறான்)*

*மாதவியின் தனி நடனம் : அவனது பிரிவுத்துயரத்தை வெளிப்படுத்துகிறாள்)*

*பாடல் :*

**ஏழிசைச் சுரமும்.... இடமது மாறி...**
**இசைத்திடப் பொத்தினாள் காதை!**

வாழ்வது வெறுக்க, வழியறியாளாய்....
வாடினாள் வதங்கினாள் பேதை!

பங்கயத்தாள் விரிய பசுந்தேன்மா கொழுந்தொழுக.
இங்கழகு அசோகமது மடல் அவிழ... நங்கையென
வந்தாள் இளவேனில்! வையகத்தைக் கூடி இன்பம்
கொண்டாடக் கூவினாள் காண்!

வேனிலில் விளைந்த விரக மூடுருவ...
விரிந்த தன் காதலன் நினைவில்...
வான் நிலா முற்ற வெளியினிலிருந்து....
வனிதை யாழ் நரம்பது மீட்டினாள்!

தேனிலாழ் குரலின் தீந்தமிழ்ப் பாடல்
தீர்ந்திடாத் துயரினிற் தோய.....
ஏனெதாற் பிரிந்தீர்? ஏதுதான் செய்தேன்?
என்று தன் வேதனை விளம்பி....
போனதன் துணைவன் போக்கிடம் நோக்கிப்
போக்கவோர் திருமுகம் வரைந்து....
ஆனதோர் நட்பின் ஆயிழை வசந்த....
மாலையைத் தூதெனப் பணித்தாள்!

*(வசந்தமாலையிடம் மடல்கொடுத்து அனுப்புகிறாள்)*

*பின்னணியிற் பாடல் :*

தூவிளக்குள்ளத் துயரினிற் தோய்த்தும்...
மாதவி மலராள் தீட்டிய திருமுகம்
கோவலன் மறுத்துக் கீழ்மொழி பகர்ந்தான்!
குடிப்பிறப் பெழுந்த நடிப்பென இகழ்ந்தான்!

காண்வரி.... உள்வரி.... கண் கூட்டுவரியுடன்
காட்சி வரிதனைப் புல்லிய புறத்தினை.....
நாணறியாதவள் நடிப்பினிற் கண்டதாய்....
நாவசை யுரைத்து.... நீள்வழி தொடர்ந்தான்.

பூம்புகார் விட்டுப் புலம் பெயர்ந்தானெனும்
பேரிடர்ச் செய்தியால் நொந்து....



தாங்கொணாத்துயரில் தன்நிலை தளர்ந்து...
தாகமும் பசியதும் மறந்து...
தூங்கிடா விழியாள் துடித்தொரு நோயிற்
துவண்டனள் ஒரு பள்ளியறையில்!

*(கோசிகனைத் தூதனுப்புதல்)*

நீங்கிடாதவரை நெஞ்சினில் வணங்கி....
நீள்மடல் ஓலையில் வரைந்து....
பூங்குழல் நெய்யின் புதுமணந்தன்னைப்....
பூசியோர் முத்திரை பதித்து....
ஈங்கிதை யெடுத்து.... இனியவர் தம்பாற்
சேர்த்திடுவீரென! இயம்பி....
மாங்குயிலனையாள் மன்றாடிநிற்க....
மடல் தனை வேண்டினான் அன்பைத்
தாங்கிடு பண்பின் கோசிகன் என்பான்
தையலின் பால் மனமிரங்கி!

*மாதவி மீண்டும் துயரக் கோலத்தில்.....*
*யாழின் மீது தலைசாய்த்து நிற்க.....*
*அரங்க விளக்கு அணைகிறது!*

## காட்சி 8

*காலை நேரம் :*

*பாண்டிய மன்னன் அரண்மனைக் காலை முரசம் ஒலிக்கிறது.*

*மாதரி.... தன் மகளை (ஐயையை) அழைக்கிறாள். ஐயையுடன் மாதரியின் நடனம்!*

*பாடல் :*

மாலை வெண்குடைப் பாண்டியன் கோயிலிற்
காலை முரசம் ஒலிக்குது! ஒலிக்குது!
நீள் துயில் நீங்கி நீயெழு மகளே!
நித்திய கருமங்கள் ஆற்றிடு மகளே!

கோன் மனை தனிலே மோர் கடைந்திடவே
வா மகளே! விரைவாக என் மகளே!

ஐயை என்மகளே! என் துயில் தனிலே.
மெய் யெனும் படியாய்க் கனவுகள் கண்டேன்!

பொய் யவையாகிப் போகிடக் கண்ணன்
புகழினைப் பாட நீ வருவாயே!
தீக்குறி கண்டேன்!
தீக்குறி கண்டேன்!
யார்க் கொரு தீங்கோ!
யானறியேனே!
ஆக்குலம் நடுங்க....
பாற்குடம் நொருங்க
நேற்றைய உறைப்பால்
புளிபடா திருக்க....
மாக் களிறழுதிட...
மறி துள்ளாதிருக்க....
தீக்குறி கண்டேன்!
தீக்குறி கண்டேன்!

தீயவை போக
ஆவினம் வாழ
மாயவன் கண்ணன்
ஆடிய குரவை....
ஆடிட வாராய்!
ஆடிட வாராய்!
நல்லவை நிகழப்
பாடிட வாராய்!

*மாதரி ஐயையின் நடனத்தைத் தொடர்ந்து*
*கண்ணன் அரங்கிற் தோன்றுகிறான்!*
*கண்ணனைச் சுற்றி ஆயர் மகளிர்*
*ஆடியும் பாடியும் வழிபடுகின்றனர்!*



ஆநிரை மேய்க்கும் மாயவனே! முகில்
வானெனச் சிரிக்கும் மாலவனே!
வேய்ங்குழலூதி..... வீதியில் ஆடி....
பெண்களை ஏய்க்கும் ஆயர் மன்னனே!
பாற்குடம் கொண்டு பாவையர் போக....
பாய்ந்து பின்னாலே ஓடிடுவாய்!
காற்சரம் கேட்டுக் கன்னியர் திரும்பத்
தோன்றி முன்னாலே சிரித்திடுவாய்!
பூநிறைக் கூந்தற் பூவையர் கண்கள்
மூடிடச் சொல்லி அடம் பிடிப்பாய்!
வாய்நிறை வெண்ணெய் வழிந்திட உறியில்
வானரம் போல நெய் எடுப்பாய்.
வானமும் கடலும் வாய்விட்டுச் சிரிக்கும்
வனிதையர் கூச்சல் போடுகையில்!
கானமும் கலையும் கரங்கொட்டிச் சிரிக்கும்
கண்ணனின் லீலை பாடுகையில்!

*கண்ணன் குரவையர் நடன முடிவில்...*
*மாதரி.... குளத்துறைக்கு... நீராடச் செல்கிறாள்!*
*அரங்க விளக்கு அணைந்து மீண்டும் ஒளிர்கிறது!*
*இப்போது... ஊரவர் ஆரவாரப்படுகின்ற.... ஓசையும்*
*பின்னணியில் துன்ப ஓசையும் எழுகின்றன!*

*அரங்க நடுவில் கண்ணகி, தீக்குகுறிகள் உணர்ந்தவளாய் நிற்கிறாள்!*

*கோவலன் மாண்ட செய்தியினை....*
*ஊரவர் மூலமறிந்த.....*
*ஆயர் மகளொருத்தி....*
*(கண்ணகியின் தோழி)*
*திகைப்பும் திகிலும்.... வேதனையும் மிக்கவளாக.....*
*அரங்கிற்கு வருகிறாள்!*

*கண்ணகியின் முன்னே.... கதிகலங்கியவளாக.... துக்கம் தொண்டையடைக்க.... சொல்வதறியாளாய் நிற்கிறாள்!*

*கண்ணகி.... இவளது நிலையைக் கண்டு...*

*ஏதோ துயர்ச் செய்தி தான் கேட்கப் போவதற்குரிய....*

*நெஞ்சப் பதட்டம் தன்னுள்ளிருப்பதைத் தன்தோழிக்கு*

*வெளிப்படுத்துகிறாள்!*

*கண்ணகி :*

**ஊரவர் சொன்ன சேதி யென்ன?**
**உள்ளதைச் சொல்லடி தோழி என்முன்!**

**போனவர் இன்னம் திரும்பவில்லை! என்**
**புருவங்கள் துடிப்பதேன் தெரியவில்லை!**

**– ஊரவர் சொன்ன சேதி என்ன?**
**நண்பகல் வேளையில் என்னுடல் நடுங்குது!**

**அன்பனைத் தேடியென் ஆருயிர் ஏங்குது!**

**உண்பதும் அறியேன். நான்.....**
**உயிர் நிலை தரியேன்!**

**உண்மையை அறிந்தால்....**
**உரையடி தோழி!**
**ஊரவர் சொன்ன சேதியென்ன?**

*ஆயர்மகள் :*

**மன்னன் மாளிகை...**
**பொன்னின் சிலம்பினை...**
**கொண்ட கள்வன்...**
**கோவலன் என்றே...**
**உந்தன் கணவன்....**
**உயிரினைக் குடித்தார்**
**மன்னன் காவலர்**
**இதுவன்றோ சேதி....**

*(இவ்வாறு கூறிவிட்டுத் தோழி.... குமுறியழுகிறாள்)*



*குறிப்பு : இப்பாடலின் மத்தியில் கண்ணகியின் துடிப்பும் வேதனையும் பதட்டமும்.... காட்டப் படவேண்டும்.*

திகிலும், துயரும் நிறைந்த இசையின் மத்தியில் *கண்ணகியின் துயர்நிலை : ......*

*பின்னணியிற் பாடல் :*

**தன்னொடு மேகங்கள் தாங்கியே திங்கள்**
**தரையினில் வீழ்ந்தது போல் விழுந்தாள்!**

**பொங்கி யெழுந்தாள்!**
**புரண்டு எரிந்தாள்!**

**செங்கண் சிவந்திட**
**மங்கை சொரிந்தாள்!**

**என் கண்ணன் எங்கே?**
**என் கண்ணன் எங்கே?**
**என்றே குளறி.....**
**இன்பத்தைக் கொன்றாள்!**

விருத்தம்

**உடனுயிர் நீக்கும் மாண்பை....**
**உத்தமி உளத்திற் கொண்டாள்!**
**கடமை யொன்றுண் டேயென்று....**
**கருத்திலே துணிபு கொண்டாள்!**
**மடமையால் மன்னன் செய்த....**
**மாபழி அறிந்தும் கேள்வன்**
**உடமையாய் உலவும் வாழ்வு**
**ஊறென உரைத்தாள் நங்கை.**

*இவ்வேளை.... ஆயர் மக்கள் வந்து கண்ணகியின் துயர் கண்டு.... அவளது வேதனையிற் பங்கு கொள்கிறார்கள்!*

*கண்ணகி கூற்று....*

**மாயன் புகழ்பாடி...**
**மன்றாடி நிற்கின்ற....**
**ஆயர் மடமகளிர்**
**எல்லோரும் கேளுங்கள்!**

**தூய கதிரொளியாய்....**
**தூங்காத காவலனாய்...**
**வாய்மை யறிகின்ற**
**வல்லவனாய் வரங்கொடுக்கும்**
**வெய்யவனே.... என்வேந்தன்**
**கள்வனோ நீ கூறு!**
இப்போது....
ஓர்... அசரீரி கேட்கிறது!
*(ஒளிக் கற்றைகள் பாய்கின்றன)*
*(அசரீரியில்)*
ஆதவன் கூற்று :

சூரிய தேவன் :
**கருங்கயற் கண்ணாய்!**
**கருங்கயற் கண்ணாய்!**
**கள்வனேயல்லன்....**
**நின்னருங் கணவன்!**
**பெருங் கொடு நெருப்பில்**
**பாண்டியன் பேரூர்**
**அழிந்திடும்..... இதனை...**
**அறிந்து கொள்ளம்மா!**
இவ்வாறு அசரீரி கேட்டதும்...
ஊர் மக்கள் ஆரவாரப் பட்டனர்!
கண்ணகி தனது மற்றைய
சிலம்பினைக் கழற்றிக் கையில் எடுக்கிறாள்!
ஊர்மக்களைப் பார்த்து வஞ்சினம் உரைக்கிறாள்!
**நீதி தவறிய காவலன் நாட்டில்**
**வாழும் கற்புடை மங்கையரே!**

**தீது விலகித் துயர் வழி நீங்கி**
**வாழக் கருதியிந் நகரடைந்தேன்!**



**பாதகர் வந்தென் பதியுயிர் குடிக்கப்**
**பேரிடி வீழ்ந்து நிலை குலைந்தேன்!**

**ஈதறமில்லை! ஈங்கு என் கணவன்**
**இல்லையோர் கள்வன் ஈதுறுதி!**

**போவன், என் கணவன் பூவுடல் காண்பன்!**
**பொன்னிதழ் வாய் மலர்ந்தினிய**
**நாவதையசைத்து..... நல்லது சொல்வான்!**
**நானிதைக் கேட்பது உறுதி!**

**பூவுலகறியப்**
**புத்துயிர் பெற்று....**
**பேசிடா தென்னவன் மறைந்தால்...**
**பாவி நானேயிப்**
**பழிக்கெல்லாம் காலாள்**
**எனப் பகர்ந் தெள்ளி நீர் இகழ்வீர்!**
*(இவ்வாறு சூளுரைத்துக்...*
*(கோவலன் மாண்ட களம் நோக்கிக் கண்ணகி செல்கிறாள்)*

**அரங்க விளக்கு அணைகிறது.**

## காட்சி 9

கோவலன் கொலையுண்ட
கொலைக்களத்திற்குக் கண்ணகி வருகிறாள்!

கண்ணகி : *(சீற்றத்துடன்)*

**தோகை மயிலின் துணைவன் களத்திற்**
**சாக நேர்ந்ததும் ஏனோ,**
**வாகை சூடி வருவேனென்று**
**வந்தவன் உயிர் பிரிந்தானோ?**
**பாச முகத்தைப் பார்த்தும் கொடிய**
**பழியினைச் சுமத்தினராமோ?**
**வீசி வாளால் வெறியர்கள் உடலை**

**வெட்டியே வீழ்த்தினராமோ?**
**பாழும் விதியால் வாழ்வினில் விளைந்த**
**சோக நிகழ்வுகள் மறைய**
**ஏழை வணிகன் என் சிலம்புடனே**
**இந்நகர் வந்ததும் தவறோ?**

*கோவலன் மாண்டு கிடப்பதைக் கண்ட கண்ணகி. அவன் உடல் மீது வீழ்ந்து கதறுகிறாள்!*

*ஒப்பாரிப் பாடல்*

**பொன்மேனி புழுதி தோயப்**
**புரண்டு நீர் கிடக்கலாமோ,**
**கண்மூடிக் குருதிபாயக்....**
**கல்மீது.... படுக்கலாமோ?**
**பொல்லாத மன்னன் செய்த**
**பழியென்றிப் பேதை கேட்கச்**
**சொல்லாமற் சுருண்டு கீழே....**
**சுடரே நீ உறங்கலாமோ?**

**கண்பேசிக் களிப்போமென்று**
**கனவோடு வந்தாயன்றோ!**
**கதிர் வீச்சிற் குளிப்போமென்று**
**கதைபேசி நின்றாயன்றோ!**
**அன்பேயென்னுயிரே! எங்கள்**
**துயர் யாவும் போயிற்றென்ற**
**தென்போடு தென்னன் நாட்டின்**
**தெருவீதி நின்றாயன்றோ?**

**தீக்கனா கண்டு நொந்தேன்!**
**தெளிவிலாக் காட்சி கண்டேன்!**
**சாக்குறி பலவும் தோன்றச்**
**சஞ்சலக் கடலில் வீழ்ந்தேன்!**
**நாத் தடுமாறி.... நெஞ்சம்**
**நடுங்கியே தவித்தேன்! வெந்த**
**தீத்தணல் மீது நின்றேன்!**
**தலைவா நீ பிரிவதற்கோ?**



*(இவ்வாறு கண்ணகி புலம்பவும்*

*கோவலனின் ஆத்மா.... அவனது உடலை விட்டு மேலே எழுகிறது!*

*கண்ணகியின் பக்கத்தில் வந்து*

*(கண்ணகியின் விழிநீரைத் துடைத்து....*

*அவளை அணைத்துக் கொள்கிறது கோவலனின் ஆத்மா.*

*கண்ணகி கோவலனின் ஆத்மாவின்*

*பாதங்களில் வீழ்ந்து வணங்குகிறாள்).*

*தேவகானம் இசைக்கப்படுகிறது!*

*கண்ணகியும், கோவலனது ஆத்மாவும் வானத்தை நோக்கிப் பார்வையை உயர்த்துகின்றனர்.*

*இப்போது அமரர்கள் தேவரதத்தில் வானத்திலிருந்து வந்து இறங்கி, அவர் முன்னே தோன்றிக் கோவலனைத் தம்முடன் அழைத்துச் செல்கின்றனர்.*

*கண்ணகியின் துயரம் கடுஞ்சினமாகிக் கொப்பளிக்கிறது!*

*துரித நடையில்*

*ஜதி, சுர, தாள வாத்தியங்களுடன்*

*கண்ணகியின் நடனம்!*

*வேதனையும்*

*கோபமும்*

*மாறி மாறியெழ*

*அவள் ஆடுகிறாள்*

**காய்கின்ற என்சினம்.....**
**தணியாது கூடுவேனோ?**
**ஆய்வின்றித் தீது செய்த**
**அரசனைக் கண்டு நீதித்**
**தீர்வொன்றைக் காண்பேன்.... இந்தத்**
**தீமைக்கோர் எல்லை காண்பேன்....!**
**போயங்கு நிற்பேன் - அந்தப்**
**பொய்யனை வெல்வேன் - எந்தன்**
**ஆருயிர்த் துணைவன் கள்வன்**

அல்லவென்ற வையிற் சொல்வேன்

*பின்னணியிற் பாடல்*

நெற்றியில் திலகம் நீக்கி
நிறையுநற் தாலி நீக்கி
கற்பதே அணியாய்க் கொண்டு
கண்ணகி தெய்வமானாள்!
நெஞ்சினில் எழுந்த சோக
நெருப்பது கோபமாகி
வெஞ்சினப் பிழம்பாய் ஓங்க
வழி நடந்திட்டாள் தேவி!

அரங்க விளக்கு அணைகிறது.

## *காட்சி 10*

*இடம் : பாண்டியன் அரண்மனை.*
*கோப்பெருந் தேவி.... தன் தோழியுடன்....*
*ஒளிப் பொட்டிற் தோன்றுகிறாள் :*

கோப்பெருந்தேவி :

*(தோழியிடம் தன் கனவுக் குறிபற்றிக் கூறுகிறாள்).*

என்றுமில்லாமல் இன்று...
ஏனிந்தக் கனவு கண்டேன்!
நெஞ்சு.... நடுங்குதடி தோழி

வெண்கொற்றக் குடையும் கோளும்
வீழ்ந்திடக் கண்டேன்! அந்தப்.....
பரிதியை இருள் விழுங்கும்....
பயங்கரக் காட்சி கண்டேன்!

மன்னனின் மணியின் ஓசை.
இடைவிடா தொலித்ததந்த....
நாலிரு திசையும்.... சேர்ந்து
நடுங்கியே அதிரக் கண்டேன்!



நள்ளிரா நேரம் வானில்
வில்லது தோன்றக் கண்டேன்!
கொள்ளிகளாக வீழும்
தாரகைக் கூட்டம் கண்டேன்!
கோமகன் தனக்கு இந்தக்
குறிகளைக் கூறித் துன்பம்
வாராது தடுக்கும் நல்ல
வழிகளைத் தேடுவோமே!

*(என்றவாறு.... தனது தலைவன் மாளிகைக்குள்*
*கோப்பெருந்தேவி செல்கிறாள்!)*
*ஒளிப்பொட்டிலிருந்து.... விலகி....*
*அரசனின் மாளிகையில்.... அரசன்முன்...*
*கோப்பெருந் தேவி நிற்கிறாள்!)*
*(கோப்பெருந் தேவி..... மன்னனுக்குத்..*
*தன் தீய கனவுகளைக் கூறுகிறாள்!)*

*பின்னணியிற் பாடல் :*

மன்னவன் முன்னே தேவி,
மயக்கத்தை யுரைத்தாள்! இங்கு
என்னதான் நடக்குமோவென்
றேங்கியே மார்க்கம் கேட்டாள்!
தென்னவன் தேவி நெஞ்சம்
தெளிந்திடப் பதிலு ரைக்க....
என்னதான் சொல்வன் என்ற...
எண்ணமே வயமாய் நின்றான்!

*இப்போது.... ஒளிப் பொட்டில்....*
*கண்ணகியும்...*
*வாயிற் காவலனும் தோன்றுகின்றனர்!*

கண்ணகி :

வாயி லோயே!
வாயிலோயே
இறைமுறை தவறியோன்
வாயிலோயே!

அறமது நீங்கிய
அருளிலா அரசனின்
அரண்மனை காக்கும்
வாயிலோயே!

இணையரிச் சிலம்பினை....
ஏந்திய கையினாள்....
கணவனையிழந்தாள்
கலங்கிய நெஞ்சினாள்

கடையகத் துள்ளாள்....
கடுஞ்சினச் சொல்லாள்....
என உனதரசனின்
செவிபடக் கூறுவீர்!

வாயிலோயே! வாயிலோயே!
இறைமுறை தவறியோன் வாயிலோயே!

*(வாயிற் காவலன் கண்ணகியின் தோற்றத்தைக் கண்டு....*

*அவளை வணங்கிவிட்டு....*

*மன்னன் அரண்மனைக்குள் நுழைகிறான்!)*

*நுழைந்தவன், மன்னனிடம் கண்ணகியின் தோற்றத்தை விபரிக்கிறான்!)*

*வாயிற்காவலன் :*

கொற்கையின் பதியே வாழி!
பொதிகையைப் போர்த்தாய் வாழி!
சொற்பழி யறியா எங்கள்
தென்னவா வாழி! வாழி!

பொற்சிலம் பொன்றை யேந்தி
பொறுமையின் பொறிகள் தாங்கி....
நிற்கிறாள் வாயில் தன்னில்....
நெருப்பெனச் சொற்கள் ஈந்தாள்!



தற்துணை யிழந்தா ளாமோர்....
தனியளாய்த் துடித்து நொந்து
கற்பினாள் காத்து நின்றாள்
கடையக வாயில் தன்னில்!

அடர்த்தெழும் குருதிப்
பிடர்த்தலைப் பீடத்தின்
வெற்றிவேல் தாங்கிய
கொற்றவை யாகாள்!

முப்புரம் எரி செய்த
முதல்வனின் கூத்ததன்
அற்புதம் கண்ட நல்
அம்மையும் இவளிலை!

வெப்பினில் வெந்திடும்
பாலையில் உறைகின்ற
நற்பெருந் தேவியாம்
காளியும் இவளிலை

அக்கொடுந் தாரகன்
மார்பினைக் கிழித்த அத்
துர்க்கையும் இவளிலை
துயரத்திற் தோன்றினாள்!

*மன்னன் பதட்டமும் வியப்பும் ஆவலும் மிக்கவனாக.....*

*அப்பெண்ணை அவைக்கு அழைத்து வருமாறு வாயிற்காவலனை பணிக்கிறான்!*

*மன்னன் :*

அழைத்துவா அவளை ஈங்கு!
அழைத்துவா அவளை ஈங்கு!
இழைத்ததார் அவட்குத் தீங்கு!
இக்கணம் அறிவேன் நானே!

*(வாயிற் காவலன் உடன் சென்று....*

*கண்ணகியை அழைத்து வருகிறான்!)*

*கண்ணகியை எதிர்கொண்ட மன்னன்....*

**நீர்வாரும் கண்ணோடு**
**நிற்கின்ற பெண்ணே!**
**நீயாரோ நீயாரோ,**
**நீ யாரோ, கூறு!**
**தீராத துயர் கொண்டு**
**துடிக்கின்ற தேனோ?**
**தயங்காது நீ கூறு!**
**என் தீர்ப்பைப் பாரு!**

*கண்ணகி.... தன் துயரக் கதையை....*
*மன்னனிடம் கூறுகிறாள்!*

**தேர்ந்தறியாத**
**சிறுமைகொள் வேந்தே!**
**நேர்ந்ததைச் சொல்வேன்**
**நிகழ்ந்தது கேட்பாய்!**

**மென்புறாத்துயர்**
**போக்கிய மன்னன்**
**செங்கோ லோச்சிய**
**சோழ நன்னாடு!**

**அன்பினாற் பசு....**
**அடித்த மணியதன்**
**துன்ப நாவிசை**
**கேட்டுத் துடித்துத் தன்**
**மைந்தன் ஆருயிர்**
**தேரின் சில்லிடைக்**
**கொன்று போக்கிய**
**கோவின் பொன்னாடு!**

**இந்த மாபுகழ்ச்**
**சோழ நாட்டிற்செல்**
**வந்தர் மரபிலே**
**வந்த வாணிகன்**



**நொந்து போனதால்**
**என் சிலம்பினை.....**
**இந்த மதுரையில்**
**விற்க வந்தனன்!**

**அந்தப் பாழ்விதி**
**வகுத்த கொடுமையால்**
**உந்தன் மாபழிக்**
**குரியனாகினான்!**
**அன்பன் கோவலன்**
**அவனின் மனைவியான்!**
**வெந்து போயினன்....**
**என்பேர் கண்ணகி!**

*(என்று தெரிவித்துக் குமுறியழுகிறாள்!)*

*உடனே... மன்னன்... பதிலாக...*

**கள்வனைக் கொல்வது....**
**நல்லதோர் தீர்ப்பே!**
**தொல்முறை யரசினிற்**
**சான்றோர் தீர்ப்பே!**

*இது கேட்ட கண்ணகி....*
*ஆத்திர முற்றவளாக....*

**நல்ல முறையிலே**
**நடந்திடா மன்னனே!**
**நான் கொண்ட சிலம்பிலே**
**மாணிக்கப் பரல்களே!**

*மன்னன் :*

**மென்மை மொழியுடை.....**
**மாதே! அரண்மனைத்**
**தொன்மை சிலம்பிலே**
**முத்துப் பரல்களே!**

*பின்னணியிற் பாடல் :*

**கோவலனிடம் கவர்ந்த**
**சிலம்பினைக் கொணர்க என்று**
**காவலன் பணிக்க.... மன்னன்....**
**காவலர் கொணர்ந் தாரங்கே!**

**எடுத்தனள் சிலம்பைக் கையில்!**
**எறிந்தனள் தரையில் வீசி!**
**தெறித்தன மாணிக்கத்தின்**
**தேசுடைக் கற்கள்! பாய்ந்து**
**சிரித்தது ஒரு கல் மன்னன்**
**செவ்விதழ் அருகே சென்று!**
**துடித்தனன்.... துவண்டான்! சோகச்**
**சுரியிலே புதைந்தா னன்றோ!**

*மன்னன் : (வேதனையின் விளிம்பில் -- நீதி தவறிவிட்டதை யுணர்ந்தவனாக)*

**கள்வனும் நானே! தாழ்ந்து....**
**தளர்ந்த செங்கோலன் நானே!**
**கொல்லன் சொற் கேட்டு நீதி**
**கொன்றவன் நானே! நாட்டின்**
**தொல்புகழ் புதைத்தோன் நானே!**
**தூற்றினைப் படைத்தேன் நானே!**
**இல்லையோர் மன்னிப் பிங்கே!**
**எனக்கினி மரணந் தானே!**

*(என்று கதறித் துடித்து வீழ்ந்திறக்கிறான்!*
*கோப்பெருந் தேவியும் நடுநடுங்கி.....*
*உடன் மரண மெய்துகிறாள்).*
*கண்ணகி.... தனது ஒற்றைச் சிலம்புடன்....*
*ஊழிச் சினத்துடன் ஆடுகிறாள்!*
*மிகவும், ஆவேசம் நிறைந்த*
*மெய்ப்பாடுகள் முத்திரைகள்*
*அபிநயங்களுடன் இந்த*



*நடனம் அமைக்கப்*
*படுதல் வேண்டும்!*
*தோல்வாத்திய இசையும்*
*துரிததாள நடைகளும்*
*கூத்துச் சந்தங்களும்*
*பயன்படுத்தப்படுதல் நல்லது!*

*சிலப்பதிகாரத்து..... வெண்பாக்கள்!*

*பின்னணியில் :*

**அல்லவை செய்தார்க்கு அறங்கூற்றம் ஆம் என்னும்**
**பல்லவையோர் சொல்லும் பழுதன்றோ.... பொல்லா**
**வடுவினையே செய்த வயவேந்தன் தேவி.**
**கடுவினையேன் செய்வதூஉம் காண்!**
**காவி உகு நீரும், கையில் தனிச் சிலம்பும்**
**ஆவி குடி போன அவ்வடிவும் பாவியேன்**
**காடெல்லாம் சூழ்ந்த கருங்குழலும் கண்டஞ்சிக்**
**கூடலான் கூடாயி னான்!**
**மெய்யிற் பொடியும், விரித்த கருங்குழலும்**
**கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் வையைக்கோன்**
**கண்டளவே தோன்றான் அக்காரிகைதன் சொற்செவியில்**
**உண்டளவே தோற்றான் உயிர்!**

*(தோல் வாத்திய இசைகளுடன்)*
*கண்ணகியின் ஊழித் தாண்டவத்தின் போது*
*அவள் தன் ஒரு முலையைத் திருகியெறிய....*
*மதுரை தீக்கிரையாகின்றது!*
*தீயின் மத்தியில் நின்று கண்ணகியின் நடனம்*

*இப்போது அரங்கின் பக்கவாட்டில் ஒளிப் பொட்டுக்களில் சாத்தன் கதை கூற... இளங்கோ ஏடுகளில் எழுத்தாணியால் ஏட்டிற் பதிக்கிறார்.*

**அரங்க விளக்கு அணைகிறது.**

*பின்னணியில்*
*அரங்க..... நிறைவுப் பாடல்!*

அறம் பிழைத்தார்க் கறம் கூற்றாகுமென்று
வரம் பமைத்த வரலாற்றில் வந்தோ மன்றோ!
அறம் தழைத்தால் வையத்தில் அன்பு வாழும்
அரசுகளும் நீதிவழி செங்கோலாற்றும்!
வரம்புடைந்தால் பொருள் நம்மைவிட்டு நீங்கும்
வாழ்வில் இருள் சூழ்ந் தெம்மை வறுமை வாட்டும்!
கரம் பிடித்தாள் காதலிக்குக் கொடுமை செய்யும்
கயமைக்கும் நாம் தீர்ப்பு விதித் தோமன்றோ!

நன்றி!

வணக்கம்!

வாழ்க தமிழ் மொழி!

வாழ்க தமிழர் விழுமியங்கள்!

# 3. சத்திய ஆரம்!






# 3. சத்திய ஆரம்!

அன்னை பராசக்தியின் திருவருளும் அந்த விநாயகப் பெருமானின் ஆசியும் எம்மை வழி நடத்துவதாக!

இந்த நாட்டிய நாடகத்தின் கருப்பொருள் சத்தியவேந்தன் அரிச்சந்திரனது பெருவாழ்வாகும்!

சத்தியம், கொலை என்ற... இரு பெருந் தருமங்களுக்கிடையில் எழுந்த பெரும் புயலே, அரிச்சந்திரனின் வாழ்வைப், பெருங்காவிய நிலைக்கு உயர்த்திய தெனலாம்!

சத்தியம் என்பது பல நிலைகளில், பலபொருளைக் குறிக்கும்! உண்மை, வாய்மை, மறுமை (நித்தியம்), இறைமை என்ற தன்மைகளைச் சத்தியம் தன்னுள் அடக்கும்!

உள்ளத்தின் தூய்மை, உண்மையெனில், வாக்கின் தூய்மை, வாய்மை எனலாம்!

வாக்கு என்ற வார்த்தையையே மதிக்காத ஒரு கொடிய உலகில் நாம் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இக்கணம் சொன்னதை மறுகணம் மறுத்து விடும் மானிட உலகம் இது!

என்ன சொன்னேன்! எப்போது சொன்னேன்? என்று, தாம் சொன்னதை மறுத்து விடும் தகைமை இன்று தழைத்தோங்கி வருகிறது!

வாக்கு மாறாட்டமே, இன்றைய விஞ்ஞான வாழ்வின் அடித்தளமாகிவிடுகிறது. எதையும், எழுத்திற்போடு என்று கூறும் உலகம் இது! கையெழுத்தின், தலையெழுத்தையே மாற்றியுள்ளது கணனியெழுத்து!

இந்தவொரு காலகட்டத்திலும், அரிச்சந்திரனுடைய வாழ்வு, கீழைத்தேயப் பண்பாட்டிலும், கலைவாழ்விலும் போற்றப்பட்டு வருவது, நெஞ்சுக்கு இதம் தரும் ஒரு செய்தியாகும்!

இனிக் கொலைக்கு வருவோம்!

கொலையும் ஒரு தருமம் என்று நமது முன்னோர் நம்பியிருக்கின்றார்!

அரசன், மக்களின் நலனுக்காகத் தண்டனை வழங்கும்போது கொலைத் தண்டனை, அவனது ஆட்சிக்குரிய ஒரு தருமம் ஆகிறது.

மக்களைத் துன்புறுத்தும் மிருகங்களையும் மன்னர்கள் வேட்டையாடியுள்ளனர்! இங்கும் கொலை ஒரு தருமமாகிறது!

அந்நியப் படையெடுப்புக்களுக்கு எதிராகப் போராடும் பொழுதும், கொலை ஒரு தருமமாகியிருக்கிறது!

அரிச்சந்திரன், கொலை ஒரு தருமம், அதுவும் வேட்டையாடுவதே தனது தொழிலாகவும், வாழ்வாகவும் கொண்ட ஒரு வேடுவனின் நிலையில், அது ஒரு வாழ்க்கைத் தருமம் என்ற நம்பிக்கையுடன், வாய்மையா? கொலையா? என்ற அடிப்படையில் ஏற்பட்ட ஒரு வழக்கில் தீர்ப்பொன்றினை வழங்கி விடுகின்றான்!

இதன் தளத்தில் மகாபாரத பாரம்பரியமாகக் கூறப்பட்டும் எழுதப்பட்டும், நடிக்கப்பட்டும் பாடப்பட்டும் வந்த கதையே, அரிச்சந்திர காவியமாகும்!

இக்கதையின் இறுதியில் அரிச்சந்திரன், வாளை ஓங்கி, மனைவியை வெட்டும்போது, சத்தியம், மாலையாகச் சந்திரமதியின் கழுத்தில் வீழ்கிறது!

இதன் காரணமாக இந்நாட்டிய நாடகத்திற்குச் சத்திய ஆரம் என்ற பெயரை வழங்கியுள்ளேன்!

இதைவிட, சத்தியம் என்ற காவியத்தை மாலையாக்கி இறைவனுக்கும், மக்களுக்கும் தருகிறேன், என்றும் பொருள் கொண்டு இதனைப் படைத்துள்ளேன்!

இந்த முகவுரையை நிறைவு செய்யுமுன், ஒரு சிறு கருத்து:

அரிச்சந்திர காவியம், நமது தாய் நாட்டில், கூத்து, மேடை



நாடகங்களாகப் படைக்கப் பெற்று வந்துள்ளது! மக்களை மெய்சிலிர்க்க வைத்துள்ளது! உயிர் கூச்சிட வைத்துள்ளது!

குறிப்பாக எமது மண்ணின் கலைவேந்தர், நடிக மணி, வைரமுத்து அவர்களின் ஒப்பற்ற நடிப்பில் உயிரொன்றியவர்கள் பலர் உளர்!

நானும் அவர்களுள் ஒருவன்!

அந்தக் கலைமேதையின் மயான காண்டத்தைத் தரிசித்தவர்களைத் திருப்திப்படுத்த, இன்னொரு மயான காண்டத்தைப் படைத்தல் முடியாது என்பதை நான் பூரணமாக உணர்கிறேன்!

இத்துடன் தமிழகத்தின் மைந்தர், தமிழுலக நடிகர் இமயம், நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அவர்களும், அரிச்சந்திரனாகப் பாத்திரமேற்று நடித்துத் திரையுலகில், இக்காவியத்தை நிலைநிறுத்தியுள்ளார்!

எனவே, நாட்டிய நாடகமாக, இப்படைப்பினைத் தருவது சுலபமான ஒரு காரியமாக எனக்கு படவில்லை!

அதுவும் நாட்டிய உலகில், நடிப்பும், நாடகத்தன்மையும் கலப்பது, சாத்திரீயத்திற்கு ஒவ்வாத செயலெனக் கூறுவோரையும் நான் சந்தித்துள்ளேன்!

பாவம் கைவழி நயனம் செல்லும் பொருளாதல் மரபென எண்ணும் நாட்டிய ஆசிரிய, ஆசிரியைகள், நடிப்பும், நாடகமுமே மரபாகக் கொண்ட அரிச்சந்திர காவியத்தை எப்படிச் சீரமைப்பார்களோ, என எனக்குத் தெரியவில்லை!

மூத்த சகோதரியார், இசைக் கலைஞர் அம்பிகாவின் அன்புக்கும், சகோதரி, கிரிஜாவரோதய சிங்கம் அவர்களின் அன்பாணைக்கும் சத்திய ஆரத்தின் வலிமைக்கும், எல்லாவற்றுக்கும் மேலாக, தெய்வத்தின் வழிகாட்டலுக்கும் பணிந்து, இப்படைப்பினைத் தருகிறேன்!

அன்புடன்,

புலவர்.

குறிப்பு – தமிழ் நாடக அரங்க மரபில் நாடக ஆரம்பத்திற்கு முன்னர் அரங்கின் பின்னிலிருந்து இறைவணக்கப் பாடல் எழுவது வழக்கம்

திரைக்குப் பின்னால் :

இறைவணக்கப் பாடல் :

**ஓம்! ஓம்! ஓம்! (மந்திரஸ்தாயியில் 3 தடவைகள்)**

விநாயகர் வணக்கம் :

**ஓங்கார விநாயகன்**
**உயர்வான திருப்பாதம்**
**ஆங்காரம் யாவும் அகற்றும்!**
**பாங்கான பெருந்தமிழ்ப்**
**பயனாகி எம் நெஞ்சில்**
**ரீங்காரம் செய்தெம்மை அணைக்கும்!**

பராசக்தி வணக்கம் :

**அன்னை பரா சக்தி. அவள்**
**ஆட்சியில் யாவும் அடக்கம்!**
**என்னுள் இருப்பவள் அவளே. வழி**
**காட்டுகிறாள்; எது தடுக்கும்?**

சாயி துதி :

**சத்திய ஆரம் செய்தே இறை**
**சந்நிதியில் பாரம் வைத்தோம்!**
**பக்தியின் ஈரம் பெய்தே சாயி**
**பொன் நிழலில் நேரம் வைத்தோம்!**
**ஓம்! ஓம்! ஓம்!**



## காட்சி 1

ஒரு சில கணங்கள் அமைதியைத் தொடர்ந்து.....
திரை விலகுகிறது!
அரங்கில்.....
வனவிலங்குகள் உலவும் காட்டுப்பகுதி,
காட்சியமைக்கப் பெறுகிறது!
அரங்கின் பக்கலில் இருந்து.....
அழகிய மானொன்று.... ஓடி வருகிறது!
புள்ளி மானின் ஆட்டம்!
தாள வாத்திய இசையில்....
இந்த ஆட்டம் நெறிப்படுத்தப்படுதல் வேண்டும்!
புல்லாங்குழல்......, வயலின், மிருதங்கம், தபேலா போன்ற
வாத்தியங்கள் இசைக்கப்படல் வேண்டும்!
புள்ளிமான், அரங்கின் ஒரு பக்கம் செல்ல....,
ஒன்று அல்லது இரண்டு நிமிடங்களைத் தொடர்ந்து...
ஜதிகளின் வழி, வேட்டுவன் அரங்கினுள் நுழைகிறான்
வேட்டிடையாட.....
விலங்குகளைத் தேடி..... அவன், வில்லினில்,
அம்பேற்றிய நிலையில் அரங்கில் ஆடுகிறான்!
(கூத்து மெட்டுகள், தாளங்கள், வாத்திய இசை மூலம்,
பயன்படுத்தப் படுதல் வேண்டும்!
பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில்
வேட்டுவனின் ஆட்டம் அமைக்கப்படுதல் வேண்டும்!)
வேட்டுவன் வேட்டையாடிக் களைத்திருக்கும் வேளை......
அழகிய மான், அரங்கில் வருகிறது!
வயலின் இசையில் இக்காட்சி வழி நடத்தப்படுதல் வேண்டும்
மானைக் கண்ட வேடன்,
கண்கள் அகல விரிய

நாக்கில் ஆசையால் நீரூற.....

வயிற்றைத் தடவியபடி.....

மெள்ள.... எழுந்து.....

வில்லின்..... நாணை.... இழுத்து சரிபார்த்துவிட்டு,

அம்பைத் தொடுத்தபடி,

மானுக்குக் குறி வைக்கிறான்!

தோல் வாத்தியங்கள் இசைக்கப்படுதல் வேண்டும்!

மானோ, வேடன் தன்னை நோக்கிக் குறிபார்த்ததை உணர்ந்த நிலையில், அரங்கிலிருந்து, துள்ளி ஓடி மறைந்து விடுகிறது!

வேடன் மானைத் துரத்தியபடி, பின்னால் ஓட......

அரங்க விளக்கு அணைகிறது.

## காட்சி 2

அரங்க விளக்கு ஒளிர்கிறது!

அரங்கில்....

முனிவர் தியானத்தில் இருக்கிறார்!

ஓம் என்ற பிரணவம்,

மந்திரஸ் தாயியில் ஒலிக்கப் படுகிறது!

இப்போது, திடீரென.....

வாத்திய இசைகள் ஒலிக்க.....,

அரங்கிற் புள்ளி மான், ஓடி வருகிறது!

வேடனின் அம்பிலிருந்து,

உயிருக்குத் தப்பி ஓடி வருகிறது, அந்த

அழகிய புள்ளிமான்!

நிட்டையில் இருந்த முனிவர்

விழித்து, மானைப் பார்க்கிறார்!

மான், அச்சத்துடன், ஓடி

முனிவருக்குப் பக்கத்தேயிருந்த புதரினுள் ஒளிக்கிறது!

முனிவர், மானையும், புதரையும் பார்த்துவிட்டு,



மீண்டும் நிட்டையில் ஆழ்கிறார்!

இப்போது முனிவரின் முன்னே,

வேடன் ஓடி வருகிறான்!

ஓடி வந்தவன் அங்குமிங்கும் ஓடி மானைத்

தேடுகிறான்!

முடிவில், முனிவரைத் தட்டி, அவரது நிட்டையைக்

குழப்பிச் சைகையால்,

**இந்தப் பக்கத்தில் ஓடி வந்த,**
**மானைக் கண்டீரா?**

எனக் கேட்கிறான்!

(முத்திரைகள் மூலம் கருத்தை வெளியிடல்)

முனிவர்,

**அதோ! அந்த வழியால் ஓடுகிறது!**

என ஒரு வழியைக் காட்டி விட்டு, மீண்டும் நிட்டையில் ஆழ்கிறார்.

வேடன், முனிவர் மீது சந்தேகப்பட்டு, முனிவரைத் தட்டி, மீண்டும், எழுப்புகிறான்!

வேடன் :

**காலையிலிருந்து**
**பசியினால் அலைந்தேன்!**
**கண்கெட்ட முனிவனே கேளாய்!**

**தோளெல்லாம் எரிய**
**தீனியைத் தேடித்.....**
**தொடர்ந்திந்த வனத்திலே அலைந்தேன்!**

**கண்முன்னே வந்த**
**கலைமானைக் கொன்று**
**கடும்பசி தீர்த்திடத் துடித்தேன்!**
**புண்ணியம் கிடைக்கும்!**

**உண்மையைக் கூறும்!**
**புசித்து நான் மகிழுவேன் முனிவா!**

*முனிவர், வேடனை உற்றுப் பார்த்து விட்டுக், கண்களை மூடி, மீண்டும் தியானத்தில் ஆழ்கிறார்.*

*வேடன்; மீண்டும் முனிவரை எழுப்புகிறான்.*

*வேடன் :*

**பசியாய்க் கிடப்பதே உனது தொழில்!**
**பாவம் நான் வேடனப்பா!**
**புசியா திருப்பது எனக் கடுக்காது!**
**புள்ளிமான் தேடல் தப்பா?**
*(வேடன் கெஞ்சுகிறான்)*

*முனிவர் : (சற்றுச் சினத்துடன்)*

**வம்புக்கு ஏனையா வாறீர்? உம்**
**அம்புக்குத் தப்பிய மானோ நான் பாரீர்!**
**நம்பிப் போய் அப்பக்கம் பாரீர்! அந்த**
**நதியண்டை தேடினால் கிடைக்கலாம் பாரீர்!**
*என்று கூறிவிட்டு...*
*(மீண்டும், தியானத்தில் அமர்கிறார்)*
*(வேடனுக்கு ஆத்திரமும், கோபமும் எழுகிறது)*

*வேடன் : (தனக்குள்)*

**எட்டி ரெண்டு குடுக்கவா?**
**ஏறி நிண்டு உழக்கவா?**
**கெட்ட வேலை செய்யும் இந்த**
**முனிவனை நான் சபிக்கவா?**
*(மீண்டும் போய், முனிவரை எழுப்பி..... ஆத்திரத்துடன்,)*

*வேடன் :*

**பொய்யுரைத்தல் தகுமோ? நீ**
**பூண்டிருத்தல் தவமோ?**
**என்னிரைக்குப் பிறந்தமானை**
**எங்கொளித்து வைத்தாய்?**



*(முனிவரின் கையைப் பிடித்து இழுத்து எழுப்புகிறான், வேடன்)*

*முனிவர் : (சற்றுச் சினம் அதிகரிக்க)*
*(இருக்கையிலிருந்தெழுந்தவராக)*

**சொல்லச் சொல்லக் கேட்காமற்**
**சுரண்டுகின்ற மனிதா?**
**வில்லங்கமாய் எனையிழுத்து**
**வெருட்டுவதும் அழகா?**

*வேடன் :*

**அந்தமான் சென்ற இடம்**
**நீ அறிவாய்; அறிவேன்!**
**அறிந்திருந்தும் ஏய்த்திடுதல்**
**அறமென்றோ நீ நினைத்தாய்!**
**சொந்தமாக வந்தமானைச்**
**சுவைத்திட நான் துடித்தேன்!**
**பந்தபாசம் உனக்குமுண்டோ?**
**படுபொய்யேன் நீ உரைத்தாய்?**

*முனிவர் : (சற்று விரக்தியுடன்)*
*(அலட்சியத் தொனியில்)*

**நாட்டுக்குள் தான் மனிதனிருந்து**
**நல்லதை யெல்லாம் கெடுப்பான்!**
**காட்டுக்குள்ளும் துரத்தி வந்து**
**கரைச்சல் நமக்கேன் கொடுப்பான்?**

*(வேடனுக்கு ஆத்திரம் மேலிட.....)*

*வேடன் :*

**வாய்மையின் காவலன் ஆளும் நீதி**
**வளம் நிறை அயோத்தியின் வனமிது காண்பாய்.**

**ஏழ்மைகொள் வேடனை ஏய்க்கும் உனை**
**இழுத்து நான் சென்றவன் அவையிலே நிற்பேன்?**
*(என்று முனிவரின் கையைப் பிடித்து, இழுத்து,*
*அயோத்தியின் மன்னன்,*
*அரிச்சந்திரன்*
*அரண்மனை நோக்கிச் செல்கிறான் வேடன்)*

அரங்க விளக்கு அணைகிறது.

## காட்சி 2 இன் இறுதியில்..

*அரங்க விளக்கு அணைய....*
*அரங்கின் பின்னணியில்*

*பாடல் :*

**அயோத்தியாம் பெருநிலத்தின்**
**அடர்ந்ததோர் காட்டில் அன்று**
**பயத்துடன் ஒளிந்தமானைப்**
**பார்த்தும் பின் காணேன் என்று**
**தவத்திலே யிருந்தோன் சொல்லத்**
**தவறு; நீ பொய்யுரைத்தல்.....**
**உயர்த்தியோ? என்ற வேடன்**
**உண்மையோன் வாயில் சென்றான்!**

## காட்சி 3

*அவைக் கூற்றர் பாடல்*
*(அரங்கின் முன் பகுதியில் அவைக்கூற்றரின் ஆட்டம்)*
*அரங்கின் பின்பகுதியில்,,, ஒளிகசி திரையில்*
*அரிச்சந்திரனின் அரண்மனைக் காட்சி*

*அவைக் கூற்றர் : 1*

**சூரிய குலத்தவரின்**
**சுடரெனவே அரிச்சந்திரன்**
**பாரதத்தின் பெருவிளக்காய் ஒளி கொடுத்தான்!**



*அவைக் கூற்றர் : 2*

**ஓர் முனிவன் வசிட்டனவன்**
**ஒப்பற்ற குருவாகி**
**உயர்வழியில் அரசியலை ஓதி நின்றான்!**

*அவைக் கூற்றர் : 3*

**காரிகையாள் சந்திரமதி**
**கருத்திணைந்த காதலினால்**
**நேரியதோர் இல்லத்தின் நிழல் கொடுத்தாள்!**

*அவைக் கூற்றர் : 4*

**பூரண நல்லறிவோடு**
**பொருள் பொதிந்த சொல்லோடு**
**போர்த்திறன் கொள் பேரமைச்சன் பலங்கொடுத்தான்**

*அவைக் கூற்றர் : 5*

**சத்தியமே செங்கோலாய்ச்**
**சான்றோரின் ஆசியுடன்**
**மக்கள் நலங் காத்திருந்த மன்னனவன்**
**இத்தரணி போற்றி நின்ற**
**எழில் நகராம் அயோத்தியிலே**
**ஏந்து புகழ் அரியணையில் வீற்றிருந்தான்!**

*அவைக் கூற்றர் : 6*

**பத்தினியாம் பதிவிரதை**
**பண்புடையாள் துணையுடனே**
**பெற்ற மகனோடு அவன் மாட்சி கொண்டான்!**

*அவைக் கூற்றர் : 1*

**இத்தகைய காலத்தில்**
**எழுந்த ஒரு புயலாலே**
**சத்தியத்தின் சோதனை யொன் றெழுந்தம்மா!**
**பத்தினியை விற்றான் தன்**
**பாலனையும் விற்றான் பின்**
**சுட்டெரிக்கும் சுடலையையும் காத்து நின்றான்.**

*அவைக் கூற்றர் : 2*

**வனத்தில் நடந்ததோர் நிகழ்வினால் வானவர்**
**சினத்திற்கு ஆளாகினான்!**
**நாட்டினை ஆண்டவன் நடுச்சாமம் பிணஞ் சுடும்**
**காட்டிலே கோலேந்தினான்!**

*அவைக் கூற்றர் : 3*

**பெற்ற தன் பிள்ளையின் பிணத்தோடு நின்றதன்**
**பிரியையைத் திட்டி எய்தான்!**
**பொற்றாலி விற்றுந்தன் பிள்ளைக்குச் சுடுகூலி**
**தருவை நீ என்று வைதான்!**

*அவைக் கூற்றர் : 1*

**சொற்காக்கச் சுகங்களைத் துறவிக்குத்தந்து ஓர்**
**முக்காலப் பிறவி கொண்டான்!**

*அவைக் கூற்றர் : 2*

**தற்காத்துத் தற்கொண்டான் சொற்காத்துக் கணவனின்**
**பற்றோடு மனைவி நின்றாள்!**

*அவைக் கூற்றர் : 3*

**வாக்கு மாறிவிடும் உலகிலே இவன்**
**வாழ்க்கை காவியம் ஆனதே!**
**யார்க்கு மில்லாத மாபுகழ் இவன்**
**நாக்கின் தூய்மையாற் பூத்ததே!**

அரங்க விளக்கு அணைகிறது.

## காட்சி 4

அரிச்சந்திரனவை :

வசிட்டர், அரிச்சந்திரன், சந்திரமதி, லோகிதாசன், அமைச்சன் சத்தியகீர்த்தி, சான்றோரும், ஆன்றோரும் அவையில் அமர்ந்திருக்கின்றனர்!

லோகிதாசனின் பிறந்த நாள் கொண்டாடப்படுகிறது!

மங்கையர், லோகிதாசனைச் சுற்றி நின்று

பாடி ஆடுகின்றனர்;



பாடல் : (நடனமங்கையரின் ஆட்டம்)

**மன்னன் பெற்ற மகனே : எம்**
**மக்கள் போற்றும் மணியே!**
**பல்லாண்டு காலம் வாழ**
**வாழ்த்துகின்றோம் உனையே!**

**செங்கதிரோன் வம்சத்திலே**
**சத்தியத்தைக் காக்கும் வேந்தன்**
**எங்களரிச் சந்திரனின்**
**இளங் குருதி யானவனே!**

**சூரியனே வாழ்க நாட்டின்**
**சோதியென வாழ்க!**
**வாரித் தரும் வள்ளலென**
**வாய்மையுடன் வாழ்க!**

இப்போது திடீரென, வாயில் மணிச்சத்தம் ஒலிக்கிறது!!

என்றுமல்லாது அரண்மனை வாயில் மணி ஓசை கேட்டதும், எல்லோரும் திடுக்கிடுகின்றனர்!

ஆடலும் பாடலும் சட்டென்று நிற்கிறது!

அரிச்சந்திரன் வியப்பு மேலிட, முதலமைச்சன் சத்திய கீர்த்தியை நோக்குகிறான்!

சத்தியகீர்த்தி :

**மணியோசை ஆர்த்ததன்**
**மர்மமென்ன?**
**துணிவோடு வந்தவர்**
**துயரமென்ன?**
**அரண் வாயில் காக்கும்**
**எம்வீரர் அவரை**
**வரவேற்று வரட்டும்**
**நிலை தேருவோம்!**

இப்போது வேடன், முனிவரைக் கையில் பிடித்து நடந்தபடி, அரசவைக்கு வருகின்றான்!

வந்து மன்னனை வணங்கி நிற்கிறான்!

முனிவரும் அரிச்சந்திரனை வாழ்த்தி நிற்கிறார்!

*அரிச்சந்திரன் : (இருவரையும் மாறி மாறிப் பார்த்தபடி)*

**அரண்மனை வாயில்**
**அடைந்ததன் காரணம்**
**அறிந்திடத் துடிக்கின்றேன்!**
**அரண்மனை வாயில்**
**அடைந்ததன் காரணம்**
**அறிந்திடத் துடிக்கின்றேன்!**
**துயருமக் கேது?**
**நடந்தது யாது?**
**தீர்த்திடுவேன் நான், கூறுங்கள்!**
**துயருமக் கேது?**
**நடந்தது யாது?**
**தீர்த்திடுவேன் நான், கூறுங்கள்!**

*வேடன் :*

**வாய்மையே உயிராய் வாழும்**
**வள்ளலே எங்கள் கோவே!**
**தாயென எம்மைக் காக்கும்**
**சூரிய வம்சப் பேறே!**
**நீயிதைக் கேளாய் நீதி**
**நிலைத்திடச் செய்வாய் இந்த**
**வாயினில் வந்த பொய்யால்**
**வாடியே நொந்தேன் மன்னா!**

*(வேடன் முனிவரைக் கோபத்துடன் பார்த்து நிற்கிறான்)*

*அரிச்சந்திரன் :*

*(அதிர்ச்சியும், வியப்பும் வேடிக்கையும் கலந்த தொனியில்)*



**வானமும் பொய்க்கா திங்கு**
**வாழ்பவர் பொய்யே கூறார்!**
**தானமும் பொய்த்த தில்லை**
**தர்மமும் பொய்த்த தில்லை!**
**ஆனதோர் அயோத்தி மண்ணில்**
**அறமதே பண்பாய்க் கொண்ட**
**வானவர் பெருமை யொத்த**
**மாமுனி பொய்த்தா ராமோ?**

*முனிவர் : (அமைதியாக)*

**நான்மொழி பொய்த்தே னில்லை!**
**நடந்ததைச் சொல்வேன் மன்னா!**
**மான் வழி கேட்ட இந்த**
**மனிதர்க்குப் பதிலு ரைத்தேன்!**
**நான் பழி செய்தே னென்று**
**நாவினால் வைதே யென்னை**
**கோன்வதி கோயில் நாடிக்**
**கூட்டியே வந்தா ரையா!**

*வேடன் :*

**சொல்வது அனைத்தும் பொய்யே!**
**சுரைக் காயைச் சோற்றில் வைத்துக்**
**கள்ளமாய்ப் புதைக்கும் இந்தக்**
**கபடியை நம்பாய் மன்னா!**
**துள்ளியே வந்த மானைத்**
**துரத்தியே பின்னால் வந்தேன்!**
**மெள்ளவே அதனைப் பொத்தி**
**மறைத்தபின் பொய்யைச் சொன்னார்!**

*முனிவர் :*

**ஊன் பாவம் செய்திட எண்ணி ஓர்**
**உயிரினைப் போக்கிட ஓடியே வந்தார்!**
**மான்போன திசையினை உரைத்தேன். அது**
**மாபாவம் என்கிறார் மதியிலா தவராய்!**

*வேடன் :*

**மான் போன திசையென்று காட்டி எனை**
**மடையனாய் ஆக்கினார் மாபாவிமுனிவர்**
**வீண்போன தென்னிரை மன்னா! பசி**
**வெந்தீயாய் வாட்டியே கொன்றது என்னை**

*அரிச்சந்திரன் :*

விருத்தம்
**மான்மீது கொண்ட இரக்கத்தினாலே**
**மாமுனி பொய்யுரைத் தீரோ?**
**மண்மீது வேடர் தர்மத்தைத்தானே**
**பாவமிவ் வேடன் இயற்றி நின்றானே**

*முனிவர் :*

**உயிர் காக்கப் பொய்யுரைத் திடுதல்**
**ஒவ்வாது என்பதோ உலகத்தின் தீர்ப்பு**
**பயிர் காக்கத் தேரினை தந்தோர் உனைப்**
**பழிப்பார்கள்; வேடனாற் தாழ்ந்தனை அந்தோ**

*அரிச்சந்திரன் :*

**நீதியின் முன்னே நீரும் இவ்வேடனும்**
**நிகரெனக் கொள்வ தென் கடமை!**
**வேதமும் அறிவும் ஞானமும் தெளிந்தோர்**
**வாழ்வுக்கு வாய்மையே உடைமை!**
**ஆதியிலிருந்து அடர்வனத்திடையே**
**ஆடுதல் வேட்டுவர் உரிமை!**
**ஆதலால் அவன் முன் வாய்மையைத் துறத்தல்**
**அழகோ? உமக்கது சிறுமை!**

*அரங்க விளக்கு அணைந்து.... மீண்டும்....*

*எரியும் போது ..... அரங்கில்...*

*முனிவர் தியானத்தில் இருக்கிறார்!*

(ஓம் எனும் பிரணவம் மீண்டும் ஒலிக்கிறது)

வேட்டுவன் கையில் வில்லேந்தி, நாணில்



அம்பினை ஏற்றி ஆடுகிறான்!

வெற்றிக்களிப்பிற் தாண்டவம் ஆடுகிறான்

(தாள வாத்தியங்கள் ஒலிக்கின்றன)

அரங்க விளக்கு அணைகிறது

## காட்சி 5

வானவர் உலகம்

தேவேந்திரன் அவை :

வசிட்டர், விசுவாமித்திரர், துருவாசர் போன்றோர் வீற்றிருக்கின்றனர்;

*விசுவாமித்திரர் : (எழுந்து)*

**அமரரின் தலைவா எங்கள்**
**அரசனே வானோர் செல்வக்**
**குமரனே கோவே வாழி!**
**இந்திரன் அவையில் இன்று**
**எடுத்திடப் பொருளொன் றுண்டு!**

**மந்திரம் ஓதும் பண்பான்**
**மாமுனி யொரு வன் மண்ணில்**
**குந்தகம் ஏற்று அங்கே**
**குறுகினான் அயோத்தி மன்னன்**
**தந்திரம் செய்து வாய்மை**
**தான் உயர் தர்மம் என்றான்!**

*வசிட்டர் : (எழுந்து)*

**வாய்மையே வெல்லும் என்று**
**வழி வழியாக நம்பித்**
**தோய்ந்தவர் அயோத்தி நாட்டார்**
**தீய்க்கினும் பொய்யே சொல்லார்!**

ஈதிங்கு புதிதேயல்ல!
இழிவுறு பொருளு மல்ல!
வாதிடப் பொருளிதாமோ!
வணக்க மென்னன்பு மன்னா!

*விசுவாமித்திரர் :*

ஊனை வேண்டியோர்
மானைக் கொல்வது
உயர்ந்த தர்மமோ?
உரைக்கும் சாத்திரம்
எங்கிருக்குதாம்?
மயங்கும் மன்னன் ஈனன்!

*வசிட்டர் :*

கானகத்திலே வாழும் வேடர்க்கு
ஊனெடுத்தல் தர்மம்!
தேனெடுத்தலும் தோலுடுத்தலும்
தானவர்க்குத் தர்மம்!

*விசுவாமித்திரர் :*

மன்னுயிர் தனை ஓம்பும் பண்புளார்
மாதவத்தினுள்ளார்!
அன்ன செய்கையில் பொய்மையும் உயர்
வாய்மை யென்று கொள் வார்!

இன்னு யிர்தனைக் காக்கவே ஒரு
உண்மை சொல்ல அஞ்சித்
தன்னையோர் தவ ஞானியாக்கியே
துணிந்து பொய்யைச் சொன்னார்

*வசிட்டர் :*

மன்னுயிர் தமைக் காக்கும் நீதியால்
மன்னர் கொலைகள் செய்வர்!
அந்நியர் படை வென்றுமாந்தரைக்
காக்கப் போரிற் செல்வர்!



அன்ன தன்மையால் வேட்டுவர்குலத்
தர்மம் தானுணர்ந்தே
சொன்ன தீர்ப்பினாற் சூரியகுலச்
செம்மை காத்து நின்றான்!

*விசுவாமித்திரர் :*

வேடர் தர்மமோர் கொலையெனில்
வேதியர்க்குயிர் பேணலாம்
தேடி வந்தவன் நோக்கினைத்
தெரிந்து அம்முனி கூறினார்
வாதம் செய்கிறீர் வசிட்டரேஉம்
வாரி சானதால் மன்னவன்!

சூரியக்குலக் குருவெனும் திமிர்
கொண்டு பாதகம் செய்கிறீர்!

*வசிட்டர் :*

வீணிற் கோபமேன் கொள்கிறீர்!
விடயம் தப்பியேன் போகிறீர்!
மாண்புடை அரிச்சந்திரன் அவன்
வாய்மையின் அறம் போற்றுவான்!

*விசுவாமித்திரர் :*

வாய்மையிற் தவறே னென்று
வாய்வித்தை காட்டும் அந்த
நோய் கொண்ட மன்னன் நாவால்
நூறு பொய் சொல்ல வைப்பேன்
போய் அந்த உலகில் நிற்பேன்
புகழொடு பொருளும் வாழ்வும்
தேய்கின்ற நிலைகொடுத்தே
தோற்றுச் சொல் மறுக்கவைப்பேன்!

*வசிட்டர் :*

ஒரு பொய்நீர் சொல்ல வைத்தால்
உயர்ந்த தோர் ஞானங் கொண்ட

குருவல்ல நானே யென்று
உம்முன்னே ஒப்புக் கொள்வேன்
பருவங்கள் பொய்க்கலாம் எம்
பாடங்கள் பொய்க்கலாம் அவ்
அரிச்சந்திரன் வார்த்தைபொய்த்தால்
அறங்களே பொய்க்கு மன்றோ

*இந்திரன் : (இடைமறித்து)*

போதும் போதுமே வாதங்கள்!
பொறி பறக்குதே ஆறுங்கள்!
ஓதினீர் பெரு வேதங்கள்
பொறுமையோ டுரையாடுங்கள்!

*விசுவாமித்திரர் :*

சோதனை எழும் போதிலே தம்
சொல்லை மாற்றுவர் பாரிலே!
வேதனைக் கடல் வீழ்கையில் துயர்
வெந்து தம் நிலை தாழ்கையில்
ஏதிலட்சியம் கொள்கைகள்? என
எண்ணிப் பாதையை மாற்றுவர்!
ஈதுதான் உலகோர் குணம்!இதில்
உனது மன்னனும் அடங்குவான்!

*வசிட்டர் :*

போதி நீர் அவனுண்மையிற்
பொசுங்குவீர் இதுதிண்ணமாம்
சோதியாய் அவன் ஒளிருவான் அவன்
சொல்லைக் காத்துயிர் மிளிருவான்!

*விசுவாமித்திரர் :*

மீண்டும் உம்மை நான் காண்கையில்
ஈண்டு ரைத்ததை வாங்குவீர்
ஆண்ட மன்னனோர் ஆண்டியாய்
அலைந்து பொய்யனாய் ஆகுவான்
*முனிவர்கள் மாறி மாறி ஆடுகிறார்கள்!*

அரங்க விளக்கு அணைகிறது.



## *காட்சி 6*

*அரிச்சந்திரன் மாளிகை :*
*அரிச்சந்திரன் சந்திரமதி, லோகிதாசன்...*
*இவர்களுடன் சத்தியகீர்த்தி!*
*விசுவாமித்திரர், அரிச்சந்திரனைக்காண*
*வருகிறார்.*

*விசுவாமித்திரர் : (அரண்மனைக்குள் வந்துகொண்டே)*

மங்களம் எங்கும் தங்குக மன்னா!
மாண்புடன் வாழியவே!
உன்கரமேந்திய செங்கோலாட்சியில்
மக்களும் வாழியவே!

*அரிச்சந்திரன் : (மகிழ்ச்சியுடன்)*

முனிவர்கள் போற்றும்
முனிவா வருக!
தேவர்கள் தருவே!
தவமே வருக!
வருகையால் எமது
வதிவிடம் உயர்ந்தது!
வாழ்த்தினால் இந்த
அயோத்தியே மலர்ந்தது!
*(என்று வரவேற்று, வணங்குகிறான்)*

*விசுவாமித்திரர் :*

வருகைக்கோர் காரணம் உண்டு!
வள்ளல் உன் கருணையை வேண்டுவேன் இந்த
வருகைக்கோர் காரணம் உண்டு!

*அரிச்சந்திரன் :*

அருமையாய் எம்மை
அணுகிய முனிவ!
ஆதங்கம் வேண்டாம்
முழுமையாய் மொழிக!

*விசுவாமித்திரர் :*

பெருயாக மொன்றை
இயற்றிட விழைந்தேன்!
திருவேண்டியுன் போல்
அரசரை நினைந்தேன்
தருவை நீ யென்றும்
துணிவோடு வந்தேன்!
தயைவுடன் உதவி
செய்குவை மன்னா!

*அரிச்சந்திரன் :*

திரிசங்கு சொர்க்கம்
அருளிய பெருமைக்
குரிய நல் ரிஷியே!
பொருட் குவையனைத்தும்
தருவதென் கடமை!
தயக்கமே வேண்டாம்!
கருதிய படியே
உரைத்திடும் ஐய!

*விசுவாமித்திரர் :*

உயரிய யானை ஒன்றினில் ஏறி
ஒருபெருவீரன் ஒரு கல்லெறியின்
அது அடையுயரம் பொன் பொருள் குவிப்பின்
ஆயிரம் கோடி பொன்னது தேறும்!
இதுதர உலக அரசுகள் பலவும்
உதவிட வேண்டும்! இதுவென்விருப்பம்



*சத்தியகீர்த்தி :*

பொன்விளை அயோத்தி யெம் வீட்டில்
பொன்னதற் கென்ன குறையுண்டு ரிஷியே
அன்புடன் மன்னன் அனைத்தையும் தருவான்
ஆசிகள் அருள்வீர்! அதுவே வேண்டும்.

*விசுவாமித்திரர் :*

*(தமது வஞ்சகத் திட்டத்தை உள்ளே வைத்தபடி பெருமகிழ்ச்சியை வெளிக்காட்டி....)*

மகிழ்ந்தனன் மன்னா! மகிழ்ந்தனன்!
நெகிழ்ந்த தென் னுள்ளம் நின்சொற்கேட்டு!
மகிழ்ந்தனன் மன்னா! மகிழ்ந்தனன்!
நிதிதனை யுன்னிடம் விட்டு நான்செல்வேன்!
நேரம் வருகையில் அதையெடுத்திடுவேன்!
வருகிறேன் மன்னா வருகிறேன்!
வந்தனம் கூறி விடைபெறுகின்றேன்!

அரங்க விளக்கு அணைகிறது.

## *காட்சி 7*

*காட்சியின் ஆரம்பத்தில் :*

*விசுவாமித்திரர் தியானத்தில் இருக்கிறார்*
*தியானத்தில் இருந்து விழித்தெழுந்து....*
*யோசனையுடன் நடனமாடுகிறார்.*

*விசுவாமித்திரர் :*

வாக்கினைத் தந்தான் அரிச்சந்திரன்!
நாக்கினை யடக்கிடுவேன்!
தாக்கியே அழித்திட விலங்குகளை அவன்
நாட்டுக்குள் ஏவிடுவேன்!
போக்கினை மாற்றிப் புதுப்புதுத்தொல்லை
ஆக்கியே அவனை அசைத்திடுவேன்!

**வாக்கினை மாற்றிடும் வரை யவன் வழியில்**
**மூர்க்கமாய் மோதிடுவேன்!**

என்றவாறு தனது கமண்டலத்தையும், தனது தூக்குச் செம்பையும் கையில் எடுத்து நீர் தெளிக்கிறார்.

(ஒலி நாடாவிலிருந்து, மிருகங்களின் அலறலும், பிளிறலும், கத்தலும் கேட்கிறது, இதனை தொடர்ந்து மக்கள், அலறி ஓடும் ஓசையும் ஆரவாரமும் கேட்கிறது!)

## காட்சி 8

*ஓர் ஒளிப்பொட்டில்....*
*மன்னனும் மந்திரி சத்தியகீர்த்தியும்!*
*மறு ஒளிப்பொட்டில் மக்கள்*
*ஐவர் துன்பம் மேலிட..... அரசனை*
*நோக்கி வருகின்றனர்!*
*(ராக ஆலாபனையும் ஜதியும்)*

*மக்கள் :*

**மன்னா இது என்ன சோதனை?**
**மக்களை விலங்குகள் அழித்திடல் வேதனை!**
**பொன்னாய் விளைந்திடும் பூமியிலே கண்**
**முன்னால் விலங்குகள் மிதிப்பதுவோ?**
**பயங்கர உறுமல்கள் பாதிராத்திரியிலே**
**உறங்கிடும் மக்களை எழுப்பிடவும்**
**வயல்களில்..... மனைகளில் யானையும் சிங்கமும்**
**கரடியும் வந்து உலுப்பிடவும்**
**மன்னா இது என்ன சோதனை?**

*அரிச்சந்திரன் : (சத்தியகீர்த்தியைப் பார்த்து)*

**வேட்டைக்குப் புறப்படுவோம்!**
**வன விலங்குகள் தொல்லையை நிறுத்திடுவோம்**
**கூட்டமாய் நாட்டுக்குள்**
**நுழைந்திடும் கொடுமையைப்**
**பார்த்துக் கொண்டினியும்**
**இருப்பது மடமை!**



*சத்தியகீர்த்தி : (மக்களைப் பார்த்து)*

**வீட்டுக்குச் செல்லுங்கள்**
**வேதனை விடுங்கள்!**
**காட்டுக்குப் படையுடன்**
**வேட்டைக்குச் செல்வோம்!**

**அரங்க விளக்கு அணைகிறது.**

## காட்சி 9

மன்னனும் மந்திரியும் வேட்டையாடுதல்

வேட்டையாடிய களைப்புத்தீர அரிச்சந்திரனும் சத்திய கீர்த்தியும் தமது கூடாரத்தின் முன்னே அமர்ந்திருக்கின்றனர்.

இப்போது, அவர்கள் முன்னே, இரு தேவகன்னியர்கள் தோன்றி நடனமாடுகின்றனர்.

(ஜதிகளைத் தொடர்ந்து)

தேவகன்னியர்கள் :

**நல்ல நிலவெறிக்குது!**
**நட்சத்திரம் ஜொலிக்குது!**
**அள்ளித் தரலாமா கொஞ்சம் இன்பம்!**
**சொல்லியழலாமா நெஞ்சத் துன்பம்!**
**கல்லும் முள்ளும் குத்துகின்ற காட்டிலே**
**காளையரைக் கண்டு கண்கள் கூசுதே!**
**வல்ல விலங்கோட வேட்டையாடினீர்!**
**வாலையரின் அன்பு கூட வாருமே!**

என்று பாடியவாறு,

*அரிச்சந்திரனையும், சத்தியகீர்த்தியையும் சீண்டி, அவர்களை மயக்கப் பார்க்கிறார்கள்.*

*அரிச்சந்திரன் :*

**அன்புடைய மாதரே!**
**அழகான மங்கையரே!**
**புண்படுத்தப் பேசுவதாய் எண்ணாதீர்!**
**இன்ப மனையாள்கள் வீட்டில்**

**எமக்காக இருக்கிறார்!**
**உம்புகழை ஏற்றுக் கொள்ள**
**வேறுசிலர் இருக்கிறார்.**

*தேவகன்னியர்களில் ஒருத்தி :*

**நெஞ்சத்தைப் பறி கொடுத்தேன்!**
**நினைவெல்லாம் உமைப் பதித்தேன்!**
**கொஞ்சி விளையாடிக் குலவிட நான் சம்மதிப்பேன்,**
**வேட்டையாடிய வீரத்தில் நான்**
**தோற்று என்னைத் தந்தேன்**
**ஆற்றில் நீராடவா! பூங்**
**காற்றில் இளைப்பாறவா!**

*தேவகன்னியர்களில் மற்றவள் :*

*(சத்தியக்கீர்த்தியைப் பார்த்து)*
**போரில் விளையாடும் பொற்கரங்கள் என்னழகுத்**
**தோளில் விளையாடத் துணையாக நானிருப்பேன்**
**வாருமையா வாரும்!**
**வந்தெனது மடி சேரும்**
**நேரம் இது நேரம்!**
**நிற்காது கண நேரம்!**

*அரிச்சந்திரன் : (ஆத்திரமடைந்தவனாக)*

**போதுமடி யுங்கள்**
**பொல்லாத சாகசங்கள்!**
**காதலா காதல்?**
**கள்ள மதி கொண்டீர்கள்!**
**சாதுகளாய் நாமிருக்க**
**சல்லாபம் தேடுகிறீர்**
**காதை யறுத்திடுவேன்!**
**கண்முன்னே நிற்காதீர்!**
*(என்று துரத்தி விடுகிறான்)*
*பின்னர் மீண்டும், இளைப்பாறுகிறார்கள் இப்போது,*



இரண்டு கன்னியரையும் அழைத்துக் கொண்டு விசுவாமித்திரர் தோன்றுகிறார்!

*விசுவாமித்திரன் : (ஆத்திரத்துடன்)*

**ஏதடா செய்தீர்? எந்தன்**
**இளமக்கள் நெஞ்சு நோக!**
**காதலா உமக்கு வேண்டும்?**
**கண்ணிய மற்று நீங்கள்**
**மோதினீர் மோகத்தாலே**
**முத்தமா கேட்டீர் காம**
**வேதனை கொண்டு இந்தப்**
**போதையர்க் கின்னல் செய்தீர்!**

*அரிச்சந்திரன் : (அதிர்ச்சியடைந்தவனாக)*

**ஏதையா கூறுகின்றீர்?**
**அனைத்தையும் மாறிக் கூறிப்**
**போதனை செய்து உங்கள்**
**புத்தியைக் கெடுத்தார் போலும்**
**காதலால் வெந்ததாகக்**
**கண்ணிய மற்றுப் பேசி**
**பாதையும் காட்டினார்கள்**
**பைத்தியம் ஆகினார்கள்!**

*விசுவாமித்திரர் :*

**யாரிவர் என்றுனக்குத்**
**தெரியுமா? எனது மக்கள்**
**தேவரின் குலத்தோர்.... என்று**
**தெரியாமல் உளறுகின்றாய்**
**போரிடல், விலங்குதேடிப்**
**பொல்லாத வேட்டையாடல்**
**ஊறிய உனக்கு உண்மை**
**எப்படி விளங்கும் மன்னா!**

*அரிச்சந்திரன் :*

**உண்மையே எனது வாழ்வாய்**
**உயிர்களைக் காக்கும் என்னை**
**புண்படப் பேசினாலும்**
**பொறுமையாய் உங்கள் முன்னே**
**நின்றிடல் எனது பண்பாய்**
**நினைத்துமை வணங்குகின்றேன்!**
**அன்புடன் விடைகொடுங்கள்....**
**அடக்கமாய்ச் சொல்வோம் நாமே!**

*என்று அடிகளில் வீழ்ந்து வேண்டுகிறான்!*

*விசுவாமித்திரர் ஆத்திரத்துடன் அரிச்சந்திரனின் மணிமுடியை உதைத்துத் தட்டுகிறார்.*

*விசுவாமித்திரர் :*

**வாய்மைக்கு நீ யென**
**வாழ்த்திடல் தவறு**
**வார்த்தையிற் பொய்யானாய்!**
**வாயிலா விலங்கினை**
**வருத்திடும் பாவிநீ!**
**பாவத்தின் கையானாய்!**

*அரிச்சந்திரன் :*

**மாமுனியே எனைக்கொல்லாதே!**
**பொய்யன் என்று என்னைச் சொல்லாதே!**
**மாமுடி தனைத்தான் இழந்தாலும் சொல்**
**வாய்மையை இழந்து வாழ்வேனோ?**

*விசுவாமித்திரர் :*

**அரசினை இழக்கச் சம்மதமோ?**
**ஆட்சியை இழக்கவும் சம்மதமோ?**
**உரைப்பது சுலபம் அறிவாய்நீ!**
**உரைத்தபின் மாறுதல் சரியாமோ?**



*அரிச்சந்திரன் :*

**பொய்யுரைத்திடற்குப் பதிலாக இப்**
**பேரரசுமக்குத் தருவேன்நான்**
**ஐயனே! அதுதான் விருப்பென்றால்**
**அதற்குறு வழியைச் செய்வேனே**

*சத்தியக்கீர்த்தி :*

**மன்னா! இது என்ன விளையாட்டு!**
**மக்களின் நிலை என்ன? நீ கூறு**
**உன்னாருயிர் அவர் அறியாயோ?**
**உலகோர் பழிவரும் புரியாயோ?**

*விசுவாமித்திரர் :*

**நன்றாய் நடிக்கிறான் சத்தியக்கீர்த்தி**
**நல்லாய் உனையறி வான்!**
**தந்தாய் போதும்! இனித் தரவேண்டாம்!**
**தரமாட்டேன் எனக்கூறு!**

*அரிச்சந்திரன் :*

**சொன்னேன், சொன்னதைச்**
**செய்வேன்; இதுவென்**
**சுதந்திரம் அறிந்திடுங்கள்!**
**மன்னித்திடுவார்**
**என்னரும் மக்கள்**
**மற்றவை நாம் பார்ப்போம்?**

அரங்க விளக்கு அணைகிறது.

## காட்சி 10

*அரிச்சந்திரன் அரசவை :*

*(கிரீடமணிந்து...)விசுவாமித்திரர் அரியணையில் இருக்கிறார்*

அரிச்சந்திரன், சந்திரமதி, லோகிதாசனுடன், மிகவும் எளிய தோற்றத்தில் நிற்கிறான் :

*அரிச்சந்திரன் : (மக்களை நோக்கி)*

**என்னரும் மக்காள் இந்த**
**அயோத்தியின் உயிர்காள் உங்கள்**
**மன்னனாய் வாழ்ந்தகாலம்**
**மட்டிலாப் பாசத்தோடு**
**என்னை நீர் மதித்தீர் எங்கள்**
**இனிய நற்தேசம் காத்தீர்!**
**மண்ணை ஓர் மாதவத்தின்**
**மாமுனி காலில் வைத்து**
**உம்மையும் அவர்க்குத் தந்தேன்!**
**உள்ளத்தால் ஏற்பீர் ஐய!**

*என்று, கண்ணீர் மல்கக் கூறிவிட்டு... மனைவி, மகனுடன் புறப்படுகின்றான்!*

*சத்தியகீர்த்தி (பாசமும், பற்றும் மேலிட....*
*மன்னனின் பாதங்களில் ஓடிவந்து வீழ்கிறான்)*

*(வீழ்ந்து எழுந்து)*

*சத்தியகீர்த்தி :*

**சத்திய வேந்தே! உந்தன்**
**சாதனைகண்டு நெஞ்சம்**
**கத்தியே கதற நின்றேன்!**
**காவலா இங்கு எம்மை**
**விட்டு நீ பிரிதல் பாவம்!**
**விதியதன் விந்தை தானோ?**
**சத்திய கீர்த்தி என்றும்**
**சத்தியம் காப்பேன் ஐயா!**
*இப்போது....*

*விசுவாமித்திரன் : (திடீரென எழுகிறான்)*

**எங்கே என் யாகநிதி?**
**எப்படி நீ மறந்து விட்டாய்?**
**தந்தபின் தான் நம் வழக்குத்**
**தீருமென்ப தறியாயோ?**



*அரிச்சந்திரன் : (திடுக்கிட்டவனாக)*

**அத்தனையும் பத்திரமாய்**
**வைத்திருக் கின்றேன்!**
**முத்தொடு பொன்**
**பெருமலையாய்க்**
**குவித்து வைத்துள்ளேன்!**

*விசுவாமித்திரர் : (அட்டகாசமாய்ச் சிரிக்கிறார்)*

**என்ன விசித்திரம் அப்பா!**
**உண்ணத் தந்த நல்**
**உணவைக் கேட்பது....**
**என்ன விசித்திரம் அப்பா!**
**புசிக்கத் தந்ததிற்**
**பங்கு கேட்பது**
**என்ன விசித்திரம் அப்பா!**
**தரமாட்டேன் என்று நீ**
**துணிவாகச் சொல்லப்பா!**
**அரசோடு அனைத்தையும்**
**திரும்ப நான் தருவேன்!**

*அரிச்சந்திரன் : (தனது வருத்தத்தைத் தெரியப் பண்ணுதல்)*

**ஐயகோ தந்த சொல்**
**மறுத்திடமாட்டேன்!**
**பொய்யால் இன்பம்**
**துய்த்திட மாட்டேன்!**
**வையமே வரினும்**
**வாழ்வு தான் வரினும்**
**ஐயகோ தந்த சொல்**
**மறுத்திட மாட்டேன்!**

*(வேதனையுடன்)*

**எங்களை விற்றேனும்**
**உம்கடன் தருவேன்!**
**ஒரு சிலகாலம் பொறுத்தருள் வீர்**

**எங்குலப் பெருமையை.....**

**என்றும் நான் காப்பேன்!**

**எனது சொல் வாழும் பார்த்திடுவீர்!**

விசுவாமித்திரர் : *(நட்சத்திரரை முன்னே இழுத்துவந்து)*

**பொன் தரும் நாள் வரை**

**பின் தொடர்வான் இவன்!**

**என்னரும் சீடன் நட்சத்திரன்!**

**அந்த நாள் வரும்வரை**

**ஆகாரம் உடையுடன்**

**அத்தனையும் தரல் உன்கடமை!**

அரிச்சந்திரன், சந்திரமதி, லோகதாசனைப் பின்தொடர்ந்து நட்சத்திர ஐயன், அரண்மனையை விட்டுச் செல்கிறான்.

**அரங்க விளக்கு அணைகிறது.**

**இடைவேளை**

## காட்சி *11*

நட்சத்திர ஐயனின் நச்சரிப்பும், துன்புறுத்தலும் இக்காட்சியில், இசைக்கருவிகள் மூலமும், முத்திரைகள், பாவங்கள், அபிநயங்கள் மூலமும் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்!

காட்சியின் ஆரம்பத்தில்

ந. ஐயன் முன் வந்து

தான் களைத்து, இளைத்து விட்டதாகவும், தன்னால் இனிமேல் ஓரடியும் எடுத்து வைக்க முடியாதெனவும் கூறி, காட்டின் இடைவழியில் தரையிற் குந்தி விடுகிறான்!

அரிச்சந்திரன்,

அவனை எழுந்து நடக்கும்படி வேண்ட,

ந, ஐயன், மாட்டேன்! என்று கூறி

அடம் பிடிக்கிறான்! தன்னைத் தூக்கிக் கொண்டு

நடக்கும்படி அரிச்சந்திரனை வேண்டுகிறான்!



தனக்குப் பசியெடுப்பதாகவும்

தாகம் தன்னை வருத்துவதாகவும் கூறி

அழுகிறான்; சிணுங்குகிறான்.

மிருகங்களுக்கு அஞ்சியலறுகிறான்!

அரிச்சந்திரன் போய் கனிகிழங்குகளுடன்

வருகிறான்! அரிச்சந்திரன்

லோகிதாசனுக்கும் உணவு கொடுக்கப்போக

ந. ஐயன், தட்டிப் பறித்துத்

தானேயுண்கிறான். உண்டுமுடித்ததும்

பணத்தைத் தரும்படியும்,

தன்னைத் தன்னிடத்திற்கு

அனுப்பிவைக்கும்படியும்

பிடிவாதம் பிடிக்கிறான்.

அரிச்சந்திரன் : *(வேதனை வெடிக்க)*

**ஐயா சற்றுப் பொறுத்தருளும்!**

**ஐயா சற்றுப் பொறுத்தருளும்!**

**பொய்யாதென் சொல்**

**பொருள் தருவேன்!**

**ஐயா சற்றுப் பொறுத்தருளும்!**

**தையலென் மனைவியை விற்றிடுவேன் !என்**

**தனயனையும் நான் விற்றிடுவேன்**

**ஐய உன்கடனை அடைத்திடுவேன்!**

**அதுவரை சற்றுப் பொறுத்தருளும்!**

என்று கண்ணீர் மல்கப் பாடிய படி.... தனது மனைவியையும் தனையனையும் அணைத்துக் கொண்டு... அரிச்சந்திரன்... முன்னே நடக்கிறான்! நட்சத்திர ஐயன்... சற்றுப்பின்னே நின்றபடி.... அவர்களைப் பார்த்து... கண்கலங்கி யழுகிறான்! தனது கண்களைத் துடைத்துக்கொண்டு அவர்களைத் தொடர்கிறான்.

**அரங்க விளக்கு அணைகிறது.**

## காட்சி 12

*சந்திரமதியுடன் ... அரிச்சந்திரன் தனிமையில் :*

*அரிச்சந்திரன் : (சந்திரமதியை.. நெஞ்சில் நிறைந்த காதலுணர்வுடன் அணைத்துக் கொள்கிறான்)*

*அரிச்சந்திரன் :*

**கட்டியவன் சத்தியத்தை**
**விட்டுக் கொடுக்காதவளே!**
**எப்படியுன் அன்புக்கு நான் நன்றி சொல்வேன்**
**கொட்டு மழை வெய்யிலிலே**
**பற்றைமுள்ளுப் பாதியிலே**
**வைத்துஅடி வந்தாயென் பத்தினிதாயே!**

*சந்திரமதி :*

**துன்பப்படவேண்டாம் எந்தன் துணைவா!**
**தூய உள்ளம் கலங்கலாமோ? தலைவா!**
**இன்பமுண்டு பிரிவினிலும்**
**இருவர் அன்பு சொரிகையிலே**
**கண்கலங்க வேண்டாம் எந்தன் தலைவா!**
**காலம் பதில் சொல்லும் எந்தன் தலைவா!**

*சந்திரமதி (தொடர்கிறாள்):*

**அந்த முனி முன்னால் நீங்கள்**
**சொன்ன சொல்லும் தப்பலாமா?**
**சத்தியத்தை தொழுததெல்லாம் கனவா? நாம்**
**அந்தி பகல் கூடியதும் கனவா?**
**எங்கு நாம் வாழ்ந்திடினும்**
**நமது உயிர் ஒன்றே யானால்**
**இங்கு நம்மைப் பிரிப்பவரும் உளரா? அந்த**
**செங்கதிரோன் மரபில் வந்தோன் தளரான்.**



*அரிச்சந்திரன் :*

**இறைவன் எனக்கு உனைத்தந்தான்!**
**இதயம் மணக்க வரந்தந்தான்**
**மறைகள் வாழ்த்த உனைத்தந்தாய்**
**மணியே உயிரின் கரந்தந்தாய்!**
இருவரும், ஒன்றிணைந்து ஆடுகின்றனர்!

அரங்க விளக்கு அணைகிறது.

## காட்சி 13

*அரங்க விளக்கு எரியும் போது*
*அரங்கின் பின்னணியில்*
*தெருவில் வியாபாரிகள், வாங்குவோரின் ஒலிகள் கேட்கின்றன*
*அரிச்சந்திரன் முன்னே வர...*
*அவனைத் தொடர்ந்து...*
*சந்திர மதியும் லோகிதாசனும் வர...*
*பின்னே நட்சத்திர ஐயன் வருகிறான்!*
*அரிச்சந்திரன் வீதியில் நின்று,*

(மனைவி... பிள்ளையை விலைபேசி விற்கும் காட்சி இது! இசைக்கருவிகள் மூலம் துன்ப இசை மீட்கப்படுதல் வேண்டும்!)

*அரிச்சந்திரன் :*

**சொந்த மென வந்தவளைச்**
**சுகமெல்லாம் தந்தவளைப்**
**பந்த பாசம் விட்டு இங்கே**
**பாவி நான் விற்க வந்தேன்!**
**நோன்பிருந்து பெற்றவனை**
**மார்பினிலே வளர்ந்தவனை**

**ஈண்டு நின்று தெருவினிலே**
**இதய மின்றி விற்க வந்தேன்!**
**அந்தகன் நான் என்று எனை**
**அகிலமது தூற்றும்**
**சிந்தை மாறிப் போனேனென்று**
**சாத்திரங்கள் சாற்றும்!**
**விந்தை யெந்தன் சொல்லைக் காக்க**
**விற்கும் நிலையாச்சு!**
**சத்தியமே தெய்வ மென்றால்**
**தெய்வம் சொன்ன பேச்சு!**

**விலைபேச வாருங்கள் ஐயா! இந்தச்**
**சிலையோடு செல்வனை வாங்குங்கள் ஐயா!**
**விலை பேச வாருங்கள் ஐயா!**

சந்திரமதியையும், லோகிதாசனையும் பாசம் ததும்பக் கட்டியணைத்தபடி, கண்ணீர் வடிக்கிறான், அரிச்சந்திரன்!

இப்போது.....

பார்ப்பன ஐயரும், மனைவியும் வருகின்றனர்!

(இக்காட்சி அபிநயங்கள், முத்திரைகள், வாத்திய இசை மூலம் அமைக்கப்படுகிறது!)

பார்ப்பனர் சந்திரமதியையும், லோகிதாசனையும்,
அரிச்சந்திரனையும் மாறி மாறிப் பார்த்தபடி
அரங்கின் உள்ளே நுழைகிறார்
அவர் பின்னால் அவரது மனைவி வந்து
அவரது கையைப் பிடித்து இழுத்து வந்து
ஏன் காணும்? என்ன விடுப்புப் பார்க்கிறீர்?
என்று அதட்டுகிறாள்!
ஐயர், மனைவியின் அதட்டலுக்கு நடுங்கி....

ஒடுங்கி, அரிச்சந்திரன், தனது மனைவியையும் மகனையும் விற்கின்ற செய்தியை, மனைவிக்கு தெரியப்படுத்துகிறார்.

நாம் வாங்குவோமா? என்று
மிகவும் வினயமாகக் கேட்கிறார்!



மனைவி, தலை தலையென்று அடித்து....
நமக்கேன், வீண்வினை என்று
கூச்சல் போடுகிறாள்!
ஐயரோ, மிகவும் நளினமாக...
வீட்டிலே, உனக்கு ஒத்தாசைபுரிய,
வீட்டு வேலைகளை கவனிக்க
இவள் பயன்படுவாள் என்று
மெதுவாக மனைவிக்கு ஆசையூட்டுகிறார்!
(மனைவி கற்பனையில், கணவனை எண்ணிப் பார்க்கிறாள்)
அரைத்துக் காட்டுகிறார்!
இடித்துக் காட்டுகிறார்!
கூட்டிக் காட்டுகிறார்!
சட்டிபானை, குடம், செம்பு தேய்த்துக் காட்டுகிறார்
ஐயரின் மனைவியும்,
ஒருவாறு சம்மதப் பட்டு.....
எவ்வளவு பணம் எனக் கேட்க...
ஐயர், மிகவும் தயக்கத்துடன்,
ஒரு வீரன், யானைமீது ஏறி
கவண்கல் வீசும் போது
அது எந்த உயரத்தை அடைகிறதோ.... அவ்வளவு
பொன் கொடுக்க வேண்டுமெனக் கூறுகிறார்?
ஐயரின் மனைவி ஆத்திரத்துடன்,
கோப தாண்டவம் ஆடுகிறாள்!
கோபத்தை வெளிப்படுத்த,
தாள வாத்தியத்தில் நடனம்!
ஐயர், ஆடி, அதிர்ந்து, நடுங்குவதையும்
காட்டுதல் வேண்டும்!
அவளது ஆட்டம் ஓய
ஐயர், மீண்டும் விண்ணப்பித்து

அவளது சம்மதத்தைப் பெறுகிறார்

பின்னர்

அரிச்சந்திரனிடம், போய்

பேரம் பேசி, சந்திரமதியையும் லோகிதாசனையும் கூட்டிச் செல்கின்றனர். ஐயரும் மனைவியும்!

ஐயனின் மனைவி, சந்திரமதியையும்

லோகிதாசனையும்

அதட்டி வெருட்டிக் கூட்டிச் செல்கிறாள்

அரிச்சந்திரன், இக்காட்சி கண்டு,

கண்கலங்கி வேதனைப் படுகிறான்!

சந்திரமதியும் லோகிதாசனும், அரிச்சந்திரனைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே அரங்கைவிட்டு வெளியேறுகின்றனர்.

அரங்க விளக்கு அணைந்து

மீண்டும் எரிகிறது!

நட்சத்திர ஐயன் : (இரக்கம் நிறைந்த தொனியில்)

**இத்தனை துன்பப் பட்டுச்**
**சத்தியத்தைக் காத்தல் வேண்டுமா?**
**அப்பனே உன் உள்ளம் கண்டு**
**இச்சிறியன் உருகினேன்**
**எப்பொருளும் எனக்கு வேண்டாம்!**
**எந்தன் கூலி..... ஒன்றும் வேண்டாம்!**
**இப்பொழுதே வணக்கம் சொல்லி ஏகுவேன்!**

அரிச்சந்திரன் :

**நட்சத்திர ஐயரே!**
**நன்றி உங்கள் அன்புக்கு!**
**பந்த பாசம் கடந்ததன்றோ சத்தியம்**
**இப்பிறவி போனபின்பும்**
**எம்முயிரில் ஒட்டி வரும்**
**பெரும் பொருளே நாங்கள் தொழும் சத்தியம்!**
**என்னை விற்று உமது கூலி**



**தன்னைத் தருவேன்!**
**இன்னும் சிலகாலம் அன்பாய்ப்**
**பொறுத்தருள்வீர்!**

இப்போது, உடுக்கும், பறையும் வாசிக்கப் படுகிறது! சங்கு ஊதப்படுகிறது! மரணச் சடங்குக்கான ராகம் இசைக்கப்படுகிறது!

புலையர் தலைவன், தனது நண்பர் இருவருடன் அரங்கினுள் நுழைகிறான்.

அரிச்சந்திரன் : (அவர்களை நோக்கிவந்து)

**என்னை விலை பேசி நிற்கின்றேன்! ஐயா**
**என்னை விலை பேசி நிற்கின்றேன்**
**பொன் கொடுத்துப் பெற்றால் உங்கள்**
**பாதத்திலே கூலியாவேன்!**
**என்னை விலை பேசி நிற்கின்றேன்!**

புலையர் தலைவன்... அரிச்சந்திரனை ஏற இறங்கப் பார்க்கிறான். பார்த்துவிட்டுத் தனது நண்பரின் காதுகளில் ஏதோ கூற, அவர்களும் ஆம் என்று தலையாட்டுகிறார்கள்.

உடனே புலையர் தலைவன்,

அரிச்சந்திரனை நோக்கி வருகிறான்

அவனது தோலைப் பிடித்துப் பார்க்கிறான்

கரங்களைத் தொட்டுப் பார்க்கிறான்!

கால்களைப் பார்க்கிறான்

அவனது வாயை ஆவெனச் செய்து,

அவனது பற்களைச் சோதிக்கிறான்.

காதுகளிற் கூவி, அவன் செவிடனா, இல்லையா என்று பரிசோதிக்கிறான் அவனது மூக்கை நுள்ளிப் பார்க்கிறான்!

கண்களின் முன்னே தனது விரல்களை ஆட்டி அரிச்சந்திரன் குருடனா இல்லையா என்று சோதித்துப் பார்க்கிறான்.

முடிவில் தனது நண்பர்களை நோக்கி வருகின்றான்!

சுடலை காக்க ஒருவன் தேவைப்படுவதையும் அதற்கு இவனே தகுந்தவன் என்றும் முத்திரை மூலம் வெளிப்படுத்துகிறான்!

நட்சத்திர ஐயன் :

**ஐயோ எனக்குக் கூலியும் வேண்டாம்?**
**உண்ணத் தீனியும் வேண்டாம்!**
**என்னை விட்டாற் போதும்...**
**ஓடிப்போறேன் ஐயா**
**ஐயோ எனக்குக் கூலியும் வேண்டாம்**
**உண்ணத் தீனியும் வேண்டாம்**

அரிச்சந்திரன் : (நட்சத்திர ஐயரைக் கட்டியணைத்துவிட்டு புலையர் தலைவனைப் பார்த்து)

**என்ன வேலை சொன்னாலும்**
**என்னைத் தந்து செய்வேன்!**
**உண்மையான கூலியாக**
**உழைப்பைத் தந்து செய்வேன்**

புலையர் தலைவன் :

**என்ன விலையென்று சொன்னால்**
**உன்னை வாங்கிச் செல்வேன்!**
**பிணங்கள் சுடும் சுடலை காக்க**
**உன்னைக் கூட்டிச் செல்வேன்!**

(நட்சத்திர ஐயன், முகத்தைப் பொத்தியபடி அழுகிறான்)

அரங்க விளக்கு அணைகிறது.

## காட்சி 14

பார்ப்பனர் வீடு :

சந்திரமதி வீட்டுவேலைகள் செய்துகொண்டு இருக்கிறாள் (முத்திரைகள்)

தாளவாத்திய இசைமூலம் முத்திரைகள் பாவங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும்!

ஜதிகள், சுரங்கள் பயன்படுத்தப்படலாம்

(அரங்கிற் தோன்றி)

(பார்ப்பனர் மனைவி) சந்திரமதியின் வேலைகளை மேற்பார்வை செய்து சந்திரமதியை வைது துன்புறுத்துகிறாள்.



இப்போது,

பார்ப்பனர் தோன்றிச் சந்திரமதிக்குச் சார்பாகப் பேசி அவள் மீது பரிதாபப்படுகிறார்!

மனைவியோ, பார்ப்பனர் மீது பாய்ந்து விழுகிறாள். இப்போது லோகிதாசன் அரங்கிற்கு வருகிறான்.

பார்ப்பனர் மனைவி, லோகிதாசன் காதுகளைத் திருகியபடி ஐயரின் முன்னே இழுத்து வருகிறாள்.

(இவன் தண்டச்சோறு சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான் இவனுக்கு ஏதாவது வெளிவேலை கொடுங்கள் என்று உத்தரவிடுகிறாள்.)

சந்திரமதி :

**ஐயோ அவன் சின்னப்பயல்**
**ஏதுமறியான்!**
**ஐயோ அவன் சின்னப்பயல்**
**ஏதுமறியான்!**
**கைக்குதவியாக வீட்டில்**
**என்னோடிருப்பான்!**
**ஐயோ அவன் சின்னப்பயல்**
**ஏதுமறியான்!**

(என்று தன்மகனைத் தன்னுடன் இழுத்து வைத்துக்கொள்கிறாள்)

பார்ப்பனர் மனைவி : (ஆத்திரத்துடன்)

**விலை கொடுத்து வாங்கும்போது**
**வாயை மூடி நின்றாயே!**
**தலைக் கணக்குப் போட்டுப் பொன்னைத்**
**தந்துவிட்டு வந்தோமே!**

பார்ப்பனர் : (குறுக்கிட்டு)

(ஆடுபாம்பே மெட்டு)

**தெற்பை புடுங்கப் போ.... லோகிதாசா**
**தெருவிலுள்ள பையரோடு லோகிதாசா**
**தெற்பைக் காடு அண்மையிற் தான் லோகிதாசா**
**சென்று தெற்பை புடுங்கி வா நீ லோகிதாசா!**

சந்திரமதி மகனைப் பார்த்து.....

*(துன்பம் மேலிட நிற்கிறாள்)*

**அரங்க விளக்கு அணைகிறது**

ஆடுபாம்பே... ராகம்

புல்லாங்குழலோசையிற் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது

## காட்சி 15

லோகிதாசன் தெற்பை புடுங்கும் காட்சி

தோழர்களுடன் தெற்பை புடுங்குகிறான்

தாள வாத்தியத்தில் இது நிகழ வேண்டும்!

மிகவும் தாழ்ந்த ஒலியில்

புல்லாங்குழலில்,

பாம்பு வருதற்குரிய இசை வாசிக்கப்படல் வேண்டும்!

பாம்பு தலைப்படுதல் :

பாம்பு லோகிதாசனைத் தீண்டுதல் :

பாம்பு தீண்டும் போது..... துல்லியமான திகில் ஓசை

(எழுப்பப்பட வேண்டும்)

லோகிதாசன் துடிதுடித்து இறக்கிறான்!

தோழர்கள் அஞ்சி நடுங்கி, ஓடுகிறார்கள்

அரங்க விளக்கு அணைந்து மீண்டும் எரியும் போது....

பார்ப்பனர் வீட்டில்

சந்திரமதி.... மகன் வரவைப் பார்த்து

மனம் பதைக்க நிற்கிறாள்

லோகிதாசனின் தோழர்கள், நடு நடுங்கியபடி

அரங்கினுள் நுழைகின்றனர்

சந்திரமதி, அவர்களை நோக்கி ஓடிச்சென்று எங்கே லோகிதாசன் என்பிள்ளை? என்று வினவுகிறாள்

அவர்கள் பதில் சொல்லத் தயங்குகின்றனர்.

சந்திரமதி ஒருவனை ஆவேசமாகத் தோளைப்பிடித்து உலுக்குகிறாள்.



அவன், லோகிதாசனைப் பாம்புத் தீண்டி, அவன் இறந்துவிட்ட செய்தியை எடுத்துரைக்கிறான்.

சந்திரமதி, பிள்ளைப் பாசத்தினால் துடித்துக் கதறித் தரையில் வீழ்கிறாள்!

இப்போது, பார்ப்பனரின் மனைவியும் பார்ப்பனரும் ஓடி வருகின்றனர்!

சந்திரமதி, தரையில் வீழ்ந்து கிடப்பது கண்டு பார்ப்பனரின் மனைவி, சந்திரமதியைத் தட்டி எழுப்புகிறாள்.

சந்திரமதி : (எழுந்தவளாக)

**ஐயகோ என்பாலன் அரவந்தீண்டி**
**ஆருயிர் நீத்தானாம் தெற்பைக்காட்டில்**
**ஐயரே என்ன செய்வேன்? அவனின் தந்தை**
**எனைக்கேட்டால் என் சொல்வேன், எங்குசெல்வேன்**
**வையகமே வான்காற்றே தீயே நீரே...**
**வெவ்விடம் முன் வாய்பொத்தி ஏன் தான் நின்றீர்!**
**மெய்யெலாம் எரிகிறதே மடிதான்நோக....**
**செய்வதறியாது நின்று துடிக்கின்றேனே!**

சந்திரமதி : (ஐயரையும், மனைவியையும் கைகூப்பி இறைஞ்சுகிறாள்)

**போய்ப் பார்க்க விடை கொடுங்கள் என்மகனைப்**
**போய்ப் பார்க்க விடை கொடுங்கள்**
**காப்பாற்றுவாரின்றிக் கண்மூடிக் கிடந்தானைப்**
**போய்ப் பார்க்க விடை கொடுங்கள்!**
**தாய்ப்பாலில் வளர்ந்தான்**
**தாலாட்டி வளர்த்தேன்?**
**சாக்காட்டில் எரிமூட்டச்**
**சந்தர்ப்பந் தாருங்கள்!**

ஐயரின் மனைவி.... மறுக்கிறாள்

ஐயர், மனைவியை வேண்டுகிறார்!

மனைவி, வீட்டு வேலைகள் நிறைய உண்டு

எனக் கூறி மறுக்கிறாள்.

சந்திரமதி தான் எல்லா வீட்டு வேலையையும் முடித்துவிட்டுச் செல்வதாகக் கூறி, ஐயரின் மனைவியின் கால்களில் வீழ்ந்து இரக்கிறாள்!

ஐயர், மனைவியிடம் மன்றாடுகிறார்!

ஐயர் மனைவி, ஒருவாறு சம்மதிக்கிறாள்!

அரங்க விளக்கு அணைகிறது.

## காட்சி *16*

அரங்கின் ஒரு மூலையில்....

லோகிதாசன் இறந்து கிடக்கிறான்!

சந்திரமதி..... அரங்கினுள் நுழைகிறாள்!

மகனை அங்குமிங்கும் தேடுகிறாள்!

சந்திரமதி :

**அப்பா மகனே லோகி தாசா!**
**அம்மா என்றொரு குரல் தாராய்!**
**இப்பா விமுகம் பார்த்தொரு வார்த்தை**
**செப்பாயோ என் செந்திருவே!**

பாடலின் முடிவில்,

மகன் லோகிதாசனின் உடலைக் கண்டதும்,

துயரம் பீறிட, ஓடிச் சென்று....

அவனது உடலை வாரியணைத்து....

அவனது முகத்தில்....

முத்தமாரிகள் பொழிந்து கதறுகிறாள்!

மகனை, உலுப்பி எழுப்ப முயல்கிறாள்!

அவனது கண்களைத் திறக்க முயல்கிறாள்!

முடிவில் அவன் மரணித்திருப்பதை ஊர்ஜிதம் செய்துகொள்கிறாள்!

ஒப்பாரி பாடுகிறாள்!

சந்திரமதி :

**ஐயோ மகனே லோகிதாசா உனை**
**பெற்றவள் வந்தேன் பேசுராசா!**



**வெய்யோன் சந்ததி உன்னுடன் தீருமோ?**
**வேதனைத் தீயில் சத்தியம் வீழுமோ?**

விம்மி விம்மியழுது, முடிவில்

மயக்க முற்றுச் சாய்கிறாள்.

சற்று நாழிகைகளின்

பின்னர்....

சந்திர மதி.... துன்பத்தில் இருந்து மீண்டு,

தேற்ற மடைந்தவளாக.....

சற்றுத் துணிவுடன் எழுகிறாள்!

சந்திரமதி :

**முடிசூடி அரசாளப் பிறந்த உனை நானின்று**
**எரியூட்டி வைக்கும் நிலை வந்ததையா**
**பிடி சாம்பர் கரமேந்திப் பெருங் கங்கை கலக்கின்ற**
**கொடுகாலம் முடிவாகிக் கொன்றதையோ!**

மகனைத் தூக்க..... அமர்கிறாள்!

அரங்க விளக்கு அணைகிறது!

## காட்சி *17*

மயான காண்டம்

அரங்கில் மயானம்!

மரணச் சங்கு ஊதப்படுகிறது

பின்னணியில் நள்ளிரவுக்குரிய இசை!

பின்னணியிற் பாடல் :

**மக்களைக் காக்க அங்கே**
**மாண்புறு செங்கோலேந்தி**
**திக் கெலாம் புகழ்பரப்பித்**
**திண்மையாய் நின்ற மன்னன்**
**சத்தியம் காக்கும் நோக்கில்**
**சுடலைதான் காத்தான் கையில்**
**அக்கினி தீண்டும் கோலோ**
**டரைத் துணியோடு நின்றான்!**

அரிச்சந்திரன், பிணஞ் சுடும் காட்சி!

அரிச்சந்திரன் :

**வாய்மையே வழியாய்க் கொண்டால்**
**வருவது துயிர்தான் நெஞ்சே!**
**தூய்மையே வாழ்வாய்க் கொண்டால்**
**சோதனைக் கடல் தான் நெஞ்சே!**
**ஆயினும் ஆத்மா பொங்கும்!**
**அகத்தினில் இன்பம் தங்கும்!**
**ஆகையால் துன்பங் கொண்டு**
**அழுதிடல் தவறென் நெஞ்சே!**

பிணத்தை எரிமூட்டி விட்டு...

(மீண்டும் பாடல்)

**சுடலையின் ஆண்டை ஈயும்**
**காப்பணம் முழுத்துண்டோடு**
**பிடியன்னம் வயிற்றைக் காக்கும்**
**பிறிதொன்றும் எனக்கே வேண்டாம்**
**சுடலையில் ஆடும் தேவன்**
**சுந்தரி பாகன் ஈசன்**
**கழல்க ளென் மனைவி சேயைக்**
**காத்திட வேண்டு வேனே!**

(பாடலின் முடிவில் அரங்கிலிருந்து விலகுகிறான்)

அரங்க விளக்கு அணைந்து மீண்டும் எரியும் போது,
சந்திரமதி..... மகன் லோகிதாசனைத்
தரையிற் கிடத்தி விட்டு....
அங்குமிங்கும் ஓடி.... விறகு பொறுக்கி
வந்து..... மகன் பிணத்தின் மீது
அடுக்கி விட்டு....
பக்கத்தில்
எரியும் பிணத்தின் சிதையிலிருந்து,
எரியும் குச்சியினை எடுத்து வந்து,



தனது மகனுக்குத் தீ மூட்ட ஆயத்தமாகிறாள்!
அவளது, துன்பம் உச்சியை அடைகிறது!
சோக இசை ஒலிக்கிறது!
சந்திரமதி, பாசத்தாற் துடிதுடிக்கிறாள்
(அதிர வைக்கும் இசை)
இப்போது..... திடீரென....
அரிச்சந்திரன் அவையிலே புயல் வேகத்தில் வருகிறான்!
வந்தவன்,
சந்திரமதியின் கரத்திலிருந்த தீக்குச்சியைக்
கோலினாற் தட்டித் தூர எறிகிறான்
லோகிதாசனின் பிணத்தை உருட்டி விடுகிறான்!

அரிச்சந்திரன் :

**யாரடி யாரடி யாரடி நீ**
**கூறடி உன்பேர் யாதடி?**
**காரிருள் தனிலே**
**காவலை மீறித்**
**தீயிட வந்த கள்ளி நீ!**

(சந்திரமதி, மகனின் சடலத்தை....
இறுகக் கட்டிப் பிடித்துக் கொள்கிறாள்.)

சந்திரமதி :

**கள்ளி நானல்லன் ஐய!**
**கபடியும் அல்ல எந்தன்**
**பிள்ளையைப் பிரிந்த சோகம்**
**பிணித்திட நின்றேன் ஐயா!**

அரிச்சந்திரன் :

**கூலியைத் தந்தபின் கொள்ளிவை! அதைத்**
**கொடுத்திட மறுத்தாற் தள்ளிவை!**
**காப்பணத் தோடு ஓர் முழத்துண்டும்**

**வாய்க்கு அரிசியும் எடுத்துவை!**
**தந்தாற் தகனம் செய்யலாம் இலை**
**யென்றாற் கொண்டு செல்லலாம்!**

*சந்திரமதி :*

**தரப் பொருளும் கையில் இல்லை!**
**தனித்தவள் நான் எவரும் இல்லை!**
**இரக்கங் கொண்டு எனக் குதவி**
**செய்யும் ஐயா பெரியவரே!**

*அரிச்சந்திரன் :*

**மாய் மாலம் செய்யாதேடி! என்**
**மன மாற்றம் நிகழாதடி!**
**வாய் ஜாலம் காட்ட எண்ணாதேடி!**
**மயானத்தை இகழாதேடி!**
**(ஏளனமாக)**
**யாரும் இல்லை என்றாய்! உன்**
**மகனின் தந்தை யெங்கே?**
**சேரும் கூலி இன்றிப் பிணம்**
**சுடவா வந்தாய் இங்கே?**

*சந்திரமதி :*

**ஆளப்பிறந்தவன் என்மகன் அவன்**
**தந்தை அரசாண்ட மன்னவன்!**
**ஏழையல்ல நாம் பிறப்பினில்!**
**இடையில் வந்தவை இழப்புகள்!**

*அரிச்சந்திரன் : (சற்று அதிர்ச்சியடைந்தவனாக)*

**எதுவும் இல்லை யென்றாய் உன்**
**கழுத்தில் மின்னுதே அதைக்கொடு!**
**தாலிப் பொன்னை மறைத்து நீ**
**நீலிக் கண்ணீர் வடிக்கிறாய்!**

*சந்திரமதி : (திடுக்குற்றுப் பதைத்தவளாக)*

*(தனது கழுத்தில் விளங்கும் மாலையைத் தொட்டுக்*



*கண்களில் ஒற்றியவளாக)*

**மணவாளன் கண்களன்றி**
**மாற்றார் கண் காணா மாலை**
**பிண மாளும் மனிதர் கண்டார்**
**பெரும் பாவம் ஏது செய்தேன்?**
**கணமேனும் வாழேன் இங்கு**
**கற்பென்ற பெரு வாழ்வின்றி**
**துணைவா நீ எங்கேயுள்ளாய்?**
**துடித்துன்னைத் துதிக்கின்றேனே!**

*அரிச்சந்திரன், திடுக்குற்று.....*
*சந்திரமதியின் முகத்தை உற்றுப் பார்க்கிறான்!*
*பின்னர் லோகிதாசனின் பிணத்தைப் பார்க்கிறான்!*
*அரிச்சந்திரன் : (பதற்றமும் தடுமாற்றமும் அடைகிறான்)*
*(சந்திரமதியின் பாடல் வரிகளை மீட்டுப் பார்க்கிறான்!*

**மணவாளன் கண்களன்றி...**
**மாற்றார் கண் காணாமாலை**
**பிணமாளும் மனிதர் கண்டார்!**

*(அந்த வரிகள் அரிச்சந்திரனை அதிர வைக்கின்றன)*

*அரிச்சந்திரன் (சந்திரமதியைப் பார்த்து) :*

**துயரத்திற் துடிக்கும் பெண்ணே!**
**துணிவாய் உன் பெயரைச் சொல்வாய்!**
**நகரென்ன? நாடும் என்ன?**
**துணைவன் தன் விபரம் என்ன?**
**வைரத்தைக் கரியென்றெண்ணி**
**வைதேன் நான் விளக்கம் இன்றி**
**விபரத்தை யுரைப்பாய் தாயே!**
**விளக்கமாய் எனக்கு நீயே!**

*சந்திரமதி :*

**அயோத்தியின் மன்னன் எந்தன்**
**அன்புடைக் கணவன் ஐயா!**

*(அரிச்சந்திரன் அதிர்ச்சியிற் திணறுகிறான்)*

**சத்தியம் காக்கத் தன்னைத்**
**தந்தவன் துணையாளையா**
**புத்திரன் லோகதாசன்**
**போயினன் தெற்பை கொய்ய**
**புற்றிடைச் சர்ப்பந் தீண்டிச்**
**சரிந்தனன் மைந்தனய்யா!**

*அரிச்சந்திரன் : (ஆவேசமாக கத்துகிறான்)*

**ஐயையோ என்ன பாவம்**
**செய்தனன் இதனைக் கேட்க**
**மெய்யெலாம் எரியுதன்றோ**
**மேதினி சுற்று தன்றோ!**
*(என்றபடி, மகனை நோக்கி, ஆவேசமாக ஓடுகிறான்)*

*அரிச்சந்திரன் :*

**நான் பெற்ற மகனே!**
**நான் பெற்ற மகனே!**
**நாவது ஒய்ந்ததுவோ?**
*(சந்திரமதி திடுக்குற்றவளாக, அரிச்சந்திரனை உற்றுப் பார்க்கிறாள்)*

*அரிச்சந்திரன் :*

**நீ செத்து விழவோ**
**நான் உனை விற்றேன்**
**ஓர் முறை எழுந்திடையா!**
*(என்று அழுதபடி..... சந்திரமதியைப் பார்த்து)*
**ஆதியிற் புலையனல்லன்!**
**சாதியிற் புலையனல்லன்!**
**நீதியிற் புலையனல்லன்!**
**பாதியிற் புலையனானேன்!**

**தேவி யுன் தலைவன் நானே!**
**திருவிழந்துனது முன்னே**
**பாவியாய் நிற்கின்றேனே**
**சுடுவனம் காக்கின்றேனே!**



*அரிச்சந்திரன், தலையில் அடித்தலறுகிறான்!*

*சந்திரமதி, அரிச்சந்திரன் முகத்தைப் பார்த்து, என்னசொல்கிறீர்? என்றபாவனையை வெளிப்படுத்துகிறாள்.*

*அரிச்சந்திரன் :*

**என்னருந்தேவீ உன் கணவன்**
**அரிச்சந்திரன் நானே!**
**தன்னவளைத் தனயனையும் தெருவில் விற்ற**
**தரித்திரனும் நானேயன்றோ!**

*சந்திரமதி – அரிச்சந்திரனை இனங்காண்கிறாள்!*

*இருவரும் ஒருவரையொருவர் அணைத்தபடி துன்பத்தில் இணைந்து அழுகின்றனர்!*

*பிள்ளையை மடியில் வைத்து அலறுகின்றனர்!*

*சந்திரமதி, ஒருவாறு தேற்றம் அடைகிறாள்!*

*சந்திரமதி :*

**ஐயனே! நமது பிள்ளை**
**மெய்யினைத் தகனம் செய்யச்**
**சிதையினை மூட்டிக் கொள்ளி**
**வைத்திட வேண்டுவேனே!**

*அரிச்சந்திரன் :*

**எப்படி முடியும் தேவி**
**என்னாண்டைக்குரிய கூலி**
**தப்பின்றித் தரவே வேண்டும்!**
**தயவுடன் பெற்று வாராய்!**
*(நடைமாற்றம்)*
**எனக்குரியது வாய்க்கரிசி!**
**எனக்கது வேண்டாம் மற்றது தருவாய்**
*(என்று மனைவியிடம் கேட்கிறான்)*

**அரங்க விளக்கு அணைகிறது.**

அரங்கின் பின்னணியில்....

காட்சி விளக்கம் :

மயானத்திற் தங்கள் பிள்ளையைத் தகனம் செய்வதற்கான

மயானக் கூலி பெற்று வர,

சந்திரமதியை அனுப்புகிறான் அரிச்சந்திரன்!

சந்திரமதி, காட்டு வழியே, தனது எசமானர் வீட்டுக்குச் செல்கிறாள்!

காட்டு வழியிலே, ஒரு பையனின் சடலம் இறந்துகிடக்கக் காண்கிறாள் சந்திரமதி!

கண்டவள் அச்சடலம், தனது பிள்ளை லோகிதாசனை நினைவுபடுத்த அச்சடலத்தை மடிமீது வைத்துப் பாசத்தாற் புலம்புகிறாள்!

அச்சடலம், ஓர் இளவரசனின் சடலம் என்பதை

அறியாதாளாய், சந்திரமதி, அச்சடலத்தை

இறுக அணைத்து அழுது கொண்டிருந்த அவ்வேளை,

அரண்மனைக் காவலர் அங்கு வருகின்றனர்!

இளவரசன் அணிந்திருந்த பொன் நகைகளையும்

விலையுயர் உடைகளையும் உருவும் பொருட்டு,

இளவரசனைக் கொலை செய்தாள் என அவள் மீது

குற்றஞ் சாட்டி,

அவளைக் கைது செய்து அழைத்துச் செல்கின்றனர்

காவலாளர்!

அரண்மனையிலே, சந்திரமதி, கொலைகாரி

எனக் குற்றஞ் சாட்டப் பெற்று

கொலைத் தண்டனைக்குரிய தீர்ப்பையும் பெறுகிறாள்!

கொலைத் தண்டனையை நிறைவேற்றும்

பொறுப்பும்... அரிச்சந்திரன் மீது வீழ்கிறது!

பின்னணியில் :

(கொலைப் பறை ஓசை)



## காட்சி 18

அரங்கில் :

அரிச்சந்திரன், கொலைவாளினை ஏந்திய படியே

நிற்க, அவன் முன்னே,

கழுத்தை நீட்டியபடி, சந்திரமதி

அமர்ந்திருக்கிறாள்!

இப்போது....

விசுவாமித்திரர்....

அரங்கில் நுழைகிறார்!

விசுவாமித்திரர் :

(அரிச்சந்திரனைப் பார்த்து)

**இப்பொழுதாயினும்**
**இல்லை யென்றோர் சொல்**
**செப்பிடு அரிச்சந்திரா?**
**இப்புவியாட்சியும்**
**எல்லாம் உனக்குத்**
**தந்திடுவேன் அறிவாய்!**

அரிச்சந்திரன் :

**இந்த உலகிலே**
**சொர்க்கம் தான் வரினும்**
**தந்தவாக்கினை**
**மறுத்திட மாட்டேன்!**
**சென்று வாருங்கள் முனிவரே! கடன்**
**செய்ய வாழ்த்துங்கள் முனிவரே!**

என்றவாறு, இறைவனை வணங்கிவிட்டு....

வாளை ஓங்கி வெட்டுகிறான்!

அரங்க விளக்கு அணைந்து மீண்டும் எரிகிறது!

பின்னணியில், தேவ கானம் ஒலிக்கிறது!

சந்திரமதியின் கழுத்தில், சத்தியாரம்,

(சத்திய ஆரம்)
காட்சி தருகிறது!
சிவனும், பார்வதியும், அரங்கிற் தோன்றி
அரிச்சந்திரனையும், சந்திரமதியையும்
ஆசீர்வதிக்கின்றனர்!
இவ்வேளை,
லோகிதாசன், அரங்கில்
வருகிறான்!
விசுவாமித்திரன்,
அரிச்சந்திரனையும்
சந்திரமதியையும்
லோகிதாசனையும்
இணைத்து வைத்து, ஆசீர்வதிக்கிறார்!
மங்கள கீதம் இசைக்கப்படுகிறது!
அரங்க விளக்கு அணைகிறது.
நாட்டிய நாடகம் நிறைவுறுகிறது!



# 4. குருமகளும் கோமகனும்

நாட்டிய நாடகம்



4. குருமகளும் - கோமகனும்

காதலும் களவொழுக்கமும், கற்பியல் ஒழுக்க நெறிக்குத் தலைவனையும், தலைவியையும் நெறிப்படுத்த வேண்டும் என்ற தொன்மரபினைத் தாங்கி நிற்கிறது, தொல்காப்பியம்! கரணம் யாத்தல், கற்பொழுக்கத்தின் அச்சாணிப் பொருளெனத் தொல்காப்பியம் உச்சாடனம் செய்கிறது.

“பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர், ஐயர் யாத்தனர், கரணம் என்ப என்றதன் மூலம், பொய்யும் வழுவும் மலிந்த வரலாற்றினைக் கோடிட்டுக் காட்டுகிறது தொல்காப்பியம். அவ்வாறான கிழக்குலக வரலாற்றின் இதிகாசமான பாரதத்தின் ஒரு கிளைக்கதையினைக் காளிதாசன் இலக்கிய ஓவியமாக்கினான். அதுவே குருமகளும் கோமகனுமாக மலர்கிறது. காந்தர்வ மணத்திற் பூத்த காவிய மலரிது!

## காட்சி 1

*அரங்கில் : அழகிய வனமும் பர்ணசாலையும்...*

*பின்னணி இசையில் : இயற்கையின் மொழி! பாய்ந்தோடும் பிராணிகளும் பட்சிகளின் பரவச மொழிகளும்! இச்சூழலில் முனிவன் விசுவாமித்திரன் நிஷ்டையில் இருக்கிறான்!*

பின்னணியில் விருத்தப் பாடல்

**விலங்குவதி காட்டிடையே விசுவாமித்திரன்**
**விண்ணவரும் வியக்கு வகை தவம் மேற்கொண்டான்!**
**இலங்குமொரு பிரும்மரிஷி வசிட்டர் போன்று**
**உயர்நிலையை எய்து வரம் வேண்டி நின்றான்!**
**விளங்கு மழகா புரியின் வேந்தன் இந்திரன்**
**விழிப்புற்று வேதமுனி உயர்வு, தன்னை**
**விழுங்குமெனும் பயங்கொண்டு மேனகாவை**
**விரைந்து முனி முன் சென்று மயக்கு என்றான்!**

*ஜதிகள், சுரங்களைத் தொடர்ந்து,*

*முனிவர்முன் மேனகை தோற்றம்*

பாடல்

**முற்றுந் துறந்த**
**முனிவரும் மயங்கும்**
**முழுநிலவாய்த் திகழ்ந்தாள்! – உளம்**
**பற்றும் வகையாய்ப்**
**பாடியும் ஆடியும்**



**பேரழகாய்ச் சுரந்தாள்! – அந்த**
**மாமுனி அகம் கரந்தாள்!**

*(மேனகையின் நடனம்)*

*விசுவாமித்திரன் நிட்டை கலைந்து விழித்தலும்*

*மேனகையின் அழகில் வீழ்தலும்!*

பாடல்

**நிட்டை கலைந்து**
**நிமிர்ந்தனன் முனிவன்...**
**நிலைகுலைந்தே பணிந்தான்!**
**அட்டணக்காலை**
**விட்டவன் எழுந்தே...**
**அர்ப்பணித்தான் கரம்... தாள்!**

*(இருவரும் நடனமாடி இணைதல் ஜதிகள் தாளங்கள் கரங்களுடன்)*

பாடல்

**தத்திமி திமி யெனத் தாளம், முனி**
**தாங்கினன் மன்மதக் கோலம்!**
**சுற்றியதவர்களின் தேகம் தந்த**
**சுகத்தினிற் பலித்தது இந்திரன் நோக்கம்!**

*பாடல் முடிவில்...*

*அரங்க விளக்கு அணைந்து, மீண்டும் ஒளிர்கிறது!*

*(முனிவர் நிஷ்டையில் –*

*மேனகை... கையில் ஓர் குழந்தையுடன் தோன்றுகின்றனள்)*

பாடல்

**தவக்கோலம் தளர...**
**தவமுனிவன் கரம்பட்டு...**
**தளிர்க்கொடியாள்**
**தந்தாள் ஓர் சித்திரத்தை!**

**உவக்கு மழகோடு**
**உயிர்த்த மகள் தன்னை**
**தவக்குலத்தோன் முன்தந்து நின்றாள்!**

**நிட்டையில் மீண்டும்**
**நிலவிய முனிவன்**
**நிகழ்ந்தவை யாவையும் கடந்தான்!**
**விட்டனன் ஆசையை**
**விளைவையும் மறந்தனன்!**
**அட்டணக்காலிலே அமர்ந்தான்!**

மேனகை கையிற் குழந்தையுடன் கானகத்தில் மறைகிறாள். கானகத்தில் பறவைகள், பட்சிகள் மத்தியில், குழந்தையை வளர்த்திவிட்டு வானகம் செல்கிறாள் மேனகை!

பறவைகளும், பட்சிகளும், குழந்தையை அன்போடு வளர்க்கின்றன!

பாடல்

**சகுந்தங்கள் தாலாட்டில்**
**சகுந்தலை வளர்ந்தாள்!**
**மிகுந்த நல்லன்பெனும்**
**மென்மையில் மிளிர்ந்தாள்!**

பறவைகள், பிராணிகளின் நடனம்

நடுவில் குழந்தை சகுந்தலா!

பாடல்

**சகுந்தங்கள் தலாட்டும் சகுந்தலா! – அவள்**
**சகியானாள் பருந்தோடு பாம்போடு**

**லாலி லாலி லாலி**
**லாலி லாலி லாலி**
**லாலி லாலி லாலி**
**லாலி லாலி லாலி**

பறவைகளின் பாடல்

பறவை*1*

**கானகத்தின் செல்வமே**
**வானகத்தின் இன்பமே!**
**தூங்கம்மா தாயே – நீ தூங்கு!**



பறவை *2*

**தொட்டில் இந்தப் பூமடி!**
**தோழயர்கள் நாமடி!**
**கட்டியணைப்போம்!**
**காவலிருப்போம்!**
**கண்ணே நீ தூங்கடி!**

பறவை *3*

**பொல்லாத மனிதர்களின்**
**பார்வை படாது!**
**போக்கிரிகள் நிழலில் உந்தன்**
**மேனி கெடாது!**

எல்லாமாகச் சேர்ந்து

**புல்லோடும் பேசலாம்!**
**பூங்காற்றில் ஆடலாம்!**
**சில்லென்று பாயும் நீரில்**
**சிரித்தாடி நீந்தலாம்!**

இப்போது ஒரு முனிவரின் வருகை கண்டு...

குழந்தையை இலை சருகுகளால் மூடிவிட்டு, பறவைகள் ஓடிச்சென்று மரத்தடியில் மறைகின்றன! ஆனால் குழந்தையோ, தன்னை மறந்து, சத்தமிட்டுச் சிரிக்கின்றது. இச்சத்தம் கேட்ட கண்வ முனிவர்,

குழந்தையைப் பார்த்ததும், ஆவலும், ஆச்சரியமும் பீறிட

அக்குழந்தையை அள்ளியெடுத்து

முத்தமிடுகிறார்!

பின்னணியில் (காட்சி விளக்கப் பாடல்)

**கானகத்தின் வழியினிலே**
**கண்வரெனும் மாமுனிவர்**
**தான் நடந்து வருகையிலே**
**தவக்குழந்தை தனைக் கண்டார்!**

**ஆர்த்தெழுந்த ஆவலுடன்**
**அக்குழந்தை தனைத்தூக்கி**
**மார்பணைத்து முத்தமிட்டு**

**மகளே யென்றழைத்திட்டார்!**
**சகுந்தங்கள் தலாட்டிச்**
**சர்ப்பத்தேவர் நீராட்டிச்**
**சுகந்தமலர்த் தொட்டிலிலே தவழ்ந்தவளை - ஒரு**
**தகுந்த கரம் தொட்டெடுத்துக் கொண்டது! தன்**
**தவக்குடிசை நோக்கி நடை கண்டது!**

*குழந்தையைக் கையிலெடுத்த கண்வர்,*
*இறைவனுக்கு நன்றி கூறுகிறார்!*

*பாடல்*

**ஒ இறைவா! இது**
**உன் கூத்தோ?**
**உறவு தந்தாய் எனக்கும்!**
**வேதத்தின் தலைவா!**
**விதிவந்து ஊட்ட உன்**
**விளையாட்டுக் கடிபணிந்தேன்!**

*முனிவர் (பாடிக்களிக்கிறார்)*

**ஆராரோ**
**ஆரிரரோ**
**ஆராரோ**
**ஆரிரரோ!**

**ஆரிரரோ**
**ஆரிராரோ!**
**ஆரிராரோ**
**ஆரிராரோ!**

*பாடல்*

**அன்னை தேவி எனக்களித்த பொன்னே! உனை**
**ஆரணியம் விட்டுச் சென்ற தென்னே!**

**முன்னைவினைப் பயனோ நீ**
**மூத்தவரின் அருளோ நீ!**



**சின்னவனின் குடிசையிலே**
**சிரித்தாட வந்தவளோ?**

*(அரங்கை விட்டு வெளியேறிய... கண்வர்...*
*பர்ண சாலைக்கு... முன்னே வருகிறார்!)*
*(முனிகுமாரர்கள், முனிப்பெண்கள் சூழக்*
*கண்வருடனும், கண்வரின் சீடர்களுடனும்*
*சகுந்தலை ஆடிப் பாடி வளர்கிறாள்!)*

*பாடல்*

**வனத்தில் வாழும் தேவதைகள்**
**வாழத்துப் பாடுது! எம்**
**அகத்தில் வந்த தேவியுடன்**
**ஆட்டம் ஆடுது!**
*(சுர வரிசைகளில்... குழந்தை சிறுமியாகுகிறாள்)*
**குலகுருவாம் கண்வரிடம்**
**குருமகள் வந்தாள் - எம்**
**தவக்குடிசை மகிமைபெறத்**
**தண்ணொளி தந்தாள்!**

**சாந்தியொடு அமைதியிங்கே**
**சஞ்சரிக்கும் என்றும்!**
**பூந்தளிரும் மயில்குயிலும்**
**அஞ்சலிக்கும் நின்று!**
**மான்குலமும் மறுகுலமும்**
**பட்சிகளும் உண்டு!**
**மாந்தரிடம் இல்லா நல்ல**
**மாண்புகளும் உண்டு!**

*சகுந்தலை இப்போது அழகிய பருவ மங்கையாகக் காட்சி தருகிறாள். அவளுக்கான களிநடனம் அமைக்கப்படுதல் வேண்டும்!*

*இப்போது திடீரென்று,*
*பின்னணியில்,*
*குதிரைகளின் குளம்போசையும்*

*தேர்களின் சக்கர ஓசையும் எழுகின்றது!*

*எல்லோரும் அதிர்ச்சியும், ஆச்சரியமும் பொங்க,*

*ஒலி எழுப்பப்பட்ட திசையை நோக்கி நிற்கின்றனர்!*

*தபோவனத்தில் நுழைகிறது,*

*துஷ்யந்தனின் வேட்டைப்படை!*

*துஷ்யந்தனுடன் அவனது தோழன்*

*மாடவ்யனும் வருகிறான்!*

*பின்னணியிற் பாடல்*

**மக்களைக் காக்கும் மன்னர்**
**மாக்களை வேட்டையாடித்**
**தக்க நல்லாட்சி செய்தல்**
**தவமெனக் கொள்வரன்றோ!**

**இக்கலை சிரமேற் கொண்டு...**
**இனியதன் தோழர் சூழப்**
**பக்கலில் உள்ள காட்டிற்**
**பயங்கர மிருக வேட்டை**
**அற்புத மாக ஆடி**
**அதன்பின்னே முனிவர் வாழும்**
**திக்கினை நோக்கிவந்தான்**
**துஷ்யந்த மன்னன் தானே!**

**சக்கரம் ஓசை செய்ய**
**சடுகதிப் புரவிபாயப்**
**புக்கினன் தபோவ னத்தின்**
**புனிதநற் புலத்தி னுள்ளே!**

*மாடவ்யனுடன், துஷ்யந்தன் அரங்கினுள் நுழைகிறான்.*

*அந்தத் தபோவனத்தின் அழகில் மெய்மறந்து, அதிற் தவழும் சாந்தியையும் அமைதியையும் உள்வாங்குகிறான் துஷ்யந்தன்!*

*துஷ்யந்தன் :*

**எப்படிச் சொல்வனப்பா! இவ்வழகினை**
**எப்படிச் சொல்வனப்பா!**



**கற்பகச் சோலையைக்**
**கந்தர்வ மாலையை...**
**எப்படிச் சொல்வனப்பா!**
**எப்போதும் இலா இன்பம்**
**என்னுளே புகுந்த தேன்?**
**கற்பனைகடந்ததோர்**
**காட்சிகள் விரிவதேன்?**
**- எப்படிச்**

*மாடவ்யன் :*

**தப்பேதும் அறியாத் தவமுனிவர்களைத்**
**தாங்கிடும் தபோவனமன்றோ? - இங்கு**
**நிற்பது கூட நமக்கடுக்காது!**
**புறப்படலே நலமன்றோ?**

*துஷ்யந்தன் :*

**முற்பயன் விளைவாய்**
**முனிவரின் நிழலில்**
**இப்படி ஒருசில காலம் - நான்**
**சொற்பமாய்க் கழிக்கச்**
**சுதந்திர முண்டேல்**
**எத்தனை சுகம் எந்தன் நண்பா!**

*மாடவ்யன் :*

**ஒப்பிடுவாரோ? உயிர்தவமக்கள்!**
**நம்போன்றோர் உலவிட... இங்கே!**
**செப்பமாய்க் கிடைக்கும் செபித்திடுவார்கள்!**
**அப்பனே வாரும் நாம் போவோம்!**

*துஷ்யந்தன் :*

**முப்படை கொண்ட மன்னர்க்கும் இந்த**
**முனிவரின் முகத்துதிதேவை!**
**தப்பேதும் இல்லை தனித்து நான் சிலநாட்**
**தங்கியே வருவேன் நீபோவை!**

*மாடவ்யன் :*

**கொற்றவன் உன்னைக்**
**கொண்ட உன் மக்கள்**
**குணநலம் மறந்திடலாமோ?**
**பெற்றவள் உன்தாய்**
**பிறதற்றுவள் உனக்காய்**
**பேசாமல் வந்திடு மன்னா?**
**புற்றுறை பாம்பும்**
**புலிசிங்கம் கரடியும்**
**நற்றோழராகுவாரோ?**
**வெண்தாடி முனிவரும்**
**விறைப்பான முகங்களும்**
**முன்தோன்ற வாழலாமோ?**

*துஷ்யந்தன் (சற்று சினத்துடன்) :*

**சற்றேனும் புரியாமற்**
**சலிக்கின்றாய் மாடவ்யா!**
**சஞ்சலம் கொள்வதேனோ?**
**பொற்தேரில் வரழ்க்கையும்**
**புளிக்கலாம் நண்பரே**
**புரிந்திட வேண்டுமையா!**

**கற்கோபுரங்களும்**
**கரகோசங்களும்**
**நித்திரை தரவில்லையே - நெஞ்சில்**
**நிம்மதி தரவில்லையே!**
**பித்தாகினேன், இதைப்**
**பிரிந்திட மனம் இல்லை!**
**சற்றாறி வருவேனப்பா! - எனைப்**
**பெற்றாள் முன் சென்று**
**பொய்க் காரணம் சொல்லிப்**
**பொறுமையாய் இருக்கவைப்பாய்!**

துஷ்யந்தன் திடமாகக் கூற
மாடவ்யன், அரங்கினை விட்டு வெளியேறுகிறான்!



துஷ்யந்தன், தபோவன அழகில் மூழ்கியவாறு,
மறுதிசையில் நடக்கிறான்!
இப்போது, தன் தோழியருடன்,
சகுந்தலை தபோவனத்திற் தோன்றுகிறாள்!
அழகிய மாலைநேரம்!
சகுந்தலை தன் தோழியருடன்...
தபோவனத்தின் மரஞ்செடிகளிற்கு மத்தியில்
ஆடியும் பாடியும் களிக்கிறாள்!
புள்ளிமானும் அவர்களுடன் குலவி நிற்கிறது!

*பிரியம்வதா :*

**வருவான் உன்முன்**
**ஒரு வான் - அழகன்**
**வரைவான் ஆயிரம் வரிகள் - நெஞ்சில்**
**உறைவான் பூமழை சொரிவான்!**

*அனுசூயா (மானை அணைத்தவாறு):*

**தருவான் தலைவன்**
**தனியாய் ஆயிரம் முத்தம்!**
**தரைவான் கண்களை மூடும் - இந்தக்**
**கலைமான் மறைவிடம் ஓடும்!**
(கலைமானை இறுக அணைத்துக்கொள்கிறாள், அனுசூயா)

*சகுந்தலா :*

**குருவானவரின்**
**குழந்தையை ஒருவன்**
**கொள்வானோ அடி தோழி!**
**அடிவானந்தனை**
**ஆழ்கடல் தொட்டதாய்**
**வரலாறுண்டோ? தோழி!**

இப்போது... துஷ்யந்தன், இவர்களின் ஆடல் பாடலை ரசித்தவாறு பின்னே வந்து, மரத்தடியில் ஒளிந்து நிற்கிறான்!

பிரியவம்தா :

**வானத்தின் அழகிய**
**தேவதை உன் தாய்!**
**வரைந்தனன் ஓவிய**
**மாயுனைத் தவத்தோன்!**

அனுசூயா :

**கானகத் தாய் தன்**
**கரங்களால் வளர்த்தாள்!**
**கரைந்திடுவாய் நீ**
**காதலின் வளத்தால்!**

இப்போது துஷ்யந்தன் அவர்கள் முன் தோன்றுகிறான்!

அவன் சகுந்தலையைப் பார்க்க...
சகுந்தலை அவனைப் பார்க்க
தோழியர் அவர்களையும் பார்த்து,
தம்மையும் மாறி மாறிப் பார்க்கின்றனர்!
மானும்... இருவரையும் மாறி மாறிப் பார்க்கின்றது!
சகுந்தலையும், துஷ்யந்தனும், பிரிய முடியாதவர்களாகப்
பார்வையினாற் பிணைக்கப்படுகின்றனர்!
கண்ணொடு கண்ணொக்க நோக்கும் காட்சி யாகி,
இது காதலாகப் பரிணமிக்கிறது!

தோழியர், சகுந்தலையை அப்பிடியிலிருந்து மீட்டுச் செல்ல முயல்கின்றனர். தோற்றுப் போனவர்களாக அங்கிருந்து வெளியேறுகின்றனர்.

'சகுந்தலை – துஷ்யந்தன்' காதலின் வளர்ச்சியைக் காட்டும் காட்சி! (வாத்திய இசையில் ஆரம்பிக்கலாம்)

தூரத்தில் இருந்து... கண்களாற் சந்திப்பு நடத்திய
அவர்கள், (நடன ஆட்டத்தின் வளர்ச்சியோடு),
கொஞ்சங் கொஞ்சமாக நெருங்கத் தொடங்கி,



இறுதியில், ஒருவருடன் ஒருவர் சங்கமிக்கிறார்கள்)

இப்போது, தோழியர் மீண்டும் தோன்றி, சகுந்தலைக்குக் கண்வரை ஞாபகப்படுத்திச் சகுந்தலையை மீட்டுச் செல்கிறார்கள்.

அரங்க விளக்கு அணைந்து மீண்டும் ஒளிர்கிறது! –

அரங்கில் மாடவ்யன்... துஷ்யந்தனைத் தேடி வருகிறான்!

முனிகுமாரர்கள் இருவரைச் சந்திக்கிறான்

சகுந்தலையும், தோழியரும் தூரத்தில் நின்று உரையாடிக் கொண்டு, மாடவ்யன் வருதலையும், முனிகுமாரருடன் உரையாடுவதையும் கண்காணிக்கின்றனர்.

மாடவ்யன்

**மன்னவன் ஈங்கு வந்து**
**மாதங்கள் உருண்டு சென்றும்**
**இன்னமும் மீண்டானில்லை**
**ஏதொன்றும் அறிந்தோமில்லை!**
**அன்னையங்கவனுக்காக**
**ஆவலாய்ப் பார்த்து நெஞ்சப்**
**புண்ணொடு நின்றாளையா**
**பொறுமையாய் உதவுவீரே!**

முனிகுமாரன் (சற்று ஏளனமாக)

**மன்னனா? எமது மார்க்கம்**
**மாதவ மார்க்கமன்றோ?**
**என்னநீர் உரைத்தீர்? இங்கு**
**எவர் வந்தார்? விளக்குவீரே!**

மாடவ்யன் (அதிர்ச்சியடைந்தவனாக)

**அஸ்தினாபுரியின் மன்னன்**
**அழகன் ஓர் உயர்ந்த வீரன்**
**நட்பினால் எனக்குத் தோழன்**
**நாட்டிற்கோ அவனே தெய்வம்!**
**அன்று நாம் வேட்டையாடி**

**அதன் பின்னே கொஞ்ச நாழி**
**இங்கு தான் இளைப்புமாறி**
**இன்பமாய்க் கழித்தோம் பின்னர்**
**'சென்றுவா நண்பா! நான்பின்**
**தொடருவேன்' என்றே யென்னை**
**அன்பினால் அனுப்பிவைத்தான்!**
**அவனைத்தான் தேடி வந்தேன்!**

*இப்போது முனிகுமாரன் (2) – (1) இன் பக்கம் சென்று, காதில் ஏதோ முணுமுணுத்துவிட்டு...*

*முனிகுமாரன் (2) :*

**அரண்மனைக் காவற்காரன்...**
**தான் எனக் கூறியிங்கே...**
**அறம்வளர் பர்ணசாலை**
**அமைத்துளான்... உனது நண்பன்!**
**பரம்பரை வீரன் போலப்**
**பாதுகாத்தெம்மை யன்புச்**
**சுரமதை மீட்டி நின்றான்!**
**சுறுக்கென வாருமையா!**

*(இருவருமாக மாடவ்யனைக் கூட்டிச் செல்லவும்,*
*துஷ்யந்தன் வரவும் சரியாக வுள்ளது!*
*(சகுந்தலையும் தோழியரும் ஓடிச் சென்று,*
*மரத்தின்பின் மறைந்து நின்று,*
*நடப்பதை உற்று அவதானிக்கின்றனர்!)*
*(மன்னனைக் கண்ட மாடவ்யன், மட்டற்ற மகிழ்ச்சியுடன்*
*ஓடிச்சென்று கட்டித் தழுவுகிறான்)*

*மாடவ்யன்*

**என்னண்ணா நடக்குதிங்கே?**
**ஏதண்ணா இந்தக் கோலம்!**
**சொல்லண்ணா எனக்கும் கொஞ்சம்!**
**சுவைபடக் கேட்பன் நானே!**



*மன்னன், ஏதோ கள்ளத்தனம் செய்தவனாக...*
*முனிகுமாரர்களை ஒருமுறை பார்த்துவிட்டு,*
*மாடவ்யனை ஒரு பக்கம் இழுத்துச் செல்ல எத்தனிக்கிறான்!*
*முனிகுமாரர்களோ, அவனை விட்டபாடில்லை!*

*முனிகுமாரர்*

**எங்களுக்கும் சொல்லுங்கையா?**
**எட்டப்போக வேண்டாம்!**
**பெண்களுக்கும் சொல்ல வேண்டும்!**
**பெட்டைப் பயம் வேண்டாம்!**

*இப்போது,*
*சகுந்தலையும் தோழியரும் முன்னே வருகின்றனர்!*
*துஷ்யந்தன், குற்றம் செய்த சிறு குழந்தையைப் போல*
*சகுந்தலையை அச்சத்துடன் பார்க்கிறான்!*
*(ஏனையவர்கள் அரங்கை விட்டு அகலுகின்றனர்)*

*துஷ்யந்தன், ஓடிச்சென்று சகுந்தலையின் கரங்களைப் பிடிக்க, சகுந்தலை, ஒரு பொய்யான கோபத்துடன் அவனது கரங்களை உதறி விடுகிறாள்!*

*துஷ்யந்தன் (கெஞ்சும் குரலில்) :*

**நாட்டுக்குத் தான் நான் மன்னவனாம் – என்**
**நாயகி உனக்கு இல்லை!**
**காட்டுக்குட் தபோவனம் கண்ட பின்னர் – என் காயமே**
**முனிவர் முல்லை!**

**சேற்றினிற் பூத்தவன் என்று என்னை நீ**
**சினப்பது நியாயம் இல்லை!**
**கூற்றுக்கு வார்த்தைகள் வருகுதில்லை – என்**
**தப்புக்கு மன்னிப்பில்லை!**

*சகுந்தலை :*

**கண்டவுடன் காதல் கொண்டு**
**களித்த பின்னர் ஓடுகின்ற**

மந்தைகளின் வர்க்கமில்லை நான்!
கொண்டவனைக் கோயிலெனக்
கும்பிடுவோர் சொர்க்கமதில்
நின்ற எனை நீ ஏனோ தொட்டாய்!

*துஷ்யந்தன் :*

*(வேதனையில் அவனது விழிகள் குளமாகுகின்றன)*

அம்புகள் எதற்கடி ஆருயிரே! - உன்
அன்புக்கு நான் அடிமை!
தென்படும் ஒருநாள் எனது நெஞ்சம் - நான்
தேடுவதுன் நிழலே!

*சகுந்தலா :*

ஏற்பரோ எனை உன்
ஏனைய உறவுகள்!

பார்ப்பரோ என்னைப்
பாவலர் காவலர்!
சேர்ப்பரோ அரண்மனைச்
சேடியர் தாதியர்
நீர்ப்படுமோ நெய்
நீ சொல்வாய் மன்னா?

*துஷ்யந்தன் :*

கண்ணே என் கருமணியே!
காதலின் ஓவியமே!
உன்னை மணம் புரிந்து செல்வேன்!
உயிர் வரையில் அறிந்து செல்வேன்!
அன்னையவள் ஆசியுடன்
அழைத்துச் செல்ல நான் வருவேன்!

இப்போது துஷ்யந்தனின் உள்ளன்பைப் புரிந்து கொண்டவளாகக் காணப்படுகிறாள் சகுந்தலை!

துஷ்யந்தன், இப்போது திடீரெனத் தனது ராசமோதிரத்தை உருவிச் சகுந்தலையின் விரலில் அணிகிறான்.



வனதேவதைகள் மங்கள இன்னிசை வாத்தியங்கள் மீட்கின்றன! கௌதமியுடன், தோழயரும், முனிகுமாரர்களும் தோன்றுகின்றனர்!)

(மாடவ்யன் இக்காட்சியிற் தோன்றுதல் கூடாது)

கந்தர்வ மணம் நடக்கிறது!

*பின்னணியிற் பாடல்*

ஊழ்வினை வந்து ஊட்ட
உயர்வுகொள் தபோவனத்தில்
வாழ்வினால் இணைந்தார் அம்மா
மன்னனும் முனிவன் சேயும்!

குருமகளும் கோமகனும்
இதயங்கள் கலந்தார்!
வருதுயரம் தெரியாமல்
பயணத்தில் நடந்தார்!

அரங்க விளக்கு அணைகிறது

## காட்சி 2

*பின்னணியில் குரல் :*

“கண்வர்... யாக யாத்திரையிற் சென்றிருக்க...
அவரில்லாத சமயத்தில்,
விதிவழி... துஷ்யந்தன்...
சகுந்தலையிடம் தன் இதயத்தைப் பறிகொடுத்தான்!
சகுந்தலை...
இன்பக் கனவுகளில் இமைமூடினாள்!
பின்னர், அவன் மன்னனென அறிந்து,
சினமுற்றுச் சிவந்தாள் சகுந்தலை!
விதி யாரைத் தான் விட்டது!
அவர்களைக் கூட்டி வைத்தது!
காதல்... கந்தர்வமணமாகக் கனிந்தது!

சகுந்தலையின் விரல்களில்...

கணையாழியை அணிவித்துவிட்டு...

அவள் கருவில் உயிர்வித்திட்டு விட்டுப்

பர்ணசாலையை விட்டு...

அரசமாளிகையை நோக்கிச் சென்றான் மன்னன் துஷ்யந்தன்!

அவன், எப்போது வருவானோ? என்ற ஏக்கத்தில்

அழகிய நீர்த் தேக்கத்தின் முன்னால்

சகுந்தலை அமர்ந்திருக்க...

ஊக்கத்தோடு, விதி,

சகுந்தலையின் வாழ்விற்குள் துருவாசர் வடிவில் நுழைகிறது!

அரங்க விளக்கு ஒளிர்கிறது!

அரங்கில் தடாகம் அத்தடாகத்தின் விளிம்பில்...

தனது தலைவனின் எண்ணத்தில் (உலகினை மறந்து) மூழ்கியிருக்கிறாள் சகுந்தலை.

அவளது மான், அவளருகே படுத்திருந்து தனது அன்புத் தோழியின் முகபாவங்களை அவதானித்துக் கொண்டிருக்கிறது.

இப்போது கண்வரின், நண்பர் துர்வாசர், தனது நண்பனைத் தரிசித்துச் செல்ல, அவரது ஆசிரமத்திற்கு வருகிறார்!

அங்கே, சகுந்தலை, சிலையாக இருப்பதைக் காண்கிறார்!

துர்வாசர் (அடிக்குரலில்... மிகவும் மெதுவாக)

**"மகளே!"**

அவள் கவனிக்காமல் தனது எண்ண அலைகளை ஏந்தி

விளையாடிக் கொண்டிருக்கிறாள்!

(கொஞ்சம் உரத்த குரலில்)

**"பெண்ணே"**

(மேலும் சற்று உரத்த குரலில்)

**"அடி பெண்ணே!"**

பின்னர் (ஆத்திரம் பொங்க)



துர்வாசர்:

**செவி கேளாப் பெண்ணே!**<br>
**அடி பேதைப் பெண்ணே!**<br>
**ஆரை நீ நினைத் திருந்தாய்!**<br>
**புவி போற்றும் என்னைப்**<br>
**புறக்கணித்தாயோ?**<br>
**புரியாமல் நடக்கிறாயோ**

துருவாசர் (ஆத்திரத்தோடு - சாபமிடுகிறார்)

**தவமகன் வரவுதான் கண்டும் நீ**<br>
**தலைதாழ்த்தி யிருந்தனை மங்கை நீ!**<br>
**எவன் முகம் உன் நெஞ்சில் நிற்குதோ - அவன்**<br>
**உன் முகம் மறந்திடக் கடவது!**

(இப்போது அனுசூயாவும், பிரியம்வதாவும் பர்ணசாலைப் பக்கம் வந்து, முனிவரின் கோபாவேசத்தையும், அவரிடும் சாபத்தையும் கண்டு, பதறுகின்றனர்)

துருவாசர் :

**எவன் முகம் உன் நெஞ்சில் நிற்குதோ - அவன்**<br>
**உன்முகம் மறந்திடக் கடவது**<br>
**புவனங்கள் போற்றிடும் என்னை நீ**<br>
**புறக்கணித்தாய் அதன் விளைவிது!**

முனிவர், கோபதாண்டவம் ஆடிவிட்டு புறப்பட ஆயத்தமாகிறார்! பிரியம்வதாவும், அனுசூயாவும், பதறியபடி, ஓடிப் போய், முனிவரின் கால்களைப் பிடித்துக் கொண்டு வேண்டி மன்றாடுகின்றனர்!

பிரியம்வதா

**ஐயா பெருந்தவத்தோய்!**<br>
**அறம் போற்றும் ஆசிரிய!**<br>
**தையல் பிழை தவிர்த்து**<br>
**தந்த சாபம் மீட்டிடுவீர்!**<br>
**ஐயா! ஐயா! ஐயா!**

துருவாசர்

வந்தாரை மறந்தாளை
வரவேற்க மறுத்தாளை
நண்பார்ந்த கண்வரில்ல
நல்ல பண்பைத் துறந்தாளை
நொந்தே சபித்தேன் நான்
நொடியுமிங்கு தரியேனே!

(என்று கூறி, அவர்களை உதாசீனம்செய்து போக எத்தனிக்கிறார்)

இப்போது அனுசூயா... முன்சென்று அவரை மறித்தபடி... வேண்டுகிறாள்!

அனுசூயா

அன்பால் இணைந்தானை
அகத்தேந்தி யிருந்தாளை
முன்தோன்றி நின்ற
முனிமகனைக் காணாது
நின்றாளை மன்னித்து
நீரருள மாட்டிரோ?
ஐயா! ஐயா! ஐயா!

துருவாசர்(சற்றுச் சினந் தணிந்து)

சரி! சரி! சரி! சரி!
போகட்டும்! – நான்
சாபவிமோசனம் தந்தேன்!
பரிவுடன் அவள்தனை மன்னித்தேன்! – ஒரு
பரிகாரம் நானிங்கு சொல்வேன்!
இவளை மறந்த இனியவன் – மீண்டும்
இவளை நினைப்பான் – இவளிடம்
தனது நினைவாய்க் கொடுத்தது கண்டால்!'
தந்தேன் சாப விமோசனம்!



என்று கூறிவிட்டு பர்ணசாலையை விட்டுச் செல்கிறார்!

அரங்க விளக்கு அணைகிறது

## காட்சி 3

திரைக்குப் பின்னால்... குரல் :
யாக யாத்திரை மேற்கொண்ட கண்வர்,
தமது தபோவனத்திற்கு மீள்கிறார்!
அப்போது...
வனதேவதைகள்... அவரை வணங்கி நிற்க,..
வானத்திலிருந்து ஓர் அசரீரி கேட்கிறது!
இக்குரலைத் தொடர்ந்து
அரங்கினுள் நுழைகிறார் கண்வர்!
பின்னணியிற் பாடல் (அசரீரி) :

அசரீரி :

பெருந்தவ முனியே கேளாய்!
பெண்ணவள் உனது செல்வி
பொருந்தினள் பூருவம்சப்
புத்திரன் தனக்கு ஆளும்
அருந்திறன் கொண்ட நல்ல
அரசரின் வம்சத்தார்க்குத்
தரும் கடன் கொண்டாள் தாங்கித்
தரித்தனள் கரு வொன்றாங்கே!

(கண்வர் சற்றுக் கலக்கமடைகிறார்!)

அசரீரி (தொடர்கிறது)

பெருவிதி யாத்த கோலம்
புரிந்திடு கண்வா! – உந்தன்
குருகுலம் தாழ்ந்த தென்று
கொண்டிட வேண்டாம் ஐயா!
பருவமும் பாங்கும் காதற்
பழமெனக் கனிந்த தாலே

**வருடி நீ அவளை வாழ்த்தி**
**வழயனுப்பிடுவாய் கண்வா!**

முனிவர், இவ்வசரீரி கேட்டு

ஒருவாறு தெளிவடைந்து, பயணத்தைத் தொடர்கிறார்!

அரங்க விளக்கு அணைந்து மீண்டும் ஒளிர்கிறது!

அரங்கில் கண்வரின் பர்ணசாலை முற்றத்தில்...

கண்வர், கல்லணை மீது அமர்ந்திருக்க...

சகுந்தலை அவரது காலடிகளிற் பணிந்து

வணங்கி நிற்கிறாள்!

கண்வர், சகுந்தலையின் தலையினை வருடி,

அவளை வாழ்த்தி ஆசீர்வதிக்கிறார்!

பக்கலில் கௌதமிப் பாட்டி நின்று கொண்டிருக்கிறாள்!

மெதுவாகத் தமது இருக்கையை விட்டெழுந்த கண்வரின் முகத்திற் சற்றுக் கலக்கம் தோன்றுகிறது!

கொஞ்சநேரம் ஆழமான சிந்தனையில் மூழ்குகிறார்!

கௌதமிப்பாட்டியை...

ஒரு பக்கம் அழைத்துச் செல்கிறார்... கண்வர்!

கண்வர் :

**சென்ற மன்னன் மீண்டு வரத் தாமதமேன்? – தான்**
**கொண்டஇவளைக் கூட்டிச் செல்லத் தாமதமேன்?**
**தந்தைமுகம் காணாமற் தவப்புதல்வன் – இந்த**
**கண்வர் இல்லக் குடிசையிலே பிறக்கலாமோ?**

கௌதமி

**அந்தத் தவம் குழந்தைக் கென்றால் அதைத்தடுக்கும் – பலம்**
**யாருக்குத் தான் இருக்குமெங்கள் அருட் குருவே!**
**என்ற போதும், உங்கள் அச்சம் நானறிவேன்! – எங்கள்**
**கண்கள் போன்ற சகுந்தலைக்குப் பெருமை செய்வோம்!**



கண்வர்

**கூட்டிச் செல்ல நாட் குறிப்பாய் கௌதமிப் பாட்டி!**
**நாட்டிற் கெந்தன் அன்பு மகள் செல்வதே நேர்த்தி!**
**கூட்டி வா... நற் தோழியரைக்**
**குலவிளக்காய் அலங்கரிக்க!**
**ஆற்றைக் காட்டைக் கடந்து சென்று**
**அரச கோட்டம் அடைதல் வேண்டும்!**

இப்போது கௌதமிப் பாட்டி வெளியே சென்று...

பிரியம் வதையையும், அனுசூயாவையும் அழைத்து வருகிறாள்.

அனுசூயாவும், பிரியம்வதையும், கண்வரின் கண்டிப்பையும் தண்டிப்பையும் நோக்கி அச்சத்துடனும் பீதியுடனும் வருகின்றனர்!

கண்வர்

**செல்வக் குடும்பம் புக்ககமாய் – எம்**
**செல்வியை அனுப்பிடுவோம்!**
**உள்ளத்தழகும் உடையும் நகையும்**
**அள்ளிக் கொடுத்திடுவோம்!**

இப்போது, முனிகுமாரன் ஒருவன், வனதேவதையின் பரிசாக நல்லாபரணங்களைக் கொணர்கிறான்.

முனிகுமாரன்

**தந்தனர் இவற்றை எங்கள்**
**தபோவனத் தேவர் தங்கள்**
**அன்பினைச் சகுந்தலைக்கு**
**அளித்தனர் நகைகள் ஆடை**
**பன்னிறப் பூச்சு மைகள்**
**பலவகை வாச நெய்கள்**
**இன்னவை பலவும் தந்து**
**கண்கள் நீர் பெருக்கினாரே!**

கௌதமிப் பாட்டி...

இவ்வாபரணங்களை வாங்கி,

பிரியம்வதையிடம் கொடுக்கிறாள்.

கண்வர் அரங்கை விட்டு விலக...

அனுசூயாவும், பிரியம் வதையும்...

பர்ணசாலைக்குள் செல்கின்றனர்!

**அரங்க விளக்கு அணைகிறது**

அரங்க விளக்கு, மீண்டும் எரிய...

அரங்கில், தோழியருடன் சகுந்தலை தோன்றுகிறாள்!
உடைகள் ஆபரணங்கள் என
அலங்காரங்கள் நடைபெறுகின்றது!

சகுந்தலை புறப்படத் தயாராகிறாள்!

*(காட்சி தொடர்கிறது)*

சகுந்தலையைத் தோழியர் அலங்கரித்து முடிக்கவும், கௌதமிப்பாட்டி அரங்கினுள் நுழைந்து சகுந்தலையின் தலையை வருடி நெட்டி முறித்துக் கண்ணூறு கழிக்கிறாள்!

இதனைத் தொடர்ந்து

கண்வரும், முனிகுமாரர்களும் (சார்ங்கரவன் சாரத்வதன்) அரங்கினுள் நுழைகின்றனர்!

கண்வர்

**கானகத்தாய் கையளித்தாள் அன்று உன்னை!**
**கண்மணிபோற், காத்து வளர்த்துரிமை கொண்டேன்!**
**வானகத்தார் வாழ்த்துடனே இன்று உன்னை**
**வழியனுப்பி வைப்பதற்கு முடிவு செய்தேன்!**

**உன்னகத்தின் உயிரானான் உயர்ந்த மன்னன்**
**ஒளிபடைத்த சந்ததிக்குத் தாயுமானாய்!**
**என் மகளே! எல்லாமும் பெற்று வாழ்வாய்**
**என்றுன்னை வாழ்த்தி இறைவேண்டினனே!**



*(சகுந்தலை உணர்ச்சி பொங்க கண்வரின் கால்களில் வீழ்கிறாள்)*

*(வீழ்ந்தவளை அள்ளி எடுத்து நிற்க வைக்கிறார் கண்வர்)*

பார்த்து நின்ற கௌதமியும், முனி குமாரரும், தோழியரும் கண்கள் குளமாக, பிரிவு வேதனையில் மிதக்கின்றனர்!

சகுந்தலை (கண்ணீர் தாரை தாரையாகப் பொழிய நின்றவாறு)

பாடல்

**மாதவகுருவே மாதா பிதாவே!**
**நீதந்த வாழ்வுக்கு நன்றி!**
**ஆதவனாகி அறிவொளி தந்தாய்**
**அன்புக்கும் சின்னவள் நன்றி!**
**காதலின் வழியில் யாவையும் இழந்தேன்**
**கருணையால் மன்னித்து மறந்தீர்!**
**சீதனமாய் உன் போதனை கொண்டேன்**
**சென்று நான் வருகின்றேன் அப்பா!**

சகுந்தலை, துயரம் பீறிடக் கண்வரைக் கட்டியணைத்துக் கொள்கிறாள்!

கண்வரும், தம்மையும் மீறிய நிலையில் உணர்ச்சியில் ஓரிரு கணங்கள் தள்ளாடிப் பின்னர், தமது தவ வலிமையால் தமது உணர்வுகளைக் கட்டுப்படுத்துகிறார்!

கண்வர் :

**எழுதிய கரங்கள் எங்கோ இருந்து**
**எமைப்பார்த்துச் சிரிக்குது மகளே!**
**உழுபவன் யாரோ உழைப்பவன் யாரோ**
**விளைவது சேரிடம் வேறு!**

**இதுதான் நியதி இறைவன் வகுத்த**
**வழியினில் வாழ்வது அறி நீ!**
**கலங்காதே நீ! காலடி யெடுத்துக்**
**கணவன் கோயிலை அடை நீ!**

**விளங்கு முன் குடும்பம்!**
**விரிந்திடும் ஆட்சி!**
**வணங்கினேன் சென்றுவா மகளே!**
கண்வரின் அறிவுரையால்,
ஒருவாறு தேற்ற மடைந்த, சகுந்தலை,
தனது தோழியரைப் பாசத்துடன் பார்த்துவிட்டு,
அவர்களை ஓடிச் சென்று,
கட்டியணைத்து முத்தமிடுகிறாள்!
அவர்கள், துக்கத்தை யடக்க முடியாது,
விம்மி விம்மி யழுகின்றனர்!
இப்போது, சகுந்தலை வளர்த்த மான்,
சகுந்தலையின் ஆடையைக் கடித்து
இழுத்து... அவளது கவனத்தை யீர்க்க முயல்கிறது!
சகுந்தலை, தரையில் அமர்ந்து,
மானைத் தழுவிக் கொள்கிறாள்!
மானைத் தோழியரின் கைகளிற் கொடுத்து,
பிரிய முடியாத நிலையிற் பிரிகிறாள்!
கௌதமியும், முனிகுமாரர்களும் முன்செல்ல,
சகுந்தலை தயங்கித் தயங்கிச் செல்கிறாள்!
ஓரிரு அடிவைத்தவள்,
மீண்டும்,
எல்லோரையும் திரும்பிப் பார்த்துக் கைகாட்டுகிறாள்!

**அரங்க விளக்கு அணைகிறது**

## காட்சி 4

துஷ்யந்தனின் அரண்மனைக் கூடத்தில்...
மன்னன் அமர்ந்திருக்க.,
பிரதம மந்திரி வருகிறான்! –



பி. மந்திரி (தாள லய மெட்டில்)

**அன்புள்ள மன்னனே! அரண்மனை வாயிலில்**
**அறிந்ததைக் கூறவந்தேன்!**
**கண்வராம் மகரிஷி அவர் தபோவனத்திலே**
**இருந்து வந்தவரைக் கண்டேன்!**
**தங்களைக் காணவும், கண்டு அன்பாடவும்**
**வந்ததாய்க் கூறி நின்றார்!**
**உன்பதில் அறிந்து நான் மீள்வதாய்க் கூறினேன்!**
**முனிவரைக் காண்பயாமோ?**

மன்னன்

**கண்வரா? அவர் பற்றி**
**முன்பு நான் அறிந்துளேன்**
**என்வயம் உதவிகோரி...**
**வந்துளார் அவர்களை**
**வரவேற்று அனுப்புங்கள்**
**வரட்டும் நான் காத்திருப்பேன்!**

(இப்போது மந்திரியின் ஆணைப்படி,
உள்ளே நுழைகின்றனர் கௌதமியும், முனிகுமாரர்களும்!
அவர்கள் பின்னே முகத்திரையோடு, சகுந்தலையும் தொடர்கிறாள்!
இவர்களின் வருகை கண்ட மன்னன்,
அவர்களை வணங்கி நிற்கிறான்!
(சகுந்தலை, முகத்திரைவழி,
ஆவலுடன் மன்னனைப் பார்க்கிறாள்)
(இதனைக் கவனிக்காத நிலையில்)

துஷ்யந்தன் : (எதுவுமறியாதவன் போல)

**வருக வருக உயர் தபசிகளே!**
**தருக தருக உங்கள் ஆசிகளே!**
**அரசனின் குடிசை செய்த தவம் – என்னால்**
**ஆவது உண்டேல் அது என் தவம்!**

**கண்வர் நலமா,**
**முனிவர்கள் நலமா,**
**அன்பன் அவர்கள்**
**அடிகள் பணிந்தேன்!**

இவ்வாறான, ஒரு வரவேற்பைச் சற்றும் எதிர்பார்க்காத கௌதமியும், முனிகுமாரர்களும், சகுந்தலையும், வியப்பும் அதிர்ச்சியும் அடைகின்றனர்!

*சார்ங்கரவன்*

**வணக்கம் மன்னா!**
**வாழ்த்துக்கள் கோடி!**
**வையம் பெறுக நல்இன்பம்!**
**இணக்கம் கொண்டு**
**எமைக் கண்டமைக்கு**
**இதயம் நிறைந்த நம் நன்றி!**

*சாரத்வதன் (சகுந்தலையைக் காட்டி)*

**குலப் பெண் சகுந்தலை**
**உனக் கென்றாக்கிப்**
**பல நாள் ஆனது அன்றோ?**
**நிலத்திற் பெண்கள்**
**நிழலெனத் தங்கள்**
**கணவரை நினைப்பரும் அன்றோ!**

*கௌதமி*

**அதனால் எங்கள்**
**அருமைப் புதல்வியை**
**அழைத்து நாம் உம்மிடம் வந்தோம்!**
**குருவாம் கண்வர்**
**புதல்வியை உங்கள்**
**கரத்தினிற் தந்திட வந்தோம்!**

இப்போது, துஷ்யந்தன், எதுவும் புரியாதவனாக, அங்கே முகத்திரையுடன் நிற்கும் அந்தப் பெண்ணையும், அவர்களையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு...



*துஷ்யந்தன் :*

**என்ன புதுக்கதை? எனக்குப் புரியவில்லை!**
**எல்லாம் மர்மமாய் இருக்கிறது!**
**பெண்ணிவள் யாரோ, பேதைக் கென்பேரோ?**
**சொன்னாற்றானே தெரியுமையா?**

இது கேட்ட, சகுந்தலை திடுக்குற்று, மயக்கமுற்று... விழப்போக, கௌதமி ஓடிச் சென்று அவளைத் தாங்கித் தரையில் அமர்த்துகிறாள்!

*சாரத்வதன் (சற்று ஆத்திரத்துடன்)*

**மன்னா! என்ன...**
**தூங்குகிறாயா?**
**மதுவின் மயக்கந் தானா?**
**பெண் யார் என்று தெரியாதா? – நீ**
**பேசுவதெம் கனவா?**

*மன்னன்*

**மதிப்புக்கு உரிய மாதவ முனிவரே!**
**குதிப்பதைக் குறையுமையா?**
**சகிப்புக்கு மீறிய கற்பனை உமக்குள்**
**உதிப்பது கொடுமை ஐயா!**

இப்போது கௌதமி, சகுந்தலையை மெதுவாக எழுப்பி, மன்னனின் அருகே கூட்டி வருகிறாள்!

மிகவும் இறைஞ்சுபவளாக,

*கௌதமி :*

**மன்னா! இவளைக் கொன்று விடாதே!**
**எங்கள் மகளை எரித்து விடாதே!**
**கண்வர் உயிரைக் கருக்கி விடாதே!**
**கடவுள் பயிரை மிதித்து விடாதே!**

*துஷ்யந்தன் (இப்போது சற்று பொறுமை யிழந்தவனாக)*

**என்ன பெருங் கொடுமை! – ஒரு**
**மன்னனின் முன்னே**

**முனிவர் பொய் சொல்வது**
**என்ன பெருங் கொடுமை!**
**இன்னொரு வனுக்காய்**
**ஏந்திய கருவுடன்**
**பெண்ணவள் முன்னிருக்க...**
**முன்னுறவில்லா**
**என்னிடம் வந்து**
**சொன்னவை எத்தனை பொய்!**
**தர்மம் இதனை ஏற்குமோ? – என்**
**தலையில் இவளைக் கட்டவோ?**
**சரீரம் எரியுது!**
**சாத்திரம் கருகுது!**
**வருவீர் சென்று முனிவரே!**

(மன்னன் ஆவசேத்துடன் பேசுகிறான்!)

சாரத்விதனும், சார்ங்கரவனும்...

கோபாக்கினி பறக்க ஆடுகிறார்கள்!

கண்வ முனிவரின் சாபத்திற்கும், கோபத்திற்கும் ஆளாகப் போகிறாய்... மன்னா! என, அபிநயங்களின் மூலம் அறிவுறுத்துகின்றனர்!

பெண்ணைக் கெடுத்த பாவம், உன்னையும், உனது மக்களையும், அரசையும் அழிக்க வல்லதென அச்சுறுத்துகின்றனர்!

தாளலய நடையில் இக்காட்சி அமைக்கப்படுதல் வேண்டும்.

இக்போப நர்த்தனம், உச்சத்தில் நடக்கும்போது,

மன்னன், அரங்கில் அங்குமிங்கும் ஓட வேண்டும்.

முனிகுமாரர்களின் ஆட்டத்தின் முடிவில் ஒரு பலத்த ஓசை எழுந்து பின்னர் ஒரு நிசப்தம் எழ வேண்டும்!

குறிப்பு – தாள வாத்தியங்களும் இசைக் கருவிகளும், சுர ஜதிகளும், இக்காட்சியை நிறைக்க வேண்டும்.

இந்த நிசப்தத்தைத் தொடர்ந்து,

கௌதமி, திடீரெனச் சகுந்தலையின் முகத்திரையை இழுத்தெறிகிறாள்.



இப்போது சகுந்தலையின் துயரம், ஆவேசக் கூத்தாக மாறுகிறது.

தன்னை மயக்கிக் கெடுத்துவிட்ட கொடியவனைக் கொன்றழிக்க எழுந்த பெண்மையின் விசுவரூபக் காட்சியினைத் துஷ்யந்தன் எதிர் கொள்கிறான்!

அவளது பார்வையில் விரிந்த தர்மத்தின் வீச்சையும், சத்தியத்தின் ஒளியையும் துஷ்யந்தனால் முகங்கொடுக்க முடியாமற் போகிறது. உண்மையின் உத்வேகத்தை அவனால் உள்வாங்க முடியாத நிலை எழுகிறது. அவளது கற்பின் காய்ச்சலினாற் தாக்குண்டு, துஷ்யந்தன் நிலைகுலைந்து வீழ்கிறான்!

பின்னர், மெதுவாக எழுந்து,

சகுந்தலையின் முன்னே செல்கிறான்!

அவளை ஏற இறங்க நன்கு பார்க்கிறான்!

முகத்தை உற்று நோக்குகிறான்!

இந்நிலையில் மன்னன்

சகுந்தலையின் தூய அன்பினையும்

கருவினுள்ளே வளரும் தனது வம்ச விளக்கினையும்

உயிர்வரை உணர்ந்துகொள்வானென்ற

ஒரு நப்பாசை, முனிகுமாரர்களையும், கௌதமிப்

பாட்டியையும் உரசிச் செல்கின்றன!

அவர்களது முகத்தில், ஒரு நம்பிக்கை ஒளி

வீசி நிற்கிறது!

ஆனால், துஷ்யந்தனோ...

அவள் பற்றித் தனக்கு எதுவித ஞாபகமும் இல்லாத உணர்ச்சியை வெளிக்காட்டியபடி, சகுந்தலையை வணங்கிவிட்டு,

துஷ்யந்தன் (மிகவும் கெஞ்சும் குரலில்)

**பெண்ணின் பெருந்தகையே! உனைநான்**
**பெரிதும் வணங்குகிறேன்!**

உந்தன் கணவன் எங்குள்ளானோ
அறிந்தால் உதவி செய்வேன்!
என்னை விடம்மா! –
நிம்மதி கொடம்மா!
சன்மானம் தருவேன், அம்மா
சன்மானம் தருவேன்!
என் மானம் – இந்த
மண்ணின் மானம்!
புண்ணானேன் புரிவாய்! – அம்மா
போய் வாராய் தாயே!

*சகுந்தலை (துன்பத்தின் எல்லையில்)*

எத்தனை பெண்களின்
ரத்தத்தைக் குடித்தாய்!
கொற்றவை மன்னா கூறு!
சுத்தப் பொய் சொல்வதும்
சுகத்திற்குச் சுழல்வதும்
கற்றது எங்கென்று கூறு!
உன்கரம் பிடித்தே...
உயிரினை ஏந்தினேன்!
உதைக்கிறாய்... இது என்ன நீதி!
சந்ததி வாழத்
தந்திட நின்றேன்!
தர்மத்தைக் கொன்றனை பாவி!

*கௌதமி (குறுக்கிடுகிறாள்)...*

உந்தனை நம்பி
வந்த எம் பெண்ணை
வாய்க்கு வந்ததையெல்லாம் கூறி
நிந்தனை செய்தாய்



செந்தீயைப் பெய்தாய்!
முந்தைய வினை இது மன்னா
இப்போது

*சார்ங்கரவன் (சகுந்தலையைப் பார்த்து)*

புல்லரை நம்பிப்
பெண்மையைக் கொடுப்போர்
எல்லோர்க்கும் இது ஒரு பாடம்!
நல்லவர் குடியில்
நாசத்தை விளைவித்தாய்!
நலிந்து நீ சாகிறாய்... பாவம்!

*சாரத்வதன்*

முல்லைகள் மல்லிகை
மொட்டுகள் பூக்கள்
உள்ளமாய்ப் கொண்டவர் நாங்கள்!
எல்லையை மீறி
எம்முளம் சென்றால்
சொல்லொணாத் துயரமே போங்கள்!

*சார்ங்கரவன்*

வந்த கடமை முடிந்ததே!
வாருங்கள் போவோம்!
கண்வர் கட்டளை முடித்தனம்
வாருங்கள் போவோம்!
என்று கூறிவிட்டுக் கௌதமியுடன் புறப்படத் தயாராகிறார்
இத்தனைக்கும் பின்னர்
துஷ்யந்தனின் அடியுள்ளத்தில்
ஒருவித சலனமும் சஞ்சலமும் பிறக்க...

துஷ்யந்தன் :

**அடையாளம் ஏதும் உண்டோ? - என்**
**அன்பாழம் காட்டிட... உன்பால் நான் தந்ததாய்**
**அடையாளம் ஏதும் உண்டோ?**

இப்போது, கௌதமியின் கண்களில் இன்பமின்னல் பாய்கிறது.

கௌதமி :

**கணையாழி உண்டல்லவோ! அதைக்**
**காட்டிடுவாய் இவன் கண்களுக்கே!**

(என்றபடி, சகுந்தலையிடம் அணுகுகிறாள்)

சகுந்தலை :

**அடையாளம் கேட்ட மன்னா நீர்**
**அரசாளும் முத்திரைக் கணையாழி ஈதோ!**

(என்றபடி தனது விரலிலுள்ள கணையாழியை உருவ முயல்கிறாள்)

அப்போது தான், விரலில் மோதிரம் இல்லாததைக் கண்டு கொண்டு பரபரப்பும் ஏமாற்றமும் அடைகிறாள்!

கௌதமியும் முனிவர்களும் ஏமாற்றத்தால், அதிர்ந்து விடுகின்றனர்!

கௌதமியும், சகுந்தலையும், முனிவர்களும், தத்தம் உடைகளைத் தடவித் தேடிப் பார்க்கின்றனர்!

(நினைவுக்கு வந்தவளாக)

கௌதமி :

**சக்கிரா வதாரம் நடக்கையிலே...**
**சசீதீர்த்தம் எனும் ஆற்றைக் கடந்தோமே!**
**அக்கரையில் நாங்கள் குளிக்கையிலே...**
**அக்கணையாழியை நீ இழந்திருப்பாய்**



(என்று ஆறுதல் சொல்கிறாள்)

இப்போது, துஷ்யந்தன் உண்மையாகவே அவர்களைப் பொய்யர்களாகவும் ஏமாற்றுக்காரர்களாகவும் நம்புகிறான்!

துஷ்யந்தன் :

**வித்தை பலித்திடு மென்றோ - நீர்**
**வீணாய் இவ்வழி வந்தீர்!**
**கத்திக் கதைத்தது போதும், பல**
**காரியம் எனக்குண்டு! ஓடும்**

என்று எள்ளி நகையாடுகிறான்

சகுந்தலை (கற்புத்தீயாக ஒளிர்கிறாள்)

**பெட்புடைய பெண்கள் தமைப் பெற்ற பூமி**
**நற்றாயே நீ பிளந்து என்னை ஏற்பாய்!**
**துட்டனிடம் எனைக் கொடுத்த பாவத்துக்காய்**
**தீத்தாயே எனதுடலை நீயே தீய்ப்பாய்!**
**கற்பிழந்தேன் என்றென்னைக் கெடுத்த பாவி**
**கடுஞ்சொல்லால் என் மானந் தன்னைச் சாய்த்தான்**
**அப்பெரியோன் கண்வருக்குத் தீங்கு செய்தேன்!**
**உடம்பெல்லாம் எரிய இங்கே உருகினேனே!**

இப்போது... திடீரென, வானத்தில் மின்னல் வெடித்துப் புகைப்படலம் ஒன்று புறப்படுகிறது!

இப்புகைப்படலம்,
மன்னனின் அரச கூடத்தினுள் நுழைந்து,
சகுந்தலை முன்னே ஒரு பெண்ணாகத் தோன்றுகிறது.
சகுந்தலையின் அன்னை மேனகை தோன்றுகிறாள்!
சகுந்தலையை அணைத்து, அள்ளியெடுத்தவாறு
வானத்தில் மறைகிறாள்!
எல்லோரும் வியப்பில் அதிசயித்து நிற்கின்றனர்!

அரங்க விளக்கு அணைகிறது

அரங்கின் பின்னணியில் குரல் :

அரசன் முன்னே...

அவமானத்தாலும் ஏமாற்றத்தாலும் தாக்குண்டு தவித்தாள் சகுந்தலை!

கண்வர் தபோவனத்தையும் கறைப்படுத்திவிட்டதாகக் கதறிக் கலங்கினாள் எங்கள் காவிய நாயகி!

துஷ்யந்தன் எனும் துட்டனால், தனது பெண்மைக்குரிய கற்பு துவம்சம் செய்யப்பட்டு விட்டதாகத் துடித்தும் வெடித்தும் சீறிய சகுந்தலையை வானகத் திருந்து வந்து அணைத்து மறைந்தாள், அவளது தாய் மேனகை!

கருவுற்றிருந்த சகுந்தலையை பெருந்தவரிஷியான காசிப முனிவரும் ஆதிதேவியும் தவக்கோலம் பூண்டுள்ள தவச்சாலைக்கு அழைத்துச் சென்று, அங்கே அவர்களின் பாதுகாப்பில் வைத்து ஆதரிக்கிறாள் மேனகை! சானுமதி என்பவள் மூலம், துஷ்யந்தனின் நடவடிக்கைகளையும் அவதானித்தும் அறிந்தும் வருகிறாள் மேனகை!

இவ்வாறிருக்க...

சக்கிராவதாரம் என்னும் ஊரினூடு பாயும் சசீதீர்த்தக்கரைக்கு...

ஒருமுறை நாம் எல்லோரும் செல்வோமா?

அரங்க விளக்கு ஒளிர்கிறது!

(வாத்திய இசை மூலமும், அபிநய முத்திரைகள் மூலமும், மீனவர்களின் காட்சி அமைக்கப்படுதல் வேண்டும்!)

சசீதீர்த்தம் ஆற்றங்கரையில்... ஒரு மீனவன்!

வலை வீசி மீன்பிடிக்கும் காட்சி!

சலசலத்து ஓடும் ஆற்றின் ஓசை!

(ஜதி, சுரங்களுடன் இக்காட்சி அமைக்கப்படலாம்!)



மீன்கள் கூட்டம் கூட்டமாக நீந்திச் செல்கின்றன!

வலைவீசும் மீனவன் முன்...

மீன்கள் வலையிலிருந்து தப்பி ஓடிச் செல்கின்றன!

இறுதியில்

ஒரு பெரும் மீன், மீனவனின் வலையிற் சிக்கிக் கொள்கிறது!

மீனவன் மகிழ்ச்சியோடு

அம்மீனைக் கரைக்கு இழுத்துச் செல்கிறான்!

ஓடிச்சென்று, தன்மனைவியைக் கூவி யழைக்கிறான்!

மனைவி பெரிய கத்தியுடன், ஓடி வர, அதனை வாங்கி, மீனவன் மீனை வெட்டுகிறான்!

வெட்டிய பொழுது அம்மீனின் வயிற்றிலிருந்து ஒரு மோதிரம் வீழ்கிறது!

அம்மோதிரத்தின் ஜொலிப்பையும், கனத்தையும், தரத்தையும் கண்டு, அவற்றை தம்பதியர் இருவரும் மாறி மாறிப் பார்க்கின்றனர்!

மீனவன் : (கணையாழியைக் கையிலெடுத்தவாறே)

**என்னடி பொண்ணு!**
**மின்னுது ஒண்ணு!**
**கூசுதடி என் கண்ணு!**
**பென்னாம் பெரிய**
**மோதிர மொண்ணு**
**பேசுதடி இங்கு நிண்ணு!**

மனைவி (மோதிரத்தைப் பறித்து வாங்கி... பார்த்துவிட்டு...)
(வாயைப் பிளந்தபடி....)

பாடல் :

**அடி ஆத்தா! – என்**
**மூச்சு முட்டுதடி!**
**இதை வித்தா... – நமக்**
**கில்லைக் கஷ்டமடி!**

*மீனவன் :*

**முடிச்சுப் போட்ட காலம் முதல்**
**மோதிரம் நான் போட்டதில்லை!**
**வடிச்சு வார்த்த சிலையுனக்குப்**
**போட வேண்டும்... பொற்கொடியே!**

*மனைவி :*

**பிள்ளை குட்டி கரைச்சலிலை**
**வெள்ளை மயிர் முளைச்சுப் போச்சு!**
**நல்ல கதை சொல்லுறியே...**
**நாலு பணம் சேர்த்துப் போடு!**
**சென்று வித்து வரவேனும் மோதிரத்தை – நாம்**
**செல்வராக மாறிடுவோம் சீக்கிரத்தில்!**

*மீனவன் :*

**ஆத்து நீரு தந்த செல்வம் –**
**அதனை வித்தாத் துன்பம் வரும்!**
**சோத்துக்கும் நாம் அலைய நேரும் – பாரு**
**சுந்தரியே கொஞ்சம் எண்ணிப் பாரு!**

*மனைவி :*

**பட்டினத்து அங்காடி**
**பார்த்திருக்கு எமக்காக**
**கட்டுச்சோறு கட்டுகிறேன் சாமி! – நீ**
**எட்டி நட சுறுக்காகச் சாமி!**

*(இவ்வாறு கூறிக் கொண்டு அரங்கை விட்டுப் புறப்படுகின்றனர்)*

அரங்க விளக்கு அணைகிறது

*மீண்டும் அரங்க விளக்கு எரியும்போது,*
*அஸ்தினா புரி மாடவீதி!*
*அரச காவலர்களின் நடமாட்டம்!*
*அங்காடியில் மக்கள்!*
*விற்பனைக் கூச்சல்களும், வாங்கிச் செல்லும் மக்களும்!*



*இப்போது மீனவனும், அவன் மனைவியும்*
*அங்காடிக்குள் நுழைகின்றனர்!*
*கணையாழியினை மக்களிடம் காட்டி,*
*விற்க முற்படுகின்றனர்!*
*அரச காவலர்கள் இவர்களையும்*
*விற்பனை முயற்சியினையும் உற்று அவதானிக்கின்றனர்!*
*மீனவத் தம்பதியரை அணுகி...*
*அவர்களிடமிருந்து கணையாழியை வாங்கி...*
*உற்றுப் பார்த்துவிட்டுத் திடுக்கிடுகின்றனர்!*
*காவலர்கள் தமக்குள் சைகையால் உரையாடிவிட்டு,*
*மீனவத் தம்பதிகளிடம் வருகின்றனர்!*

*காவலன் 1 (மீனவனைப் பார்த்து)*
*(அதட்டும் குரலில்)*

**எங்கடா! எங்கடா! திருடினாய் திருடினாய்!**
**தங்கமோ திரம் தன்னை நீ!**
**எங்களின் மன்னரின்**
**முத்திரை பதிந்ததைக்**
**கண்டும் நீ விற்க வந்தாய்!**
*(மீனவனும், மனைவியும், ஏதுமறியாமற் பதறுகின்றனர்)*

*காவலன் 2*

**தொங்குவாய் தூக்கிலே...**
**திருகுவார் கழுத்திலே!**
**உன்கதி மரண மன்றோ!**
**மங்கையும் உன்னுடன்**
**மரணத்திற் சேருவாள்!**
**உங்களைத் தெய்வம் காக்க!**

*மீனவன்*

**ஐயகோ! ஐயகோ!**
**பொய்யேதும் அறிந்திலோம்!**
**செய்ததோர் பிழையுமில்லை!**

*மனைவி*

**ஐய நீர் பொறுமையாய்ச்**
**சொல்வதைக் கேளுங்கள்!**
**ஆற்றில் மீன் பிடித்தபோது...**
**மெய்யாய் ஓர் மீனிவர்**
**வலையிலே சிக்கிட**
**மேற்கொண்டு வந்தார் ஐயா**

*மீனவன்*

**ஐய அம்மீனை வெட்ட**
**அதனுளே இதனைக் கண்டோம்!**
**அதனை நாம் விற்க வந்தோம்!**

*காவலன் 1*

**ஆறொன்றும் அதனுள்ளே**
**மீனென்றும் பலகதை**
**ஏனடா கட்டுகின்றாய்?**
**கூறடா உண்மையை!**
**கொற்றவன் உடைமையை**
**ஏனடா திருடி நின்றாய்**

*காவலன் 2*

**ஏனப்பா இவரோடு**
**வீண்கதை... கேள்விகள்!**
**போடப்பா கைவிலங்கை!**
**பாரப்பா நடப்பதை**
**பற்பல பரிசுகள்**
**சேருவ தெமக்கு உண்மை**
*இருவரையும் சிறைப் பிடித்துக்கொண்டு*



*அரண்மனை நோக்கிச் செல்கின்றனர்!*

**அரங்க விளக்கு அணைகிறது**

*அரங்கு விளக்கு மீண்டும் எரியும்போது*

*அரண்மனை கூடத்தில்... துஷ்யந்தன் முன்னே வருகிறான், பிரதம மந்திரி!*

*கையில் ஓர் கணையாழியுடன் வந்த மந்திரி,*

*தன் கையிலிருந்த கணையாழியை*

*மன்னனுக்குக் காட்டி நிற்கிறான்!*

*மன்னன், கணையாழியைக் கண்ணுற்ற மறுகணமே,*

*மின்னலாற் தாக்குண்டவன் போல,*

*ஓரிரு கணங்கள் தடுமாறுகின்றான்.*

*மன்னனின் முகம் ஆச்சரியத்தால் விரிகிறது.*

*அவனது அகக் கண்களில் ஒரு சில காட்சிகள் விரிய, அவனது முகத்தில் பலவித மாற்றங்கள் தெரிகின்றன.*

*மன்னன் (உடனடியாக மந்திரியை, ஓடிச் சென்று கட்டியணைத்து)*

*பாடல்*

**இக்கணையாழி..**
**எப்படிக் கிடைத்தது,**
**இப்போதே கூறுமையா?**

*மந்திரி*

**பட்டின வாயிலில்**
**எங்கள் அங்காடியில்**
**விற்றிட வந்தனர் இருவர்!**
**சக்கிரா வதாரம் எனும் ஊரிற் பாயும்**
**சசீ தீர்த்தம் எனும் ஆற்றினிலே - மீன்**
**பற்றியே விற்றிடும் மீனவன் ஒருவன்**
**வெட்டிய மீனுக்குள் கிடைத்த தென்றான்!**

துஷ்யந்தன் :

**கொண்டு வந்தவர்க்குக் கொடுங்கள் சன்மானம்!**
**கூட்டிவந்த காவலர்க்கும் கொடுங்கள் சன்மானம்!**
**இன்று எல்லாப் பெண்களுக்கும் கொடுங்கள் சன்மானம்!**
**எந்தனுக்கு மட்டும் இன்று வந்ததவமானம்**

மிகவும் வேதனையுடன்
மந்திரி அரங்கிலிருந்து விலகுகிறான்!
அரங்கு விளக்கு அணைந்து மீண்டும் ஒளிர்கிறது!

துஷ்யந்தன் : (துன்பத்திற் துடிக்கிறான்)

**அந்தோ நான் பெருங் கொடுமை இழைத்தேனன்றோ**
**அபலைப் பெண் வாழ்வுதனைக் கெடுத்தேனன்றோ!**
**என்பாசக் குலவிளக்கைக் கொன்றேனன்றோ!**
**வந்தாரை வசைபாடி நின்றேனன்றோ!**
**அன்பார்ந்த தர்மநெறிக் கண்வர் சாலை**
**அவமதித்து அவர்வெறுப்பைச் சம்பாதித்தேன்!**
**விண்சார்ந்தோர் வேண்டாத பொருளுமாகி**
**மண்பழிக்கும் மன்னனுமாய் ஆகினேனே!**

சகுந்தலையின் நினைவிற் சஞ்சரிக்கிறான்!

அரங்க விளக்கு அணைகிறது!

அரங்க விளக்கு மீண்டும், எரியும்போது...
கூடத்தில்
கட்டிலில்
நோய்வாய்ப்பட்டவனாகப் படுத்திருக்கின்றான் துஷ்யந்தன்!
அவனது பக்கத்தில்
அவனால் வரையப்பட்ட...
சகுந்தலையின் ஓவியம்!
ஓவியக் கருவிகள்!



பின்னணியில் குரல்

'துருவாசரின் சாபவிமோசனத்தின்படி,
கணையாழியைக் கண்ட துஷ்யந்தனுக்குச்
சகுந்தலை பற்றிய ஞாபகம் மீள்கிறது!
தன்னை நம்பித், தன்னைத் தந்த
பெண்ணைக் கைவிட்டுத் துரத்திய
குற்ற உணர்வினாற் துடிக்கிறான்
துஷ்யந்தன்!'
பின்னணியில் குரல் தொடர்கிறது :
'அரச காரியங்களை மறந்து,
ஆடை ஆபரணங்களையும்
அரண்மனை அல்லோலகல்லோலங்களையும்
வெறுத்து,
உள்நோய்ப்பட்டவனாகி
இருளின் கைதியாக
ஒரு கூடத்திற் தஞ்சம்
புகுந்து கிடக்கிறான்!'
இப்போது, பல மாதங்களாக, நாட்டை விட்டு, வர்த்தக நோக்கில்,
வேறு நாடுகள் சென்று மீள்கிறான்,
துஷ்யந்தனின் பிரிய நண்பன்,
மாடவ்யன்!'
அரங்கில் மாடவ்யன் நுழைகிறான்!
மாடவ்யன் வருவதை யறிந்த... துஷ்யந்தன்
படுக்கையை விட்டெழுந்து,
நண்பனை ஓடிச் சென்று கட்டித் தழுவிக்
கொள்கிறான்!
மன்னனின் முகத்திற் தாடியும்
சீவப்படாத பரட்டைத் தலையும் கண்டு
அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைகிறான்.

*மாடவ்யன் :*

ஏதிது கோலம் மன்னா!
எத்துயர் கொண்டு நொந்தாய்?
வேதனைச் செந்தீ சுட்டு
வீழ்ந்ததன் விளைவோ மன்னா?
பாதகம் செய்தார் யாரோ?
பசிய உன் நெஞ்சந்தன்னை
ஈதொரு நிலைக்குத் தள்ளி
ஏனையா எனையும் கொன்றாய்!

*(தான் வரைந்த ஓவியத்தின் முன், மாடவ்யனை அழைத்துச் சென்று காட்டியபடியே...)*

*துஷ்யந்தன் :*

ஞாபகமுண்டோ அந்தத்
தபோவனக் கொடியாள் தன்னை
நானகம் கொண்டு காதல்
வாழ்வினிற் திளைத்தேனன்றோ!
தேவதை இங்கு என்னைத்
தேடியே வந்தபோது,
ஞாபகம் அற்றேனாகித்
தூற்றியே அனுப்பிவிட்டேன்!

*மாடவ்யன் :*

மாளிகை முற்றந் தன்னில்
மனைவியர் பலரிருந்தும்
கூடிய அன்பால் நொந்து
குழம்பிய எந்தன் மன்னா!

தேடி நான் செல்வேன் அந்தத்
தேவியை அழைத்து வந்து
நீடிய இன்பந் துய்க்கும்
நிலைதனைக் காண்பேன் ஐயா!



*துஷ்யந்தன் (துன்பம் பீறிட) :*

அது இனி நடக்காது! அவள்
அமரரின் உலகினை அடைந்துவிட்டாள்
சுகமினி எனக்கேது - அந்தச்
சுந்தரி யின்றியென்
வாழ்விற்குப் பயனேது?

*மாடவ்யன் :*

மன்னா... மாற்றிடு முடிவை! - உன்
மக்களை... நாட்டினை முதல்வை!
புண்ணாய்ப் போன உன் நெஞ்சை - ஆற்றிப்
புறப்படு தொடர்ந்திடு தொண்டை!

அன்னை அங்கே உன் நிலை யாலே
அழுதும் அரற்றியும் தன்னிலை யிழந்தாள்!
சென்னியில் முடியுடன் சென்றிடு அவைக்கு!
சேனைகள் முன்னே நின்றிடு படைக்கு!

*மாடவ்யன், மன்னனை ஆறுதல்படுத்தி, அழைத்துச் செல்கிறான்!*

அரங்க விளக்கு அணைகிறது!

*அரங்கின் பின்னணியிற் குரல் :*

*'சகுந்தலையின் பிரிவுத் துயரினைத் தாங்கி...*
*ஒருவாறுதேறி...*
*மீண்டும் மக்களையும் மண்ணையும்*
*காக்கிறான் துஷ்யந்தன்!*
*இக்காலத்தில்*
*ஒருநாள்...*
*இந்திர உலகின் அதிபதி,*
*தேவேந்திரனின் வேண்டுதலில்,*

*அமரர் யாகம் காக்க அழைக்கப்படுகிறான், துஷ்யந்தன்! யாகத்தை வெற்றியாகமுடித்துக்கொண்டு,*

அஸ்தினாபுரிக்கு மீளும் துஷ்யந்தன்,
பெருந்தவரிஷியான காசிப முனிவரையும்,
அவரது தவப் பத்தினியார் ஆதி தேவியையும்,
அவரது தவக்கோலத்தையும் தரிசித்து ஆசிபெற,
அவர்களது தபோவனத்திற்குச் செல்கிறான்!
அத்தபோவனத்தில் அவன் பிரவேசிக்கும்போது
அங்கே... விதியின் அரங்கேற்றம் நிகழ்கிறது!'

அரங்க விளக்கு மீண்டும் எரிகிறது!

அரங்கின் முற்பகுதியின் ஒரு பக்கலில்...
காசிப முனிவரின் தவக்கோலம்
அவர் பக்கத்தில் ஆதிதேவி அமர்ந்திருக்கிறார்.
அரங்க நடுவில்,
சிங்கக் குட்டியுடனும்,
தாய்ச் சிங்கத்துடனும் விளையாடிக் கொண்டிருக்கிறான் சர்வதமனன் (10 வயது மட்டில் இருக்கும்)
இதனை... எட்ட நின்று பார்க்கின்றனர்,
தபசிப் பெண்கள் இருவர்.
இக்காட்சி... தாள வாத்திய இசையிலும்,
ஜதி சுரத்திலும் நடைபெற வேண்டும்!
இக்காட்சியைப் பார்த்து வியப்புடன் நுழைகிறான்
துஷ்யந்தன்!
அப்பாலகனின் வீரசாகசங்களால் மகிழ்ந்து,
அவனை ஓடிச் சென்று அள்ளி அணைக்கிறான்,
துஷ்யந்தன்!
இது கண்டதும், ஓடி வருகின்றனர்,
தபசிப் பெண்கள்!

துஷ்யந்தன்

**யாரிவன்? இவனின் வீரப்**
**போர்க்குணம் கண்டேன். இந்தத்**



**தூயநற் தபோவனத்திற்**
**தோன்றிய இவனின் பெற்றோர்**
**யாரென அறியலாமோ?**
**வாழ்த்தி நான் மகிழலாமோ,**

முனிகுமாரி 1

**பூருவம்சம் பிறந்த இவன்**
**புண்ணியத்தால் இங்கு வந்தான்!**
**மாதவத்துக் காசிபரின்**
**ஆச்சிரம வாசியானான்!**

முனிகுமாரி 2

**பாராளப் பிறந்த இவன்**
**பாழும் ஒரு பாவியினால்**
**காடாள வந்தானையா!**
**கதை கேட்டாற் துன்பமையா!**

துஷ்யந்தன்

**பூருவம்சம் எனது வம்சம்!**
**புகழுடைய மன்னர் வம்சம்!**
**ஏது இவன் தந்தை பெயர்,**
**எவரிவனின் தாயாரோ?**

முனிகுமாரிகள்...

(சற்றுக் கோபமடைகின்றனர்...)

முனிகுமாரி 1

**பாவியின் பெயரைச் சொல்வதோ, - அவன்**
**பரம்பரை தன்னைப் புகழ்வதோ,**
**நாவினால் அவனைக் கூவியே - நாம்**
**நரகத்தின் வாயிலில் நிற்பதோ?**

துஷ்யந்தன்

(தன்னையும் மீறிய நடுக்கத்துடன், தடுமாறுகிறான்)
**ஏனோ என் நெஞ்சு**
**என்னையும் மீறியே**

**தானாய்த் துடிக்கிறதே!**
**ஏனோ என்னுயிர்**
**தன்னையும் மீறியே**
**தவித்தே வெடிக்கிறதே!**
**போன என் தேவியின் பூமுகம் என் முன்னே**
**நர்த்தனம் புரிகிறதே!**
**வானோர் உலகிற்குச்**
**சென்றவள் வருவாளோ?**
**வந்ததெனைத் தேற்றுவாளோ?**

இவனது துன்பத்தைக் கண்ட முனிகுமாரிகள்,
சர்வத மனனையும், துஷ்யந்தனையும்
மாறிமாறிப் பார்த்து, அவர்களிடம் காணப்படும்
உருவ ஒற்றுமையை அவதானித்துத்
தமக்குள் நயனபாசையிற் பேசுகிறார்கள்!
இப்போது ஒருத்தியின் கண், சர்வதமனனின்
கரத்தினைப் பார்த்ததும்,
எதையோ காணாததுபோற் திடுக்குற்று,
அதனைத் தேட முற்படுகிறாள்!
மற்றவளின் காதில், அவள் கூற,
மற்றவளும், சேர்ந்து தேடத் தொடங்குகிறாள்!
துஷ்யந்தன், அவர்களை நோக்கி,
எதனைத் தேடுகிறீர்கள்?
எனச் சைகையாற் கேட்கிறான்!

*முனிகுமாரி 1*

**மாதவச் செல்வர் எங்கள்**
**காசிபமுனிவர் அன்று**
**சோதனை யணுகாவண்ணம்**
**சிவசக்தியருளை வேண்டிப்**
**பாலனின் கையில் ரட்சா**
**பந்தனம் கட்டி வைத்தார்!**



*முனிகுமாரி 2*

**நாமதைக் காணோம் இன்று!**
**நிலத்திலே தொலைத்தான் போலும்!**
**ஆதலாற் தேடுகின்றோம்!**
**அவன் அன்னை அறியுமுன்னே!**

இதனை யறிந்ததும்
துஷ்யந்தனும் அதனைத் தேட முயல்கிறான்!
தேடியவன், அதனைக் கண்டதும்,
அதனை எடுக்க ஓடுகிறான்!
உடனே தீப்பட்டவர் போல முனிகுமாரிகள்,

ஒருமித்த குரலில்

**தொடாதீர் அதனைத்**
**தொடாதீர் அதனைத்...**
**தொட்டால் மரண முண்டு!**

அதனைக் கேளாதவனாக, அதனைக் கையில் எடுக்கிறான் துஷ்யந்தன்!

தொட்டெடுத்து அக்காப்பினைச் சர்வதமனனுக்கு அணிவிக்கிறான்!

இதனைக் கண்டு அவனை, ஆச்சரியத்துடன் நோக்குகின்றனர் முனிகுமாரிகள்!

*முனிகுமாரி 1*

**பெற்றவரன்றி யிந்தப்**
**பந்தனம் தன்னை மாற்றார்**
**தொட்டதும் பாம்பாய்மாறிக்**
**கொத்தியே கொல்லும் என்று**
**சத்தியம் செய்தார் எங்கள்**
**தவக்குரு நீரோ தொட்டும்**
**சர்ப்பமோ தோன்றவில்லை**
**அப்பன் நீர் என்றுணர்ந்தோம்!**

முனிகுமாரி 2

**அஸ்தினாபுரியின் மன்னன்**
**துஷ்யந்தன் அன்றோ இந்த**
**புத்திரன் தந்தை யென்று**
**புகன்றனர் அறிந்தோரெல்லாம்!**

இந்த வார்த்தைகளைக் கேட்டதும்...
பாசத்தாற் தாக்குண்டு...
மகனை ஓடிச்சென்று இறுக அணைக்கிறான் துஷ்யந்தன்!
இப்போது அரங்கினுள் நுழைகிறாள், சகுந்தலை!
சகுந்தலையைக் கண்டதும்,
சர்வதமனன் அவளை நோக்கி,
"அம்மா!" என்றபடி ஓடிச்சென்று
அவளைக் கட்டிக்கொள்கிறான்!
சகுந்தலை, துஷ்யந்தனைக் கவனிக்காதவளாகி,
(அவனது தோற்றத்தின் மாற்றத்தினால்)
முனிகுமாரிகளை நோக்கி நடந்தது யாதெனக் கேட்கிறாள்!
இந்நிலையில்,
துஷ்யந்தன், சகுந்தலையைக் கண்டு கொண்டவனாக,
அவள் முன்னே ஓடுகிறான்!

துஷ்யந்தன் :

**சகுந்தலா எந்தன் தேவீ...**
**கண்வரின் அருமைச் செல்வீ!**
**தெரிந்ததா இந்தப் பாவி**
**துஷ்யந்தன் என்னைத் தாயே!**

சகுந்தலை, திடுக்குற்று நிற்கிறாள்!

துஷ்யந்தன் :

**புகுந்தகம் வந்த உன்னைப்**
**பொய்ச்சி யென்றிழித்து அன்று**



**உதைந்தவன் உந்தன் முன்னே**
**நின்றனன் மன்னியம்மா!**

என்றவன் ஓடிச் சென்று, சகுந்தலையின் கால்களில் வீழ்கிறான்.

சகுந்தலை, துடிதுடித்தவளாகத் தனது கால்களை விடுவித்துக் கொள்கிறாள்!

துஷ்யந்தன், தலையை உயர்த்தியவாறு, முழந்தாளில் நின்று,
அவளைப் பார்த்துக் கண்ணீர் வடிக்க,
அவனை இனங்கண்டு கொண்டவளாக,
அவனது உளநிலையைப் புரிந்து கொள்கிறாள்!
ஓடிச் சென்று அவனது கரங்களைப் பிடித்து எழுப்புகிறாள்!

இப்போது காசிபரும், ஆதிதேவரும் விழித்து எழுந்து வந்து, அவர்களை வாழ்த்துகின்றனர்!

மேனகையும் அங்கே வருகிறாள்!

காசிபர் வாழ்த்து

**ஊழ்வினைப் பயனாய் நீங்கள்**
**ஒரு துருவாசர் கோபத்**
**தால் விளை துன்பம் துய்த்து**
**ஏகினீர் வேறு வேறாய்!**
**வாழ்வினை இன்று கொண்டீர்!**
**வையத்தை ஆளும் வீரத்**
**தோளுடன் மைந்தன் வந்தான்**
**தேசத்தை யாள என்றே!**

(இருவரையும் அழைத்து, அவர் கரங்களைக் கூட்டி, வாழ்த்துகிறார் காசிபர்!

ஆதிதேவியும் முன்வந்து அவர்களை வாழ்த்துகின்றனர்!

பின்னணியில்

பெருங்கவி காளிதாசன்
படைத்தநற் காவியத்தைத்
தருந் தவங் கொண்டோம் நாங்கள்
தமிழ் மகள் தயவால் இங்கே!

இருந்திதைக் கண்டோர்க் கெல்லாம்
இனிய நல் வாழ்த்தக் கூறி
பொருந்திய காதல் வாழப்
போற்றியே விடை பெற்றோமே!

நாட்டிய நாடகம் நிறைவுறுகிறது!

NOOLAHAM FOUNDATION
No - 07.57th Lane
Colombo - 06
Sri Lanka
Reg.No - GA2390

# 5. எங்கிருந்தோ வந்தான்

## நாட்டிய நாடகம்

தேச, தேசிய விழுமியங்களை மையப்படுத்திப் பல நாட்டிய நாடகங்களையெழுதிய எனக்குத் தெய்வ நெறிக்குரிய நாட்டிய நாடகங்களைப் படைத்தளிக்கும் வாய்ப்பு மிகவும் அரிதாகவே கிடைத்துள்ளது!

சத்திய சாயிபாபாவின் அவதாரக் கதையினை யெழுதியிருக்கிறேன்! குமாரசம்பவம் என்னும் குறுநாட்டியப் படைப்பினை யெழுதியிருக்கிறேன்! அவற்றின் பின்னர், யானெழுதிய, தெய்வசங்கதி கொண்ட நாட்டிய நாடகம், ‘எங்கிருந்தோ வந்தான்!’ என்ற தலைப்பிலான, இந்தக் குசேலர் கதைதான்!

இறையன்பினைத் தாயன்பாகவும், தந்தையன்பாகவும், தலைவன், தலைவிக்குரிய அன்பாகவும் கண்ட நம்மக்கள், இறைவனைத் தோழனாகவும் கண்டு, தூய நட்பின் எல்லையில், அவனது பேரருளொளியைப் பெற்று இன்புற்றுள்ளனர்! குசேலருக்கும், கண்ணனுக்குமிடையிலான அன்பும் இத்தகையதே! பண்டைக் காவியங்களுக்குள்ளிருந்து கசிந்த ஒரு பக்திக் குறுங்காவியமிது!

கண்ணனின் கருணைக் கடலில், ஓரிரு, துளிகளை யள்ளித் தெளித்து இன்புற வெண்ணி, இந்த நாட்டிய நாடகத்தினை எழுத விழைகிறேன்!

கீதையைத் தந்து, உலகின் இடர்களை மட்டுமன்றி நம் முன்னே யெழுந்து நம்மை இடறவைத்துத் தாழவைக்கும் தீய



5. எங்கிருந்தோ வந்தான்



உணர்வுகளையும் எதிர்த்துப் போராடும் பேராற்றலைத் தருபவன் அந்த நாராயணன்.

அந்த நாராயணனைக் கிருஷ்ணனாகவும், கண்ணனாகவும் கண்டு நெஞ்சில் வைத்துப் பூசித்த இந்து வாழ்வில், பற்பல பெருந்தத்துவங்களை விளக்கி எழுந்தவையே புராணங்கள், கதைகள், இதிகாசங்கள்.

பூசிக்கவும் புரிந்து கொள்ளவும் பிறந்த இப்புராணவியல் தூசிப்புக்கும் துரத்தலுக்கும் ஆளாகிய துன்பநிகழ்வுகளும் உண்டு! காரணம், அகக்கண்களைத் திறந்து, அறியாமை இருளைக் களையப் பிறந்த புராணங்கள் மாறாக அகக்கண்களைக் குருடாக்கி, அறியாமை இருளைப் பரவ விட்டதோடு, மதத்தை, மனித வேட்டையின் மார்க்கமாக்கி விட்டதேயாகும்!

இதேவேளை புராணங்களையும், இதிகாசங்களையும் தூசித்தவர்களும், துரத்தியவர்களும், தூயவர்கள் என்றும் கூறிவிட முடியாது!

நிற்க!

இந்நாட்டிய நாடகத்தின் கருப்பொருளாகக் குசேலர் சரிதத்தை எடுத்துள்ளேன்!

கண்ணன் தனது நெருங்கிய நண்பனாகவும், உரிமைக்குரியவனாகவும் தனது நெஞ்சுக்குள், இருந்த போதும், கண்ணனை வேதப் பொருளாக மந்திரப் பொருளாக, கற்சிலையாக முன்வைத்துப் பூசிக்கிறார் குசேலர்!

கண்ணனிடம் இருந்து ஓர் அந்நியனாகப்பிரிந்து நிற்கும் குசேலர் தன்னை இழந்து தெய்வத்தின் சந்நிதிக்குச் செல்கிறார்!

சென்றவரைக் கண்ணன், அன்பினால் நீராட்டி, ஆனந்தத்தைப் பொழிகிறான்!

ஏழைக் குசேலர், எல்லாமுள்ளவராகிச் செல்வத்தின் சிறப்பெய்துகிறார்!

இருப்பினும் கண்ணன் மீது கொண்ட காதலாலும் வாழ்வின் நிலையாமை பற்றிய ஞானத் தெளிவினாலும் தர்மம் பற்றிய ஆழமான ஆத்மீக உய்த்துணர்வினாலும், தளம் மாறாது செல்வத்தினுள்ளும் பற்றற்ற ஞானியாக

வாழ்ந்து கண்ணனின் கழல்களை அடைகிறார் குசேலர்! உலகியல் வாழ்விலும் துறவறம் காணலாம் என்கிறது. குசேல புராணம்! செல்வத்திற்கு எதிரானவர்கள் அல்ல நம்முன்னோர்! தர்ம நெறியில், இறையுணர்வோடு எய்தும் செல்வம், நம்மை நிலைகுறைய வைக்காதென்ற பெருநெறியைக் காட்டுவதாகவும் பேசப்படுகிறது. குசேலரின் பெருங்கதை! நம்முள்ளம் தூய தாகின், நாம் இறைவனுக்கு நம்மைப் பூரணமாக அர்ப்பணிப்பின், அவனுக்கும் நமக்கும் இடையே உள்ள அண்மிப்பினைப் பற்றியும் எடுத்துக் கூறுகிறது, இப்பழங்கதை!

அதர்ம வழியிலும் ஆசைப்பிடியிலும் ஈட்டிய பொருளால் அழிவினைத்தேடும், இக்காலத்துக்குப் பெருநெறி புகட்டும் இக்கதையை ஒரு நாட்டிய நாடகத்தின் கருப்பொருளாக்குவதிற் பேருவகை எய்துகிறேன்! அடிப்படைத் தத்துவமும், தர்மமும் சிதையாத நிலையில் படைப்புக்கு மெருகூட்டும் வகை, காட்சிக்குக் கற்பனை அணிகள் சேர்த்திருக்கிறேன்! எல்லாம் நன்மைக்கேதான்! உயரிய நட்பிற்கும், இறைமையின் பெட்பிற்கும், இது சமர்ப்பணமாகிறது.

அன்புடன், புலவர்.



## *காட்சி 1*

அரங்கத் திரை விலக......

அரங்கிற் குசேலன் குடிசை!

பாடல் :

**ஆழ்ந்த நல் லறிவும் வேத**
**ஞானமும்கொண்ட மேதை**
**ஆன்ற நற் பண்பினோடு**
**அன்பினிற் தோய்ந்த ஏழை**
**மாண்புடைக் குசேலன் என்பான்**
**மனைவி தன் மக்களோடு**
**வாழ்ந்தனன் குடிசை யொன்றில்**
**வறுமையின் பிடியில் நொந்தே!**

**ஊருக்குள் உள்ளோர்க்கெல்லாம்**
**உண்மையாய் வேதம் ஓதிப்**
**பாருக்கு நன்மை செய்யும்**
**பாக்கியம் கொண்டு வாழ்வுப்**
**போருக்கு முன்னே பஞ்சம்**
**பட்டினி வாட்டும் போதும்**
**யாருக்கும் பணியா நின்று**
**யாகமாய்த் தர்மம் செய்தான்!**

இப்போது அரங்கினுள்.....

குசேலரின் குழந்தைகள் பிரவேசிக்கின்றன!

*27* குழந்தைகளும் நாலாதிக்கிலுமிருந்து ஓடிவந்து அரங்கினை நிறைக்கின்றன! (மூத்ததிலிருந்து இளையது வரை அவர்கள் இல்லத்தை நிறைக்கும் காட்சியினை, ஜதி, சுரங்களின் மூலம் அமைக்கவும்!

**இருபத்து ஏழுபேர்**
**குடும்பத்திற் பிள்ளைகள்**
**கொண்டனர் குசேலர் அம்மா!**
**ஒரு பத்தினி அவள்**
**அருட்சக்தியாகியே**
**அவர்களைக் காத்து நின்றாள்!**

இப்போது அரங்கினுள்....
குசேலரின் பத்தினியாள் பிரவேசிக்கிறாள்!
அவளை மையமாக்கி,
அவளது பிள்ளைகளுடன்
ஒரு பிரமாண்டமான
நாட்டிய விருந்தினை
அளிக்கலாம்!

பாடல் :

**பதி பக்தியோடு தன்**
**பாசத்தின் குழந்தைகள்**
**பசி தாகம் தீர்த்து வந்தாள்!**
**விதி விட்ட வழியிலே**
**விலகாத நெறியிலே**
**காலத்தை யோட்டி நின்றாள்!**

தாயைச் சுற்றி.....
இளைய குழந்தைகள் மொய்த்துக் கொள்கின்றன!
அது வேண்டும், இது வேண்டும்
என்று கத்திக் கூவி, அவளைக் களைக்கச் செய்துவிட
அவள் கைகளைக் கூப்பித் தெய்வத்தை வணங்கிவிட்டு....
பாடலுக்கு அபிநயமும் நடனமும்.... தொடர்கிறது!

(குசேலரின் பத்தினி) :

**ஐயர்க்கு நினைவெல்லாம்**
**ஆண்டவன் தான் ஏனோ**
**உமைப்பற்றிக் கவலையில்லை!**
**வையத்தின் நாயகன்**
**பூசையல்லால் பிறர்**
**தமைப்பற்றிக் கவலையில்லை!**

(ஜதி, சுரங்களில் எல்லோரும் ஆடுதல்),

குசேலரின் மூத்த பெண் :

**வைதிக சாஸ்திரம்**
**கிரியைகள் எல்லாம்**



**வாழ்வுக்கு உதவிடவில்லை! எங்கள்**
**கையினிற் காப்பில்லை!**
**கழுத்தினில் நகையில்லை!**
**செய்திடத் தொழில்களும் இல்லை!**

குசேலரின் பத்தினி :

**செய்கின்ற கிரியைக்கும்**
**சன்மானம் தருவோர்**
**சகத்தினிற் குறைந்து விட்டார்!**
**தந்தையர் தாயரின்**
**கடமைகள் செய்வோர்**
**அகத்தினில் அருகிவிட்டார்!**

குசேலரின் இரண்டாவது மகள் :

**அம்மா இனியும்**
**அப்பாவின் உழைப்பிற்**
**சும்மா உண்பது சரியா? நான்**
**பெண்ணாகிய போதும்**
**பிறிதொரு தொழில் செய்ய**
**சம்மதம் தருவீர் நீரே!**

இப்போது மூத்த மகன் முன்வந்து....

**சந்ததிப் பிழைப்பெனச்**
**சாத்திர விதிகளை**
**என்தலையிற் கட்டலாமோ? நான்**
**மந்திரம் ஓதிடும்**
**மார்க்கத்தை விட்டெந்தன்**
**சொந்தத்தில் உழைத்திடலாமோ?**

இதுகேட்டுத் தாய், துன்பத்தில் வாடுகிறாள்
(தனது காதுகளைப் பொத்துகிறாள்)

குசேலரின் இரண்டாவது மகன் :

**பக்கத் துள்ளாரெல்லாம்**
**பற்பல வகைகளாய்ப்**

**பட்டுகள் நகைகளில் மூழ்க நான்**
**வெட்கத்துடன் கந்தை**
**வேட்டியில் உலவுதல்**
**எத்தனை துக்கம் என் அம்மா!**

*குசேலரின் பத்தினி :*

**மற்றவர் போலே**
**வாழ்ந்திட நினைப்பது**
**எத்தனை மடமை மகனே!**
**பெற்றவர் நிலைமையைப்**
**புரிந்திட மறுப்பது**
**எத்தனை சிறுமை மகனே!**
**கற்றவர் அறிஞர்**
**கருணையிற் பெரியர்**
**நற்றவத்தார்**
**உங்கள் தந்தை!**

*குசேலரின் மூத்த பெண் :*

**இத்தனையிருந்தும்**
**உறுபொருளில்லா**
**உத்தமராகியே**
**நொந்தார்!**

*குசேலரின் இரண்டாவது மகள் :*

**கூரையும் ஒழுகிட**
**குளிரது கொன்றிட**
**வாழுகிறோம் அம்மா!**
**தேரையும் தேளும்**
**ஊர்ந்திடும் தரையில்**
**உறங்குகிறோம் அம்மா!**

*இரண்டாவது மகன் :*

**நீராகாரம் நித்தமும் உண்டு**
**நாவும் மரத்ததம்மா!**
**ஊரார் பழித்திட**



**ஒன்றையே உடுத்தி**
**உடலும் வெறுத்ததம்மா!**

(துக்கம் பீறிடும் நிலையிலும்,
கொண்டவனைக் குறைத்து விடாத) குசேலரின் பத்தினி

**தெய்வத்தை நம்பித் தர்மம்**
**தேடிடும் வாழ்க்கை கொண்டோன்**
**கைபற்றிக் கடமைசெய்யும்**
**காதல் கொள் மனையாளானேன்**
**மெய்பற்றி யெரியும்போதும்**
**மேலென ஐயர் பாதம்**
**கண்ணொற்றிக் காயம் நீப்பேன்**
**கருத்தினால் ஒன்றினேனே!**

இப்போது, குசேலர், தனது ஊர்க்கடன் முடித்து மீள்கிறார்!

வெண்தலையும், நெற்றியில் நாமமும், கந்தல் உடையும், கைப்பையும் கொண்டு வருகிறார் அந்த வேதப்புலவர்!

அவர் வருதல் கண்டதும் குழந்தைகள் பயபக்தியுடன்,
அரங்கினை விட்டு அகல்கின்றனர்!

தனது நாயகரைக் கண்டதும், அவர் முன் ஓடிச் சென்று, அவர்க் கைப்பையை வாங்கி வைத்துவிட்டு.....

அவரைக் கல்லணையில் அமர்த்துகிறாள் அந்த இல்ல நாயகி!

தமது நாளுழைப்பைத் தமது முடிச்சிலிருந்து எடுத்து அவளிடம் கொடுத்து,

குசேலர் :

**சென்ற இடத்தில் ஒரு சம்பவம் தேவி!**
**சிந்தையைக் குழப்பியது! பெற்ற**
**தந்தைக்குக் கருமம் ஆற்றிட மறுத்தான்**
**தனயன் ஒருவன் அம்மா!**
**தந்தையார் மறைந்து ஓரிரு ஆண்டுகள்**
**சென்றதும் அவர் நினைவைக்**

**கொன்று விட்டான் அவன்; கொடுத்திட மறுத்தே**
**தாழ்ப்பாளை இட்டு விட்டான்!**

**தர்மங்கள் மறைந்திடுமோ எனும் அச்சத்திற்**
**தலைசுற்ற அமர்ந்து விட்டேன் பெற்றோர்**
**கர்மங்கள் செய்திட ஒருவரிலா நிலை**
**எழுமோ? நான் பயந்து விட்டேன்!**

இவ்வாறு கூறிய குசேலர் உடற் களைப்பாற் சாய்ந்து உறங்குகிறார்!

இப்போது மெதுவாக.....

குசேலரின் பத்தினி, அரங்கின் ஒரு பக்கம் வருகிறாள்!

(கண்களில் நீர் குளமாகப் பெருக....
பரந்தாமனை நெஞ்சில் நிறுத்தி)

**கண்ணா! உன் நண்பன்**
**கோலத்தைப் பாராய்!**
**கற்றவன் அவனுடன் நீ!**
**புண்ணாய்ச் சிவந்ததிப்**
**பாவியின் நெஞ்சம்**
**பொல்லாத் துன்பத்தினால்!**

இவ்வேளை நிழல் காட்சியில் பின்திரையில்....

வைகுந்தம்! நாராயணன் தேவியர் சகிதம்!

லட்சுமி நாராயணன் இருக்கை விட்டெழுந்து.... காட்சி தருகிறார்!

குசேலர் மனையாளின் குரலுக்குச் செவிசாய்க்கிறார்!

குசேலர் மனையாள் :

**பெற்ற குழந்தைகள் பாழ்**
**பட்டினியாலே**
**பிதற்றிடும் கொடுமை அந்தோ! நீ**
**சித்தம் இரங்கியே....**
**சற்று வழங்கியே....**
**நட்பினைக் காப்பாயா? கண்ணா**



**உன்.... நண்பனைக் காப்பாயா?**

இப்போது திடீரென
ஒளி மின்னல் தோன்ற...

அவன் முன்னே தோன்றுகிறான்...

நாராயணன்!

கிருஷ்ணன்!

கண்ணன்!

அவனது மாயத் தோற்றங்கள்... மாறி மாறி அரங்கில் நிகழ்கின்றன!

குசேலரின் பத்தினியைப் பக்தி வெள்ளத்தில் ஆழ்த்துகின்றன! (தாள வாத்திய இசையும், சுரஜதிகளும் இக்காட்சியை வழிநடத்துகின்றன)

கண்ணன் தோன்றி...

ஆடுதல்!

வேய்குழலோடு கோபியருடன்

தொடர்ந்து

கிருஷ்ணன் தோன்றி....

ஆடுதல்! (சஞ்சாரி பாவத்தில்)

பாஞ்சாலியின் முன் துயில் கொடுத்தல்

அதன்பின்னர்,

நாராயணன் தோன்றி

ஆடுதல்!

பக்த பிரகலாதன் முன் நரசிம்மனைக் கொல்லுதல் இறுதியிற் கண்ணன் மீண்டும் தோன்றுகிறான்!

குசேலரின் பத்தினியிடம் வந்து....

கண்ணன் :

**மன்னி என் அண்ணன்**
**வேதமாய் என்னை....**
**எண்ணியே வணங்குகிறான்!**
**தன்னுளே வாழும்**

**தர்மமென்றென்னை**
**நம்பியே வணங்குகிறான்!**
**நண்பனும் நானே**
**என்பதை மறந்தே**
**எட்டவே வாழுகிறான்! எனை**
**விட்டேனோ ஓடுகிறான்!**
**என்னிடம் வருவது**
**இழிவு என்றே அவன்**
**இறுமாப்பில் வாழுகிறான்**
**தான் எனும் அகந்தையின்**
**தர்மத்தால் என்னையும்**
**தள்ளியே விரட்டுகிறான்!**

*இவ்வாறு அவளுக்கு உரைத்துவிட்டு.....*
*மாயமாக மறைகின்றான் கண்ணன்!*

**அரங்க விளக்கு அணைகிறது!**

## காட்சி 2

*மூத்தவளின் கனவுக்காட்சியில்....*
*திருமணமும்... மணக்கோலமும்!*
*தொடர்ந்து*
*குசேலரின் பெண்கள் மூவர் தோன்றி ஆடுகின்றனர்!*

*மூத்தபெண் :*

**கனவொன்று கண்டேன்**
**கண்ணீரில் நனைந்தேன்**
**கல்யாணத் திருநாளின் கோலம்!**
**மணவாள னோடு**
**மலர் மாலை சூடிப்**
**பலர் வாழ்த்த ஊர்காணும் கோலம்!**

*இரண்டாமவள் :*

**இல்லாதோர் பெண் வாழ்விற்**
**கல்யாணம் கனவோடு!**



**சொல்லாத எண்ணங்கள் கோடி!**
**பல்லாயிரம் தந்து**
**பட்டாடை நகை சூடும்**
**நல்வாழ்வு நமக்கேது போடி!**

*மூன்றாமவள் :*

**குணம் பார்த்துக், குலம்பார்த்துக்**
**கொள்வோர்கள், இங்கில்லை!**
**பணம் பார்த்து வருவோரே உண்டு!**
**பலம் பார்த்து வளம் பார்த்து**
**வருவோரே இங்குள்ளார்!**
**எமைப்பார்த்து வருவோர் யார் சொல்லு?**
**முகம் பார்த்து மனம் பார்த்து**
**அகம் சேர்க்கும் மணவாளன்**
**சுகமாகக் கிடைப்பானோ?.... மண்டு!**

*இரண்டாமவள் :*

**தெய்வமும் பணமுள்ளோர்**
**தெருவிற்றான் விளையாடும்!**
**தீண்டாது நம் வீட்டுவாசல்!**

*மூன்றாமவள் :*

**கையேந்திக் கும்பிட்டுக்**
**கண்ணீரிற் கரைந்தாலும்**
**தன் காதில் ஏற்பானோ ஈசன்!**

*மூத்தவள் :*

**தர்மமும் ஒருநாள்**
**தலைசாய்க்கும் நமக்காய்!**
**தந்தை தாய் செய்பக்தி**
**வழிகாட்டும் விளக்காய்!**
**வரும் விளைவெல்லாம்**
**முன்வினைப் பயனே!**
**வறுமையும் செல்வமும் அதுவே!**
**பொருந்திய அன்பும்**

பொய்யிலா வாழ்வும்
தரும் பயன் நிம்மதி நிறைவே!

அரங்க விளக்கு அணைகிறது!

## காட்சி 3

*குசேலர்.... கண்ணன் சிலைமுன் நின்று....*

*பூசை செய்து பிராத்திக்கின்றார்!*

துளசி மாடத்தின் முன்னே நின்று வணங்குகிறாள்

*குசேலரின் பத்தினி!*

*குசேலர் : (நெஞ்சுருகப்பாடி வணங்குகிறார்)*

ஓம் நாராயணா! ஓம் நாராயணா!
வைகுந்த நாயகா! வா! வா! வா!
ஓம் சிறீ கிருஷ்ணா! ஓம் சிறீ மாதவா!
துவாரகாபுரிவாசா! வா! வா! வா!
கிரிதர கோபாலா! மதுரா புரிவாசா!
ஹரி ஹரி ஹரி ஹரி நாராயணா!

பொன்னும் பொருளும் மணியும் வேண்டேன்!
போதமும் வேதமும் வாழ்வாய்க் கொண்டேன்!
மண்ணின் சுகங்கள் அனைத்தும் நீயே!
மாதவா கண்ணா கார்மேக வண்ணா!
எண்ணம் எல்லாம் உனக்கே தந்தேன்
என்பணி இங்கே உனைத் தொழல் ஒன்றே!
சொன்ன உன் கீதையைச் சுடரென நெஞ்சிற்
சுமந்திடல் ஒன்றே சுகமெனக் கொண்டேன்!

*இப்போது குசேலர் பத்தினி :*

*(கண்கள் குளமாக)*

நம்பிய குழந்தைகள் நாவும் வயிறும்
நலிந்திட..... மெலிந்திடலாமோ?
துன்பமே வாழ்வாய்த் துடிப்பது நன்றோ!
தூயவா கண்ணா நீ சொல்வாய்!



நண்பன் நீயன்றோ! நாயகனன்றோ!
நாதியற்றோர் நிழல் அன்றோ!
எம்பணி செய்தோம் எல்லாம் நீயன்றோ!
ஏனையா நீ மௌனமானாய்?

*இப்போது குசேலர்*

*திடுக்குற்றவராகத் தன் பத்தினியின் துன்பக் கண்ணீர் கண்டு,*

*அவள் பக்கம் வந்து, அவளது கண்களைத் துடைக்கிறார்!*

*குசேலர் :*

தாயே என்னால்
நீ துயர் அடைந்தாய்!
தர்மமே துன்பமாய்க் கொண்டாய்!
சேய்களின் பாசச்
சாகரம் வீழ்ந்தே
சஞ்சலப் பட்டனை அம்மா!
தூய நல்லன்பிற்
தோய்ந்த நம் தொண்டால்
தொல்லைகள் நீங்கிடும் காண்பாய்!

மாயவன் கண்ணன்
மணிவண்ணன் அருளால்
மலர்ந்திடும் இன்பத்தின் தேன் பால்!

*குசேலர் பத்தினி....*

*குசேலரைப் பக்தியுடன் பார்த்துவிட்டு,*

*அவரது பாதங்களில் வீழ்கிறாள்.*

*பாதங்களில் வீழ்ந்தவளை,*

*அன்போடும் பரிவோடும் அணைத்துத் தூக்கி நிமிர்த்தி விடுகிறார், குசேலர்!*

*குசேலர் பத்தினி :*

பாலனாய் உங்கோளோடு
பகிர்ந்தின்பம் கொண்ட மாயன்

மாலவன் உங்களன்மைபை
மதிப்பவன் குருவின் முன்னே
சீலமாய் வேதங் கற்றோன்
சீரிய நண்பன் பாசத்
தாலவன் பிரியன் கண்ணன்
பாற்சென்று பார்த்தல் தீதோ?

தன் பத்தினியிடமிருந்து....

சற்றும் இதை எதிர்பாராதவராக....

வியப்பும், திகைப்பும் விஞ்ச....

முகத்தை வேறுபுறம் திருப்பியபடி.....

சற்றுப் பின் வாங்குகிறார் குசேலர்!

அவரது துன்பத்தையும் ஏமாற்றத்தையும் உணர்ந்த பத்தினி,

அவர் பக்கம் சென்று.....

அவரது கைகளை இறுகப் பிடித்தவாறு...

குசேலர் பத்தினி

நொந்திட வைத்தேனோ? நான்?
நுழைந்துளம் தைத்தேன் தானோ?

மந்திரப் புலவ மாதின்
மயக்கத்தை மன்னிப்பாய் நீ!
தன்பதம் தாழ்வோர்க்கெல்லாம்
தருகின்ற தெய்வந்தன்னைச்
சென்றுநீ பார்த்தல் தாழ்வோ?
செவிசாய்ப்பான் கண்ணன் ஐயா!

எனைநோக்கி ஓரடி வைத்தால். நான்
உனை நோக்கிப் பேரடி வைப்பேன்!
எனக் கூறி நின்றவன் கண்ணன்! உனை
எதிர்பார்த்து வரவேற்றல் திண்ணம்!

குசேலர் :

குரு குல வாசத்தில்
பெரு நட்புக் கொண்டாலும்



பெருமைக்கு உரியவன் கண்ணன் இச்
சிறியவன் அவன் முன்னே
செல்லுதல் முறையோ?
புருவங்கள் உயர்ந்திடும் அம்மா!

குசேலர் பத்தினி :

வேதமும் அவனே!
நாதமும் அவனே!
ஆதரவும் நமக் கவனே!
பாத பங்கயங்கள்
பற்றி நாம் பிடித்தால்
பக்கத்தில் நின்றிடுவானே!

(குசேலரைப் பார்த்து)

வேதங்கள் கற்றவன் நீ நான்
போதித்தல் அறச் செயலன்று!
கீதையை உணர்ந்தவன் நீ இந்தக்
கிள்ளையைப்பொறுத்து மன்னி!

திடீரெனத் தனது அகந்தையையும், ஆணவத்தையும் அறிந்தார் போல கிருஷ்ண பரமாத்மாவின் திருக்கோலத்தை நெஞ்சில் நிறுத்துகிறார்!

உடனடியாக, அவரது குருகுல வாழ்விற் கண்ணனின் நட்பு....

அகக்கண்கள் முன்னே விரிய....

குசேலர் :

அண்ணா அண்ணா அண்ணா என்றே
அருகினில் எப்போதும் வருவான்!
கண்ணன் அன்று குழந்தையாய் என்னைப்
பின் தொடர்ந்தே அன்பைச் சொரிவான்!
வேய்ங்குழலூதி விளையாடி எம்முன்
பாங்கியர் தமைக் கூட்டி வருவான்!
ஆய்ந்து நற் கனிகள் ஆசையாய்த் தருவான்!
அவை யுண்ணும் போதெட்டிப் பறிப்பான்!

**தாயவள் யசோதாவின்**
**கோபத்துக் காளாகி**
**மாதர்கள் துயிலுக்குள் மறைவான்!**

**ஆயர்களோடு**
**ஆமந்தை மேய்த்து**
**ஆனந்தமாய்த் துள்ளித் திரிவான்!**

*கண்ணன் நட்பினை நெஞ்சில் நினைத்து.... ஆடிப்பாடிய குசேலர் :*

**கண்ணன் என்னுள்**
**இருப்பதை மறந்தே**
**காலத்தை வீணடித்தேன்**
**கற்சிலையாக்கிப்**
**பூசைகள் செய்தே**
**அந்நியனாகி விட்டேன்!**
**கண்ணனை நோக்கியென்**
**காலடியேனோ**
**இதுவரை நடக்கவில்லை! அவன்**
**பொன்னிழல் தேடிப்**
**போகின்ற ஞானம்**
**பூத்தேனோ அழைக்கவில்லை!**

*குசேலரின் மனமாற்றம் கண்டு....*

*பத்தினியானவள் பரபரப்பும், ஆனந்தமும் அடைகிறாள்!*

*(ஜதி, சுரங்களின் மூலம்,*

*அவளது மனோ நிலையை வெளிப்படுத்தவும்)*

*குசேலர் :*

**கண்ணனைப் பார்க்கப் போய்வருவேன் என்**
**கண்களின் பாக்கியம் அதுவானால்!**
**என்முகம் இன்னும் மறக்காமல் அவன்**
**ஏற்றிடுவானோ அறியேனே!**

*உடனே, குசேலர் புறப்படுவதற்கான ஆயத்தங்களைச் செய்ய உள்ளே செல்லத் திரும்புகிறாள்.... பத்தினி!*



*திரும்பியவளை, நோக்கிச் சென்று,*

*அவளது கரங்களைப் பிடித்து,*

*குசேலர் :*

**பாமா ருக்மணி சமேதனாய்**
**வாழ்வான் வதியும் துவாரகா**
**போவார் வெறுங்கை தனைவீசிப்**
**போதல் தகுமோ? என் தாயே!**

*குசேலர் பத்தினி :*

**அன்பே அவனின் அவதாரம்!**
**அதுவே அவனுக் காகாரம்!**
**துன்பப் படுதல் வீணன்றோ!**
**தூய்மை யுளமே அதுபோதும்!**

*குசேலர் :*

**பொன்னும் மணியும் முத்தும் பவளமும்**
**இன்னும் எல்லாம் பொலியத் திருமகள்**
**தன்னைத் தாங்கும் திருமால் அவனை**
**என்னென்றங்கு எதிர்கொள்வேனோ?**

*உடனே தர்மபத்தினி :*

**ஒரு பிடி யவலுண்டு அதனைத்**
**தருகிறேன்....**
**எடுத்துச் செல்லுங்கள்!**
**மறு கதை கூறாமல் இது**
**மன்னியின்....**
**அன்பெனச் சொல்லுங்கள்!**

*(என்று கூறிவிட்டுக்*

*குடிசைக்குள் ஓடி மறைகிறாள்.... பத்தினி)*

*குசேலர் :*

*(தன் மனைவியின் ஆழமான தெய்வபக்தியையும் அப்பக்தியில் விளைந்த அசைக்க முடியாத நம்பிக்கையையும் கண்டு வியக்கிறார்.)*

**மந்திரம் கற்றேனன்றி**
**மார்க்கத்தை யுணர்ந்தேனில்லை!**
**பெண் தரம் கண்டேன் நெஞ்சப்**
**பக்தியும் நெகிழ்வும் கண்டேன்!**
**கண்ணா என்னவள்**
**கரந்தரும் அவலினை**
**உன்னிடம் நான் கொணர்வேன்!**
**பெண்ணாள் பெருந்தகை**
**வளமென வாய்த்தவள்**
**கண்முன்னே காட்சி தாராய்!**

*இப்போது பழைய சால்வைத் துண்டிற் கிழித்தெடுத்த கீற்றில்.... அவலையிட்டு....*

*அதனைப் பொதியாக்கி எடுத்து வந்து,*

*தன் கணவனின் கரத்திற் கொடுக்கிறாள் குசேலர் பத்தினி!*

*குசேலர் பத்தினி :*

**காடும் கடலும் மலையும் கடந்து**
**ஏகும் பயணமிது!**
**ஏடும் எழுத்தும் எட்டா இறைவன்**
**பாதம் சரணம் எனும்**
**நாதம் ஒலிக்க நடப்பாய் தலைவ**
**நாராயணன் அருளைத்**
**தேடும் உனக்குத்**
**துணையாய் இருக்கும்**
**தேவன் சங்கொலியே!**

*என்று அவரை வழியனுப்பிவைக்கிறாள்.*

*அந்தப் பெண்ணின் பெருந்தகை!*

**அரங்க விளக்கு அணைகிறது!**

## *காட்சி 4*

*குசேலரின் பயணம்!*

*பனிப்புகா மேகக் கூட்டங்களின் ஊடு.....*



*குசேலர், துவாரகை நோக்கி நடந்துகொண்டிருக்கிறார்!*

*இப்போது..... நாரதர்.... வான்வழி,*

*கிருஷ்ணனைக் காணச் சென்று கொண்டிருக்கிறார்!*

*நாரதர் :*

**ஓம் நாராயண.... ஓம் நாராயண ஓம் நாராயண ஓம்!**
**ஓம் நாராயண.... ஓம் நாராயண ஓம் நாராயண ஓம்!**
**ஓம் நாராயண....**
**ஓம் நாராயண.....**
**ஓம் நாராயண..... ஓம்**
**ஓம் நாராயண.....**
**ஓம் நாராயண......**
**ஓம் நாராயண...... ஓம்!**

*இவ்வாறு நாராயணன் நாமத்தை உச்சரித்து வந்த நாரதர்,*

*குசேலரைக் கண்டதும்... அவரை அணுகுகிறார்!*

*நாரதர் :*

**வணக்கம் ஐயா; வைதிகரே!**
**வானகம் செல்லும் மானிடரே!**

*குசேலர் :*

**கலகத்தின் நாயக!**
**கலைமகள் வாகன!**
**உலகத்தின் நன்மைக்காய்**
**உலவிடும் நாரத!**
**உனக்கும் எனது**
**வணக்கம் உரியதே!**

*நாரதர் :*

**பழக்கம் இல்லாப் பாதையில் நடக்கும்**
**பயணத்தின் நோக்கம் எதுதானோ?**

*குசேலர் :*

**தொடக்கம் இல்லாத் துவாரகைச் செல்வனைத்**
**துதித்தே காணச் செல்கின்றேன்!**

*நாரதர் :*

**உமக்கும் அவர்க்கும் ஏதோர் உறவு?**
**எனக்கதைக் கூறிடத் தயக்கமுண்டோ?**

*குசேலர் :*

**பழக்கமும் உண்டு!**
**பாசமும் உண்டு!**
**நெருக்கமாய் நட்பும் எமக்குள் உண்டு!**
**அகக்கண்கள் கண்ட**
**மாதவன் தரிசனம்**
**கிடைத்திடுமென்றே நினைத்து வந்தேன்!**
**குருகுல வாசத்திற் பெருநட்புக் கொண்டோம்!**
**சிறுவர்களாய் நாம் சேர்ந்தே வளர்ந்தோம்!**
**இருவினை வசமாய் இல்லற வாழ்வினில்**
**இணைந்தனன்; திருமறை ஓதி நின்றேன்!**
**குசேலர் என்பெயர்!**
**குடும்பம் பெருத்தவன்!**
**அசையாத அன்புடன்**
**அறநெறி வாழ்பவன்!**

*நாரதர் :*

*(மகிழ்ச்சியுடன்)*
**ஐயா குசேலரே! அறிவன் உம் பெயர்தனை**
**அரங்கனின் அன்பு நண்ப!**
**பொய்யா உன் பக்தியைப் போற்றுவன் கண்ணன்**
**புகழாத நாளேயில்லை!**
**சலியாத கருமமும் சளைக்காத தர்மமும்**
**அணியாகக் கொண்ட பெரிய!**
**புவியோரின் புண்ணியக் கடன்செய்ய வைக்கின்ற**
**புரோகித உனக்கென் வணக்கம்!**

*குசேலர் :*

*(திடுக்கிட்டவராக)*
**என்பெயர் இன்னமும் அவன் நெஞ்சில் உள்ளதோ?**
**சின்னவன் சிறுமுகம்**



**சிந்தையில் உள்ளதா?**
**கண்ணனின் கருத்தினில்**
**என் நினைவுள்ளதா?**
**என்தவம் இங்கு செய்தேன்?**

*நாரதர் :*

**மறப்பனோ மாயன் நம்மை!**
**மாந்தரின் துயர்கள் போக்கப்**
**பிறப்பவன் அவனே பின்னர்**
**பேரொளியாகி நின்று**
**காப்பவன் அவனே**
**இறப்பிலா இன்பந்தந்து**
**ஏற்பவன் அவனே ஐயா!**
**அழைத்து நான் செல்வன் உம்மை;**
**அவன் திருமுன்னே.... வாரும்!**
**களைப்பினை மறக்கக் கண்ணன்**
**திருப்பெயர் பாடுவோமே!**

*இருவருமாக :*

**நாராயண... சிறீ**
**நாராயண!**
**நாராயண சிறீ**
**நாராயண!**
**வைகுந்தவாசா**
**நாராயணா!**
**வானவர் தேவா நாராயணா!**
**நம்புவோர் ஈசா**
**நாராயணா!**
**ஞானியர் தலைவா நாராயணா!**

அரங்க விளக்கு அணைகிறது!

## *காட்சி 5*

*துவாரகா புரியில்....*
*பாமா ருக்மணியருடன் கிருஷ்ணபரமாத்மா!*

ஆடற் கன்னியர் கிருஷ்ணனைப் போற்றிப்
பாடியும் ஆடியும் களிக்கின்றனர்!

பாடல் :

**பாமா ருக்மணி நாதா வேத**
**ரூபா தேவா நாராயணா!**
**கீதா போதா ராதா கிருஷ்ணா**
**மாதா யசோதா மைந்தா!**
**சீதா ராமா சிறீ ரமணா**
**பாதார விந்தங்கள் பணிந்தோம்!**
**முரளீதரா ஜெய**
**முரளிதரா!**
**முகுந்தா கண்ணா கிருபாகரா!**

கிருஷ்ணன் இருக்கையை விட்டெழுந்து....
அரங்கின் முன் வருகிறான்!
அவனது தூரதரிசனத்தில்....
குசேலர் நாரதருடன், நடந்து வருவதைக் காண்கிறான்!
குசேலர் அரங்கினுள் நுழையவும்...
பெரு மகிழ்ச்சியோடு கிருஷ்ணன்,
அவரை நோக்கி ஓடிச் சென்று....
அவரை இறுக்கக் கட்டியணைத்துக் கொள்கிறான்!
குசேலரின் பாதங்களில் வீழ்ந்து வணங்குகிறான்!
முன்வந்த நாரதர்,
பரந்தாமனின் பெருங்கருணைத் தரங்கண்டு
கண்ணில் நீருடன் பக்திப் பரவசமாக நிற்கிறார்!
குசேலர், உணர்ச்சிப் பிளம்பாகி....
அதிர்ந்து நடுங்கி,
பரந்தாமனின் திருமேனியைத் தொடவும் கூசியவராக,
கண்ணீர்ப் பெருக்குடன் ஓரிரு கணங்கள் நிற்கிறார்!
பின்னர், ஒருவாறு, கண்ண பரமாத்மாவின்
தோள்களைத் தொட்டு அவரை எழுப்பிவிடுகிறார்!
ராதா, ருக்மணியர் இருவரும்



கண்ணனின் செயல்கண்டு அதிசயித்து நிற்கின்றனர்!
ஏழேலுலகம் ஏத்திப்பணியும்
எம்பிரான் பாதந்தொட்டு வணங்கும்
புண்ணியாத்மாவின் தோற்றங்கண்டு
திகைத்து நிற்கின்றனர்....
துவாரகைப் பெண்கள்!
கிருஷ்ணன், குசேலரை அன்போடு அழைத்துச் சென்று,
தமது திருமஞ்சத்தில் அமர்த்துகிறார்!
ருக்மணியும், ராதாவும்,
கிருஷ்ணனின் செயல்கண்டு பிரமித்து நிற்கவும்,
கண்ணன், குசேலருக்கு அருந்தப் பானம் தருகிறான்!
அவர் முன் நின்று சாமரம் வீசுகிறான்!
உடனே, ருக்மணி ஓடிச் சென்று,
அச்சாமரத்தைத் தன் கையில் வாங்கி,
குசேலருக்கு வீசுகிறாள்!

கிருஷ்ணன் :

**வந்தனம் அண்ணா!**
**வருக என் இல்லம்!**
**வாழிய நின் பெரு ஞானம்**
**இத்தனை காலம்**
**எனைமறந்தீரோ?**
**இன்றேனும் நினைத்ததே போதும்!**

குசேலர் :

**செந்திருநாயகா**
**சிறீ நாராயணா**
**சிந்தையில் உனையன்றி**
**யாருளரெனக்கு?**
**உன் திருவடிகளை**
**எண்ணுதலன்றி....**
**என்புடல் கொண்டதன் பயன் வேறேது?**

*கிருஷ்ணன் :*

**அன்று நாம் குருவின்**
**அரும் பெரும் நிழலில்**
**நின்றது ஞாபகம் உண்டோ?**
**தொண்டுகள் செய்ததும்**
**துவைத்ததும் தோய்த்ததும்**
**சிந்தையில் வருவதும் உண்டோ?**

*குசேலர் :*

**குருகுல வாழ்வினாற்**
**கூடிய ஞானம்**
**திருவருள் கூட்டியதன்றோ?**
**திருமகள் தலைவா**
**நின்னுடன் பழகிய**
**ஒருசில காலம் என் தவமன்றோ?**

*கிருஷ்ணன் :*

**மதனியார் நலமா?**
**மக்களும் நலமா?**
**மரபுகள் கிரியைகள் நடக்கின்றனவா?**

*குசேலர் :*

**பொன்பொருள் நினையாப் பெருவாழ்வு நீ**
**தந்த தென்றெண்ணியே வாழ்ந்தேன்!**
**அன்புடை மனைவியும் அகம் நிறைமக்களும்**
**கொண்டதோர் குடும்பத் தறம் சேர்ந்தேன்!**

*கிருஷ்ணன் :*

**பொன் பொருள் கொண்டவன்**
**பரந்தாமன் என்றோ.....**
**என்பக்கம் வந்திட மறந்தீர்?**
**அன்போடு தர்மம்**
**அறியாதானென்றோ**
**எண்ணி நீர் என்னையும் மறந்தீர்?**



*குசேலர் :*

**தர்மம் நீ கண்ணா!**
**நீதி நீ கண்ணா!**
**தவமும் நீ என்பதை அறிவேன்!**
**கர்மமும் வினையும்**
**கழித்திடும் வரையும்**
**கண்ணா உன் கழல் நமக்குண்டோ?**

*கிருஷ்ணன் :*

**வந்தனை எனக்கேதும்**
**தந்தாரா மதனியார்!**
**தந்திடுவாய் அதை உண்பேன்!**
*(என்று கை நீட்டி நிற்கிறான்... கண்ணன்)*

*இதனைச் சற்றும் எதிர்பாராதவராக....*

*கைகள் தடுமாற.....*

*தன் முடிச்சிலிருந்து,*

*அவல் பொதியைத் தயக்கத்துடன் எடுக்கிறார் குசேலர்!*

*கிருஷ்ணன் ஆவலுடன் ஓடிச் சென்று,*

*குசேலரிடம் அவலைக் கை நீட்டி வாங்கிக்கொள்கிறார்!*

*முகத்தில் ஒளிவீசப், பொதியைப் பிரித்து, அவலை எடுத்து..... வாயில் இட்டு உண்கிறார்!*

*கிருஷ்ணன் :*

**எத்தனை சுவையிந்த அவலுக்கு!**
**என் நன்றி மதனியார் அவருக்கு!**
**பக்தியில் விளைந்த பால் பழம் உண்டேன்!**
**சத்தியப் பூக்களைக்கண்டேன்!**
**வெற்றிலையாய் உங்கள் விரிநெஞ்சம் கொண்டேன்**
**தர்மத்தை நீரெனக் கொண்டேன்!**
**நித்திய வாழ்வும் நிலையான செல்வமும்**
**முத்தியும் தர விங்கு நின்றேன்!**

*கிருஷ்ணன் பாமா ருக்மணியருடன், குசேலர் முன்நின்று அவரை ஆசீர்வதிக்கின்றார்.*

குசேலர் அவர்களை பாதங்களில் வீழ்ந்து வணங்க, கிருஷ்ணன் குசேலரை எழுப்பி விடுகிறான்!

குசேலர் : (உணர்ச்சி மேலிட)

**உலகின் திருவே**
**உயிரின் ஒளியே!**
**உண்டனை சிறியவன் அவலை!**
**விலகும் பிறவித்**
**துயரினி எமது**
**வினைகள் அறுந்திடு மையா!**
**கழலடி மறவாப் பெருவாழ்வு தந்து**
**காத்திடுவாய் பரந்தாமா**
**தழலெனத் தர்மம் தூய்மை தரும் வெந்து**
**புடமிடப்படும் எம் உயிரே!**

கிருஷ்ணன் :

**நான் எனும் ஆணவப் பேரிருள் அகல**
**வேதமாய் விளங்கி நிற்பேன்!**
**ஞானமும் கல்வியும் யோகமும் கொண்டோரின்**
**நாதமாய் ஒலித்திருப்பேன்!**
**தானமும் தவமும் ஓர் தர்மமும் இயற்றுவோர்**
**தந்தையாய்த் தாயு மாவேன்!**
**வானமும் வையமும் வாழ்வுற மீண்டும் நான்**
**மனிதனாய் அவதரிப்பேன்!**

நாட்டிய வடிவங்களின் மூலம்.....

தசாவதாரத் தோற்றத்தினைக் காட்டும்.... அபிநயங்கள்!

குசேலர்.... நாராயணனின் தசாவதார தரிசனத்தினால் உணர்ச்சி வெள்ளத்தில் நீந்துகிறார்!

**தனித்தவர் துணையெனத்**
**தாங்குவேன் அன்பர்க்கு**
**இனித்திடு நண்பனாவேன்!**
**பனிக்குளிர் மார்கழிப்**
**பாடலாய் உலகெலாம்**
**மனிதத்தை உயிர்க்கவைப்பேன்!**



(குசேலரை அன்புடன் பார்த்து)

**உள்ளே உள்ளவன் நான்! எனை**
**ஊரெலாம் தேடுதல் ஏன்?**
**வெள்ளையுள்ளத்தில் வீற்றிருப்பேன் அன்பு**
**வெள்ளத்தில் நான் துயில்வேன்!**
**தளர்ந்திடும்போது சங்கொலிப்பேன்! பகை**
**தாக்கிடும் போது சக்கரம் எடுப்பேன்!**
**இழந்திடும் போது துகில் கொடுப்பேன்! தர்மம்**
**தழைத்திட நானே தரணியில் உதிப்பேன்!**

இப்போது குசேலர், பக்திப் பரவசத்தில் மயக்க முற்று வீழ்கிறார்!

கிருஷ்ணன் :

(ருக்மணியின் பக்கம் வந்து அவளைப் பார்த்து)

**செல்வி நீ சிரித்தாற் செல்வம்**
**சோவென மழையாய்க் கொட்டும்**
**நல்லவை பூக்கும் வாழ்வில்**
**நலிந்தோரை உன்தாள் காக்கும்**
**நல்லவர் குசேலர் நண்பர்**
**நலிவினை நீக்க வேண்டும்**
**இல்லத்தார் முன்னே தோன்றி**
**இணையிலாச் செல்வம் செய்வாய்!**

(ருக்மணி, அப்படியே ஆகட்டும் எனச் சைகையாற் கூறி விடை பெறுகிறாள்)

## காட்சி 6

குசேலரின் குடிசை :
குடிசையின் முன்னே :
திருமகளாக.... ருக்மணி தோன்றி நடனமாடுகிறாள்!
அட்ட லட்சுமிகள் தோன்றி ஆடுகிறார்கள்!
குடிசை மாளிகையாகிறது!
குறிப்பு : (அட்டலட்சுமிகள்....
ஒவ்வொருவராகச் சென்று...

மூவர் மூவராகக் குழந்தைகளை அழைத்து வருகின்றனர்:
இறுதியில்...
ருக்மணி (திருமகள்) மூன்று குழந்தைகளுடன்
குசேலர் பத்தினியையும் அழைத்து வருகின்றனள்.
குழந்தைகள் செல்வச் செழிப்புடன் விளங்குகின்றனர்.
குசேலர் பத்தினி, செல்வ லட்சுமியாக விளங்குகிறாள்!
திருமகளுடனும் அட்டலட்சமிகளுடனும்
இவர்களது நடனம்!
இந்நடனம், ஜதி, சுரங்கள்,
தாள வாத்தியங்களில் நடை பெற வேண்டும்!
இந்நடன முடிவில் அவர்கள் அரங்கிலிருந்து விலக.....
அரங்கில் நுழைகிறார்... குசேலர்!
அங்கு அவரது குடிசையைக் காணவில்லை!
பதிலாக அரண்மனை போலப் பெரு மாளிகை தெரிகிறது!

குசேலர் :

**எங்கே என் குடிசை?**
**எங்கே என் குடும்பம்?**
**எங்கே என் பரந்தாமன் கோவில்?**
**எங்கே பூஞ் செடிகள்?**
**எங்கே நீர்ச் சுனைகள்?**
**எல்லாமே புதிதான சாயல்!**

இப்போது, அவரைநோக்கி ஓடி வருகிறாள்,
அவரது தர்மபத்தினி!
ஓடி வந்தவளை....
இனங்கண்டு கொள்ள முடியாமல்
அதிசயமாகப் பார்க்கிறார் குசேலர் :
வந்தவள், ஓடிவந்து,
குசேலரின் பாதங்களில் வீழ்ந்து வணங்குகிறாள்!
வணங்கியவளைத் தூக்கவும் முடியாமல்,
சற்று விலகி நிற்கிறார் குசேலர்!
நிலைமையை உணர்ந்த குசேலரின் பத்தினி.
மெதுவாக எழுகிறாள்!



குசேலர் பத்தினி :

**நாதா என்னைத் தெரியாதா?**
**நான் தான் உனது துணை!**

குசேலர் : (அதிர்ச்சியுடன்)

**ஏதிது தோற்றம் என்தாயே!**
**எப்படி நடந்தது சொல்வாயா?**

குசேலர் பத்தினி :

**மாயமாய் நடந்தன மாற்றங்கள் இந்த**
**மாளிகை வாழ்வதன் தோற்றங்கள்!**

இப்போது குசேலர் முன் குழந்தைகள்
உயர்ந்த ஆடை ஆபரணங்களுடன் தோன்றுகின்றனர்.
குசேலர், வியப்பில் வீழ்ந்து தள்ளாடுகிறார்!
உடனே, அவருக்குக் கண்ணன், திருவிளையாடல் புரிகிறது!
கண்ணனை நினைத்து பக்திப் பரவசத்தில் ஆடுகிறார்!
எல்லோரும் அவருடன் இணைந்து ஆடுகின்றனர்!
ஆட்டத்தின் நடுவில்,
கிருஷ்ணன், ராதா ருக்மணியருடன் தோன்றி,
அவர்களுடன் கலந்து ஆடுகின்றான்!
முடிவில்
குசேலன், கண்ணன் திருவுருவத்தினுள் மறைகிறார்!

அரங்க விளக்கு அணைகிறது!

பாடல் :

**இறைவன் திருவருளை நினையுங்கள் அவன்**
**திருப்பாத ஒளியினில் நனையுங்கள்!**
**வருவான் வளந்தருவான் நம்புங்கள்! இனி**
**ஒரு நாளும் நமக்கு இல்லைத்துன்பங்கள்!**
**பழி பாவம் தரும் பொருட்கள் நிலையானதில்லை!**
**பகவானைத் தொழு தெழுங்கள் அவன் அன்பின் எல்லை!**
**இழிவான சொல் தவிர்த்து எல்லோரும் இணைந்து**
**இப்பாரை உயர்விப்போம் எல்லாமும் அடைந்து!**

*(நாட்டிய நாடகம் நிறைவெய்துகிறது!)*

**சுபம்**



6. நதிமகன்

# 6. நதிமகன்

மகாபாரதம் கிழக்கில் உதித்த தொன்மை வரலாற்றின் பெருவிருட்சம். இப்பூவுலகின் அதிமூத்த இதிகாச மூச்சு. இலக்கியப் பேச்சு.

மனித நாகரிகத்தின் மண்டையோட்டுக்குள், சிந்தனையென்னும் அத்தியாயம் ஆரம்பித்ததற்கான அறைகூவல். தர்மம், நீதி என்ற தத்துவங்களை அரசியலறங்களை, மனிதநேய மாண்புகளை, இலக்கியப் பெரு நதியாக, இதிகாசத் திருவொளியாகத் தீட்டினர் நமது முன்னோர் பெருமக்கள்.

தத்துவங்களோடு, கற்பனைகளையும் கலந்து, அன்றிலிருந்து, இன்று வரை, பாமரர் தொட்டுப் படித்தவர் வரை இரசிக்கக்கூடிய பாத்திரங்களையும், கிளைக் கதைகளையும் ஆரமாகக் கட்டிக் கொடுத்துள்ளனர் எமது முன்னோர்கள்.

எழுதப்பட்ட உலக சரித்திரத்திற்கு முன்னர், எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்படாத வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்த முதற் குடியின் தொல்குடி வரலாற்றின் மடியிற் பூத்து, மலர்ந்த, தர்ம கீதமிது. கீதையைத் தந்த காதையிது.

தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கௌவும் என்றும், பின்னர், தர்மமே வெல்லும் என்றும் தரணிக்குணர்த்த வெழுந்த தாரக மந்திர ஓசையாகவே, மகாபாரதம், தன்னைத் தந்துள்ளது.

இந்த உலகம், இன்று உருள்கிறதென்றால், நாளை நன்றாக விடியும் என்ற நம்பிக்கைதான், அதன் அச்சாணியாக இருக்கிறது. 'உயர்ந்தோர் மேற்றே உலகு வழக்கு' என்ற தொல்காப்பியனின் மெய்மொழிதான், இன்றும், உலக மக்களின் உயிர் நம்பிக்கையாகவுள்ளது.

நாளை நமக்கும் ஒரு காலம் பிறக்கும் என்றுதான், பல காலங்கள், இமைகளை விரிக்கின்றன.

தர்மம், நீதி, சத்தியம் செத்து விடாது என்ற நம்பிக்கைதான், இன்று, உலக மக்களின் உள்ளங்களை, உயிரோடு வைத்திருக்கின்றது. அதன் அடிநாதம்தான், மகாபாரதக் காவியமாகும்.

இது கற்பனையாகட்டும், கட்டுக் கதையாகட்டும், இல்லை உண்மையாகவும் இருந்துவிட்டுப் போகட்டும்.

சரஸ்வதி யாற்றங்கரையும், குஜராத்தின் கம்பே குடாவின், கடலடியமிழ்ந்த அரண்களும் கட்டடங்களும் தான், இக்காவியத்தின் வரலாற்று நிலைப்பாட்டினை இவ்வுலகுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

எது எவ்வாறாயினும், இந்து சமுத்திரக் கரைகளையும், இமாலய திபத்து மலைத் தொடர்களையும், தொடர் மலைக் குகைகளையும், அங்கு வாழ்ந்து, வாழ்கின்ற தென்கிழக்காசிய மானிட இதயங்களையும் பீடமாக்கி நிலைத்துவிட்ட, இலக்கியப் பெருஞ்சொத்து இது. காவியப் பேராறு இது.

இலட்சோப இலட்சம் சுலோகங்களின் வடிவில் வியாசன் கூற, விநாயகன் வரைந்ததாக நம்பப்பட்டு வந்த, வருகின்ற இக்காவியப் பேரோசையை, புதுமை எனும் பெயராற் புரட்டி யெடுத்து விடலாம் என்று கங்கணம் கட்டி நின்ற நிற்கின்ற புத்தி சீவிகளின் புத்திக்கு எட்டாமற் பொலிந்து நிற்கின்ற இக்காவியம், குகை ஓவியங்களாக, நாட்டுக் கூத்தாக, கிராமியக் கலை வடிவங்களாக, நாடகங்களாக, நாடடியங்களாக, நாட்டிய நாடகங்களாக, கிழக்கிலும் மேற்கிலும் அரங்கிலும் அலையிலும் ஒளியிலும் வெளியிலும் மக்களாற் படைத்தளிக்கப்பட்டு வருகின்றது.

வியாசன் பற்றியும், விநாயகன் பற்றியும் விமர்சிப்பவர்களுக்கு நான் கூறும் விளக்கம் ஒன்றேயொன்றுதான்.

மகாபாரதத்தை நம்மால், படிக்கத்தான் முடியுமேயொழிய, அப்படியொருகாவியத்தை நம்மால் நமது பிறவிக்குள் நினைத்துப் பார்க்கக்கூட முடியுமென நான் நம்பவில்லை.

முதற்கதை, இணைக்கதை, துணைக்கதை, கிளைக்கதை யென ஒரு தொடராறு போல ஒரு பெரு நீர்வீழ்ச்சி போல சிந்திக்கவும், சிந்தித்ததைச் சுலோகங்களாகப் படைக்கவும், சுலோகங்களை ஏட்டில் எழுத்தாணி கொண்டு எழுதவும்,



அதிககூடிய அளவில் நூறாண்டுகள் கொண்ட எமது ஆயுட்காலம் போதுமா? என்ற கேள்வி என்னுள் அடிக்கடி எழுவதுண்டு.

ஒழுங்காக, ஒரு காதற் கடித மெழுத முடியாதவர்கள் கூட, மகாபாரதத்தைப் பற்றி விமர்சிப்பதை நான் கேட்டிருக்கிறேன். அதர்மத்தின் நிழலில் அறியாமையையே ஆணி வேராகக் கொண்ட அறிவு மண்டல மொன்றை, இந்த அகிலம் இன்று பற்றிப் படர்ந்து கொண்டுள்ளது.

மனனப் பண்டிதர்கள், தம்மை மாமேதைகளாகக் காண்கின்ற காலம் இது.

இவ்வாறான ஒரு காலத்தில் மேற்கில் வாழ்கின்ற யான், எனது கலை, கவிதையீடுபாட்டின் வெளிப்பாடாக, மகாபாரதக் கதையின் துளிகளையும் கையேந்தி, மெய்யேந்தி, உயிரேந்தி, நாட்டிய நாடகப் படைப்புக்களாக மக்கள் முன் தர முயல்கின்றேன்.

மகாபாரதத்தின் முதன்மைக் கதையோட்டத்தினை, முழுதாக நாட்டிய நாடகமாக்கிடும் விருப்பும், வேணவாவும், எனது நெஞ்சினுள் நிறைய இருப்பினும் அதனை முழு நீளப் படைப்பாக ஆக்கியளிப்பதற்கான வாய்ப்பும், வளமும், எனக்குக் கிடைப்பதாக இல்லை.

மேற்கரங்க யுக்திகளை மிகப்பெரிய அளவில் உபயோகப்படுத்துவதன் மூலமே, புலம்பெயர் வாழ்வுச் சூழலில் வாழும் எமது குழந்தைகள், அக்கறையோடு இரசிக்கக்கூடிய வகையிற் தயாரிக்க முடியுமென்பது எனது கணிப்பு.

எனது பிறந்த மண்ணில் ஈழத் திருநாட்டின் தமிழீழ வட பகுதியில் அமைந்த, பல ஊர்களில் ஒன்றான வட்டுக்கோட்டையில், நான் சிறுவனாகவும், இளைஞனாகவும் வாழ்ந்த காலத்தில் மகாபாரதத்தை நாட்டுக் கூத்தாக இரவிரவாகக் கண் விழித்துப் பார்த்தவன்.

என் தந்தையார், முதுதமிழ்ப்புலவர் நல்ல தம்பி அவர்களும் இக்கூத்தின் பாட்டுகள் சிலவற்றை எழுதியிருக்கிறார். அன்று நாம் வாழந்த காலம் வேறு. எமது வாழ்வு வேறு. எமது இரசனையும் வேறு.

ஆனால் நாம் இன்று வாழ்கின்ற, அதுவும் புலம்பெயர் நிலங்களில் வாழ்கின்ற காலம் வேறு. வாழ்வு வேறு, எமது பிள்ளைகளின் பெற்றோர்களின் இரசனையும் வேறு. எனவே, கால சூழல்களுக்கேற்பவே, நமது படைப்புகளையும் தர வேண்டியுள்ளது.

மகாபாரதக் கதைகளின் முதற் கதையாம், பீஷ்மரின் கதையின் முதற் பாகத்தினையே யான் நதிமகன் எனும் தலைப்பில் ஈண்டு தருகின்றேன்.

நதிமகன் – எனும் நாட்டிய நாடக வடிவில் மகாபாரதத்தின் உதிப்பினையும் பீஷ்மரின் பிறப்பினையும் இப்பாகத்திற் தந்துள்ளேன். இதனைத் தொடர்ந்து, பாஞ்சாலி சபதம் எழுதப் பெற்றது.

மேற்கில் வாழ்ந்து கொண்டு, நான் கிழக்கிற்காக வழங்கும் இலக்கிய முத்துக்களிவை. இன்னும் எனது முத்துக்கள் தொடரும்.

– அன்புடன் புலவர்



## காட்சி 1

அரங்கில் தபோவனம் வியாசர் தவநிலையில்

பின்புலத் திரையில்

பாரதப் போர் நடக்கிறது

பின்புலத் திரையில் நிகழும் மகாபாரதப் போரினைத் தமது அகக் கண்களாற் காண்கிறார் வியாசர்.

அவரது உணர்வுகள், பாவங்களாக, முத்திரைகளாக வெளிப்படுத்தப்படுகின்றன.

பின்னணியிற் பாடல்

**தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கௌவும்**
**தான் மீண்டும் தர்ம மெழும் தடைகள் வெல்லும்**
**கருமத்தாற் காரியங்கள் யாவும் வெல்லும்**
**காலத்தின் வழி மேன்மை தர்மத்தார்க்கே!**

(வியாசர் – தமது தரிசனத்திற்
பஞ்ச பாண்டவர்களின் வெற்றியையும்
கண்ணபிரானுடன் அவர்கள் நின்று...
முடிசூடும் காட்சியையும் கண்டு...
மகிழ்ச்சியும், நிறைவும் அடைகிறார்.
பின்புலத் திரையில் – கண்ணனின் தோற்றம்
(பகவத் கீதாவரிகள் ஒலிக்கின்றன)
வேத இசையுடன் பாடல்

**ஜெய ஜெய ஜெய நாராயணா!**
**ஜெய ஜெய ஜெய ஜெய நாராயணா!**
**துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலன**
**ரட்சகனே ஜெய நாராயணா!**

இந்தப் பாடல் ஒலிக்க,,,

வியாசரின் சீடர்கள் அரங்கிற்கு வந்து...

வியாசரை வணங்கி,

அவரது ஆட்டத்திலும் மகிழ்ச்சியிலும் இணைகிறார்கள்!

வியாசர், தமது தரிசனத்திற் கண்ட காட்சியைத்

தமது சீடர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்!

(சஞ்சாரி பாவத்தில் இக்காட்சி அமைக்கப்படுகிறது)

பாடல்

**தர்மப்போர் நடக்கக் கண்டேன்! – உயர்**
**தர்மமே இறுதியில் வென்றிடக் கண்டேன்!**
**அருமை கொள் காவியமாய் – அவை**
**அனைத்துமே என்னுளே விரியக் கண்டேன்!**

**பாண்டுவின் புத்திரர்கள் – தாங்கள்**
**ஆண்ட நல் அயோத்தியின் அரசிழந்தார்!**
**தீண்டிய கௌரவர்கள் – செய்த**
**சூழ்ச்சிகள் கொடுமையால் நெஞ்சுடைந்தார்!**

**நாடிழந்தார் ஒரு வீடிழந்தார்! – கொடுங்**
**காட்டிடை விலங்குடன் வாழ்ந்திருந்தார்!**
**மூண்ட தோர் நெருப்பில் வெந்தார்! – முழுப்**
**பலத்துடன் சோதனை யாவும் வென்றார்!**

சீடர்களில் ஒருவன்

**மாமகரிஷியே!**
**மாதவ யோகியே!**
**வேத வியாச! எம் குருவே!**

சீடர்களில் இரண்டாமவன்

**நீதவ ஞானத்**
**தரிசனத்தாலே**
**கண்டது காட்டுவை தேவா!**



வியாசன்

**காவியமாய்த் தருவேன்! – நான்**
**கண்ட நற் காட்சிகள்**
**யாவையும் தருவேன்!**
**ஆயிரமாயிரம் சுலோகங்களாக்கி**
**அனைத்தையும் அற்புதமாய்த் தருவேன்!**
**பாரெலாம் போற்றிடும்**
**பாரத காவியம்**
**படைத்திடப் பிரமனின் தாள் பணிவேன்!**

*(வியாசர் சீடர்களையும் அழைத்தபடி...*
*தியானத்தில் அமர்கிறார்!)*

அரங்க விளக்கு அணைகிறது.

## காட்சி 2

வியாசர், பிரமனை வேண்டித் துதித்தல்.

(நான்முக வணக்கம்)

**வாணீசா – நீ**
**வரந்தருவாய்!**
**வருவாய் நீ பிரமா!**
**நான்முக வேதா!**
**நாமகள் நாதா!**
**வேதங்கள் வணங்கும்**
**வித்ய சொரூபா!**
**வாணீசா – நீ**
**வரந் தருவாய்!**

வியாசரும் – சீடர்களும்

துதித்து பாடியாடுதல்

**ஞான தீபா – நம – ஓம் – இந்த**
**ஞால தலம் தனில் வா!**
**பாரத காவியம் பாடிட அருள்வாய்!**
**பலந் தருவாய் தேவா!**

இப்பாடலின் முடிவில்...

தேவர்கள் –

பிரணவ வேதம் ஒலிக்க...

நாரத வீணையும் கானமும் ஒலிக்க...

நான்முகன் அரங்கிற்கு நடனமாடிய படியே வருகிறான்!

(ஒளிப்பொட்டில் அவன் வரவு காட்டப்படுகிறது)

ராக சுரங்கள் வீணையில்

மிருதங்கத்தில் தாள நடைகள்

பிரமனுடன் இணைந்து

வியாசரும் சீடர்களும் ஆடுதல்!

(ஆடலின் முடிவில்)

*பிரமன்*

*(வியாசரை நோக்கி)*

**வேதக் கடலே!**
**மாதவ ஞானியே!**
**வியாசப் பெருமகனே! – எனை**
**வேண்டிய காரணம் யாதோ?**
**விளக்கிடுவாய் ஐய!**

*வியாசன் பதில்*

**வேதத்தின் ஊற்றே!**
**வித்தையின் மூச்சே!**
**விளக்கிடுவேன் கேளாய்!**
**கீதையின் பாட்டைக்**
**கூறிடும்காவியம்**
**யாத்திட விரும்புகிறேன்! அந்தக்**
**காதையை ஏட்டினில்**
**ஏற்றிடும் எழுத்தனைக்**
**காட்டிட வேண்டுகிறேன்!**



(எழுத்தன் – ஏட்டில் எழுதுபவன்)

பிரமன்

இதனைக் கேட்டு...

ஒரு கணம் சிந்திக்கும் பாவம் காட்டுகிறான்!

பிரமன் சிந்திப்பதை அவதானித்தவனாக...

வியாசன் தொடர்கிறான் :

**தர்மத்தின் வாழ்வினைச்**
**சூது கௌவும் – பின்னர்**
**தர்மமே நின்று வெல்லும்! – எனும்**
**பெருநெறி பேசிடும் பாரதப் போர்க்கதை**
**பாருக்கு நன்மை செய்யும்!**
**இதை யாத்திடும் பலமருள்வாய்! – கவி**
**கோர்த்திடும் வளம் தருவாய்!**

*பிரமன்*

(வியாசனை நோக்கி வந்து-
அவனை அணைத்தவாறே...)

**இலக்குடன் இலக்கியம்**
**ஈன்றிட எண்ணிடும்**
**இதயத்தை வாழ்த்திடுவேன்! – இது**
**நிலைத்திட ஏட்டினில்**
**விதைத்திடும் பெருமையை**
**விநாயகனிடம் தருவேன்! அவன்**
**விக்கினம் துடைத்திடுவான்!**

*வியாசர் (நன்றிப் பெருக்குடன்) :*

**நல்லது சொல்லினை நான்முகனே! – என்**
**நாவினில் நடமிடுவாய்!**
**தொல்லைகள் யாவையும் தீர்த்திடும் கணபதி**
**வல்லபை கணவனை வேண்டிடுவேன்!**

*(அரங்க விளக்கு அணைந்து மீண்டும் ஒளிர்கிறது)*

வியாசர் விநாயகனை வேண்டித் துதித்தல்

பின்னணியிற் பாடல்

**உலகினைத் தொந்தியில்**
**அடக்கிய நாயகா!**
**அலகிலா ஞானக் கணபதியே!**
**நிலவொடு வானையும்**
**நீந்து விண்மீனையும்**
**அழகொடு படைத்தவன் திருமகனே!**

இப்போது... அரங்கின் வலப்பக்க

பின் மூலையில்

ஒளிப் பொட்டில் விநாயகன் தோற்றம்!

பாடல் (தொடர்கிறது)

**கலையொடு காவியம்**
**கற்பனை யாவையும்**
**கடலெனத் தந்திடும் ஞானக் கரம்**
**கலைமகள், அலைமகள்**
**மலைமகள் பார்வையில்**
**நடமிடும் கணபதி திருக்கரமே!**

வியாசன் பாடல் முடிவில்

கண்களை மூடித் தியானத்தில் இருக்கிறான்!

விநாயகன் வியாசனை வாழ்த்தியபடி...

நர்த்தனமாடி அரங்கிற்கு வருகிறான்

வியாசனின் தரிசனத்தில்

நர்த்தன விநாயகனின்

ஆனந்த நர்த்தனம்

குறிப்பு – நாட்டிய நாடக ரசிகர்க்கு ஒரு நல்விருந்தாக இந்த நர்த்தனம் அமைதல் வேண்டும். கற்பனாரசம் கலைஞர்களின் பூரண சுதந்திரத்துடன் பொழிய வேண்டும்.

தாள வாத்திய இசை

சுர ஜதிகள்

(இக்காட்சியில் அலைமகள், கலைமகள், திருமகள் சகிதம்,



நாரத நந்தியரும் தோன்றி நடமிடலாம்)

விநாயக நர்த்தனத்தின் இறுதியில்,

வியாசனும் இந்நர்த்தனத்தில்

இரண்டறக் கலந்து நடமிட வேண்டும்.

நடனத்தில் இறுதிப் புள்ளியில் வியாசர்

விநாயகரின் பாதங்களில் வீழ்ந்து வணங்குகிறார்!

அரங்கில்.... இப்போது விநாயகரும், வியாசரும் மட்டுமே

காட்சி தருகிறார்கள்!

விநாயகன், வியாசரைக் கரம் கொண்டு தூக்கி, அணைத்து, ஆசி வழங்குகிறார்.

விநாயகன் :

**வேண்டிய நோக்கம்**
**நன்கறிவேன்!**
**வேத வியாச நீ கலங்காதே!**
**தோன்றிய பாரதக்**
**காவியம் ஏட்டினிற்**
**தூவிடும் தொண்டினை யாற்றிடுவேன்!**

(வியாசன் மகிழ்ச்சி பொங்க நிற்கிறான்)

(விநாயகன் சற்று உறுதியோடு தொடர்கிறான்)

**ஆயினும் அதற்கொரு**
**நிபந்தனை யுண்டு!**
**அதற்குடன் பாடெனில்**
**தொடங்குமென் தொண்டு!**

விநாயகனின் இந்த நிபந்தனையைக் கேட்டதும் ,வியாசன் எதிர்பார்ப்போடு விநாயகனின் முகத்தைப் பார்த்துவிட்டு

வியாசன் :

**ஆண்டவன் புதல்வா!**
**கணங்களின் தலைவா!**

**அருள் தர உவந்தனை அதுபோதும்!**
**தேர்ந்த உன் நிபந்தனை**
**யாதெனக் கூறிடின்**
**யானதற் குடன்படு வேன்பாரும்!**

*விநாயகன்*

*(துள்ளு நடைப் பாடலாக)*

**என்னெழுத்தாணி நிற்காது!**
**எழுத்து நின்றாலது தொடராது!**
**உன்னுளக் காட்சிகள் சுலோகங்களாகிப்**
**பொழிந்திட வேண்டும் தப்பாது!**

*வியாசர் முகத்திற் சற்று அதர்ச்சிக்குறி தோன்றி மறைகிறது.*
*பின்னர், விநாயகரைப் பார்த்து வணங்கிவிட்டு...*

*வியாசர்*

**என் பெருமானே!**
**கணபதியே! – உன்**
**எண்ணப்படி நான்**
**இயங்கிடுவேன்! – எனின்**
**சின்னப்பிரச்சனை**
**யொன்றுள திங்கே!**
**சொன்னால் என்னை...**
**மன்னிக்க வேண்டும்!**

*விநாயகர் :*

**'சொல்லும்!'**

*என்று கையாற் சைகை காட்டுகிறார்!*

*வியாசர் :*

**சொல்லும் சுலோகங்கள்**
**அனைத்தின் பொருளையும்**
**நன்கு விளங்கியே**
**எழுதிட வேண்டும்!**
**சுலோகப் பொருள்தனை**



**விளங்கிடும் வரையும் – உன்**
**சுந்தர விரல்கள்**
**நின்றிட வேண்டும்!**

*விநாயகர் (தொந்தி குலுங்கச் சிரிக்கிறார்)*
(சிரித்துவிட்டு, வியாசரின் முகத்தைப் பார்த்து)

*பாடல் :*

**ஆகட்டும்! ஆகட்டும்!**
**ஆகட்டும் ஐய!**
**அகிலத்தின் நன்மைக்காய்**
**ஆகட்டும் ஐய!**
**நீ கட்டும் சுலோகங்கள்**
**நிலைக்கட்டும் உலகில்!**
**போகட்டும் தடைகள்!**
**நின் புகழ் நிலைக்கட்டும்!**
**பாரெட்டுத் திசையிலும்**
**பாரதம் பரவவே!**

*விநாயகர் ஆசி கூறுகிறார்!*
*அரங்க விளக்கு அணைந்து மீண்டும் ஒளிர்கிறது!*
*ஆசனங்களில்...*
*வியாசர் அமர்ந்திருந்து சுலோகங்களைப் பொழிய*
*விநாயகர்*
*ஏட்டோடும் எழுத்தாணியோடும்*
*வியாசரின் பக்கத்திலமர்ந்து.,..*
*மகாபாரதத்தை யெழுதுகிறார்.*
*ஓமெனும் பிரணவ நாத மெலிக்க...*
*நாரத வீணையின் பின்னணியில்...*
*மகாபாரத காவியம் மானிட தர்மத்தின்*
*செவிகளுக்கு விருந்தாக மலர்கிறது!*
*விநாயகரின் எழுத்தாணி*
*வியாசரின் ஓட்டத்திற்கு ஈடு கொடுக்காது போக,*
*விநாயகர் தமது தந்தத்தினை ஒடித்து,*

அத்தந்தத்தினால் ஏடுகளில் எழுதிச் செல்கிறார்.

**அரங்க விளக்கு அணைகிறது!**

## காட்சி 3

திரையின் பின்னணியில் நதி பாயும் ஓசை
மழை முகில்களின் மோதல் ('ஒலியிழைப் பதிவு)
ஓமெனும் பிரணவ நாதம்
பெருமலையுச்சியிலிருந்து
கங்கை நதி பாய்ந்து கொண்டிருக்கிறது!
திரை விலகுகிறது.
அரங்கில் இருள் – பின்திரையில் நீலவானம்!
விடி வெள்ளிகள் தோற்றம்
இனிய வேய்ங்குழல் ஓசை
நந்தியின் மத்தளம்
நாரத கீதம்
இப்போது அரங்கின் பின்னணியில்
அரங்கத் திரையை நிறைக்கிறது, சிவமுகம்
சிவனது திருமுகம்தோன்றுகிறது!
இப்போது ஒளிப்பொட்டில்...
சிவனின் திருமுடியில்...
அமர்ந்திருந்து அழகினைப் பொழிகிறாள்
கங்கா தேவி–
ஜதிகளுக்கு –
கங்கையின் திருவிழிகள் அசைகின்றன!
பின்னர், சிரசு மட்டும் அசைகிறது!
கங்கை, சிவ முடியிலிருந்து எழுந்து...
முடியை விட்டு இறங்கி நடந்து...
அரங்கின் மத்திக்கு வருகிறாள்.
ராக, தாள, ஜதிகட்கு கங்கா தேவியின் நடனம்



நதி நடனம்!
கிராமிய – மலை – வன – நதி சார்
சூழல்களைக் கொணரும் வாத்தியக்
கருவிகள் உபயோகிக்கப்பட வேண்டும். (+மலைச்சாரல் – வாத்தியக் கருவிகள்)
மீன்கள் வந்து இறங்குகின்றன!
மான்கள் வந்து இணைகின்றன!
மயில்கள் வந்து இணைகின்றன!
குயில்கள் நின்று கூவுகின்றன!

கங்கையின் பாடல்

**திங்கள் சூடிய, எங்கள் பெருமான்!**
**திருமுடியில் உதித்தேன்!**

**கங்கை என்பேர்! –**
**காசினி தழைக்கப்**
**பொங்கும் புனலானேன்! – நான்**
**பூசைப் பொருளானேன்!**

**எங்கும் பசுமை...**
**எதிலும் புதுமை...**
**தாங்கிட நான் தரித்தேன்! – இள**
**மங்கை... எனது**
**மாதவப் பயனால்**
**அழகுடன் அவதரித்தேன்!**

**அன்னம் இடுவோர்**
**கரங்களின் வழியே**
**அகிலத்தின் பசி தீர்ப்பேன்!**

**விண்ணின் வழியே**
**விருந்தென வீழ்ந்தே...**
**நன்மைகள் பல நயப்பேன்! – நான்**
**நானிலம் உயர வைப்பேன்!**

கங்கை நதி நடனம் நிறைவுறுகிறது!

அரங்க விளக்க அணைகிறது!

## காட்சி 4

பிரமதேவன் அவை.
தேவர்கள் வரிசையாக வந்து
பிரமனை வணங்குகிறார்கள்.
ராஜரிஷிகள் அமர்ந்திருக்கிறார்கள்.
அரங்கில் மகாபிஷக் வருகிறான்.
மகாபிஷக் பிரமனை வணங்குகிறான்.
பிரமதேவன் அவனை வரவேற்று
அறிமுகம் செய்து வைக்கிறான்.

பாடல்

**மகா பிஷக் என்னும்**
**மன்னனிவன்! – பெரு**
**மா நிலம் காத்த மன்னன்!**
**மா தவத் தாலும்,**
**யா கத்தினாலும்,**
**தேவ பதமடைந்தான்! பெரு**
**வேதங்களை யறிந்தான்!**
**வாழ்த்திடுவீரிவனை! – வர**
**வேற்றிடு வீரிவனை!**

தேவர்களும், ரிஷிகளும்,
மகா பிஷக்கை வரவேற்று, வாழத்துகிறார்கள் –
இப்போது கங்கா தேவி,
பிரமதேவன் அவைக்கு வருகிறாள்!
கங்காதேவியின் அழகில் மயங்கி,
அவள் மீது தனது
முழுக்கவனத்தையும் செலுத்துகிறான் – மகாபிஷக்!
தன்னை மறந்தவனாக



அவள் மீது தனது பார்வையைச் செலுத்துகிறான்!
கங்கையும், இவன் மீது தன் பார்வையைச் செலுத்த
அவர்கள் ஒருவர் மீது ஒருவர் மோகங் கொள்கின்றனர்!
கங்கை, வெட்கத்தோடு அரங்கினை விட்டு விலகுகிறாள்!
இதனைக் கண்ட பிரமதேவன்,
சினமும் ஆத்திரமும்கொண்டு
மகாபிஷக்கை, மானிடனாகப் பிறந்து,
கங்கையை மணக்கும்படி சாபமிடுகிறான்.

பிரமன் :

**மானிடனாய்ப் பிறப்பாய்! – அந்த**
**மாதவள் கங்கையை மணமுடிப்பாய்!**
**பாரத மன்னன் பிரதீப ராஜன்**
**மாளிகையிற் பிறப்பாய்! – அவன்**
**மைந்தனாய் நீ பிறப்பாய்!**
**சந்தனு வென்னும்**
**மைந்தனாய்ப் பிறந்தவன்**
**சந்ததி காத்திடுவாய்!**

அரங்க விளக்கு அணைகிறது

## காட்சி 5

காட்சி – வனம் – இசை – வனப் பிரரேதசத்தைப் பிரதிபலிப்பதாக அமைதல் வேண்டும்!
விலங்கின ஓசைகள்
அஷ்ட வசுக்களின் துன்ப நடனம்!
துயரத்தையும், துன்பத்தையும் எதிரொலிக்கும்
இசையும் நடனமும்!
புல்லாங்குழல், உடுக்கு, பறை போன்ற
இசைக் கருவிகள் உபயோகிக்கப் படலாம்!
இப்போது, கங்கா தேவி, வனத்தினூடு செல்கிறாள்!
நதி நடனம் மெதுவாக வந்து கலக்கிறது)

*கங்காதேவி வனத்திற் பிரவேசிப்பதைக் கண்ட*
*அஷ்ட வசுக்கள் அவளை நோக்கி ஓடி...*
*அவளை எதிர் கொண்டு வணங்குகின்றனர்!*

*அஷ்ட வசு 1*

**அம்மா தாயே**
**அருள் புரிவாயே!**
**கங்கா தேவி நீ**
**கருணை செய்வாய்!**
**எங்கள் கவலை**
**தீர்த்திட வேண்டும்**
**எமக்கு விமோசனம்**
**தந்திட வேண்டும்!**

*கங்கை எதுவு மறியாதவளாக*
*முகத்தில் வியப்பும், வினாவும் எழ,*
*வசுக்களைப் பார்க்கிறாள்!*
*கங்கையின்*
*உள்ளுணர் வினைப் புரிந்து கொண்ட வசுக்கள்*
*கங்கைக்குத் தமது நிலையை விளக்குகின்றன!*

*அஷ்ட வசு 2*

**எம் மாதவரிஷி**
**வசிட்டன் நொந்திடத்**
**தவறொன்று செய்துவிட்டோம் ! – அவன்**
**கோபத்தால் ஒரு**
**மானிடப்பிறவி**
**தாங்கிடும் சாபம் பெற்றோம்! – துன்பம்**
**தாங்கிடும் சாபம் பெற்றோம்!**

*கங்கை (திகைப்புற்றவளாக) (சைகை மூலம்)*
*என்ன தவறு செய்தீர்கள்? எனக் கேட்கிறாள்.*



*அஷ்ட வசு 3*

**வசிட்ட மகரிஷி**
**வளர்த்த பசுதனைக்**
**கவர்ந்து தவறு செய்தோம்! – நாம்**
**புசித்த வீட்டினிற்**
**புகுந்து திருடியே**
**பெரிய தவறு புரிந்தோம்!**

**விதியின் வலியினால்**
**விளைந்த தவற்றினால்**
**வீழ்ச்சி யடைந்து குனிந்தோம்!**

**நதியின் தலைவியே**
**நமது துயர் தனை**
**நீக்க உன்னைப் பணிந்தோம்!**

*கங்கை அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?*
*(சைகை மூலம்) என்று கேட்கிறாள்!*

*அஷ்ட வசு 4*

**எமக்குத் தாயாக வேண்டும்! – நாம்**
**உனக்குச் சேய்களாய்ப் பிறந்திட வேண்டும்!**
**சுமக்க மடியினைத் தந்திட வேண்டும்!**
**சோதனை தாங்கிடப் பலந்தர வேண்டும்!**

*வசுக்கள் அனைவரும் இணைந்து*

**மானிடப் பிறவியில்**
**ஓரிரு கணங்கள்தான்**
**வாழ்ந்திட வேண்டுமம்மா!**

**நீரினில் எம்மை**
**வீசியே எறிந்து**

**கொன்றிட வேண்டுமம்மா! – நீ**
**கொன்றிட வேண்டுமம்மா!**

அஷ்ட வசுக்களின் வேண்டுகோளை,
வேண்டா வெறுப்புடன் ஏற்றுக்கொண்ட கங்கை,
மகாபிஷக் மீது தான் கொண்ட காதலின் விளைவாகப்
பின்வருமாறு கூறுகிறாள்

கங்கை :

**சந்தனு என்மீது காதல் கொள்வான்! – அவன்**
**சந்ததி தழைத்திட ஆசை கொள்வான்!**
**என்வழி தனக்கொரு வாரிசு தவழ்ந்திட**
**நெஞ்சினில் ஆசை கொள்வான்!**

அஷ்டவசு *1*

**எண்மர் நாம் பிறந்து இறந்ததும் அவனுக்கோர்**
**கண்மணியை நீ பெற்றிடுவாய்!**

**தன்மையிற் சிறந்த தகைமை கொள் வீரனைத்**
**தந்து நீ பெருமை கொள்வாய்!**

**அன்னையே எமக்குத் தாயாகு! – அந்தச்**
**சந்தனு காதலின் தீயாகு!**

அரங்க விளக்கு அணைகிறது

## காட்சி *6*

நதி நடனம் – நதி இசை.
பின்னணியில்
அரங்கில் அடர் வனம்
வனத்திற்குள்
சந்தனு மகாராஜன்
தனது மாளிகை வீரர்களுடன்
வேட்டையாட வருகிறான்.
வேட்டைக்குரிய...



தாள வாத்திய இசையும்
சுர ராக ஆலா பனைகளும்
ஒரு மாறுதலான நாட்டிய அமைப்பு
கிராமிய குறவஞ்சி அமைப்புகள் அமைவது நலம்
இந்நாட்டியத்தின் மத்தியில்
நதி நடன இசை
படிப்படியாக வலுப்பெற்று ஒலிக்க வேண்டும்!
ஒளிப் பொட்டிற் சந்தனு மகாராஜன்!
அரங்கில், கங்கா தேவியின் அழகிய தோற்றமும்,
அபூர்வ நாட்டியமும்!
மீன்களும், மான்களும், மயில்களும்
வந்து இணைகின்றன!
சந்தனு,
கங்கையின் அழகிலும் ஆட்டத்திலும் லயப்பட்டு,
அவனும், அவளுடன் இணைந்து ஆடுகிறான்!
முடிவில் இருவரும் ஒருவரையொருவர் பார்த்தபடி
முன்னர்,
பிரமதேவன் அவையில்
எவ்வாறு லயித்துப் பிரிந்தார்களோ
அவ்வாறு கண்ணொடு கண்ணொக்க நிற்கிறார்கள்.
சந்தனு ஒளிப்பொட்டில்
(செயலற்ற நிலையில்)
கங்கை ஒளிப் பொட்டில்
(செயலற்ற நிலையில்)
பின்னணியிற் குரல் :
அயோத்திமா நகரின் மன்னன் பிரதீபனின் மகன்
சந்தனு மகாராஜன்
மகா நதியாம் கங்கா தேவியின் மீது
காதல் கொண்டு களிப்பில் மூழ்கி நிற்கிறான்!

கங்கையும் சந்தனுவின் காதலுக்கு அடிமையாகி நிற்கிறாள்
சந்தனு மகாராஜன், தனது முற்பிறவியில் மகாபிஷக்
என்னும் மன்னனாக வாழ்ந்தவன்!
தனது தவ பலத்தினாலும், யாக வலிமையினாலும்
தேவ சொர்க்கம் அடைந்தவன்!
பிரமதேவன் அவையில் அவன் இருந்த போது,
கங்கை மீது தன் பார்வையைப் பறி கொடுத்ததன்
விளைவாக, மீண்டும், மானிடனாகப் பிறக்கிறான்!
இதோ... உங்கள் முன்,
சந்தனுவும், கஙகையும், காதல் வயப்பட்டு நிற்கின்றனர்!
இப்போது, பின்புலத்தில்
நிழலுருவத்திரையில்
வியாசரும் விநாயகரும் தோன்றுகின்றனர்!
திடீரென, கங்கை சுயத்திற்கு வந்தவளாக
நாணத்துடன் அரங்கினை விட்டு ஓடுகிறாள்!

அரங்க விளக்கு அணைகிறது!

## காட்சி 7

கங்கையும் சந்தனுவும்
மீண்டும் அரங்கிற் சந்திக்கிறார்கள்
காதல் லீலைகள்
நடன முத்திரைகள்,
பாவங்களால் வழி நடத்தப்படுகின்றன.

சந்தனு

**மணம் புரிவாயா என்னை!**
**மாதரசே! மலரே! அடி கண்ணே!**
**கணங் கணமாய் உன் – காதலினாலே**
**கலங்குகிறேனடி – பெண்ணே!**
**இனந் தெரியாத உணர்வுகளாலே**



**ஏங்குகிறேனடி கண்ணே!**
**உணவையும் உட்கொள்ள முடியவில்லை!**
**உறங்கவும் இமைகள் மூடுதில்லை!**
**நினைவுகள் அனைத்திலும் நீதான்! – என்**
**நெஞ்சிற்குள் நிற்பவள் நீதான்!**

கங்கை

**சத்தியம் ஒன்று செய்வாயா? – என்**
**செயல்கள் அனைத்துக்கும் உடன் படுவாயா?**
**சத்தியம் ஒன்று செய்வாயா?**
**எத்தனை துன்பம் உனக்கு வந்தாலும்**
**என்வழி குறுக்கிட மாட்டாய்? என்றே**
**சத்தியம் ஒன்று செய்வாயா?**
**நான் யாரெனக் கேட்டிடக் கூடாது! – என்**
**வேர் வரலாறும் வினவிடக் கூடாது!**
**சத்தியம் ஒன்று செய்வாயா?**

சந்தனு (காதல் மயக்கத்திற் கிறங்கியவனாக) :

**எத்தனை சத்தியம் செய்யச் சொன்னாலும்,**
**அத்தனையும் செய்வேன் தேவி!**
**முத்தேயுன் முகத்தில் முத்தமிட்டாற் போதும்...**
**முழுமன தோடெனை**
**யேற்றுக் கொண்டாற் போதும்!**
**அத்தனையும் செய்வேன் தேவி! – நான்**
**சத்தியமும் செய்வேன் தேவி!**

இருவரும் நடனமிட்டு இணைகிறார்கள்
சந்தனு, கங்கைக்கு மாலை சூடுவதாகக்
காட்சி நிறைவடைகிறது!

அரங்க விளக்கு அணைகிறது!

## காட்சி 8

வாத்திய இசைக் கருவிகள் மூலமே,
இக்காட்சி வழி நடத்தப்பட வேண்டும்
அரங்கில் இருள்

சற்றுத் திகிலூட்டும் இசை
மஞ்சத்திற்... சந்தனுவும் கங்கையும்!
அரங்க ஓரத்தில், குழந்தை, தொட்டிலில்!
உறங்கிக் கொண்டிருக்கின்ற கங்கை,
மெதுவாக மஞ்சத்தை
விட்டுத் தொட்டிலை நோக்கிச் செல்கிறாள்!
தன்கையிற் குழந்தையுடன்,
மெதுவாக வெளியே செல்கிறாள்!
சந்தனு... அவளைத் தொடர்ந்து பின்னே
மெதுவாகச் செல்கிறான்!
அரங்க எல்லையில் நின்று
சந்தனு, கங்கை சென்ற திசையைப் பார்த்தபடி நிற்கிறான்!
பின்னணி இசையில்
குழந்தை வீரிட்டலறும் ஓசை!
நீரிற்குள், ஒரு பொருள் எறியப்படும் ஓசை கேட்கிறது!
சந்தனு... துன்பத்தாற் துடிக்கிறான்!
(துன்பத்தை வெளிப்படுத்தும் இசை)
கங்கை, மீண்டும்,
மஞ்சத்தை நோக்கி வருவத்தைக் கண்ட, சந்தனு
அவள் வருவதன் முன்னர்,
மஞ்சத்தில் ஓடிவந்து படுக்கிறான்!
கங்கை, படுக்கையில் வந்து படுக்கிறாள்!
அரங்க விளக்கு எரிகிறது!
சந்தனு கங்கையைப் பரிதாபத்துடன் பார்த்து
ஏதோ கேட்க வாயெடுக்கிறான்!
கங்கை, சந்தனுவின் வாயைத் தன் கையாற் பொத்தி,
அவன் கொடுத்த சத்தியத்தை நினைவுபடுத்துகிறாள்.
சந்தனுவும் கங்கையும் மகிழ்ச்சியில் இணைகிறார்கள்.
அரங்கம் இருளில் மூழ்குகிறது!



மீண்டும் திகிலூட்டும் இசை!
கங்கை தொட்டிலை நோக்கிச் செல்கிறாள்!
கங்கை தன் கையிற் குழந்தையுடன்
மெள்ள வெளியே செல்கிறாள்!
சந்தனு அவளைத் தொடர்கிறான்.
பின்னணி இசையில்
குழந்தை வீரிட்டலறும் ஓசை!
நீரிற்குள் ஒரு பொருள் எறியப்படும் ஓசை கேட்கிறது!
சந்தனு துன்பத்தாற் துடிக்கிறான்!
(துன்பத்தை வெளிப்படுத்தும் இசை)

கங்கை, மீண்டும்
மஞ்சத்தை நோக்கி வருவதைக் கண்ட சந்தனு
அவள் வருவதன் முன்னர்
மஞ்சத்தில் ஓடி வந்து படுக்கிறான்!
கங்கை, படுக்கையில் வந்து படுக்கிறாள்!
அரங்க விளக்கு எரிகிறது!
சந்தனு கங்கையைப் பரிதாபத்துடன் பார்த்து
ஏதோ கேட்க வாயெடுக்கிறான்!
கங்கை, சந்தனுவின் வாயைத் தன்கையாற் பொத்தி
அவன் கொடுத்த சத்தியத்தை நினைவுபடுத்துகிறாள்.

**அரங்க விளக்கு அணைகிறது!**

பின்னணியிற் குரல் :
கங்கைக்கும் சந்தனுவுக்கும் ஏழு குழந்தைகள் பிறக்கின்றன!
ஏழு குழந்தைகளையும்,
அஷ்ட வசுக்களுக்குத் தானளித்த வாக்குப்படி,
அவர்களுக்கு தீர்த்த சமாதி கொடுத்து
சாப விமோசனமருளுகிறாள் கங்கை!
இதோ எட்டாவது குழந்தையும் பிறந்துவிட்டது!

*மீண்டும் அந்த இரவு*

*கங்கை மஞ்சத்தை விட்டு எழுகிறாள்!*

*பின்னணிக் குரலைத் தொடர்ந்து...*

*திகிலூட்டும் இசை*

*கங்கை, மஞ்சத்தை விட்டு இறங்கி வந்து தொட்டிலிற் படுத்திருந்த குழந்தையைத் தூக்கிப் போகிறாள்!*

*சந்தனுவும் ,தொடர்ந்தெழுந்து, மஞ்சத்திலிருந்து இறங்கிக் கங்கையை நோக்கி ஓடி வருகிறான்!*

*கங்கை திடுக்கிட்டவளாகச் சந்தனுவைத் திரும்பிப் பார்க்கிறாள்!*

*சந்தனு (சற்று வேதனையும், ஆத்திரமும் கலந்த நிலையில்)*

**எத்தனை தடவைகள்**
**இத்துணை கொடுமையைக்**
**பெற்றவன் பொறுத்திருப்பேன்!**
**பெற்றதன் பிள்ளையைப்**
**பேயெனக் கொல்லும்**
**வித்தையைச் சகித்திருப்பேன்!**

**ஏனடி நீ யொரு தாயா? - இல்லை**
**எமனவன் அனுப்பிய பேயா?**
**காரணம் கூறிடுவாயா? - நீ**
**யாரென வேனும் கூறிடு வாயா,**

*கங்கை :*

**சத்தியத்தை மீறிவிட்டாய்**
**அத்தினாபுரியின் மன்னா...**
**புத்திர பாசத்தால் இன்று நீ!**
**இத்தனை காலமும் நீ காத்த**
**அந்த மௌனம் கலைந்ததனால்**
**இன்றுடன் நீ யெனைப் பிரிந்தனை!**



*சந்தனு :*

*(விம்மலும், வேதனையும், வெறுப்பும் கலந்த நிலையில்)*

**பெற்ற பிள்ளைகளைச்**
**சற்று மிரக்கமின்றிக்**
**கொல்லத் துணிவதோடி?**
**இற்றை வரை நாளும்**
**பொறுத் தேனன்பால்...**
**இனியும் பொறுப்பேனோடி?**

*சந்தனு*

*(பாடல் தொடர்கிறது)*

**நற்றவப் பெண்ணென நான் நினைத்தேன்!**
**நாளும் பொழுதும் உனையணைத்தேன்!**
**சத்தியம் செய்த காரணத்தாலே**
**சகலமும் மறந்தே நானிருந்தேன்!**

*கங்கை*

**கங்கா தேவியென்... பேர் மன்னா!**
**ஜன்கு மகரிஷியின்... மகள் மன்னா!**
**முன்னாட் கொண்ட மோகத்தினாலே**
**உன் பால் வந்தேன் நான் மன்னா!**

*சந்தனு*

**வந்தாய் வரமாய் என் முன்னே!**
**வாழ்வைத் தந்தாய் கண் முன்னே!**
**ஏன் தான் இந்த இழிவுடைக் குணத்தால்**
**இதயத்திற் பெருந் தீ முட்டுகிறாய்? என்**
**இன்பத்தை யெல்லாம் ஓட்டுகிறாய்?**

*கங்கை (பதிலிறுக்கிறாள்)*

**அஷ்ட வசுக்களை யறிவாய் நீ!**
**அவர்தம் வலிமைகள் புரிவாய் நீ!**
**அஷ்ட வசுக்களின் வேண்டுதலால் அவர்**
**அடைந்த துயரினைத் தீர்த்து நின்றேன்!**

சந்தனு, எதுவும் புரியாதவனாக,
முகத்தில் ஆயிரம் கேள்விக் குறிகள் தோன்றக்
கங்கையைப் பரிதாபத்துடன் பார்க்கிறான்!

கங்கை (தொடர்கிறாள்)

**வசிட்ட மகரிஷி**
**வாக்கின் சாபத்தால்**
**விளைந்ததுயரினை**
**விலக்கி நின்றேன்!**

**வருண தேவனின்**
**புதல்வர் வசிட்டராம்**
**மகரிஷி மேரு மலையினிலே**
**பெருந்த வமியற்றி**
**வாழ்ந்தவர் அவர் தம்**
**பேராச்சிரமப் பெரு வெளியில்**
**நந்தினி யென்னும்**
**நற்றவப் பசுவை**
**நலத்துடன் வளர்த்துக்**
**காத்து வந்தார்!**

கங்கையும், சந்தனுவும்...
அரங்கின் ஒரு மூலையில்...
ஒளிப் பொட்டில் உறை நிலையில்...
அரங்கில் வசிட்டரின் பெருவெளியில்,
நந்தினி தனது குட்டிகளுடன்
சந்தோஷத்துடன் புல் மேய்ந்து விளையாடிக் கொண்டு நிற்கின்றது!

(இக்காட்சி அபிநயங்க்ளாலும் முத்திரைகளாலும் சைகையாலும் வழிநடத்தப்படல் வேண்டும்)

அஷ்ட வசுக்கள், தமது மனைவியருடன்
அந்த வெளியில் வந்து,
அந்தப் பசுவையும், கன்றுகளையும் பார்த்து



மகிழ்ச்சியிற் களித்திருக்கின்றனர்!
அஷ்ட வசுக்களின் மனைவியர்களுள் ஒருத்தி
(பிரபாசன் என்ற வசுவின் மனைவி)
நந்தினியைத் தனக்காகக் கவர்ந்து வரும்படி கேட்கிறாள்!
பிரபாசன், தன் மனைவியின் விபரீத ஆசையை அறிந்து
அச்சமும் பீதியும் அடைகிறான்!
எனினும் அவன் மனைவியின் விடாப் பிடியான
வேண்டு தலை மறுக்க இயலாத நிலையில்
ஏனய வசுக்களிடம் நிலைமையைத் தெரிவிக்கிறான்!

ஏனைய வசுக்களின் மனைவியரும் பிரபாசனின் மனைவியின் விருப்பத்தை நிறைவேற்றும்படி வேண்டியதன் பேரில்

அஷ்ட வசுக்களும் நந்தினியையும் அதன் கன்றுகளையும்
துரத்திப் பிடித்துக் கட்டி
இழுத்துக்கொண்டு செல்கின்றனர்!
(ஒளிப்பொட்டில்)
இக்காட்சியைத்
தன் தூர தரிசனத்தின் மூலம் கண்ட வசிட்டர்,
தமது பெருவெளியில் வந்து தனது பசுவைத் தேடுகிறார்.
பின்னர்
அஷ்ட வசுக்களையும் வழி மறிக்கிறார்!
அஷ்ட வசுக்கள், வசிட்டரின் பாதங்களில் வீழ்ந்து
தமது செயலுக்காக வருந்தி, மன்னிப்புக் கேட்கின்றனர்!
வசிட்டரோ,
பிறர் பொருளின் மீது ஆசைப்பட்ட அஷ்ட வசுக்களையும்,
மானிடராகப் பிறக்குமாறு சாபமிடுகின்றார்!
அஷ்ட வசுக்களும்தம்மை மன்னிக்குமாறு
வசிட்டரைத் தொடர்ந்து வேண்டியதன்படி,
அவர்களில் எழுவர் மட்டும், மானிடப் பிறவியெடுத்து

ஓராண்டுக்குள் மீளவும்,
சாப விமோசனம் பெற்று மீள வரமளிக்கின்றார்!
வசு, பிரபாசனை மட்டும், பிறந்து,
உலக வாழ்வில் நீண்டு வாழுமாறு சாபமிடுகிறார்!
எனினும் பிரபாசனுக்குச் சந்ததிப்பேறோ,
குடும்ப வாழ்வோ
இல்லாதவாறு சபிக்கிறார்!
இக்காட்சி, நிறைவுக்கு வர,
கங்கையும் சந்தனுவும்
உறை நிலையிலிருந்து உயிர்க்கிறார்கள்!

கங்கையின் பாடல் தொடர்கிறது!

**வருண தேவனின்**
**புதல்வர் வசிட்டராம்**
**மகரிஷி மேரு மலையினிலே**
**பெருந்தவமியற்றி**
**வாழ்ந்தனர் அவர்தம்**
**பேராச்சிரமப் பெருவெளியில்**
**நந்தினி யென்னும்**
**நற்றவப் பசுவை..**
**நலத்துடன் வளர்த்துக்**
**காத்து வந்தார்!**
**அந்தப் பசுதனை**
**அபகரித் தேயிவ்**
**வஷ்ட வசுக்களும்**
**அவமடைந்தார்!**

**துன்ப வேட்கையால்**
**தேவி காத்திடு**
**என்று என் முன்னே**
**சரணடைந்தார்!**

கங்கை கூறியவற்றைக் கேட்ட சந்தனு
கங்கை மீது கொண்ட கோபமும்,



வெறுப்பும் தணிந்த தவனாக
அவளை நோக்கி வந்து
அவளை அன்பு ததும்பப் பார்க்கிறான்!
கங்கை (சந்தனுவின் முகத்திற் பிறந்த
பாசப் பிரவாகத்தைப் பார்த்தவளாக)
(தொட்டிலில், உறங்கிக் கொண்டிருந்த
குழந்தையைப் பார்த்தவாறே)

பாடல்

**எண்ம னாக வந்த இவன் தான் உலகில்**
**நின்று வாழப் பிறந்தான்!**
**மண்ணும், விண்ணும், போற்றும் பெரு**
**வீரனாகப் பிறந்தான்!**
**அந்தப் பிரதாப முனிவனிவன்தான்**
**உந்தன் மகனாக வாழப் பிறந்தான்!**

சந்தனு, நெஞ்சில் அன்பு பொங்கத்
தொட்டிலை நோக்கி செல்கிறான்!
மகனைத் தன் கையிற் தரும்படி கேட்கின்றான்.
ஆனாற் கங்கையோ, அவனிடம் தர மறுத்தவளாகப்
பின் வாங்குகிறாள்

கங்கை

(சந்தனுவைத் தீர்க்கத்துடனும் தெளிவுடனும் பார்த்துவிட்டுப் பாடுகிறாள்)

**காலம் வந்தது உனைப் பிரியக்**
**கண்கள் கலங்காதே**
**பாலனிவனோடு நான் செல்வேன்**
**நெஞ்சம் தளராதே!**

**ஞாலம் போற்றும் பல கலைகளும் வித்தையும்**
**சீலமும் கொண்டிவன் வளரும் வரை**
**நானேயிவனைக் காத்து வளர்ப்பேன்!**
**அதுவரை பொறுத்திடும் மன்னவனே!**

கங்கை, குழந்தையைத் தொட்டிலிலிருந்து தூக்கி, தன் கரங்களில் எடுத்துக் கொள்கிறாள்!

சந்தனுவின் கண்களில் ஏக்கமும் துக்கமும் நிறைந்து,

நீராக வழியக் குழந்தையையும், தாயையும் பார்த்தபடி நிற்கிறான்!

கங்கை அரங்கினை விட்டு விலக

அரங்க விளக்கு அணைகிறது



# 7. மகாபாரதம் - பாஞ்சாலி சபதம்

வேந்தனின் அவையில்
விழி நீர் சொரிந்தே
ஏந்திழை துரோபதை
எடுத்திட்ட சபதம்!
கூந்தலிற் கொடியவர்
குருதியைப் பூசியே
நான்தலை முடிப்பனென்
றுரைத்திட்ட சபதம்!
ஆண்டவன் தாள்களில்
அடைக்கலமாகிட
நீண்டது பூந்துகில்
நிறைந்ததே மண்டபம்!
தூண்களாய் நெட்டை
மரங்களாய்ப் பேச்சுக்கு
ஆண்களாய் அவையில்
அமர்ந்திருந்தோரால்
மூண்டது தர்மத்தில்
முகிழ்த்திட்ட போரே!

– அன்புடன், புலவர்.



7. மகாபாரதம் - பாஞ்சாலி சபதம்



## காட்சி 1

நாட்டிய நாடக ஆரம்பக் காட்சி

திரைமைய ஒளிப் பொட்டில்...

ஓவிய - ஒளிப்படம்

அர்ச்சுனனுக்குத் தேர்ச்சாரதியாய் அமர்ந்து கண்ணன்,
(பார்த்தசாரதி) தேரோட்டும் காட்சி
மகாபாரதப் போர்க் காட்சி!

அரங்கில்... இருள் கௌவியிருக்கத் திரையில் மட்டும் ஒளி

பின்னணியில்

சங்கோசையும்...

போர்க்கோலத்திற்கான இசையும்!

பகவத் கீதையிலிருந்து...
அதன்சாரமாக...
உயர்ந்த நல்ல வரிகளின் தமிழாக்கம்!

**தீயவர் சாயவும்...**
**நல்லவர் வாழவும்**
**மாயவன் கண்ணன் சாரதியானான்!**
**தூய நல்லெண்ணமும்... தொடர்ந்திடு கடமையும்**
**நேர்மையும் தர்மமும்... நீதியும் வெல்லுமே!**
**காயம் அழியினும் காட்சிகள் மாறினும்**
**காலத்தின் முடிவாக நிற்பது உண்மையே!**

இவ்வரிகளின் முடிவில்...

வீணையிசையைத் தொடர்ந்து...

ஜதிகளுக்கான நடனத்துடன்...

அவைக்கூற்றர்கள் நாட்டிய நாடகத்தினை...

அஞ்சலிவணக்கத்துடன் ஆரம்பித்தல்!

இக்காட்சியில் பத்திலிருந்து இருபது வரை நாட்டிய தாரகைகளைப் பயன்படுத்தலாம். அவைக்கூற்றர்கள் கதை சொல்கின்ற பாணியில் இக்காட்சி அமைதல் வேண்டும்.

பாடல்

*பல்லவி*

**வேத வியாசனீந்த மாகாவியம்! – சிறீ**
**விக்ன விநாயகனின் விரலோவியம்!**

*அநுபல்லவி*

**கீதை மழை பொழிந்த போர்க்காவியம்! – கொடுஞ்**
**சூதினைத் தர்மம் வென்ற... காதை சொல் காவியம்!**

சுர - ஜதி - தாள நடைகளுடன்...

துரித கதியில் - அவையினரை உள்வாங்கி

அவர்களைக் காவிய ஓட்டத்தில் இணைக்கக்கூடிய

வகையில் - நர்த்தனம் அமைக்கப்படுதல் வேண்டும்!

*சரணம் (1)*

**ஆயிரமாயிரம் சுலோகங்களாலே**
**அழகிய ஆரமாய் அவனிக்குத் தந்தார்**
**ஞாயிறும் திங்களும் ஞாலமும் விண்ணும்**
**வாழ்கின்ற வரையும் வாழ்ந்திடும் சிந்தாய்!**

முத்திரை – அபிநயக் குறிப்புகள்

*1.* வியாசன் நிட்டையில்

*2.* மகாபாரதக் காட்சிகளை வியாசர் தரிசனத்திற் காணுதல்

*3.* வியாசர் பிரமனைத் துதித்தல்.

*4.* நான்முகன் (பிரமன்), வியாசர்முன் தோன்றுதல்

*5.* வியாசர், பாரதத்தை, ஏட்டில் எழுத, ஓர் 'எழுத்தன்' வேண்டுமென விண்ணப்பித்தல். முத்திரை, அபிநயக் குறிப்புகள் (தொடர்ச்சி)



*6.* பிரமன், "விநாயகனே, உனக்கு எழுத்தனாகும் சிறப்பிற்குரியவன்!" என, வியாசனிடம் கூறுதல்.

*7.* வியாசன், விநாயகனை நோக்கித் தியானித்தல்.

பின்னணியில்...

பாடல்

**ஓம்! விக்னேஸ்வராய நம! (மந்திரஸ்தாயியில்)**
**ஓம்! விநாயகேஸ்வராய நம!**
**ஓம்! சிறீகணேசாய நம!**
**ஓம்! சிவகணபதீஸ்வராய நம!**

*8.* விநாயகன், வியாசன் முன்தோன்றுதல்!

*9.* வியாசன், சுலோகங்களாக மகாபாரதத்தைப் பொழிதல். விநாயகன் – தனது ஒற்றைத் தந்தத்தினை ஒடித்து அதனையே எழுத்தாணியாக்கி, ஏட்டில் எழுதுதல்.

இத்தனை குறிப்புகளும், நாட்டிய நர்த்தகிகளாற் -

தெளிவுறக் காட்டப்படுதல் வேண்டும்!

மீண்டும் சரணம் (1)

**ஆயிரமாயிரம் சுலோகங்களாலே**
**அழகிய ஆரமாய் அவனிக்குத் தந்தார்,**
**ஞாயிறும் திங்களும் ஞாலமும் விண்ணும்**
**வாழ்கின்ற வரையும் வாழ்ந்திடும் சிந்தாய்!**

**–வேதவியாசனீந்த மாகாவியம்!...**
**விக்ன விநாயகனின் விரலோவியம்!**

*சரணம் (2) (வேறு)*

**சூதின் பிடியிற் தர்மம்**
**சுழல்கின்ற போதும்...**
**வேதனைத் தீயைக் கர்மம்**
**வளர்க்கின்ற போதும்...**
**பாதகர் நெறியில் வையம்**
**உழல்கின்ற போதும்...**
**நீதியே வெல்லும் என்ற**
**நெறி சொல்லும் வேதம்!**

முத்திரை – அபிநயக் குறிப்புகள்!

*1.* அக்கிரமம்... எழுந்து...

உக்கிரத் தாண்டவ மாடுதல்

*2.* மக்கள் தேவர்கள், அசுரர்களால்...

ஆளப்படுதலும் அழிக்கப்படுதலும்!

*3.* துயரமும் துன்பமும்

இன்னலும் இழப்பும்... வேதனையும்

*4.* பின்னர் நீதியும் தர்மமும் வெல்லுதல்

மீண்டும் சரணம் (2)

**சூதின் பிடியிற் தர்மம் சுழல்கின்ற போதும்**
**வேதனைத் தீயைக் கர்மம் வளர்க்கின்ற போதும்**
**பாதகர் நெறியில் வையம் – உழல்கின்ற போதும்**
**நீதியே வெல்லும் என்ற நெறிசொல்லும் வேதம்!**

தொடர்ந்து

வரலாற்றுச் சரிதம் பற்றிய முற்குறிப்பு : பாரதக் கதையின் முன்னோட்டத்தை, நாட்டியக் கலை நெறி மூலம் அவையினர்க்குக் கூறுகின்ற ஒரு முயற்சியாகவே இது செய்யப்படுகிறது! பாஞ்சாலி சபதம் – நாட்டிய நாடகக் காட்சி(2) இலேயே ஆரம்பமாகிறது!

பாடல் :

**அயோத்திமா நகரினில்**
**இராச்சிய மமைத்து**
**ஆண்டு வந்தனராம்**
**அன்றொரு காலம்!**

**அரிச் சந்திரனொடு**
**சந்தர மதியும்**
**ரவிச் சந்திரனாம்**
**இராமனும் சீதையும்**

**சத்தியவானுடன்**
**சாவித்திரியும்**



**சகுந்தலை காவியத்**
**துஷ்யந்தனுமே...**

**அயோத்திமா நகரினில்**
**இராச்சிய மமைத்து**
**ஆண்டு வந்தனராம்**
**அன்றொரு காலம்!**

**சந்தனு வம்சத்தின்**
**சந்ததி வழியில்**
**வந்தனர் பாண்டுவும்**
**திருதரா ஷ்டிரனும்.**

**செந்திரு நகராம்**
**அஸ்தினாபுரியிற்**
**சிறப்புற அரண்மனை**
**அமைத்து நின்றனராம்!**

**அந்தகனாகிய காரணத்தாலே**
**ஆண்டிடும் உரிமையை...**
**இழந்தனன் அண்ணன்!**
**பந்துக்கள் பீஷ்மர் விதுரர் தம்மோடு**
**பாண்டுவாம் மன்னன்...**
**ஆண்டு வந்தனனே!**

**குந்தியும் மாதரி தேவியென்பாரும்**
**கூடினர் பாண்டுவின் குலத்தினை விளக்க!**
**சிந்தையில் அறமும் சீரிய அரசும்**
**கொண்டரசாண்டே விளங்கினன் பாண்டு!**

**ஆண்டு நல்வெற்றிகள் ஈட்டிய பாண்டு**
**அரசாட்சி தன்னை அண்ணன் பால் விட்டு**
**ஆண்டுகள் சிலதான் கானகம் நண்ணி**
**அமைதியை நாடி அதன் வழி சென்றான்!**

**கானகம் தன்னிற்... காலம் கழிந்தது!**
**களித்தனன் மனைவியர் தம்முடன் பாண்டு!**

ஞானியர் முனிவர் துறவியர் ரிஷிகள்
பார்வையில் இதயம் கனிந்து மகிழ்ந்தான்.

பாண்டுவின் வாழ்வில் ஒரு பெருந் திருப்பம்
நேர்ந்தது ஒருநாட் கானகச் சூழலில்!
மான்களிரண்டு... மகிழ்ச்சியிற் குலவிச்
சேர்ந்து கலந்தே... சிலாகித் திருந்தன!

*அபிநயக் குறிப்பு!*

1. *மான்களிரண்டின் ஆட்டம்,*
2. *பாண்டு, மான்களின் ஆட்டத்தைப் பார்த்தல்*
3. *பாண்டு அம்பு விடுதல்*
4. *ஆண் மான் சாப மிடுதல்.*

மானதன் வடிவ மெடுத்தே
மகிழ்ந்தனர் முனி மக்களிருவர்!
ஆணுயிர் குடித்தது பாண்டுவின் பாணம்!
ஆகையால் வீழ்ந்தது அவரது சாபம்!

மனைவிய ரோடிணையின்
மரணம் விளையுமெனும்
வினை வந்து சூழ
வேதனையிற் பாண்டு நொந்தான்!

இந்தத் துயரிற்
பாண்டு துடிக்கையிலே
குந்தியிரங்கிக்
கூறினளோர் ரகசியத்தை!

குமரிப் பருவத்திற்
குந்தி யிருக்கையிலே
குணங் கொள் துர்வாசர்
குளிர்ந்து உவந்தளித்த
மந்திரத்தின் வலிமைபற்றி
மறைவின்றி யெடுத்துரைத்தாள்!



மந்திரத்தின் வலிமையினால்
வந்துதித்தார் பாண்டவர்கள்
ஐந்து பேர் ஆற்றல் அறிவு அருள் வீரம்
கொண்டவராய்க் கொற்றக்
குணங்கள் மிகுந்தவராய்!

பாண்டுவுக்கு ஐவர்
பரிணமித்து நிற்கையிலே
ஆண்டு வந்த அந்தகனின்
அடியொற்றிக் கௌரவர்கள்
நூற்றொருவர் வந்து
நிரையாகப் பிறந்தனராம்!
கூற்றுவனோர் தமையனொடு
கொற்றத்தை நிறைத்தனராம்!

*பாண்டு பற்றியது*

மாலை மயக்கத்தில்
மாதுரியை மோகித்துக்
காலப் பிடியிற்
கண்மூடினான் பாண்டு!

மானிட்ட சாபத்தால்
மரணம் தனை யெய்திப்
போய்விட்டான் பாண்டுவெனும்
பெருஞ்சேதி போய்ச்சேர
வாய்விட்டு அழுது
வருந்தினார் அவன் மக்கள்!
தாய் பற்றி நின்றே
தவித்தார்கள் பாண்டவர்கள்!

பீஷ்ம விதுரரின்
விருப்பைப் புரிந்து கொண்டு
பாச நடிப்போடு
பாண்டவர்க்கு அழைப்பு விட்டுத்

**தூதுமனுப்பினான்**
**துரியோதனன் தந்தை!**
**'வாருங்கள் நாட்டுக்கு'**
**என்று வரவேற்றுத்**
**தூதர்கள் வந்து**
**பாண்டவரை அழைத்திட்டார்!**

**பாண்டவரும் குந்தியொடு**
**பெரிய தந்தை நிழலடைந்தார்!**
**மூண்ட பொறாமையினால்**
**முகங்கறுத்தார் கௌரவர்கள்!**

## அபிநயக் குறிப்புகள்!

1. *பாண்டவர்கள் – குந்தியுடன் அஸ்தினாபுரிக்கு வருதல்.*
2. *திருதராஷ்டிரன் – காந்தாரி – பீஷ்மர் – விதுரர் வரவேற்றல்.*
3. *கௌரவர்கள் – பொறாமைத் தீயில் வீழ்தல்*
4. *துரியோதனன் சீற்றம்!*

*முன்னோட்டக் கதையினைப் பின்னணிப் பாடல் வளத்தோடும் இசைவளத்தோடும் நாட்டியத் தாரகைகள் நிகழ்த்தி நிறைவு செய்கிறார்கள்!*

### *காட்சி 2*

*அஸ்தினாபுரிக்கு மீண்ட பாண்டவர்களின் எழுச்சி கண்டு, துரியோதனின் கோப தாண்டவம்!*

*இத்தாண்டவத்தின் முடிவில் –*

*திருதராஷ்டிரனும், காந்தாரியும் அரங்கிற்குள் நுழைதல்!*

*துரியோதனன் – (தந்தையை நோக்கி) :*

**எத்தனை காலம் நான் பொறுத்திடுவேன்!**
**எந்தையே, பாண்டவர் எழுச்சியை இன்னமும்!**
**– எத்தனை காலம் நான்!**
**மக்களெல்லாம் அவர் பக்கம் இருக்கிறார்!**
**மந்திரி... அமைச்சரும் எங்களை வெறுக்கிறார்!**



**கொற்றமும் கோட்டமும் பாண்டவர்க்காவதோ?**
**கொடியுடன் அரசினை அவர் கொள்ளல் நியாயமோ?**
**– எத்தனை காலம் நான்!**

*திருதராஷ்டிரன் (மிகவும் அமைதியாக அறிவுரை கூறுகிறான்)*

**ஆத்திரம் கொள்வது தகுமோ மகனே!**
**அமைதி கொண்டால் நலமே!**
**நேர்த்திறன் கொண்டவர் பாண்டவர் அவரை**
**நேசித்திடல் கடனே!**

*திருதராஷ்டிரனின் இந்தப் புகழுரையைக் கேட்ட மாத்திரமே, எரிமலையாகச் சீறியெழுகிறான் துரியோதனன்!*

(காற்றில் எழுந்து... மிகவும் வேகத்துடன்...
கால் பரப்பி ஆடுகிறான் துரியோதனன்!
பொறாமை, வெறுப்பு, விரக்தி, ஆற்றாமை அனைத்தும்,
(முகபாவங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும்.)

*துரியோதனன் :*

**பெற்ற பிள்ளைகள் பெருமையைப் போற்றும் பெற்றவர் பலருள்ளார்!**
**மற்றப் பிள்ளைகள் மகத்துவம் கூறும் குற்றம் நீ செய்கின்றாய்!**
**கண்கள் இல்லாது போனதாற்**
**காணும் திறன் யாவும் போனதோ?**
**தந்தையே உந்தன் தனயரின்**
**தகைமை அறியாது போயினை!**

(இப்போது சகுனி... தூரத்தில்
மறைவிலிருந்து
இவர்தம் உரையாடலைக் கேட்கிறான்)

*திருதராஷ்டிரன்:*

*(பாண்டவரைப் பகைப்பதால் ஏற்படக்கூடிய விளைவுகளை எடுத்துரைக்கிறான்)*

*பாடல்*

**தம்பி பாண்டுவின் தனயர் பாண்டவர்**
**தலைவன் தர்மனின் ஆட்சியில்...**

**இந்த ஞாலமே இனிது வாழ்ந்திடும்**
**என்ற உண்மையை அறிவன் யான்!**
**அன்பு பேரறம் அறிவு வீரமே**
**கொண்டதால் அவர் ஓங்குவர்!**
**உன்பலம் அவர் உறவு ஆகையால்**
**உடனிருந்து நீ ஓங்குவாய்!**

துரியோதனன் : *(கௌரவர்களின் எதிர்காலம் பற்றியும், தனது நெஞ்சிலுள்ள துன்பங்கள் பற்றியும் எடுத்துரைக்கிறான்!)*

**அந்தகன் ஆனதால் ஆட்சியை இழந்தனை**
**அன்று நீ ஆகையினால்...**
**இன்றெனதுரிமையை இழப்பதன் கொடுமையை**
**அறிந்திட மாட்டாயாம்!**
**துன்பத்தின் பிடியினிற் தூக்கமிலாதுநான்**
**துடிக்கிறேன் அவராலே!**
**தென்படுதிசையெலாம் தெரிகிறார் பகைவராய்த்**
**துரத்திட வழி சொல்வாய்!**

*(இப்போது... சகுனியுடன் கர்ணனும், துச்சாதனனும் வந்து இணைந்து கொள்கின்றனர்! எல்லோரும் அரங்கினுள் நுழைகின்றனர்)*

*(சகுனியைக் கண்டதும், அவனை நோக்கி ஓடிச் சென்று, அவனது கரங்களைப் பற்றிக் கொள்கிறான், துரியோதனன்)*

துரியோதனன் :

**மாமா என்துயர்**
**அறியாத் தந்தையை**
**மாற்றிட வழி சொல்வாய்!**
**நாமோ இவர் மக்கள்**
**பாண்டவரோ, எனும்**
**தீர்வினை நீ சொல்வாய்!**

*சகுனி... மருமகனை அணைத்துத் தழுவியபடி...*

*அவனை அரங்கின் ஒரு மூலைக்கு அழைத்துச் செல்கிறான்.*



இருவரும் ஒளிப் பொட்டிற் 'கணிகன்' என்னும் அவனது மந்திரியைச் சந்திக்கின்றனர்!

இதனைத் தொடர்ந்து

திருதராஷ்டிரனைச் சுற்றி... (கணிகனோடு...)

எல்லோரும் தட்டாமாலை சுற்றவது போல ஆடித், தத்தம் வாதங்களை முன்வைப்பதாகச் சைகை - நாட்டியம் மூலம் காட்டப்பெறுகிறது.

துரியோதனன் :

பாடல்

**பாண்டவர் இங்கிருந்தால் – என்**
**பாழுயிர் தன்னையே நீத்திடுவேன்!**
**ஆண்டிடும் உரிமையின்றி – நான்**
**ஆண்டியாய் நிற்பதை மாற்றிடுவேன்!**

திருதராஷ்டிரனின் உள்ளத்திற் பிள்ளைப்பாசம் மேலிடுகிறது!

இசை மூலம், திருதராஷ்டிரனின் மனமாற்றத்தினைக் காட்டுதல் வேண்டும்!

காந்தாரியும், திருதராஷ்டிரனும்... துரியோதனனை அணைக்கிறார்கள்!

அரங்க விளக்கு அணைகிறது–

## காட்சி 3

பாண்டவர்களுடன், திருதராஷ்டிரனும், காந்தாரியும்,

காட்சியின் ஆரம்பத்தில் அரங்கில்...

– திருதராஷ்டிரனும், காந்தாரியும், காட்சி அளிக்கின்றனர்!

– பாண்டவர்கள், பெரிய தந்தையாரின் முன் வருதல்.

– (ஒளிப்பொட்டில்... அரங்கின் ஒரு மூலையில், துரியோதனன், துச்சாதனன், சகுனி,. கர்ணன் ஆகியோர் சூழ்ச்சி பலிக்கும் மகிழ்ச்சியுடன் நிற்றல்)

– பாண்டவர்களை, வாஞ்சையோடு அணைக்கின்றனர் திருதராஷ்டிரனும், காந்தாரியும்.

குந்திதேவியும்,... அவையில் வருகிறாள்.

*திருதராஷ்டிரன் :*

**பேரழகுடைய பெற்றி கொள் நகராம்...**
**வாரணாவதம் சென்று வாருங்கள்!**
**நீர்வளம் திருநிலவளம் பெருக்கி**
**வாழ்வின் அனுபவம் பெற்று வாருங்கள்!**
**வீரயாகங்கள் செய்து வாருங்கள்!**
**வெற்றியோடு நீர் மீண்டு வாருங்கள்!**

*தர்மன் :*

**கட்டளை எது இட்டாலும் - நாம்**
**கருத்துடன் ஆற்றிடல் கடனல்லவோ?**
**பெற்றவன் போல எம்மை - நீர்**
**பேணியே காத்திடல் தவமல்லவோ?**

*(தர்மன், தனது சகோதரரைப் பார்த்து... அவர்களை ஒரு பக்கம், அழைத்து)*

*(அவர்களை நோக்கி)*

*பாடல்*

**வாருங்கள் வாரணா வதம் செல்வோம்!**
**வனப்புறு நகரில்நாம் வாசம் செய்வோம்!**

*என்றவாறே குந்தியையும் அழைத்தவாறு தர்மன் செல்கிறான்.*

## *காட்சி 4*

*வாரணாவதத்தில் அரக்கு மாளிகைத் தீ!*

*பாண்டவர்களும், குந்தியும்*

*இத்தீயிலிருந்து தப்பிச் செல்கின்றனர்!*

முழுதாக - இசை மூலம் - நாட்டிய அமைப்புகள் மூலம் இக்காட்சி சித்தரிக்கப்படுதல் வேண்டும்!



## *காட்சி 5*

*நான்கு, நன்கு பயிற்றப்பட்ட நர்த்தகிகள் மூலம்*

*சஞ்சாரி பாவ நடையில் -*

*பாண்டவர்கள்-*

அரக்கு மாளிகைத் தீயிலிருந்து தப்பியதிலிருந்து, மாறு வேடம் தாங்கியது முதல் பாஞ்சாலியை மணம் முடித்தது வரை பார்வையாளருக்குக் கதையோட்டத்தை விளக்க வேண்டும்! கவி வரிகள் எழுதப்படலாம்.

## *காட்சி 6*

*அரங்கில் - துரியோதனன்,*

*சகுனி துச்சாதனன், கர்ணன் ஆகியோருடன்!*

*துரியோதனன் ஆத்திரமும், ஆவேசமும் பொங்க*

*பாடல்*

**பாண்டவர் பிழைத்துவிட்டார்! - இட்ட**
**பாழ்தீயின் பிடியிலும் தப்பிவிட்டார்!**
**பாஞ்சாலன் அவையில் வந்தே - அந்தப்**
**பாஞ்சாலி தோளினில் மாலையிட்டார்!**
**பாஞ்சாலன் தேசம் சென்றே - அவர்**
**பரிணாமம் பெற்றனர் கொடுமையந்தோ!**
**மாண்டனர் என்றிருந்தேன்! அது**
**மாயையாய்ப் போனதால் நெஞ்சுடைந்தேன்!**
**மீண்டுமோர் சூழ்ச்சிசெய்தே - அவர்**
**மீளாத துயில் கொள்ளும் காட்சி செய்வேன்**

*துச்சாதனன் :*

**வீமனை வீழ்த்தும் நாளே - என்**
**வாழ்வினில் நான் மீண்டும் உயிர்த்த நாளாம்!**
**நாமினி யச்சமின்றி - இந்த**
**நாட்டினை ஆள்வதும் அந்த நாளாம்!**

*கர்ணன் :*

**பார்த்தனை வீழ்த்தும் நாளே - என்**
**பாணத்தின் வலிமைக்கு வெற்றி நாளாம்!**

**போர்த்திறன் காட்டி யெந்தன்**

**புகழினை நாட்டுதல் – அந்த நாளாம்!**

இப்போது சகுனி–

தனது வஞ்சகச் சூழ்ச்சிதனை வெளிப்படுத்துகிறான்!

பாடல்

**பலத்தினால் வென்றிடல் பலிக்காது என்பதை**
**பலநாளாய் உணர்ந்து கொண்டோம்!**
**நிலத்தினில் அவர் வீரம் வென்றிடும் தகைமைக்கு**
**நிகர் யாரும் இங்கு இல்லை!**
**இழைத்திடும் வஞ்சகச் சூழ்ச்சியே பாண்டவர்**
**இல்லாத தீர்வு செய்யும்!**
**வளைத்தொரு வஞ்சக வலையினில் வீழ்த்திடும்**
**வழி யொன்று உமக்குச் சொல்வேன்!**

சகுனியின் இந்த வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தே நம்பிக்கை நிரம்பிய முகத்தோடு, சகுனியை நோக்கி ஓடி வருகின்றான் – துரியோதனன்!

கர்ணனும், துச்சாதனனும் சற்று எரிச்சலுடன் சகுனியையும், துரியோதனனையும் மாறி மாறிப் பார்க்கின்றனர்!

**அரங்க விளக்கு அணைகிறது**

## காட்சி 7

இசை மூலமும் நாட்டிய அமைப்பின் மூலமும் இக்காட்சி அமைக்கப் பெறுகிறது!

அரங்கின் – மத்தியில்

திருதராஷ்டிரன் – காந்தாரியுடன்!

(ஒருபுறத்திலிருந்து)

துரியோதனன் – கர்ணன் – துச்சாதனன் – சகுனி

ஆகியோர் அரங்கிற்குள் நுழைதல்

பாண்டவரால் விளையக்கூடிய ஆபத்தினை விளக்கி, அவர்களை அழிக்கும் திட்டத்திற்குத் திருதராஷ்டிரனைச் சம்மதிக்க வைத்தல்.



(மறுபுறத்திலிருந்து)

பீஷ்மர், விதுரன், கிருபாச்சாரியார், துரோணர் ஆகியோர் பாண்டவருக்குரிய உரிமைகளையும், அவர்தம் பெருமைகளையும் பற்றித் திருதராஷ்டிரனிடம் விளக்கி, அவர்களை மீண்டும் அழைத்து, அவருக்குப் பாதி தேசத்தைக் கொடுப்பதே தர்மம் என வாதிடுகின்றனர்!

இவர்கள் இவ்வாறு வாதிடும்போது –

மறுபக்கத்திற் துரியோதனன் – துச்சாதனன் – கர்ணன்

ஆகியோரின் கோப தாண்டவம்!

இதனைத் தொடர்ந்து

ஒருபக்கத்திற் துரியோதனன் கூட்டமும்

மறுபக்கத்தில் பீஷ்மர் கூட்டமும் வாதிட,

நடுவில், திருதராஷ்டிரனும், காந்தாரியும் தத்தளித்தல்!

முடிவில்,

திருதராஷ்டிரன், பீஷ்மரின் வாதத்திற்குச் சம்மதித்தல்!

**அரங்க விளக்கு அணைகிறது**

## காட்சி 8

நாட்டிய அமைப்பின் மூலமும் இசை வடிவ மூலமும் இக்காட்சி அமைக்கப்படுகிறது!

பாஞ்சால தேசத்திற் பாண்டவர்கள்

துருபதன் – விதுரன் சந்திப்பு

பாண்டவர்களை –

அத்தினாபுரத்திற்கு அனுப்பி வைக்கு மாறு

விதுரன் துருபதனை வேண்டுதல்!

விதுரன் குந்தியைச் சந்தித்தல்!

விதுரனின் வேண்டுகோளுக்கிணங்கிப்,

பாண்டவர்களை,

அத்தினாபுரிக்குக் கூட்டி வரக் குந்தி சம்மதித்தல்.

## காட்சி 9

பாண்டவர்கள், குந்தி, திரௌபதையுடன்,
அத்தினாபுரம் வருதல் –
மக்களின் அமோக வரவேற்பினிடை,
அரண்மனை புகுதல் –
அரண்மனையில்,
திரிதராஷ்டிரன் முதலானோர், வரவேற்றல்!
கௌரவர் கூட்டம், வெறுப்பிடை புரள்தல்.
பாண்டவர்களிடம்,
பாதி ராச்சியத்தைத் திரிதராஷ்டிரன், ஒப்படைத்தல்.
'காண்டவப் பிரஸ்தம்' ராஜதானியாக்கப் பெற்று,
பாண்டவர்,
ஆட்சிக்காக அனுப்பப்படுகின்றனர்!

## காட்சி 10

பாண்டவர், காண்டவப் பிரஸ்தத்தை,
'இந்திரப் பிரஸ்தம்' என ஆக்கி,
அரசாளத் தொடங்குகின்றனர்!

பாழபட்டுப் பெருங்காடாகிக் கிடந்த காண்டவப் பிரஸ்தம், புதுப்புது மண்டபங்களையும், கோபுரங்களையும், நகரங்களையும் கொண்ட அழகிய இந்திரப் பிரஸ்தமாகக் கட்டியெழுப்பப்படுகிறது!

வனவிலங்குகள் அழிக்கப்படுகின்றன!

திருடர்கள் வழிப்பறிக்காரர்கள் விரட்டப்படுகின்றனர்!

இந்தக் காட்சியிற் பாண்டவர்களோடு –
கிருஷ்ணனும் இணைந்து கொள்கிறான்!

குந்தி திரௌபதை ஆகியோரும் பாண்டவர்களின் பக்கம் நின்று பெரியதொரு ராஜதானியைக் கட்டி யெழுப்புகின்றனர்!



## காட்சி 11

இந்திரப் பிரஸ்தத்தில், ராஜசூயயாகம்,
ஜராசந்த வதம்
கிருஷ்ணன், பீமன், அர்ச்சுனன் ஆகியோர்,
ஜராசந்தனை அழிக்கப் புறப்படுதல்,
ஜராசந்தன் மாண்ட பின்னர்,
ராஜசூயயாகம் நடத்தல் –
யாகத்திற் கிருஷ்ணனுக்கு முதல் மரியாதை!
சிசுபாலன் எதிர்த்தல்.
சிசுபாலனைக் கிருஷ்ணன் வதம் செய்தல்.

## காட்சி 12

இந்திரப் பிரஸ்தத்திற்குக் கௌரவர் வருகை!
துரியோதனனுடன், துச்சாதனன், கர்ணன், சகுனி
ஆகியோர்! தடாகத்திற் துரியோதனன்!
திரௌபதையின் நகைப்பு!
துரியோதனனின் அவமானம்!

## காட்சி 13

அஸ்தினாபுரியில் துரியோதனன் அவையில்

துரியோதனன், வேதனையோடும் விரக்தியோடும் காணப்படுகிறான்! பொறாமைத் தீ, அவனது நெஞ்சிற் சுவாலைவிட்டு எரிகின்றது!

அவையிற் துரியோதனன் நடனம்.

வாத்திய இசையுடன்,

ஜதிகள் சுரத்துடன், துரியோதனன் மனோநிலையை வெளிப்படுத்துவதாக இந்த நடனம் அமைக்கப்படுதல் வேண்டும்!

தாள நடைகள் அவனது பொறாமையையும், அவனது உள்ள உணர்ச்சிகளின் அலைமோதலையும், பாண்டவர்கள் மீதும்

அவர்தம் அரசின் மீதும் அவனுக்குள்ள வெறுப்பையும் எடுத்துக்காட்டுதல் வேண்டும்.

இதனிடையே, துச்சாதனன், கர்ணன் ஆகியோரும் வந்து இணைந்து ஆடுதல் வேண்டும்!

ஆட்ட முடிவில்... துரியோதனன், களைத்துச் சோர்ந்து, அரியணையில் அமரவும், சகுனி, அவையில் நுழையவும் சரியாக இருக்கிறது!

துரியோதனனை உற்றுப் பார்த்தபடியே வந்த சகுனி, துச்சாதனனையும், கர்ணனையும் மாறி மாறிப் பார்த்துவிட்டுத் துரியோதனனின் பக்கலிற் சென்று... அவனை நோக்கி,

*சகுனி :*

**என்னாசை மருமகனே!**
**ஏனிந்தத் துயரம்?**
**எனக்கிதைக் கூற மாட்டாயோ?**
**உன்நாடும் அரசும்**
**உலகினிற் பெரிதன்றோ,**
**உனக்கேது துன்பம் சொல்வாய்?**

*துச்சாதனன் : (முன்னோக்கி வந்தவனாக)*

**மாமா உமக்கு...**
**மறதியோ?**
**வீமாதியரை**
**மறந்தீரோ?**

**ஓர் மாளிகை கட்டி**
**உறவாட அழைத்தெமைக்**
**கோமாளிகளாக்கிக்**
**குமுறவைத்தாரே!**

**மாமா உமக்கு**
**மறதியோ?**
**வீமாதியரை**
**மறந்தீரோ?**



*சகுனி :*

**மருகா துச்சாதனா!**
**மறப்பேனா?**
**ஒருபோதும் மறக்கேன்!**

**கருகாதோ பாண்டவர்**
**பரம்பரை என்னும்**
**கருத் தோடே யிருப்பேன்!**

இப்போது, துரியோதனன், இருக்கையிலிருந்து எழுந்து முன்னோக்கி வந்து, சகுனியை நோக்கி..

*துரியோதனன்*

**அன்பான மாமாவே!**
**என்னரசின் மந்திரியே!**
**என்சோகம் உந்தனுக்குப் புரியாதோ?**
**கண்மூட முடியாமற்**
**கவல்கின்றேனே நின்று!**
**அதற்கான காரணத்தை அறியாயோ?**

*சகுனி :*

**அற்பர்கள் பாண்டவர்கள்**
**அவர்களை நீ நினைத்தாயோ?**
**அப்படியே மறந்துவிடு மருகா!**
**எப்படியும் அவர்களைநாம்**
**இப்புவியை விட்டனுப்பத்**
**திட்டங்கள் நான் தீட்டியுள்ளேன் அறிவாய்!**

*துரியோதனன் :*

**இந்திரப் பிரஸ்தத்திலே.. எனை**
**இழிவு செய்தாரவர் இகழ்ச்சி செய்தார்!**
**சிந்தையிற் தீயை வைத்தார்! என்**
**சீற்றத்தைக் கிளறியே வேகவைத்தார்!**

*கர்ணன் :*

வந்த அரசரெலாம், தர்மன்
வாழிய வாழிய வெனப் பணிந்தார்!
தந்திரதாரி கண்ணன் தானே
தலைவனாய்ப் பூசைகள் இயற்றி நின்றான்!

*துரியோதனன் :*

குந்தியின் மருமகள் சிரித்தாள்! – பெண்கள்
கூட்டத்தில் நின்றே... பரிகசித்தாள்!
எரித்திருப்பேன் அவளை – அந்த
இந்திரப் பிரஸ்தத்தை அழித்திருப்பேன்!

*துச்சாதனன் :*

தடாகமென நினைத்தே அண்ணன்
தன் துகிலுயர்த்தியே தாண்டிச் சென்றான்!
அடா! அடடா அதுவோ – பளிங்
காற்செய்த தரையெனும் பாங்கு காண்டோம்!
பளிங்கெனப் பின் நினைத்தே ஒரு
தடாகத்தில் வீழ்ந்தது கண்டு – அந்தத்
திரௌபதையாள் நகைத்தாள் அதை
நினைக்கையில் என்நெஞ்சு பதறு தையோ!

*சகுனி :*

அரக்கு மாளிகைத்
தீக்கிவர் தப்பினார்
அதிசயம் அதிசயமே!
இறப்பினை வென்றிவர்
இதுவரை தப்பினார்
அதிசயம் அதிசயமே!

*துச்சாதனன் :*

தப்பிய தோடு நின்றாரா? அந்தத்
திரௌபதையாள் தனைத்
துணையெனக் கொண்டார்!
இப்புவி போற்றிட அரசு...
இயற்றிடும் படியிவர்உயர்ந்திட நின்றார்!



*கர்ணன் :*

பாஞ்சாலன் அவர்க்குத் துணையானான்! பெரும்
படைபலம் தந்தே உறவானான்!

*துரியோதனன் : (ஆத்திரம் மேலிட)*

பாண்டவர் உலகினிற்
பவனி வரும் வரை
ஆண்டென்ன பயன்மாமா! – நான்
ஆண்டென்ன பயன் மாமா!

தூண்டிலிற் புழுவெனத்
துடிக்கின்றேன் நான்!
ஈண்டொரு வழியுரைப்பாய்!

*துச்சாதனன் :*

(துரியோதனனின் பொறாமைக்கு நெய் வார்க்கிறான்)

வில்லுக்கும் மல்லுக்கும் சொல்லுக்கும் வீரராய்
அல்லவோ அவர்களைக் காணுகின்றார்! – புவி
அரசர்கள் தாம்பணி செய்து நின்றார்!

*கர்ணன்*

எல்லையிலாப் புகழ்
பொருளுடையோரென
எல்லோரும் போற்றுகின்றார்! தவ
வல்லோரும் வாழ்த்துகின்றார்!

*துரியோதனன் (சீறுகிறான்)*

எரிகின்ற புண்ணிலே
எண்ணெய் வார்க்காதீர்கள்!
என்னாவி துடிக்கிறதே!

துரியோதனன் நான்
வெலும் வகை சொல்லுவீர்!
பகைவரைப் புகழாதீர்!

(சகுனியை நோக்கிச் சென்று)

துரியோதனன் (ஆத்திரமும் வேதனையும் பொங்க...) :

**விஜயனின் வில்லும்**
**வீமனின் வீரமும்**
**தர்மனின் பொறையும்**
**நானடைவேனோ?**

**ஜெயமடையாவிடிற்**
**தீயிற் குதிப்பேன்!**
**நீரினில் வீழ்வேன்!**
**நஞ்சுண்டு மாய்வேன்!**

கர்ணன் (ஆறுதல் கூறுபவனாக) :

**துயரடையாதே என் நண்பா!**
**துணிந்திடுவோம் ஒருபோர் செய்ய!**
**பயமின்றிப் படையுடன் பாய்ந்திடுவோம்!**
**பாண்டவர் தலைகளைக் கொய்திடுவோம்!**

சகுனி (கர்ணனின் கூற்றினை உதாசீனஞ் செய்தவனாக) :

**வென்றிட முடியுமோ? - சமரினில்**
**வென்றிட முடியுமோ,**
**நின்றெதிர் கொண்டு**
**நியாயமாய்ப் போரிலே**
**வென்றிட முடியுமோ?**

**வஞ்சகத்தாலன்றி**
**வேறெந்த வழியிலும்**
**வென்றிடல் நடக்காது! - அந்தப்**
**பஞ்ச பாண்டவர்களைச்**
**சூதினால் அன்றி நாம்**
**அடக்கிட முடியாது!**

துரியோதனன் (மிகவும் ஆதங்கத்தோடு) :

**சூதுக்கு உடன்படுவாரா? - எமைச்**
**சுற்றமென்றேற்றிங்கு வந்திடுவாரா?**



**நீதிக்கு முரண்பட்டுச்**
**சூதினை யாடிடும்**
**முறைமைக்குச் சம்மதிப்பாரா?**

சகுனி :

**அறிகுவன் தர்மனை நன்கு! - சூது**
**ஆடுதல் விரும்புவான் ஆட்டத்தில் மண்டு!**
**சகுனி யென் திறமையின் முன்பு - தோற்று**
**ஓடுவான் அனைத்தையும் இழந்ததன் பின்பு!**

சகுனி (தொடர்கிறான்) :

**கட்டுவோம் மாளிகை யொன்று! - அதிற்**
**கால்வைக்கும் விழாவிற்கு அனுப்புவோம் துண்டு!**
**கட்டளையிடட்டும் உன் தந்தை! - அந்தப்**
**பாண்டவர் கட்டாயம் வருவார்கள் இங்கு!**

துச்சாதனன் (நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி) :

**திட்டம் நீ இட்டனை நன்கே! - அந்தத்**
**திரௌபதை யவளைநான் பழிதீர்க்கவென்றே!**
**கட்டடம் எழும்பட்டும் இன்றே! - முதற்**
**கட்டமாய்க் காணுவோம் தந்தையைச் சென்றே!**

**(அரங்க விளக்கு அணைகிறது)**

## காட்சி 18

திரிதராஷ்டிரன் மாளிகை
இரவு நேரம்!
காந்தாரியுடன்... திரிதராஷ்டிரன் மாளிகையின்
அந்தப்புரத்தில் அமர்ந்திருக்கிறான்!
அரண்மனை வாயிற்காரன் வந்து ...
காந்தாரியிடம் ஏதோ கூறக்...
காந்தாரி...
திரிதராஷ்டிரனிடம் கூறுகிறாள்!
காந்தாரி...

வாயில் நோக்கி எழுந்து செல்லவும்,
துரியோதனன், சகுனியுடன் நுழையவும் சரியாக இருக்கிறது!
துரியோதனனை நோக்கிக் காந்தாரி கையை நீட்டவும்,
துரியோதனன் தாயை அணைத்துக் கொண்டு..
தந்தையை நோக்கிச் செல்கிறான்!
தந்தையின் பக்கலில் வந்து துரியோதனன் அமர,
திரிதராட்டிரன் மகனது கரங்களைத் தேடிப் பற்றுகிறார்!

*திரிதராட்டிரன் (மெதுவாக எழுந்து) :*

**ஏனிந்த இரவு நேரம்?**
**எமை நோக்கி வந்தாய் மைந்தா!**
**யார் நலம் குறைந்ததாமோ?**
**யாது தான் நடந்த தாமோ,**
**தாய் தந்தை நம்மை நோக்கித்**
**தனய நீ வந்ததேனோ?**
**நீ வந்த காரணத்தை**
**எமக்கு நீ கூறுவாயே!**

துரியோதனன், சகுனியைத் திரும்பிப் பார்த்து.
சைகையால், 'நீங்களே கூறுங்கள்'
என்று காட்டுகிறான்! உடனே...

*சகுனி (மெதுவாக முன்வந்து) :*

**வணங்கினன் நின்னை வேந்தே!**
**வாழிய நினது நாமம்!**
**வணங்கினன் தாயே நின்னை!**
**வாழ்த்துங்கள் சகுனியென்னை!**

**கடந்த பல் தினங்களாகக்**
**கவலையில் உங்கள் மைந்தன்**
**தளர்ந்தனன் தூக்கம் இன்றித்**
**தன்னுடல் சோர்ந்தானைய!**
**கிடந்தனன் உணவுமின்றிக்**
**களியாட்டம் ஏதும் இன்றி!**



**தொடர்ந்திடா திருக்க உம்முன்**
**துரிதமாய்க் கூட்டி வந்தேன்!**

*திரிதராஷ்டிரன் (மிகவும் அக்கறையோடு) :*

**அளவிலா நிதியும் ஆள**
**அரசுடன் படையும் சூழ**
**உள உனக்கேது துன்பம்?**
**துயர் தரயாது முந்தும்?**
**அழகிய மனையாள் பட்டு**
**அணிகலன் ஏவலாட்கள்**
**வளமெலாம் நிறையவுண்டு**
**வாடுதல் ஏனோ மைந்தா?**

*துரியோதனன் :*

**தந்தையே எனக்கு இல்லை நிம்மதி! நான்**
**தாங்கும் முடி நிலைப்பதில்லை நீயறி!**
**உண்பதுவும் உடுப்பதுவும் அல்ல என்...**
**உள்ளிருக்கும் துன்பத்திற்கு மறுமொழி!**

*காந்தாரி :*

**சொன்னாற்றானே புரியுமையா! உன்**
**சோகத்தின் காரணம் சொல்லுமையா!**
**பின்னால் நூறு சோதரர்கள்...**
**நின்றார், உனை யார் வெல்வரையா?**

*துரியோதனன் :*

**இந்திரப் பிரஸ்தம்**
**சென்று வந்தோம்! - அங்கு**
**கண்டவை நினைத்திடக்**
**கருகுது நெஞ்சம்!**
**சந்திர சூரியர்**
**இந்திரர்... அந்தணர்**
**வந்தவரெல்லாம்**
**வாழ்த்திடக் கண்டோம்!**

**பஞ்ச பாண்டவர்கள்**
**புகழது ஓங்கி**

நின்றது கண்டே
நிம்மதி யிழந்தேன்!
திருப்பாற் கடலது
சங்கம் ஈந்தது!
பொறுப்பாய்க் கண்ணன்
பூசைகள் செய்தான்!
நெருப்பாய் வளர்ந்தது
நீண்டதோர் வேள்வி!
நிலைகெட்டு அலைந்தது
கூண்டில் என்னாவி!

*சகுனி :*

ஐய நீர் பெற்ற பிள்ளை
ஆழ்துயர்க் கடலில் வீழ்ந்தான்!
வையத்தை விட்டு நீங்கிச்
செல்லவும் முடிவு செய்தான்!

*துரியோதனன் :*

மயனவன் எழுப்பிய
மாளிகைத் தரையில்
விளங்கிய பளிங்கு
நிலைகளைக் கண்டேன்!
குளமெனத் தோன்றக்
குழம்பியே தரையினிற்

குழந்தையைப் போலக்
குனிந்து நடந்தேன்!
அயலிலேயாரும்.
இலையென வெண்ணி
ஆடையை உயர்த்தியே
கால் தனை வைத்தேன்
செயலிழந்தேன்... அது
தரையெனக் கண்டேன்
சிரிப்பொலி கேட்டு
குறுகியே நின்றேன்



*திரிதராஷ்டிரன் :*

என்ன மதி யீனமிது மகனே! – நீ
உன்னை யழிக்கிறாயே மகனே!
இன்னு முனக்கேதவரிற் பகையே! – அவர்
உனது சகோதரர் அறிவாய்மகனே

அவர்க்கு வந்த உயர்வுனக்கு வந்தது போல் எண்ணு!
ஆளுகின்ற பாண்டவர்கள் சொந்தமென்று எண்ணு!
அவர்களை நீ பகைத்து விட்டால் அழிவென்றுதான் எண்ணு!
அன்பாலே அணைத்துக் கொண்டால் அழியாது மண்ணு!

*துரியோதனன் :*

பாண்டவர் எனக்குப் பகைவர்கள்! – அவர்
படைகளும் எனக்குப் பகைவர்கள்!
ஈண்டவர் அழியின் நான் வாழ்வேன்! – அவர்
இருப்பரேல்... இன்றே நான் மாள்வேன்!
நீ பெற்ற பிள்ளையோ.. உனக்குப் பெரிது!
உன் தம்பி பிள்ளைகளோ?
தீ வைத்துக் கொளுத்திடு உன்மகனை! – அவன்
சிதையினில் எழுப்பிடு அவர் புகழை!

*திரிதராஷ்டிரன் :*

போதும் போதும் மகனே! – எனைப்
பொல்லா வார்த்தையாற் கொல்லாதே!
தீதும் நன்மையும் நினக்கே! – நான்
ஏது செய்வது.. கூறிடு மகனே!

*துரியோதனன் :*

சூதால் வெல்வோம் பாண்டவரை! – அவர்
சுகங்களையெல்லாம் பறித்திடுவோம்!

*சகுனி :*

மாமா நீங்கள் அனுமதி கொடுத்தால்
மாளிகை ஒன்று கட்டிடுவோம்!

**சாமர்த்தியமாய்ப் பாண்டவர் தம்மை**
**வாரீர் என்றே வரவேற்றழைப்போம்!**

*திரிதராஷ்டிரன் :*

**துன்பங்கள் பல நாம் செய்தே துரத்திய**
**தன்மையை எப்படி யவர் மறப்பார்?**
**அன்பிலா முற்றம் எவர் மிதிப்பார்?**
**முன் செய்த கொடுமை முற்றும் மறந்தே...!**

*சகுனி :*

**விதுரரை அனுப்பிடுவோம்! – நீங்கள்**
**விருந்துக்கு அழைப்பதாய் ஓலை தருவோம்!**
**முதியவர் தமைக் கண்டால் – தர்மன்**
**முற்றிலும் மறந்தே சம்மதிப்பான்!**

*திரிதராஷ்டிரன் :*

**சரி! சரி மகனே!**
**சம்மதித்தேன் –உன்**
**அறிவின் படியே**
**நடந்திடுவேன்!**
**பெரியவன் என்றே**
**எனை மதித்தே – அவர்**
**வருவது நிசமதை**
**நானறிவேன்!**
**விதுரனை யழைத்து**
**விடயத்தை யுரைப்பேன்!**
**விதி வழி நடக்கும்**
**வினையதுவே!**

அரங்க விளக்கு அணைகிறது



## காட்சி 15

இந்திரப் பிரஸ்தத்தில்
தர்மருடன், வீமனும் அர்ச்சுனனும்
அரங்கிற் காட்சி தருகின்றனர்!

மூவரது...

நடனம்...

கூத்து மெட்டுக்குத் தாள வாத்தியங்கள்!

ஜதியும் சுரங்களும் இடைக்கிடை எழுகின்றன!

நடன முடிவில்
சபைக்குள் ஒரு தூதுவன் நுழைந்து...
தர்மரிடம், விதுரரின் வருகையைக் கூறிச் செல்கிறான்!

தர்மர், வீமனுக்கும் அர்ச்சுனனுக்கும் செய்தியைத் தெரிவித்து விட்டு... வாசலை நோக்கி... விதுரரை வரவேற்கச் செல்கிறான்!

விதுரர்... உள்ளே... நுழைகிறார்!
விதுரரைத் தர்மன் வணங்கி விட்டு...
கட்டித் தழுவுகிறான்!
வீமனும் அர்ச்சுனனும்
விதுரனை வணங்கி வரவேற்கிறார்கள்!

*தர்மர் :*

**வருக வருக வெங்கள்**
**சிறிய பிதாவே!**
**வணக்கம் வணக்கமையா!**
**தருக தருக உங்கள் பேராசி – தந்தே**
**இருக்கையில் அமர்க ஐயா!**
**பெரிய பிதாவங்கு நலமா? எங்கள்**
**பெரிய தாயாரும் நலமா?**
**துரியோதனனும் தம்பியரும் அவர்**
**அரசும் மக்களும் நலமா?**
**குருவாம் துரோணரும் பெரியப்பா பீஷ்மரும்**
**பெரியோர் யாவரும் நலமா?**

*விதுரன் :*

நலத்துக்கு ஏது குறை? உடல்
நலத்துக்கு ஏது குறை?
நாடும் நலமே!
மக்களும் நலமே!
நலத்துக்கு ஏது குறை?
உளத்தினில் அன்றோ அரசர்க்குப் பெருநோய்...
உம்மேல் அவர்க்குப் பகை!
நிலத்தினை யாளவும் நிதியுடன் வாழவும்
கிடைத்தும் பெரிய கறை! உங்கள்
பலத்தினையறிந்து கொதிப்பதன் விளைவாய்க்
கொட்டினன் பொறாமைப் பறை!

*வீமன் :*

தீர்ந்திட வேண்டும்
இந்தப் பகை! – அல்லேல்
தீர்ந்திடும் கௌரவர்
சொந்தப்படை!

*அர்ஜுனன் :*

சேர்ந்து வளர்ந்தவர் என்றவரை – நாம்
செய்யாதிருந்தோம் பெருஞ்சமரை!

*தர்மன் (கண்டிப்புடன் சகோதரரைப் பார்த்து) :*

ஆய்ந்து ஆற்றிடும் வீரவுரை! – நாம்
அழிவினைத் தவிர்ப்போம் இயன்றவரை!

*பின்னர், விதுரர் பக்கம் திரும்பி,*

*தர்மன் :*

என்னால் உலகே யழியுமென – அன்று
சொன்னார் நாரதர் எந்தனிடம்!
விண்ணோர் கூற்று மெய்யாகும்! – அதை
விலக்கிடப் பொறுமையே வழியாகும்!



*விதுரன் :*

மண்டபப் பிரவேசம்
கண்டு நீர் களித்திட
வந்திடுவீர் என
அழைத்தனர் பெரிய பிதா!
வந்து விருந்தினிற்
கலந்திட வேண்டுமென்
றழைத்தனர் பெரிய பிதா!

*வீமன் :*

போ வது தகுமோ? – என்னண்ணா
போ வது தகுமோ? என்னண்ணா
போ வது தகுமோ,
பொல்லாக் கௌரவர்
புரிந்ததெல்லாம் மறந்தே...
போ வது தகுமோ? என்னண்ணா
போ வது தகுமோ?

*அர்ஜுனன் :*

பாவியர் நம்மைப்
பாழ்தீயில் இட்டு
ஆவியைப் போக்கிட முயன்றனரே!
தீயவர் எங்களைத்
தொலைத்திடச் சூழ்ச்சிகள்
ஓயாது செய்ததை மறந்திடவோ?

*தர்மன் (சகோதரருக்குப் புத்திமதி கூறுகிறான்) :*

அன்பும் தருமமும்
பொறுமையும் உள்ளத்தின்
புண்களை மாற்றிடும் மருந்தாம்!
என்றும் அறம் வெல்லும்
என்பது தான் உண்மை!
சென்றிடுவோம் அவர் விருந்தாய்!

அரங்க விளக்கு அணைகிறது

## காட்சி 20

புதுமண்டபப் பிரவேச விழா!

எல்லோரும் களித்திருக்க,...

அவையில் நடனம்

சுர, ஜதிகளுடன் நடனம்

நடன முடிவில்...

சகுனி எழுகிறான்!

சகுனி (துரியோதனனை நோக்கி) :

**நாவிற்கும் வயிற்றிற்கும்**
**நல்விருந்தளித்தோம்!**
**நாமினிக் களிப்பினில் மிதப்போம்!**
**– சூது**
**ஆடியே பொழுதினைக் கழிப்போம்!**
**என் சொல்வாயென் மருகா! – என்**
**யோசனை ஏற்று நீ வருவாய்!**

துரியோதனன் :

**மாமா! இது நல்ல யோசனைதான்! – இந்த**
**மாலைக்கு உகந்த நற் போதனைதான்!**
**யாவரும் அமர்ந்தே ஆடிடுவோம்! – வரும்**
**தோல்வியை வெற்றியைப் பார்த்திடுவோம்!**

சகுனி :

**தருமா நீயும்**
**வா சூ தாட!**
**இருப்பாய் எதிரினிலே!**
**பெரு மா நிதியும்**
**பொருளும் வைத்தே**
**ஒரு காய் ஆடிடுவாய்!**

தருமன் :

**ஆடுதல் அறமல்ல! – என்**
**அரசுக்கு அழகல்ல!**



**வேண்டாம் மாமா! என்னை விடுங்கள்!**
**விருந்துடன் விடை பெறுவோம்!**

துரியோதனன் :

**ஏன் தயக்கம்? தர்மா**
**இன்றுனக்கு!**
**முன் பழக்கம் உண்டு**
**உன் தனக்கு!**
**வாராய் ஆட...**
**வந்தமர் வாய்!**
**சோராமல் நீ**
**துணிந்திடுவாய்!**

(அரங்க விளக்கு அணைந்து மீண்டும்... எரியும்போது)

தர்மனும், சகுனியும் எதிரெதிர் அமர்ந்து ஆடுகிறார்கள்!

சகுனியின் பக்கத்தில்,...

துரியோதனன், துச்சாதனன், கர்ணன் ஆகியோரும்,

தர்மன் பக்கத்தில்,

வீமார்ச்சுனர்களும் நிற்க ஆட்டம் தொடர்கிறது!

சகுனி வென்று கொண்டிருக்கிறான்!

அவன் பக்கத்தவர்கள் மகிழ்ச்சியிற் துள்ளிக் குதிக்கின்றனர்!

தர்மன் தோற்றுக் கொண்டிருக்கிறான்.

பாண்டவர்கள், முகஞ் சோர்ந்து நிற்கின்றனர்!

செல்வம், நாடு, அரசு எல்லாவற்றையும் தோற்றபின், தனது சகோதரர்களையும் தோற்றுப்போகிறான் தர்மன்!

பின்னணியில் விருத்தம்

**தோற்றனன் ஒவ்வொன்றாகச் சூதிலே தர்மராசன்!**
**போற்றிய செல்வமெல்லாம் போட்டனன் பணயமாக!**
**நாட்டையும் அரசையெல்லாம் ஆட்டத்தில் இழந்த பின்னர்**
**தோற்றனன் வீமனோடு... பார்த்தனை இளையோர் தம்மை!**

இப்பாடலின் முடிவில்

துரியோதனன் (ஏளனத்தோடு... (மாமனைப் பார்த்து)

**ஆட்டம் முடிந்ததோ மாமா? இல்லை**
**ஆடுதற் கின்னும் விருப்புண்டோ மாமா?**

*சகுனி :*

**இன்னுமோர் ஆட்டமுண்டு! – அதை**
**இறுதியாய் ஆடி முடித்திடல் நன்று!**
**இன்னுமோர் ஆட்டமுண்டு!**

*தர்மன் :*

**போதும் போதும் சூதாட்டம்! – இனிப்**
**போடுதற்கில்லை என்னிடம் தேட்டம்!**
**போதும் போதும் சூதாட்டம்!**

*சகுனி (துள்ளியெழுந்தவனாக) :*

**தர்மா பொய் சொல்லலாமா? – உன்**
**தர்மத்தைத் தள்ளிட லாமா?**
**தருவதற்குரிய பொருளொன்று உண்டு!**
**தர்மா பொய் சொல்லலாமா?**
**அருமை மனைவியை மறந்தாயோ? – அவள்**
**அமைவாள் ஆட்டத்தின் இறுதிப் பொருளாய்!**

*இது கேட்டு அவையே நடுங்குகின்றது!*
*தர்மன் நிலைகுலைகிறான்*

(வாத்திய இசை மூலம், அவையின் துன்பத்தை எடுத்துக் காட்டுதல் வேண்டும்)

வீமாதியார் கோபத்திற் சீறியெழுகின்றனர்!

அவர்களின் சீற்றத்தைக் காட்ட நடனங்கள் அமைக்கப்பட வேண்டும!

(கூத்து மெட்டுகள் வாத்திய இசையில் எழலாம்)

தாள வாத்தியங்களின் மூலம், அவர்தம் சீற்றத்தையும், சினத்தினையும் எடுத்துக் காட்டுதல் வேண்டும்!

விதுரனுக்கும், சகுனி, துரியோதனாதியர்க்கும் இடையில் ஏற்பட்ட வாதத்தினை, ஆட்டத்தின் மூலமும், இசையின் மூலமும் காட்டுதல் வேண்டும்!



*முடிவிற் தர்மன், கையை உயர்த்த, அவையில் திடீர் நிசப்தம் ஏற்படுகிறது!*

*தர்மன், தனது சகோதரர்களை ஒருமுறை பார்த்துவிட்டுச் சூதாடச் சம்மதிக்கிறான்!*

*திகில் நிறைந்த இசை ஒலிக்கிறது!*
*ஆட்டத்திற் சகுனி காயெறிந்து விட்டு...*
*தர்மன் எறியும் கட்டம் வருகிறது!*
*தர்மன், தியானித்துவிட்டுக் காயை எறிகிறான்!*
*காய் வீழ்ந்ததும், ஒரு கணம் மயான அமைதி!*
*துரியோதனன் துள்ளி யெழுகிறான்!*
*துச்சாதனன் அங்குமிங்கும் ஆனந்தத்தில் ஓடுகிறான்!*
*சகுனி திமிரோடு எழுந்து நிற்கிறான்!*
*தர்மன் தலைகுனிந்திருக்கிறான்!*
*வீமார்ச்சுனர்களும், நகுல சகாதேவரும்*
*தலைகுனிந்து நிற்கின்றனர்!*

*துரியோதனன் (சகுனியின் கைகளைப் பிடித்தபடி) :*

**உந்தனுக்கு எப்படி நான்**
**நன்றி சொல்வேன் மாமா!**
**உலகத்தையே தந்திடுவேன் மாமா!**
**இந்தக் காலத்துக்கே நான் காத்திருந்தேன்! – என்**
**இனிய கனவுகட்காய் ஏங்கி நின்றேன்!**
**எந்தனுயிர்க்கு இன்பம் தந்த மாமா! – என்**
**இதயக் கதவுகளைத் திறந்த மாமா!**

*இப்போது... அவையே உயிரற்ற நிலையில்*
*மயான அமைதியிற் சிக்கி நிற்கிறது!*
*துரியோதனன்...*
*அரங்க முகப்பில் வெறியாட்டம் ஆடுகின்றான்.*
*விதுரன், பீஷ்மர், துரோணர், கிருப்பாச்சாரியார் ஆகியோர்*
*செய்தவறியாது திகைத்து நிற்கின்றனர்.*
*திரிதராஷ்டிரன் – காந்தாரி ஆகியோர்*

சிலையாய் இருக்கின்றனர்!

துரியோதனன் (வெற்றிக்களிப்பும், வெறியும் நிறைந்தவனாக, அவையைச் சுற்றி நடக்கிறான்!)

எது நடக்கப் போகிறதோ, எவரை மிதிக்கப்போகிறானோ என்ற அச்சமும் திகிலும் அவையை ஆக்கிரமித்து நிற்கின்றது!

துரியோதனன் விதுரனைப் பார்த்து...

அவன் பக்கம் வருகிறான்!

துரியோதனன் (விதுரனைப் பார்த்து) :

**அழைத்து வருவாய் அன்புச் சித்தப்பா – அந்த**
**அழகுப் பாவையை இங்கு**
**அழைத்தான் மைத்து னனென்று கூறி – இந்த**
**அவைக்கு அழைத்து வாராய் சித்தப்பா**
**ஏவல் புரிய அவள் வேண்டும்! – எந்தன்**
**இதயம் மகிழ வரவேண்டும்!**
**ஆவல் பெருக நின்றேன் சித்தப்பா! – இந்த**
**அவைக்கு அழைத்து வாராய் சித்தப்பா**

விதுரன், துரியோதனனின் இந்தக் கொடிய வார்த்தைகளைக் கேட்டதும் நெஞ்சு துடித்து.. எழுகிறான்!

கோபத் தீ பறக்க... ஆடுகிறான்

விதுரன் :

**ஏது சொன்னாயடா மூடா – உன்**
**ஏளனம் போதும்! மதிகெட்ட மூடா!**
**காதுகள் கூசுது போடா! – உன்**
**கர்ச்சனை போதும்! கண்கெட்ட மூடா!**
**தெய்வத் திருமகள் தன்னை – நீ**
**தீது உரைத்தல் தகுமோடா? வேடா!**
**உய்ய வழி யுனக்கில்லை! – நீ**
**உதிரம் பொழிய உயிர்விடல் பாராய்!**

துரியோதனன், விதுரனின் இந்த வார்த்தைகளால் வெஞ் சினங்கொண்டு வெறியாட்டம் ஆடுகிறான். விதுரனை ஆத்திரத்தோடு வைது நிற்கிறான் பின்னர் தேர்ப்பாகனை அழைக்கிறான்!



துரியோதனன் :

**தேர்ப்பாகா இங்கே வாடா நீ! – ஐவர்**
**தேவியைக் கூட்டி வாடா நீ!**
**போய்ப் பாவைதனைக் கூட்டிவா! – அவள்**
**பூமுகம் தனைக் காட்டிவா!**

தேர்ப்பாகன் மிகவும் வேதனையோடு துரியோதனைப் பார்க்கவும், துரியோதனன் அவனைக் கோபங் கக்கும் விழிகளாற் சுட்டெரிப்பது போல பார்க்கத் தேர்ப்பாகன், அவையை விட்டுச் செல்கிறான்.

அரங்க விளக்கு அணைகிறது

ஒளிப்பொட்டில் திரௌபதையின் அந்தப் புரம்!

தேர்ப்பாகன் அந்தப் புரத்திற் பிரவேசிக்கிறான்!

திரௌபதையை வணங்குகிறான்!

தேர்ப்பாகன் (சோகம் ததும்பும் குரலில்) : பாடல்

**அன்னை தேவியே!**
**ஐவர் ஆவியே!**
**உன்னைத் தோற்றனர்**
**மன்னர் அவையிலே!**
**கண்ணிலா மன்னர்**
**மைந்தர்முன் – உந்தன்**
**கண்ணவர் தோற்றுப்**
**போயினர் அம்மா!**

திரௌபதை (திடுக்குற்றுத் திகைத்து நிற்கிறாள்)

(பின்னர் சற்றுத் தன்னைச் சுதாகரித்துக் கொண்டவளாக):

**என்னை சொல்லினை?**
**ஏதுசொல்லினை?**
**என்னைத் தோற்றிட**
**ஏது செய்தனர்?**
**மன்னர் தேவி நான்**
**என்னைத் தோற்றிட**
**என்ன காரியம்**
**ஐவர் செய்தனர்?**

தேர்ப்பாகன் :

**சூதின் ஆட்டத்திற்**
**செல்வம் யாவையும்**
**நீதிசேர் தர்மன்**
**ஆடித் தோற்றனன்!**

இந்த வார்த்தைகளைத் திரௌபதை நம்பமுடியாதவளாக அங்குமிங்கும் நடக்கிறாள்!

தேர்ப்பாகன் – தயக்கமும் பீதியும் நிறைந்த குரலிற் தயங்கித் தயங்கி வார்த்தைகளை வடிக்கிறான்!

**மீதியாய் நின்ற**
**நின்னையும் அவர்...**
**மீதியாய் நின்ற**
**நின்னையும் அவர்**
**தாயப் போரிலே**
**தானம் செய்தனர்!**

(தேர்ப்பாகன் வேதனையில் விம்முகிறான்)

திரௌபதை, தேர்ப்பாகனின் இந்த உரைகளைக் கேட்டு, உள்ளம் பதறுகிறாள்! உணர்ச்சிகள் கொதிக்க... உயிர் நடுங்கிக் கதி கலங்கி ஆடுகிறாள்!

ஆத்திரமும் கோபமும் கொப்பளிக்க அங்கும் இங்கும் ஓடுகிறாள்!

திரௌபதை :

**ஐயகோ இதை**
**வையந் தாங்குமோ?**
**அறமிகுத்தவர்**
**நெஞ்சந் தாங்குமோ?**

**பொய்யர் சூதினைப்**
**பொறையுடைத் தர்மன்**
**போற்றினான் என்ற**
**பெரும்பழிபோகுமோ?**
**தையல் தேவியை**
**ஐவர் தோற்றதன்**



**தாழ்வு காலத்தில்**
**என்று நீங்குமோ?**

தேர்ப்பாகன் : (வேதனை ததும்பும் குரலிற் தொடர்கிறான்)

**நாட்டை வைத்தனன்**
**தேட்டம் வைத்தனன்**
**ஆட்டத்தில் உள்ள**
**அனைத்தும் வைத்தனன்!**

தேர்ப்பாகன் : (தொடர்கிறான்)

**கொற்றம் வைத்தனன்!**
**குடிகளை வைத்தனன்!**
**கூடப் பிறந்தவர்**
**தம்மையும் வைத்தனன்!**
**தன்னை வைத்தனன்!**
**உன்னையும் வைத்தனன்!**
**தர்மத்தாயையும்**
**தர்மனே வைத்தனன்**

திரௌபதை : (ஆத்திரத்துடன்)

**தன்னைத் தோற்றபின்**
**என்னைத் தோற்றானா?**
**என்னைத் தோற்றபின்**
**தன்னைத் தோற்றானா?**
**மன்னர் முன்னிதன்**
**மறுமொழி கேட்பாய்!**
**உண்மை வந்திங்கு**
**உரைத்திடுவாய் நீ!**

(என்று தேர்ப்பாகனை... அனுப்பி வைக்கிறாள் திரௌபதை)

தேர்ப்பாகனை அனுப்பிவிட்டுத் துயர் நிறைந்தவளாகத் தலையைக் கைகளிற் கவிழ்த்தவளாக நிற்கிறாள் – ஐவர் தேவி!

அரங்க விளக்கு அணைகிறது.

## காட்சி 16

அவைக்காட்சி

பின்னரங்கில் பாண்டவருடன் கௌரவர் மற்றும் பீஷ்மாதியோருடன் எல்லோரும் நிற்கின்றனர்!

துரியோதனன் மட்டும் முன்னரங்கில் ஒளிப்பொட்டில் நிற்கிறான்!

தேர்ப்பாகன் வந்து – நடந்தவற்றை முத்திரைகள் பாவங்களினால், துரியோதனனிடம் வெளிப்படுத்துகிறான்!

தேர்ப்பாகன் கூறியதைக் கேட்ட மாத்திரத்தே...

தீயில் மிதித்தவன் போல் துள்ளி யெழுகிறான்!

கொதித்தான் கொடியவன்!

துரியோதனன் :

பாடல்

**தோற்று அடிமையாய்ப் போன சிறுக்கிக்குக்**
**கேட்கவும் கேள்வியுள்ளதோ**
**மூச்சு விடுவதற்கும் உரிமையில்லாதவள்**
**மூர்க்கம் தீர்வதாயில்லையோ?**

என்று ஆவேசத்தோடு ஆடிவிட்டுப்

பின்னரங்கினை நோக்கிச் சென்று...

தனது தம்பி துச்சாதனனின் கரத்தைப் பிடித்து

முன்னரங்கிற்கு அழைத்து வருகிறான் துரியோதனன்!

துச்சாதனனின், முகத்தை, வெறி கக்கும் விழிகளுடன் பார்க்கிறான் துரியோதனன்!

துரியோதனன் – (பல்லை நரும்பியபடி) துச்சாதனனை... நோக்கி அவனது தோள்களைப் பற்றியவாறு)

**தம்பி துச்சாதனா வாடா! – உன்**
**தமையனென் ஆசைக்குத் துணைதர வாடா!**
**தம்பி துச்சாதனா வாடா!**

**சென்று துரோபதை தன்னைப் பிடித்து**
**இந்தச் சபைக் கிழுத்து வாடா! – என்**



**இளையவனே ஓடிப் போடா!**
**நகைத்தாள் அன்று எனைக் கேலி செய்தாள்!**
**பகைத்தாள் அன்றே அவள் பாவி!**
**சிரித்தாள் என்னைச் சீண்டியே பழித்தாள்!**
**எரித்தாள் என்னை அவள் பாவி!**

துச்சாதனன் :

**அண்ணா! செல்வேன் இப்போதே! – அந்தப்**
**பெண்ணாள் தன்னைப் பிடித்தே வருவேன்!**
**அண்ணா செல்வேன் இப்போதே!**
**(என்றபடி ஓடுகிறான்)**

**அரங்க விளக்கு அணைகிறது**

## காட்சி 17

அந்தப்புரத்திற் பாஞ்சாலி

பின்புலத் திரைக்காட்சி

பாஞ்சாலி அமர்ந்திருக்கிறாள்

சோகக் கடலில் அமிழ்ந்திருக்கிறாள்

துச்சாதனன் அந்தப்புரத்திற்குள் நுழைகிறான்!

பாஞ்சாலி திடுக்குற்று எழுகிறாள்

இடியோசைச் சிரிப்புடன்

அவளை நோக்கி வருகிறான் துச்சாதனன்

துச்சாதனன்

**அடியே உன்னை**
**இழுத்துவா என்றே**
**அண்ணன் ஆணையிட்டான்!**
**முடியைப் பிடித்தே**
**கொண்டு வா என்றே**
**முடிவுடன் அனுப்பி வைத்தான்!**

*திரௌபதை*

**தம்பீ! ஏன் தான்**
**தவறாய் வார்த்தைகள்**
**சிந்துகின்றாய் ஐயா!**
**எந்தன் நாயகர்**
**ஐவரும் கேட்டால்**
**உந்தன் நிலையறியாயோ?**

*துச்சாதனன் (அட்டகாசமாகச் சிரித்தபடி)*

**ஐவர்... ஐவர்... ஐவர்! - அடி**
**அவர் யார்? அவர் யார்? அவர் யார்?**
**செய்யத் தகாதது செய்தே - தங்கள்**
**கையைப் பிசைந்தனர் காண்பாய்!**

*திரௌபதை இவ்வார்த்தைகள் கேட்டுத் திகைத்து நிற்கிறாள்!*

*திரௌபதையின் திகைப்புற்ற முகத்தைப் பார்த்ததும்... ஒரு கேலிச் சிரிப்புடன்... அவளை நோக்கிச் சென்று...*

*அவளது கண்களை உற்றுப் பார்த்துவிட்டு*

*துச்சாதனன்*

**மனைவியும் அல்ல நீ!**
**மகளும் அல்ல நீ! - என்**
**மன்னன் அடிமை நீ யறிவாய்!**
**உன்னையும் தோற்றனன்!**
**உறவையும் தோற்றனன்!**
**தன்னையும் தோற்றனன் தர்மன்!**

*திரௌபதை இதுகேட்டு...*

*இடிகேட்ட நாகம் போற் துடித்துப் போகிறாள்!*

*திடீரெனத் துணிவும்...*

*பலமும் பெற்றவளாகத் துரியோதனனை*

*ஆத்திரத்துடன் பார்க்கிறாள்!*



*திரௌபதை :*

**என்னடா சொல்கிறாய்?**
**ஏதடா உரைக்கிறாய்?**

**மன்னவன் என்னைத் தோற்றனனா?**
**தனைத் தோற்ற பின்தான்**
**எனைத் தோற்றனனா?**
**எனைத் தோற்ற பின் தான் தனைத் தோற்றனனா?**

*துச்சாதனன் (சற்றுத் திக்கு முக்காடுகிறான்) :*

*(பின்னர் தன்னைச் சுதாரித்துக் கொண்டவனாக)*

**அவையிலே நின்றிதைக் கேளடி! - நீ**
**அடிமையுனக்கேது கேள்விகள்?**
**நகைத்தனை அன்றெமைப் பார்த்து நீ! - இனி**
**நடப்பதை வந்து நீ பாரடி!**

*(என்றவாறு... திரௌபதையை பற்றியிழுக்கச் செல்கிறான்)*

*திரௌபதை... துச்சாதனனிடமிருந்து விலகி ஓட,*

*துச்சாதனன் அவளைத் தொடர்கிறான்!*

*இசை மூலம்... இக்காட்சி தொடரப்படுகிறது!*

*பாஞ்சாலி ஓடிக் களைத்தவளாகத்...*

*துச்சாதனனை நோக்கி இரப்பவளாக)*

*திரௌபதை :*

**தம்பி! உனக்கேது இப்பழி!**
**தவிர்த்திடுவாய் இது பெண்பழி!**
**சென்றிடு! நான் வரமறுக்கிறேன்!**
**என்றதோர் செய்தியைக் கூறிடு!**
**மங்கையர் மாத விலக்கு நாள் - அன்று**
**வந்திடல் பெரும்பழி தந்திடும்!**
**அன்புடன் கேட்கிறேன் சென்றிடு**
**அண்ணனின் மனைவி நான் சென்றிடு!**

*இப்போது துச்சாதனன் அட்டகாசமாகச் சிரித்தபடி துள்ளியெழுந்து*

அவளை நோக்கி ஓடிச் சென்று

அவளது தலைமுடியைப் பற்றியிழுத்தபடி...

அரங்கினை விட்டு விலகுகிறான்!

பின்னணியிற் பாடல் :

**முடி பற்றி யிழுத்து**
**மூர்க்கன் நடக்கின்றான்!**
**கதி யற்று அவன் கரத்திற்**
**பாஞ்சாலி துடிக்கின்றாள்!**
**மதி கெட்ட மன்னன் தன்**
**மமதையினால் பெண்ணினத்தின்**
**விழி குத்தி யழவைத்தான்!**
**விஷ அரவக் கொடியோனே!**
**தர்மம் தலை குனியத்...**
**தரணியது நிலை குலையத்...**
**தெரு வீதி வழியரக்கன்**
**திரௌபதையை இழுத்து வந்தான்?**

**அரங்க விளக்கு அணைகிறது**

## காட்சி 18

துரியோதனன் சபை!

ஆன்றோர், சான்றோர், அமைச்சர், தளபதிகள் யாவரும் நிறைந்த அவை!

அங்கே...

திகில்... வெட்கம் – திகைப்பு– அச்சம் – பீதி – துயரம் – வேதனை – வெறுப்பு என அத்தனை உணர்வுகளும் – உச்சத்தாண்டவமாடுகின்றன!

சபையின் ஒரு பகுதியில் திருதராஷ்டிரன் – காந்தாரி – விதுரன் – துரோணர் – பீஷ்மர் ஆகியோர்!

திடீரென – மயான அமைதி

அதனைத் தொடர்ந்து

முடிபற்றி இழுத்தபடி வந்து



அவையில் திரௌபதையை எறிகின்றான் துச்சாதனன்!

அவையிலே எறியப்பட்ட திரௌபதை மெதுவாக எழுந்து... அவையினுள்ளோரைச் சுற்று முற்றும் பார்க்கிறாள்!

தர்மன் – தலையைத் தாழ்த்தியிருக்கிறான். வீமாதியர் – தர்மனைப் பார்த்தபடி தமது கோபக்கனலை யடக்கியவாறு இருக்கின்றனர்.

திரௌபதை (அவையினரை நோக்கி) :

**ஐயோ! அவையினரே! இது தகுமோ,**
**அறத்தை யுணர்ந்தவரே! இது முறையோ?**
**மைவிழி மாதர் பழி அறியீரோ? – இந்த**
**மன்னவன் கேடுதனைக் களையீரோ,**
**கூந்தல் கரம் பிடித்து இழுத்து வந்தான் – இந்தக்**
**கொடியவன் என்னுயிரை எரித்து வந்தான்!**
**மாந்தர் குலத்திற்கிது அடுத்திடுமோ? இந்த**
**மாநிலந் தானிதனைப் பொறுத்திடுமோ?**

கதறியழுது நீதி கேட்கிறாள் துரௌபதை!

அனைவரும் தலை கவிழ்ந்திருக்க –

சகுனி, கர்ணன், துச்சாதனன் துரௌபதையின் நிலை கண்டு

ஏளனம் நிறைந்த முகபாவங்களுடன்

நகைத்திருக்கின்றனர்!

இப்போது துரியோதனன் –

திரௌபதையைத் தனது தொடையில் வந்தமரும்படி கட்டளையிடுகிறான்!

துரியோதனனது இந்த விருப்பத்தினைச் செவியுற்றதும்

ஆத்திரம் கொப்பளித்தவளாகத் திரௌபதை

**மதி கெட்ட மன்னனே!**
**மாண்டழியப் போகின்றாய்!**
**சதி சுற்றி நிற்கச்...**
**சண்டாளா சிரிக்கின்றாய்!**
**விதி முற்றம் நின்று**

நகைப்பதையும் அறியாமல்
அதி குற்றம் செய்தே
அரசழியப் பழி செய்தாய்!

துரியோதனன், அவள் கூறியவற்றைக் கேட்டு, ஆத்திர மிகுதியாலும் ஆணவச் செருக்காலும் அங்கு மிங்கு மோடுகிறான்! ஆடுகிறான்!

திரௌபதை – *(பீஷ்மரை நோக்கிச் சென்று நீதி கேட்கிறாள்!)*

**ஐயா வீட்டுமரே! அறம்**
**நீதி யறிந்தவரே!**
**தையல் படும் துயரம் – கண்டும்**
**பேசாதிருப்பதேனோ?**
**வேதம் உணர்ந்தவரே! – உயர்**
**வீரம் செறிந்தவரே!**
**தீது நடக்கையிலே – நீர்**
**மௌனம் புரிவ தென்ன!**
**என்னைத் தோற்ற பின்னர் – தர்மர்**
**தன்னைத் தோற்றனரோ?**
**தன்னைத் தோற்ற பின்னர் – அவர்**
**என்னைத் தோற்றனரோ,**
**ஐயா வீட்டுமரே! – அறம்**
**நீதி யறிந்தவரே!**
**தையல் படுந்துயரம் – கண்டும்**
**பேசாதிருப்பதேனோ?**

பீஷ்மர் *(வேதனையுடன் பதிலிறுக்கிறார்)*

**நீதியது கேட்டாய் நீ!**
**நெறிப்படியே நினைத் தர்மன்**
**பாதியெனக் கொண்ட தனாற்**
**பதியாகப் பணயம் வைத்தான்!**
**ஆகையினாற் கொடுமை கண்டும்**



**தோகை யுந்தன் துயரறிந்தும்**
**வேகு நெஞ்சு கொண்டிங்கே**
**வாளாதிருக்கின்றோம்!**
**சோகக் கடல் வீழ்ந்து**
**துடிக்கின்ற சுந்தரியே!**
**நாகக் கொடியோனை**
**நாம் மாற்ற அறியோமே!**

(விழி நீர் பொங்க, வீட்டுமர், திரௌபதை முன் தலைகவிழ்ந்து நிற்கின்றார்).

இப்போது துச்சாதனன் எழுந்து வந்து திரௌபதையை நோக்கி ஏளனக் கூத்தாடுகிறான்

திரௌபதை – *(அவையினரை நோக்கி)*

**நிறுத்தடா என்று சொலும் நாவில்லையோ,**
**நீசரின் செயல் தடுக்கும் கரமில்லையோ?**
**பொறுத்தது போது மென்போர் இங்கில்லையோ? – இந்தப்**
**பூமியில் அறம் பிழைக்க வழியில்லையோ?**

இப்போது வீமன் எழுகிறான்!

கோப தாண்டவம் ஆடுகிறான்!

அர்ச்சுனன் எழுகிறான்!

ஆத்திர தாண்டவம் ஆடுகிறான்!

நகுல சகாதேவர்கள் எழுகின்றனர்!

நர்த்தன தாண்டவமாடுகின்றனர்!

தர்மன் – தனது பார்வையினால் அவர்களையடக்குகிறான்!

இப்போது துரியோதனனின் தம்பி, விகர்ணன் எழுந்து வந்து வாதிக்கிறான்! அவையில் சலனம் அவையோர் எழுந்து ஆர்ப்பரிக்கின்றனர்!

துரியோதனன் ஆத்திரத்தோடு அவனை அடக்குகிறான்!

கர்ணன் எழுந்து வந்து துரியோதனனை அணைத்து அவனை ஆதரிக்கிறான்!

சகுனியும் வந்து இணைகிறான்!

திரௌபதையைச் சுற்றி துரியோதனன் துச்சாதனன், சகுனி, கர்ணன் ஆகியோரது பேயாட்டம்!

பாண்டவர்களை வலம் வந்து அவர்களைத் தீண்டும் படியும், தூண்டும்படியும், இவர்கள் ஆடுகின்றனர்.

இறுதியிற் கர்ணன் – துச்சாதனனைக் கட்டியணைத்தபடி.... திரௌபதையை வெறியுடன் பார்த்தபடி...

அவளது துயில் உரிந்து அவளை அவமானப்படுத்தும்படி கூறுகிறான்!

துச்சாதனன் – விழிகளில் அட்டகாசமான ஆவேசம் வெளிப்படத் திரௌபதையை நோக்கிச் செல்கிறான் அவையே நடுங்குகிறது!

ஆன்றோரும் சான்றோரும் தலை கவிழ்ந்து

தமது கண்கள் மூடிக் கொள்கின்றனர்!

பின்னணியிற் பாடல்!

**பேய்கள் அரசு செய்தாற்**
**பிணந்தின்னும் சாத்திரங்கள்!**
**நாய்கள் நடுவர் என்றால்**
**நரிகள் நடனம் செய்யும்!**
**தீயவர் கூட்டத்திலே**
**தீமை தலைமை செய்யும்!**
**வாய்மை வலு விழந்தால் – பொய்**
**வாயே தீர்வு சொல்லும்!**
(பாடலின் முடிவில்)

துச்சாதனன் எகத்தாளமாகச் சிரித்தபடி, திரௌபதையை நோக்கிச் சென்று அவளது ஆடையைப் பிடிக்க முயல்கிறான்.

துரௌபதை, அவையில் ஓர் அபலையாக அங்குமிங்கும் ஓடுகிறாள்! துச்சாதனன் துரத்துகிறான்.

திரௌபதை – வேதனையில் வீரிட்டலறி யழுது புலம்புகிறாள்)

**அறம் செத்ததோ? இந்த அவையினிலே! – அநீதியது**
**உரம் பெற்றதோ, உண்மை செத்ததுவோ!**
**கரங் கொண்டு காதகனென் முடிபற்றி யிழுத்திங்கே**
**வரக் கண்டும் வாளாவிருந்தீரே!**



**நாவெங்கே! நல்லோர் விழியெங்கே – நாட்டரசன்**
**தீ கொண்டு பெண்மை தீய்க்கின்றான் – இது கண்டும்**
**தூசென்று கிடக்கின்றீர்! தோள் நிமிர்த்த மாட்டீரோ!**
**பாகொண்ட புலவரோரும் பாழ்பிணமாய்ப் போயினரோ?**
**பார் பொங்க ஒளி தந்த ஞானியரென்னாயினரோ?**

**நிறுத்தடா என்னும் நீண்ட குரல் கேளேனோ?**
**பொறுத்தது போதுமெனும் பேரோசை கேளேனோ?**
**சிறுத்தைகளைச் சாகடிக்கும் செம்புலிகள் தோன்றாவோ?**
**நெருப்பினிலே துடிக்கின்றேன் நீசர்வதம் நடக்காதோ?**

துச்சாதனன் இப்போது

அவளது துகில் பற்றி யிழுக்கிறான்!

இப்போது திரௌபதை – அப்படியே–

சிலையாக நின்று விழிகள்

வானத்தை நோக்க... வேண்டுதல் செய்கிறாள்!

கண்ணனை நோக்கி – உச்சத் தொனியில்

திரௌபதையின் பிரார்த்தனை தொடங்குகிறது!

துச்சாதனனின் கரங்கள் நடுங்குகின்றன!

அவையே ஆன்ம பயணத்தில் ஈடுபடுகிறது!

திரௌபதை :

**தீயவை அழித்து**
**நல்லவை காத்திடும்**
**நாயகனே கண்ணா வருக!**
**தாயவள் யசோதை**
**தரணிக்கு ஈந்த தனயனே கோபாலா வருக!**
**ஆயிழை யுந்தன்**
**சோதரி திரௌபதை**
**துயர்தனைத் தீர்த்திட வருக!**
**மாயவா எங்கள் மாலே வருக!**
**மாதவா மணிவண்ணா வருக!**
**நீயலா திங்கு**
**நீதியைக் காத்திட**

**யாருளார் – நின்கரம் தருக!**
**கண்ணா! மணிவண்ணா!**
**கார்மேக வண்ணா!**
**உன்பாத நிழல் தஞ்சமே!**
**என்னாடை பற்றி**
**இழுக்கின்ற தீயோன்**
**கரம் சோர**
**அருள் செய்குவாய்!**

திரௌபதை பக்தியின் உச்சியில் நின்று

கண்ணனைப் பிரார்த்திக்கின்றாள்!

**ஓம்! நாராயண!**
**ஓம நாராயண!**
**ஓம் நாராயண! ஓம்**
**ஓம் நாராயண!**
**ஓம் நாராயண!**
**ஓம் நாராயண! – ஓம்!**

என்று கண்ணீராய்ப் பெருகக் கரங்களை உயர்த்துகிறாள். இப்போது துரியோதனன் பற்றியிழுத்த துயில் வளரத் தொடங்குகிறது.

துச்சாதனன் துயிலை உரிந்த வண்ணமேயிருக்கிறான்!

அவையிலே ஆரவாரம்!

துரியோதனன் பதட்டம்!

இப்போது வேதம் ஒலிக்கிறது!

சங்கோசை முழங்குகிறது!

கண்ணன் வானத்திற் காட்சி தருகிறான்!

திரௌபதை பக்தி மழையில் மூழ்கியவாறு

கண்களில் நீர் பொழிய நிற்கிறாள்!

துச்சாதனன் களைத்துச் சோர்ந்து வீழ்கிறான்!

அவையே எழுந்து கண்ணனை வணங்குகிறது!

இதனைத் தொடர்ந்து –

பாண்டவர்கள் கௌரவர்களைக் கடுஞ்சினத்தடன் பார்த்துச் சபதமிடுகின்றனர்!



வீமன் – துரியோதனனையும் துச்சாதனனையும் அழிப்பதாகச் சபதமிடுகின்றான்!

விஜயன் – கர்ணனை யழிப்பதாகச் சபதமிடுகிறான்!

நகுல சகாதேவர் சகுனி முதலானோரை யழிப்பதாகச் சபதமிடுகின்றனர்!

முடிவில்

பாஞ்சாலியின் சபதம் பாடல்

(துரியோதனனைப் பார்த்து)

**அமரென் தொடையினில் வந்தெனக் கூறிய**
**அரவக் கொடியோனே கேட்பாய்!**
**சமரில் உனது தொடைதனைப் பிளந்தே**
**தொலைப்பர் என் துணைவர் அறிவாய்!**
**குமுறிப் பாய்ந்திடும் குருதியை எந்தன்**
**குழலிற் பூசியே முடிவேன்!**
**அதுவரையிந்த அழகுக் கூந்தலை**
**அள்ளி முடிந்திடா திருப்பேன்!**

என்று கூந்தலை யவிழ்த்து விரித்து ஆடுகிறாள்!

துச்சாதனனைப் பார்த்து

**துச்சாதனா! உன்**
**மார்பினைப் பிளந்தே**
**துவம்சம் செய்குவன் வீமன்**

கர்ணனைப் பார்த்து

**விற்போரிற் கர்ணனே! – நீ**
**வீழ்வாய் விஜயனால்**
**வீழ்ந்திடும் கௌரவர் கொற்றம்!**
**பாண்டவர் வெற்றியில்**
**மீண்டுமிவ் வுலகின்**
**பாழிருள் நீங்கிடும் உறுதி!**
**ஆண்டவர் மீண்டும்**
**ஆண்டிடும் காலம்**
**தோன்றிடல் காண்பது உறுதி!**


அரங்கில் நாட்டிய நாடகத்திற் பங்கு பற்றிய அனைத்துக் கலைஞர்களும் தோன்றி அணிவகுத்து நிற்கின்றனர்!

அரங்கின் பின்னணியில் பாடல்

**கௌவிய சூதுகள்**
**விலகிடும் காலம்**
**கௌரவர் ஆட்சிகள்**
**கழன்றிடும் காலம்**
**நம் விழி முன்னே**
**நிச்சயம் தோன்றும்!**
**நல்லவர் நிழலில்**
**திகழ்ந்திடும் ஞாலம்!**
**தர்மமும் நீதியும்**
**தரணியில் ஓங்கும்!**
**தத்துவம் உண்மையாம்**
**தகைமையில் ஓங்குமே!**

நாட்டிய நாடகம், நிறைவு பெறுகிறது!

NOOLAHAM FOUNDATION
No - 07,57th Lane
Colombo - 06
Sri Lanka
Reg.No - GA2390



# ஆசிரியரைப் பற்றி

காவியச் சலங்கைகள். அன்னைத் தமிழுக்குப் பெரும்புலவர் ந. சிவநாதன் படைத்தளித்த ஏழு முத்துக்கள் எனத் திகழும் நாட்டிய நாடகங்கள் பதித்த காற் சலங்கைகள். காலச்சலங்கைகள். காட்சிக்கலை கேட்புக்கலை நிகழ்த்துக்கலை மூன்றின் சங்கமம் அன்னைத் தமிழ் என்பதை உணர்த்தவே இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் என்னும் முத்தமிழ் என்றனர் நம்முன்னோர். இயல்தமிழுக்குப் பல ஆக்கங்கள் தந்த புலவர் சிவநாதனின் சிகரப்படைப்பாய் அவரின் அறிவியல் இலக்கிய அறிவின் கூட்டுப்படைப்பான ஆழ்கடலுள் என் ஆருயிர் முன்னோர்கள் என்னும் தமிழர் வரலாற்றுக் கலாச்சார மீட்புக்கான அறிவியல் இலக்கியச் சிந்தனை இலக்கியம் அமைந்தது. இசைத் தமிழுக்குப் புலவர் சிவநாதன் அளித்த பெரும்பங்களிப்பான கவிமழையே பொறியியல் வல்லுனராக கல்வியில் சிறந்து கட்டிடக்கலை விற்பனராய் தொழில் புரியும் அவரை பெரும் புலவர் என தமிழ்க் கூறு நல்லுலகு கொண்டாட வைத்தது. அந்த கவித்துவத்தின் சிகரமாய் அமைந்த சத்தியம் சாகாது என்னும் கவித் திரட்டும் மேடைகளில் ஒலித்த ஒலிக்கும் புலவரின் தேசிய பாடல்களும் தெய்வீக பாடல்களும் தெய்வாஞ்சலி எனும் இசைப்பேழையும் இலங்குகின்றன.

இன்று காலம் வெளியைத் தாண்டி நாடகத்தின் இருப்பை உணர்த்துகின்ற (Dramatic action) என்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து அவர் எழுதி மேடையேறிய பதினெட்டுக்கு மேற்பட்ட நாட்டிய நாடகங்களில் ஏழு இந்நூலாக மாறி அவரையும் முத்தமிழ்ப் புலவர் சிவநாதன் எனும் மகாக்கவியாக உயர்த்துகிறது. இதற்கான மரபணு அவரின் பேரனார் ஆண்டார் முருகுப்பிள்ளை அவர்களின் புராணப்படிப்புக்கள், திண்ணைப்பள்ளி ஆசிரியத்துவம் வழியும் அவரின் தந்தை முத்தமிழ்ப் புலவர் நல் லத்தம்பி அவர்களின் வழியும் புலவர் சிவநாதனிற் தொடர்கிறது என்பது ஈழத்தமிழிலக்கிய உலகிற்குத் தெரிந்த உண்மை. கூடவே அவர் புரண்டு விளையாடிய வட்டுக்கோட்டை மண் நாட்டுக்கூத்துக்களை வளர்த்த திருமண் ஆலயம் மூன்றிலும் வட்டக்களரியிலும் கூத்து மேடையிலும் துள்ளிக் குதித்த பெரும் கலைஞர்களுக்கு கூத்துப் பாடல்களை தந்தை முதுதமிழ்ப் புலவர் நல்லத்தம்பி அவர்கள் யாத்துக்கொடுத்தும் கூடவே கலையரசு சொர்ணலிங்கம் போன்ற நாடகக்கலைச் சிகரங்கள் உடன் கூடப் பழகியும் நடித்தும் வளர்த்த நாடகக்கலை சிறக்க உழைத்தார். இதனால் அவர் மகன் புலவர் சிவநாதனில் நாடக ஆக்கமும் இயக்கமும் நடிப்புத்திறனும் இயல்பானதில் ஆச்சரியம் ஏதுமில்லை.

இதனாலேயே தனது கவிதை சந்தத்தின் ஊற்று நாட்டுக்கூத்தே என்பது புலவர் சிவநாதனின் வாய் மொழியாகிறது. மேடைப்பேச்சும் கவிதையும் எழுத்தும் வில் லுப்பாட்டும் கதாப்பிரசங்கமும் நாடக நடிப்பும் புலவர் சிவநாதனுடன் பள்ளிப் பிராலயம் முதல் கொழும்பு வாழ்வு வரை கலையுடன் பயணித்து கிளிநொச்சி உருத்திரபுரத்து ஆசிரியர் பணியில் அதனை மாணவர்களுக்கு வழங்கும் நுட்பமும் கண்டவர் புலவர். ஆரம்பத்தில் அமெச்சூர்த் தமிழ்க் கலைஞர் குழு அமைத்துக் கலை வளர்த்த புலவருக்கு கலைப் பயண அனுபவமும் கலைத்துவ நுட்பங்கள் லண்டனில் தமிழவை தான் அமைத்து முத்தமிழும் வளர்க்கும் திறனளித்து நிற்கிறது. தமிழ் உணர்வும் தாயக பற்றும் மரபு வழி நின்று மரபுக்குப் புதுமை கொண்டு வரும் அறிவாற்றலும் வரலாற்றுக் கலை பண்பாட்டு மீட்டுணர்வும் தெய்வவழிபாடும் கலைமகள் அருளும் கொண்ட புலவர் சிவநாதனின் காவியச் சலங்கைகள் தமிழ்ச் சந்ததியின் மொழி இலக்கிய கலை வரலாற்று அஞ்சல் ஓட்டத்திற்கு இளையவர்களுக்குப் புலவர் கொடுத்த ஓட்டக்கோல். நாடகம் எவ்வாறு சமூகம் சார்ந்து பார்த்துக் கேட்டு ரசிக்கும் கலையாகவும் தனித்து வாசித்து மகிழும் கலையாகவும் உள்ளதோ அவ்வாறே இக்காவியச் சலங்கைகளும் நாட்டிய நாடக இலக்கியமாகவும் வாசித்து மகிழும் சிறந்த நூலாகவும் இலங்குகிறது. மானிடா எழுக வையகம் தன்னை வானமாக்குக! என ஒலிக்கிறது. காவியச்சலங்கைகள் மானிடத்தின் மகாக்கவிகளின் வரிசையில் மற்றொரு மகாக்காவியமாக புலவர் நா. சிவநாதனை மாற்றுகிறது. இந்நூல் கண்ணொளியிலும் கேளொயிலும் மேடைகளிலும் ஒலித்த புலவரின் தமிழ்க் காவியச் சலங்கைகளாகத் தமிழன்னையின் திருப்பாதங்களை இந்நூலாக மாறி அழகு செய்கிறது.

சூ.யோ.பற்றிமாகரன் BA, Special Diploma(Oxford), BSc, PG Diploma, MA.
ஆசிரியர், ஆய்வாளர்,ஊடகவியலாளர் ஒக்ஸ்வேர்ட்